National Water Supply & Drainage Board

# ஆண்டறிக்கை 2010







## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

### எமது நோக்கம்

தொழில் மற்றும் சேவைச் சிறப்பின் மூலம் இலங்கையில் அதி உன்னத பொது வசதிகள் நிறுவனமாக இருத்தல்.

### எமது குறிக்கோள்

பாவனையாளர்களின் பூரண திருப்தியை உறுதிப்படுத்திக் கொண்டு குடிநீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்குத் தேவைகளுக்கான நிலையான தீர்வுகளை வழங்குவதன் மூலம் நாட்டு மக்களுக்கு சேவை புரிதல்.

### இலக்குகள்

- நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை அதிகரித்தல்.
- தொழிற்பாட்டுத் திறனை மேம்படுத்தல். பாவனையாளர்ளைத் திருப்தியடையச் செய்தல்.
- வணிக நிலைபேற்றுத் தன்மையை அதிகரிக்கச் செய்தல்.
- பொறுப்புடைமைகள் மற்றும் வெளிப்படைத் தன்மை பற்றிய உறுதி.
- நிறுவன மேம்பாட்டினை ஊக்குவித்தல்/ வளர்ச்சியடையச் செய்தல்.
- கிராமிய மற்றும் குறைந்த வசதிகளைக் கொண்ட மக்களுக்கு வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குதல்.

## பொருளடக்கம்


| | |
|---|---|
| அறிக்கை பற்றிய அறிவிப்பு | 1 |
| தலைவரின் கூற்று | 2 |
| கூட்டு முகாமைத்துவமும் புள்ளிவிபர ரீதியிலான மீளாய்வும் | |
| எமது பிரதான நிர்வாகத்தினர் | 6 |
| தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள் | 9 |
| கூட்டிணைந்த திட்டமிடல் | 10 |
| பிரதானமான செயற்பாடு | 12 |
| தொழிற்பாடுகளின் சாராம்சம் | 14 |
| முதலீடுகளின் சாராம்சம் | 18 |
| ஊழியர்கள் | 21 |
| பேண் தகைமை அறிக்கை | 25 |
| வாடிக்கையாளர் வசதிகள் | 26 |
| சேவைகள் | 27 |
| புதிய முன்னெடுப்புகள் | 28 |
| வருவாயற்ற நீரைக் குறைத்தல் | 29 |
| வலுசக்தி முகாமைத்துவம் | 31 |
| நிறுவன அபிவிருத்தி | 32 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 33 |
| கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு | 34 |
| நிலக்கீழ் நீர் | 34 |
| சமூகவியல் செயற்பாடுகள் | 35 |
| கொள்கை வகுத்தல் | 35 |
| தகவல் தொழில்நுட்பம் | 35 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 37 |
| நடைமுறையிலுள்ள கருத்திட்டங்கள் | 38 |
| 2011 இல் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்ற கருத்திட்டங்கள் | 54 |
| உத்தேசத் திட்டங்கள் | 55 |
| திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் | 56 |
| பிராந்திய உதவி நிலையங்கள் | 59 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை | 62 |
| நிதிக்கூற்றுக்கள் | 65 |
| 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 84 |
| சுருக்க வடிவங்கள் | 92 |
| அடிப்படைத் தகவல்கள் | வெளிஅட்டை உள்பக்கம் |





## தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையானது, இலங்கையின் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு முறைமைகளுக்குப் பொறுப்பான ஒரு உப திணைக்களமாக பொது வேலைகள் திணைக்களத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் ஒரு நியதிச் சபையாக மாற்றப்படும் வரை, 1965 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு அமைச்சுகளின் கீழ் ஒரு பிரிவாக இச்சபை செயற்பட்டு வந்தது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு விடயத்தைக் கையாளும் பொருட்டு 2007 ஆம் ஆண்டில் தனியானதொரு அமைச்சாக இவ்வமைச்சு தாபிக்கப்பட்டது. அத்துடன் இவ்வமைச்சின் செயலெல்லையினுள் வருகின்ற ஒரேயொரு நிறுவனமாக தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை விளங்குகின்றது.

தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் வழங்கப்படும் பாதுகாப்பான குடிநீர் வசதிகளை சனத்தொகையில் அண்ணளவாக 81% வீதமானோர் பெறுகின்றனர் என்பதோடு இதில் 31.6% வீதமானவர்கள் குழாய் நீர் வழங்கல் முறையில் வசதியைப் பெறுகின்றனர்.

## அறிக்கை பற்றிய அறிவிப்பு

கௌரவ நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சர்
நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சு
தக்காஹூாசி கட்டிடம்,
இல. 34, நாரஹேன்பிட்டி வீதி,
நாவலை.

கனம் ஐயா,
**2010 - ஆண்டறிக்கையும் நிதிக் கூற்றுக்களும்**
**தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை**

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் நியமங்களுக்கமைவாக, 2010 டிசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டுக்கான தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் ஆண்டறிக்கையையும் நிதிக் கூற்றுக்களையும் இத்துடன் முன்வைப்பதில் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மகிழ்வடைகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள,



கருணாசேன ஹெட்டிஆரச்சி
தலைவர்
தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை
2011 மார்ச் 01

# தலைவரின் கூற்று



தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையானது இலங்கையின் பிரதானமான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டை வழங்கும் நிறுவனம் என்ற வகையில் 2010 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து அதன் சேவைகளை மேற்கொண்டு வந்தது. இதற்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட நகர்ப்புற பிரதேசங்களுக்கான கழிவுநீர் அமைப்புக்களை நிர்மாணிப்பதற்கான முயற்சிகளை சபை மேற்கொண்டுள்ளது. இலங்கை மக்களின் சுகாதாரம், பொருளாதாரம், சமூக நல்வாழ்வு மற்றும் வாழ்வாதாரத்தின் மேம்பாட்டை முன்னிட்டு அது குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கியது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் 2007-2011க்கான கூட்டிணைந்த திட்டத்தில் உபாயமுறையில் விளக்கப்பட்டிருந்த இலக்குகளை அடைதல் நான்காவது ஆண்டிலும் நடைமுறையில் இருந்தது. சபையின் அங்கத்தவர்கள், திட்டத்தின் ஊடாக தீர்க்கமான முடிவுகளை எடுத்து செயற்படுத்தும் நோக்கத்துடன் காலாண்டு ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தனர். 2012 தொடக்கம் 2016 வரையிலான அடுத்த கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆண்டினுள்ளான நடவடிக்கைகளில் அதிகளவிலான கவனத்தை, உள்நாட்டில் இடப்பெயர்ந்தோருக்கான நீர் வழங்கல், துப்புரவேற்பாட்டுச் சேவைகள் மற்றும் பல தசாப்தங்களாக நெருக்கடிக்கு உள்ளாகியிருந்த வடக்கு மற்றும் கிழக்கின் மீள்குடியேற்றப் பிரதேசங்களுக்கான புதிய கருத்திட்டங்களை வடிவமைத்தல் ஆகியன தொடர்பில் செலுத்த வேண்டியிருந்தது.

நடைமுறையிலுள்ள பாரிய கருத்திட்டங்களின் அமுலாக்கல், தேவைப்பாடுடைய பிரதேசங்களுக்கான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டங்களுக்கான முன்மொழிவுகளைத் தயாரித்தல் 2010 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற்றது. DANIDA நிதியளிப்பின் கீழான நுவரெலியா மாவட்ட நகரங்களுக்கான நீர் வழங்கல் கருத்திட்டம், ஸ்பானிய உதவியுடனான அம்பத்தலே மற்றும் நீர்கொழும்பு நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை நிர்மாணிக்கும் கருத்திட்டம் மற்றும் ஆஸ்திரிய நிதியளிப்புடனான கொழும்பு தெற்கு கழிவுநீரமைப்பு நீரேந்து பிரதேச புனரமைப்பு ஆகியவற்றை நாம் 2010 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்தோம். இவ்வாண்டினுள் JICA நிதியளிப்பிலான கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புக் கருத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலில் நாம் உச்ச கட்டத்தை அடையப் பெற்றதோடு, கிழக்கு மாகாண நீர் வழங்கல் மேம்பாட்டு திட்டத்தையும் (JICA) ஆரம்பித்து வைத்தோம்.

இருப்பிலுள்ள நிதியங்கள் மற்றும் ஏனைய வளங்களைப் பயன்படுத்தி நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு சேவையை தர ரீதியிலும் அளவு ரீதியிலும் விஸ்தரிக்கும் பொருட்டு தே.நீ.வ.வ.ச. மூலதனப் பணிகளை செயற்படுத்தியது. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டினுள் மூலதனப் பணிகளுக்கு நிதியளித்த பல்தரப்பு மற்றும் இருதரப்பு முகவர்கள் உள்ளடங்கலாக அனைத்து கொடை வழங்குனர்களுக்கும் எமது விசேட நன்றிகள் உரித்தாதல் வேண்டும். ஆற்றப்பட்ட பணிகளுக்கு ஆண்டினுள் மொத்தமாக ஆரம்பத்தில் ரூபா 25 பில்லியன் ஒதுக்கப்பட்டதோடு, குறைநிரப்பு நிதி ஏற்பாடுகள் உள்ளடங்கலாக ரூபா 26.4 பில்லியன் செலவிடப்பட்டது.

2010 ஆம் ஆண்டினுள் நீர் கட்டணம் எதுவும் அதிகரிக்கப்படாது எமது தொழிற்பாடுகளை மேற்கொள்ள முடியுமாயிருந்தது என்பதை இங்கே குறிப்பிடுதல் மிக முக்கியமாகும். 54

ஊழியர்களின் தேறிய குறைபாட்டுக்கு மத்தியில் நாம் செயலாற்றியமையையும் இங்கே குறிப்பிடுதல் வேண்டும்.

வாடிக்கையாளர்கள் அவர்களது கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளக் கூடிய முறைகளும் மேலும் விருத்தி செய்யப்பட்டுள்ளன. காகில்ஸ் மற்றும் கீல்ஸ் சிறப்புச் சந்தைத் தொகுதிகள், அபான்ஸ் மற்றும் சிங்கர் காட்சியறைகள் ஆகியவற்றுடன் வாடிக்கையாளர்கள் அவர்களது செல்லிடத் தொலைபேசியின் ஊடாக குறுஞ் செய்திச் சேவை (SMS) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கொடுப்பனவுகளைச் செய்தல் முன்னர் பகிரங்கப்படுத்தப்பட்டிருந்த ஏனைய முறைகளுக்கு மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட வாடிக்கையாளர் வசதியாகும்.

வாடிக்கையாளர்களின் பழுதடைந்த மானிகளைப் பதிலீடு செய்வதற்காக வழங்குவதற்குப் போதியளவு நீர் மானிகள் இருந்ததால், முடியுமானவரை உண்மை நுகர்வுக்கான நீர் கட்டணப் பட்டியல்களை சமர்ப்பிக்க இயலுமாயிருந்தது.

ஆண்டின் இரண்டாம் பகுதியில் பெய்த பெரு மழையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது நுகர்வுத் தேவைக்காக பௌசர் நீர் வழங்கலின் மூலம் அவர்கள் முகம்கொடுத்த கஷ்டங்களிலிருந்து மீள்வதற்கு தே.நீ.வ.ச. அதன் சேவைகளை விஸ்தரித்தது. 2010 சனவரி மற்றும் ஏப்பிரலில் நடத்தப்பட்ட இரண்டு தேர்தல்களுக்கும் ஈடுபடுத்தப்பட்ட பாதுகாப்புப் படையினர் உள்ளடங்கலாக நடமாடும் பணியாளர்களுக்கு நீர் வழங்கல் வசதிகளை வழங்குவதற்கு நாம் பொறுப்பாயிருந்தோம்.

புதியதொரு முன்னெடுப்பாக வடமத்திய மாகாணத்தில் அதிகரித்து வருகின்ற சிறுநீரக நோய்களை ஒழிக்கும் விசேட நோக்கத்துடன் பாதிப்புக்குள்ளாகக்கூடிய பிரதேசங்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு இலங்கை தரக் கட்டளைகளால் உறுதி செய்யப்பட்டவாறு போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் உற்பத்திப் பொறித் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

கணிப்புக்குட்படாத நீரைக் (UFW) குறைத்தல் தே.நீர்.வ.வ.ச.யின் பிரதானமானதொரு எதிர்பார்ப்பாகும். இக்குறிக்கோளை அடையப்பெறும் பொருட்டு ஆண்டினுள் ஒருசில கருத்திட்டங்களும் செயற்பாடுகளும் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. அதேவேளை ஆண்டின் இறுதியாகின்றபோது கணிப்புக்குட்படாத நீர் 29% ஆக இருந்தது. 2010 ஆம் ஆண்டின் இறுதியில் கொழும்பு நகரத்தின் கணிப்புக்குட்படாத நீர் 42% ஆக இருந்தது.

தொழிற்பாட்டுக்கான அதிக வலுசக்திச் செலவைக் குறைக்கும் நோக்குடன் வலுசக்தி வினைத்திறனை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைத் தீர்மானிக்கும் பொருட்டு வலுசக்திக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அமைப்பு முறைமையை புனரமைப்பதற்கான நிதித் தேவைகளுக்காக பொதுத் திறைசேரியில் தங்கியிருப்பதைக் குறைக்கும் பொருட்டு அமைப்பு முறையமைப்பினை புனரமைப்பதற்காக நிதியங்களை உருவாக்கும் புதிய முன்னெடுப்புகளை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபடுதல் எமது குறிக்கோளாகும்.

தே.நீர்.வ.வ.ச.யின் வகிபாகத்தை நிறைவேற்றிக் கொள்வதில் ஆண்டினுள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புகள் தொடர்பில் கௌரவ அமைச்சரால் வழங்கப்பட்ட உரிய நேரத்திலான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்களையிட்டு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அதேநேரம் எமது பிரதான பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட இணைப்பாக்கம், உதவி மற்றும் ஒத்துழைப்புக்காக அமைச்சின் பணியாட்தொகுதி அங்கத்தவர்கள் அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிக்கின்றோம். நிறுவனத்தின் ஒழுங்கான செயற்பாட்டிற்கு மற்றும் அர்ப்பணிப்புடனான சேவைக்காக எமது பொது முகாமையாளருக்கும் பணியாட்தொகுதியினருக்கும் நன்றி தெரிவிக்க நான் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்றேன். எமது சேவையை மேம்படுத்துவதற்கு எடுத்த முயற்சிகளுக்காக எமது முன்னாள் தலைவர் திரு. சன்ன அமரசிங்க அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

எமது சமுதாயத்தின் வாழ்க்கைத் தரத்தின் மேம்பாட்டுக்காக குடிநீர் மற்றும் சாக்கடை வசதிகளை வழங்குதல் தொடர்பிலான எமது சேவையை மேம்படுத்துவதற்கு நாம் பயனுறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

எம்முடன் கொடுக்கல் வாங்கல் செய்கின்ற நுகர்வோரின் வசதிகளுக்கான நடைமுறைகளை இலகுபடுத்துவதற்கு நாம் முயற்சியெடுப்போம். எமது சேவைகளை வழங்குகின்றபோது எமது தரப்பில் ஏதேனும் குறைபாடுகள் நடந்திருப்பின் எம்மைப் பொறுத்துக்கொள்ளுமாறு நாம் உரியவர்களிடம் வேண்டிக்கொள்கிறோம். அதேவேளை, எமது சேவையை நாடுகின்ற அனைவருக்கும் எம்மால் இயன்றளவு சிறந்ததும் வினைத்திறன்மிக்கதுமான சேவையை வழங்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம்.



**கருணாசேன ஹெட்டிஆரச்சி**
தலைவர்
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை
2011 மார்ச் 01 ஆம் திகதி



எமது கலாசாரம் நீரில்
தங்கியிருந்தது,
ஆனால் இன்று கலாசார
மாற்றம் நீரில் தாக்கத்தை
ஏற்படுத்தியுள்ளது.
நீரோட்டத்தின் தாழ்
பகுதியிலுள்ள பயன்பெறுநர்களைப்
பாதிக்காதவாறு நீர்
நிலைகளிலிருந்து
உரிய அளவிலான நீர்
பிரித்தெடுக்கப்படுதல் வேண்டும்.

# கூட்டு முகாமைத்துவமும் புள்ளிவிபர ரீதியிலான மீளாய்வும்



நீர் விலைமதிப்பற்றது கவனமாகப் பாவிப்போம்.

புகைப்படம்: நவீன் பிரியங்கார எடில் தெனிய

# எமது பிரதான நிர்வாகத்தினர்

- தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை
  - பிரதிப் பொ.மு. (உ.க.)
  - செயலாளர்
  - பொது முகாமையாளர்
    - உ.பொ.மு. (கே.ஓ)
    - உ.பொ.மு. (இணை)
    - பிரதிப் பொ.மு. (ஆ.&நி.)
      - உ.பொ.மு. (ஆளணி)
      - உ.பொ.மு. (நிர்வாகம்)
    - பிரதிப் பொ.மு. (நிதி)
      - உ.பொ.மு. (நிதி.கண)
      - உ.பொ.மு. (வசெக)
      - உ.பொ.மு. (கள.பொ.ப.)
      - உ.பொ.மு. (திறை முகா)
    - மேலதிக பொ.மு. (மேல் மாகாணம்)
      - பிரதிப் பொ.மு. (மேல்-தெற்கு)
        - உ.பொ.மு. (மேல்-தெற்)
      - பிரதிப் பொ.மு. (மேல்-மத்தி)
        - உ.பொ.மு. (வ.ஆ.நீ)
        - உ.பொ.மு. (செ.ப.)(மே.ம)
        - உ.பொ.மு. (அபி. மேல்-மத்திய)
      - பிரதிப் பொ.மு. (மேல்-வடக்கு)
        - உ.பொ.மு. (அபி. மேல்-வடக்கு)
      - உ.பொ.மு. (உற்பத்தி)
      - உ.பொ.மு. (மேல்)
    - மேலதிக பொ.மு. (தென் /கிழக்கு மாகாணம்)
      - பிரதிப் பொ.மு. (சப்பிரகமுவ, ஊவா)
        - உ.பொ.மு. (அபி. சப்)
        - உ.பொ.மு. (ஊவா)
      - பிரதிப் பொ.மு. (கிழக்கு)
        - உ.பொ.மு. (அபி. கிழ.)
      - பிரதிப் பொ.மு. (தென்)
        - உ.பொ.மு. (அபி. தென்)
      - உ.பொ.மு. (தெ.கி.)
    - மேலதிக பொ.மு. (வடக்கு/ மத்திய மாகாணம்)
      - பிரதிப் பொ.மு. (மத்திய)
        - உ.பொ.மு. (அபி. மத்திய)
      - பிரதிப் பொ.மு. (வடமேல்)
        - உ.பொ.மு. (வட-மேல்)
      - பிரதிப் பொ.மு. (வடமத்திய)
        - உ.பொ.மு. (அபி. வடமத்தி)
      - பிரதிப் பொ.மு. (வடக்கு)
        - உ.பொ.மு. (அபி. வட)
      - உ.பொ.மு. (அபி. வட/மத்)
    - மேலதிக பொ.மு. (கூட்டு நிறுவன சேவை)
      - பிரதிப் பொ.மு. (இயந். & மின்சேவை)
        - உ.பொ.மு. (இ.மி.சேவை)
      - பிரதிப் பொ.மு. (தக. தொலை)
        - உ.பொ.மு. (த.தொ.த.சே.)
        - உ.பொ.மு. (த.தொ.ப.அ.)
      - பிரதிப் பொ.மு. (வர்த்தகம்)
      - உ.பொ.மு. (வழங்கல்)
      - உ.பொ.மு. (ம.வ.அ.ப)
    - மேலதிக பொ.மு. (கழிவுநீர் அமைப்பு)
      - உ.பொ.மு. (சாக். செய)
      - உ.பொ.மு. (சாக். கரு)
      - உ.பொ.மு. (சாக். திட்.வழி)
      - கருத்திட்டப் பணிப்பாளர்கள்
    - மேலதிக பொ.மு. (நீர் வழங்கல் திட்டங்கள்)
      - பிரதிப் பொ.மு. (கருத். இணைப்)
        - உ.பொ.மு. (ஜப்.கரு)
      - பிரதிப் பொ.மு. (திட்டமிடல் & வடிவ.)
        - உ.பொ.மு. (தி.வ. வ/ம)
        - உ.பொ.மு. (தி.வமேல்)
        - உ.பொ.மு. (தி.வ.தெ/கி)
        - உ.பொ.மு. (தி.வ.ஆ)
        - உ.பொ.மு. (தி.வ.இ.மி)
      - கருத்திட்டப் பணிப்பாளர்கள்
    - மேலதிக பொ.மு. (கொள்கை, திட்டமிடல்)
      - பிரதிப் பொ.மு. (அபிவிருத்தி)
        - உ.பொ.மு. (நிர்.)
        - உ.பொ.மு. (மே.நீ.வள.)
        - உ.பொ.மு. (நிர்.) (நி.வ.)
      - பிரதிப் பொ.மு. (கூட்டிணைந்த திட்டம்)
        - உ.பொ.மு. (நி.நீ.வ.மு.) (தி.த.வ.)
      - உ.பொ.மு. (மு.த.மு.) (கொ.மூ.னோ)
      - உ.பொ.மு. (கொ.உ.பா.) (ஆ.ம.அ.)
      - உ.பொ.மு. (ஆரா. அபி.) ( தி.நீ.வ.)

## பணிப்பாளர்கள் சபை

- 01. தலைவர்
- 02. உப தலைவர்
- 03. தொழிற்படு பணிப்பாளர்
- 04. சபை அங்கத்தவர்
- 05. சபை அங்கத்தவர்
- 06. சபை அங்கத்தவர்
- 07. சபை அங்கத்தவர்
- 08 சபை அங்கத்தவர்
- 09. சபை அங்கத்தவர்
- 10. சபை அங்கத்தவர்
- 11. சபை அங்கத்தவர்
- சபையின் செயலாளர்

## சிரேஷ்ட முகாமைத்துவம்

- 12. பொது முகாமையாளர்
- 13. மேலதிக பொது முகாமையாளர்கள்
- 14. பிரிவுகளுக்கான பிரதிப் பொது முகாமையாளர்கள்
- 15. மாகாணங்களுக்கான பிரதிப் பொது முகாமையாளர்கள்
- 16. பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் கருத்திட்டப் பணிப்பாளர்கள்

**பணிப்பாளர்கள் சபை**

**01. திரு. எஸ்.சீ. அமரசிங்க (பொறி)**
B.Sc. Eng., Dip. Business Mgt. C.Eng
FIEE (Lond.,) FIE (SL)
தலைவர், தே.நீ.வ.வ.ச (12.05.2010 வரை)

**01. திரு. கருணாசேன ஹெட்டியாராச்சி**
B.Sc. Eng., (Hons), M.Sc (Leuven)
C. Eng., MIE (SL)
தலைவர், தே.நீ.வ.வ.ச (12.05.2010 முதல்)

**02. டாக்டர் (திரு). உதுமாலெப்பை (பொறி)**
DIMS (Cey), DFC (USA)
உப தலைவர், தே.நீ.வ.வ.ச (12.05.2010 முதல்)

**02. திரு. கே. டி. காமினி குணரட்ன**
உப தலைவர், தே.நீ.வ.வ.ச (12.05.2010 முதல்)

**03. திரு. எம். எஸ். நஸீர்**
B.Sc. Eng., (SL), M.Sc. Eng. (UK)
தொழிற்படு பணிப்பாளர், தே.நீ.வ.வ.ச (07.05.2010 வரை)

**03. திரு. என்.பி. திப்புட்டுமுனுவ**
LLB, BA
தொழிற்படு பணிப்பாளர், தே.நீ.வ.வ.ச (20.09.2010 முதல்)

**04. திரு. எச். பீ.சீ. ஹேரத்** (23.04.2010 வரை)
BSc (Economics), MBA (Colombo)
செயலாளர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு

**05. டாக்டர். வை. டீ. நிஹால் ஜெயதிலக** (26.05.2010 முதல்)
MBBS (Colombo), MSc. (Medical Administration)
செயலாளர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு

**06. திரு. எச். ஏ. அமரசேன** (12.02.2010 வரை)
சட்டத்தரணி

**07. டாக்டர். (திருமதி) தமித டீ சொய்சா** (27.04.2010 வரை)
B.A. Hons (Economics) Peradeniya
MSc. (Agricultural Development Economics) ANU (Australia)
M.A. (Economics), OSU, USA.
Ph.D. (Agricultural Economics) OSU, USA
பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி நிதித் திணைக்களம்)
நிதி, திட்டமிடல் அமைச்சு

**08. டாக்டர். பீ. ஜீ. மஹீபால** (26.05.2010 முதல்)
MBBS, M.Sc., MD, MBA, DBS, DED, DPM, D. (Mgt.)
மேலதிகச் செயலாளர் (சுகாதாரச் சேவை) சுகாதார அமைச்சு

**09. திரு. ஜே. எச். ஜே ஜெயமஹ** (30.11.2010 வரை)
B.Sc (Hons), Kelaniya, M.Phil (Glasgow)
பணிப்பாளர் நாயகம் (வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்)
நிதி திட்டமிடல் அமைச்சு

**10. திரு. ஏ. கே செனவிரத்ன** (16.05.2010 முதல்)
B.Sc (Hons), PGD (Business & Financial Administration)
பணிப்பாளர் (தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம்)
நிதி திட்டமிடல் அமைச்சு

**11. திரு. சனத் பனவென்னகே** (29.12.2010 முதல்)
MSc, MBA, C. Eng., MIE (SL), MIET (UK)
பணிப்பாளர்/CEO ஆதர். சீ. கிளார்க் நவீன தொழில்நுட்ப நிறுவனம்
விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு

2010ஆம் ஆண்டில் 15 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது.

**சிரேஷ்ட முகாமைத்துவம்**

**12. பொது முகாமையாளர்**
**திரு. கே. எல். எல். பிரேமநாத் (பொறி)**
B.Sc. Eng., (Hons), DSE (Netherlands),
M.Eng (Const. Management), C. Eng.,
FIE (SL)

**13. மேலதிக பொது முகாமையாளர்கள்**
**திரு. எஸ். கே. விஜேதுங்க (பொறி) (மேல்)**
B.Sc. (Eng.), C. Eng., MIE (SL),
PG. Dip in Sanitary Eng. (Delft.)

**திரு. பீ. டபிள்யூ. ஆர். பாலசூரிய**
(நீர் வழங்கல் கருத்திட்டங்கள்)
B.Sc. Eng., (Hons), MSc (UK), C.MIE (SL)

**பொறி திரு. ஜீ. ஏ. குமாரரத்ன** (கழிவுநீர் அமைப்பு)
B.Sc. Eng. (Hons), M.Sc (UK), C.Eng.,
FIE (SL), MICE (Lond.), MIWEM (Lond.)

**பொறி (திருமதி) ஜீ. எஸ். முனசிங்க**
(கூட்டு நிறுவன சேவை)
B.Sc. (Eng.), C. Eng., MIE (SL),
PG. Dip in Sanitar Eng. (Delft.)

**பொறி (திருமதி) டி.பீ. லமாபதுசூரிய**
(தென்/கிழக்கு)
B.Sc. Hons (Civil Eng.), DSE (Netherlands),
Dip. in Bus. & Fin. Admin. FIE (SL)
MICE (London)

**பொறி டீ. என். ஜே. பெர்னான்டோ**
(கொள்கை மற்றும் திட்டமிடல்)
B.Sc. (Eng.), Hons, C. Eng., FIE (SL),
MCIWEM (UK), MICE (London)

**பொறி (திருமதி) பீ. என். எஸ் யாபா**
(வடக்கு/மத்திய)
B.Sc. (Eng.), FIE (SL), C.Eng. M.Sc
(Struc. E) (UK)

**பணிப்பாளர் சபையின் செயலாளர்**
**திரு. கே. கே. சந்திரசிறி**
B.Sc. (Hons), Business Administration
PGD (Foreign Affairs) MIM (SL)

**14. பிரிவுகளின் பிரதிப் பொது முகாமையாளர்கள்**

**பொறி. (திருமதி) கே.ரீ.பீ. பெர்னாண்டோ**
**(கருத்திட்ட இணைப்பாக்கம்)**
B.Sc. Eng. (Hons), MIE (SL), C. Eng
MSc. (Water & Waste Engineering) UK

**திரு. டீ. தொடாவத்த (நிதி)**
B.Com. (Sp),ACA, MA (Fin. Econ)

**திரு. எச். ஆரியசேன**
**(ஆளணி மற்றும் நிர்வாகம்)**
B.Sc (Business Administration) Sp.
Dip. in. Personal Management

**பொறி. ஏ. டபிள்யூ. குணசேகர (வர்த்தகம்)**
B.Sc. Eng. (Hons), M.Eng., C.Eng.
MICE (Lond.) MBA

**பொறி. என். எம். எஸ். காலிங்க (இய. மின்)**
B.Sc. Eng. (Hons), MIE (SL), C.Eng.
Dip. Sanitary Eng. (Netherlands)

**பொறி. கே. டீ. கருணாதாச**
**(தகவல் தொழில்நுட்பம்)**
B.Sc. (Eng,) C.Eng. MIE (SL)
PG. Dip. in Hydrology (Delft)
PG. Dip. in Computer Technology,
MS Certified Professional, MSc (IT)

**பொறி. ஜீ. கே. சிறிமால் (அபிவிருத்தி)**
MSc. Mech. Eng. (USSR),
M.E. Hyd. (India) C.Eng. MIE (SL)
Exe. Dip. in Bus. Administration
(Colombo), Dip. in HRM

**பொறி. டீ. எஸ். டீ. ஜயசிறிவர்தன**
**(திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு)**
B.Sc. (Eng.) Hons, C.Eng, FIE (SL),
M.PH. (Univ. of Hawaii)

**பொறி. ஆர். எஸ். சீ. ஜோர்ஜ்**
**(கூட்டிணைந்த திட்டம்)**
B.Sc. Eng. (Hons), C. Eng., MIE (SL)
M.Sc. (Eng.) FRG, MICE (UK)

**திரு. டபிள்யூ. ஏ. ஜே. வீரசிங்க**
**(உள்ளகக் கணக்காய்வு)**
**(அரச மற்றும் அபிவிருத்திக் கணக்கீட்டு நிறுவனத்தின் அங்கத்தவர்)**

**15. மாகாண பிரதிப் பொது முகாமையாளர்கள்**

**பொறி. திரு. டபிள்யூ. பீ. ஜீ. பெர்னாண்டோ (மேல்-மத்தி)**
B.Sc. Eng. PG. Dip (EWREM), PIE (SL),
C. Eng.

**பொறி. திரு. கே. ஆர் தேவசுரேந்திரா (மேல்-தென்)**
B.Sc. Eng. (Hons), FIE, C. Eng,
PG Dip. (Sanitary Eng.-Delft)

**பொறி. (திருமதி) எம்.கே. பண்டார (மேல்-வடக்கு)**
B.Sc. Eng. (Hons), MIE (SL)
M. Eng. (SL) in Public Health Eng. (NSW), Australia

**பொறி. திரு. எம். ஏ. எம். எஸ். எல். அத்தநாயக (மத்திய)**
B.Sc. Eng. MIE (SL), C. Eng.
PG. Dip. (Land & Water), MBA

**பொறி. திரு. டபிள்யூ. ஏ. என். விக்கிரமதுங்க**
**(சப்பிரகமுவ/ஊவா)**
B.Sc. Eng. MIE (SL), C.Eng.

**பொறி. திரு. எல். எல். ஏ. பீரிஸ் (வட மத்திய)**
M. Phil. (IWRM), University of Peradeniya, SL. PG. Dip. (Water and Waste Eng) AIT, Bangkok, B.Sc. (Eng.) Civil Engineering (University of Moratuwa SL),
C. Eng. FIE (SL), Int. PE (SL)

**பொறி. திரு. டீ. யூ. சுமணசேகர (வடமேல்)**
B.Sc. (Netherlands) C.Eng. FIE (SL)

**பொறி. பீ. டபிள்யூ. எஸ் பெரேரா (தென்) பதிலாக**
B.Sc. (Eng.) MIE (SL), C.Eng.

**பொறி. திரு. எம். கே. ஹப்புஆராச்சி (கிழக்கு)**
C. Eng., MIE (SL),PG Dip. Environmental Engineering Mgt.

**பொறி. திரு. டீ.எப்.எஸ். டீ. எப். குணவர்தன (வடக்கு)**
B.Sc. (Eng.) C.Eng. MIE (SL), M.Eng.
IHE (Delft)

**16. பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் கருத்திட்டப் பணிப்பாளர்கள்**

**பொறி. (திருமதி) சீ. ஜே. டீ. பெரேரா**
**(கருத்திட்டப் பணிப்பாளர்- களுகங்கை நீர் வழங்கல் படிநிலை I, கட்டம் II)**
B.Sc. Eng. (Hons), MIE (SL), C.Eng. Dip. Sanitary Eng. (Netherlands), Dip. Enviromental Engineering - (SL)

**பொறி. திரு. ஜே. ஆர். பீ. நதுராண**
**(கருத்திட்டப் பணிப்பாளர்- ஆ.அ.வ. 5வது கருத்திட்டம்)**
B.Sc. Eng. (Hons), PG Dip. in Environmental Science & Technology (Delft)
MIE (SL), C.Eng.

# தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்கள்

| மாகாணம் /கி.ஆ.சே.மை. | நீ.வ.தி. எண்ணிக்கை |
|---|---|
| மத்திய | 47 |
| கிழக்கு | 31 |
| வட மத்திய | 22 |
| வட மேல் | 31 |
| வடக்கு | 28 |
| சப்பிரகமுவ | 19 |
| தென் | 51 |
| ஊவா | 34 |
| மேல் - மத்திய | 13 |
| மேல் - வடக்கு | 22 |
| மேல் - தெற்கு | 17 |
| மொத்தம் | 315 |



# கூட்டிணைந்த திட்டமிடல்

*“திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதை முன்னிட்டான செயற்பாடுகளை தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தது. முந்திய ஆண்டின் தொடர்ச்சியான நடவடிக்கையாக திட்டத்தின் நான்காம் ஆண்டுடன் தொடர்புடைய கொள்கை விடயங்களை வகுத்தல், நடைமுறைகளை அமைத்தல் மற்றும் விடயங்களைத் திட்டமிடல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.”*

## 2007-2011 கூட்டிணைந்த திட்டமிடலின் அமுலாக்கல் நிலைமை

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டானது, எமது கூட்டிணைந்த திட்டத்தின் மூன்றாவது ஆண்டாக இருந்தது. கூட்டிணைந்த திட்டம் 2001-2011 சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பான் வங்கியின் (JBIC)உதவியோடு 2006 செப்டெம்பர் மாதத்தில் தயாரிக்கப்பட்டது.

கூட்டிணைந்த திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதை முன்னிட்டான செயற்பாடுகளை தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச்சபை தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தது. முந்திய ஆண்டின் தொடர்ச்சியான நடவடிக்கையாக திட்டத்தின் நான்காம் ஆண்டுடன் தொடர்புடைய கொள்கை விடயங்களை வகுத்தல், நடைமுறைகளை அமைத்தல் மற்றும் விடயங்களைத் திட்டமிடல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இடப்பட்டுள்ள இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை சிறப்பாக அடையப்பெறுதல் தொடர்பில் உரிய நேரத்திலான மீளாய்வின் அவசியம் முக்கியமானதெனக் கருதப்பட்டது. எமது கூட்டிணைந்த திட்டத்தில் அடையப்பெற்றுள்ள முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான செயலமர்வொன்று முகாமைத்துவப் பணியாளர்கள் மற்றம் ஏனைய பங்குதாரர்களின் முனைப்பான பங்களிப்புடன் 2009 ஜூன் மாதத்தில் நடத்தப்பட்டது. இது மூன்றாவது ஆண்டின் முதலாவது காலாண்டின் இறுதியில் நடைபெற்றதோடு, 2011 க்கு அப்பால் 2013 வரை திட்டத்தின் அளவிடக் கூடியதான இலக்குகளை வகுப்பதற்கும் இச் சந்தர்ப்பத்தில் இயலுமாயிருந்தது. ஆயினும், தற்போதைய ஐந்தாண்டு கூட்டிணைந்த திட்டத்தின் நான்காவது ஆண்டாக இருந்தமையால் மேலும் ஐந்து ஆண்டுகளுக்கான ஒரு புதிய கூட்டிணைந்த திட்டத்தை தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் 15 சிரேஷ்ட முகாமையாளர்களை உள்ளடக்கிய விசேட குழுவொன்று இதன் நிமித்தம் பொது முகாமையாளரால் நியமிக்கப்பட்டதோடு, இக்குழு இதனை முன்னிட்டு செயலாற்றி வருகின்றது.

கூட்டிணைந்த செயற்பாட்டுத் திட்டத்தின் காலாண்டு முன்னேற்றம், ஒவ்வொரு இலக்குகள் தொடர்பிலும் (அத்தகைய ஏழு இலக்குகள் உள்ளதோடு, ஒவ்வொன்றும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த முகாமையாளரால் மேற்பார்வை செய்யப்பட்டது) பொறுப்பு வாய்ந்த முகாமையாளரால் சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கிணங்க, கூட்டிணைந்த செயற்பாட்டுத் திட்டம் தொடர்பிலான முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பணிப்பாளர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

நிறுவன அபிவிருத்தியை மேம்படுத்துதல் கூட்டிணைந்த இலக்காகும். இதற்கான செயற்பாடுகளில், இப் பெறுமதிமிக்க இலக்கை அடையப்பெறுதல் தொடர்பில் திட்டமிடப்பட்டு, ஊழியர்களின் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு ஊழியர்களுக்கு விருது வழங்கும் வைபவமான “சேவக்க அபிநந்தன பிரணாம உலெல” மத்திய பிராந்திய உதவி நிலையத்தில் நடத்தப்பட்டது.



*தே. நீ.வ.வ.ச. தலைவரால் “சேவக பிரணாம” வழங்கப்படுதல்*

**குறித்துரைக்கப்பட்ட இலக்குகள் தொடர்பிலான முன்னேற்றம்**

| இலக்கு | முதன்மைக் குறிக்கோள்கள் | 2010ம் ஆண்டின் இறுதி இலக்கு | 2010ம் ஆண்டின் இலக்கை அடைந்து கொள்ள |
|---|---|---|---|
| 1. நீர் வழங்கல், துப்புரவேற்பாட்டு சேவையை மேம்படுத்துதல் | 1.1 மொத்தக் குழாய் நீர் வழங்கல் சேவையின் உள்ளடக்கம் | 38.2% | 39.2% |
| | 1.2 குழாய் மூலம் கழிவுநீர் அமைப்பு சேவை உள்ளடக்கம் | 2.7% | 2.5% |
| | 1.3 பாதுகாப்பான குடிநீர் வழங்கலைப் பெறுவதற்கான வாய்ப்பின் உள்ளடக்கம் | 81.4% | 81.0%* |
| | 1.4 மொத்த துப்புரவேற்பாட்டு உள்ளடக்கம் | 86.5 | 85.7% * |
| 2. செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தல் | 2.1 வருவாயற்ற நீர் (நாடளாவிய) | 31.0% | 31.6% |
| | 2.2 1000 நீர் இணைப்புகளுக்கான மொத்த பணியாளர்கள் | 7.1 | 6.7 |
| | 2.3 மொத்த மீண்டுவரும் செலவில் வலுசக்தி மீதான செலவு | 22.0% | 20.8% |
| | 2.4 மொத்த மீண்டுவரும் செலவில் பராமரிப்புச் செலவுகள் | 7.0% | 4.7% |
| | 2.5 மொத்த மீண்டுவரும் செலவில் தாபனச் செலவுகள் | 10.0% | 10.7% |
| 3. வாடிக்கையாளர் திருப்தியை அடைதல் | 3.1 மேற்கொள்ளப்படவுள்ள பொது மக்களை விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் (பாடசாலைகள் / ஏனையவை) | 25 | 25 |
| 4. பொருளாதார இருப்பை அதிகரித்தல் | 4.1 மொத்தக் கட்டணப் பட்டியல்களில் மதிப்பிடப்பட்ட கட்டணப் பட்டியல்கள் | 6.0% | 3.0% |
| | 4.2 சேகரிப்பு வினைத்திறன் | 100.0% | 104.0% |
| | 4.3 பெறத்தக்க கணக்குகள் | | |
| | (அ) வீட்டுப் பாவனை மற்றும் வர்த்தக நிறுவனங்கள் | 50 நாட்கள் | 55 நாட்கள் |
| | (ஆ) அரச நிறுவனங்கள் | 60 நாட்கள் | 44 நாட்கள் |
| 5. உயர்ந்த பொறுப்புடைமைகளை உறுதி செய்தல் | மனிதவள அபிவிருத்தி, முகாமைத்துவ தகவல் முறைமை மற்றும் தொழில்துறை திட்டம் தொடர்பில் முகாமைத்துவ மற்றும் தொழில்துறைக் கருவிகளைப் பரந்தளவில் அபிவிருத்தி செய்வதற்கான முன்னெடுப்புகள் மேற் கொள்ளப்பட்டன.<br>• நிதி ரீதியான அதிகார ஒப்படைப்பு<br>• வரவு-செலவுத் திட்டக் கட்டுப்பாடு மற்றும் நிதி ஒழுங்கு விதி தொடர்பான பயிற்சி<br>• வர்த்தக நடவடிக்கைகள் மீதான கணக்காய்வு<br>• களஞ்சியம் மற்றும் வழங்கல்கள் மீதான கணக்காய்வு<br>• காசு/காசோலைக் கொடுப்பனவுகள் மீதான கணக்காய்வு<br>• கட்டுமான ஒப்பந்தங்கள் மீதான கணக்காய்வு<br>• சொத்துக்களை மதிப்பிடல்<br>• மேம்படுத்தப்பட்ட முகாமைத்துவ தகவல்கள் மற்றும் ஒருங்கிணைப்பு | | |
| 6. நிறுவன மேம்பாட்டினை ஊக்குவித்தல் | 6.1 உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 160 | 166 |
| | 6.2 நாட்டினுள் வெளிவாரிப் பயிற்சி (நபர்களின் எண்ணிக்கை) | 250 | 132 |
| | 6.3 வெளிநாட்டுப் பயிற்சி (நபர்களின் எண்ணிக்கை) | 80 | 69 |
| 7. கிராமிய மற்றும் குறைந்த வசதிகளையுடைய மக்களுக்கு வசதிகளை மற்றும் சேவை உதவிகளை வழங்குதல் | 7.1 தே.நீ.வ.வ.ச. உதவியுடன் சமூக அமைப்பினால் பராமரிக்கப்படும் கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் | 5.5% | 5.7% |

* தொகை மதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் 2006-2007 இல் மேற்கொள்ளப்பட்ட மாதிரி மதிப்பீட்டின் மூலம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்கள் தவிர்ந்த, நிர் வழங்கல் 83.1% எனவும் துப்புரவேற்பாட்டு நடவடிக்கைகள் 96.7% எனவும் மதிப்பிடப்பட்டிருந்தது.

* இலங்கை வர்த்தக வங்கியின் உதவியோடு நீ.வ.வ.சபைக்கான 5 ஆண்டு தொழில் திட்டத்தின் அபிவிருத்தி நிறைவு செய்யப்பட்டு முகாமைத்துவத்தினால் மீளாய்வு செய்யப்பட்டது.

# பிரதானமான செயற்பாடு

*"குழாய் மூலமான நீர் வழங்கல் தொடர்பான இலக்கினை பெரும்பாலும் அடைய முடியுமாயிருந்ததென்பதைக் காட்டுகின்ற வகையில், ஆண்டினுள் 87,245 சேவை இணைப்புகள் வழங்கப்பட்டு சனத்தொகையில் 31.6% வீதமானவர்கள் குழாய் மூலமான குடிநீர் வழங்கலைப் பெறுகின்ற நிலைக்குக் கொண்டுவரப்பட்டது."*

குழாய் மூலமான நீர் வழங்கல் தொடர்பான இலக்கினை பெரும்பாலும் அடைய முடியுமாயிருந்ததென்பதைக் காட்டுகின்ற வகையில், ஆண்டினுள் 87,245 சேவை இணைப்புகள் வழங்கப்பட்டு சனத்தொகையில் 31.6% வீதமானவர்கள் குழாய் மூலமான குடிநீர் வழங்கலைப் பெறுகின்ற நிலைக்குக் கொண்டுவரப்பட்டது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு பாரிய மற்றும் சிறிய நீர் வழங்கல் கருத்திட்டங்களை செயற்படுத்தியதன் ஊடாக இருக்கின்ற வாடிக்கையாளர்களின் சேவை மட்டங்கள் மேம்படுத்தப்பட்டன. சுனாமியினால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளிலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளிலும் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு நீர் வழங்கல் மற்றும் சாக்கடை வசதிகள் புனரமைக்கப்பட்டு மீளமைக்கப்பட்டன என்பதோடு இதன் மூலம் இப் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரங்கள் மேம்படுத்தப்பட்டன. கருத்திட்டத்தின் ஆக்கக்கூறுகள் பழுதடைந்த பயன்பாடுகளை மீளளிப்புச் செய்வதற்கு மாத்திரம் மட்டுப்பட்டதாயிராது. மீள் குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களின் நீர் வளங்கள் மற்றும் துப்புரவேற்பட்டு வசதிகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் சேவை மட்டங்களை மேம்படுத்தல், புதிதாக அபிவிருத்தி செய்யப்படுகின்ற சூழவுள்ள பிரதேசங்களுக்கான நீடிப்புகள் ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றன.

பணியாட்தொகுதிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் மட்டுப்படுத்தப்பட்டதோடு ஆயிரம் சேவை இணைப்புகளுக்கு பணியாளர் விகிதம் 6.7 என்றவாறு குறைக்கப்பட்டது. தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை 2010 ஆம் ஆண்டில் நிறுவன ரீதியான அபிவிருத்தி நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டிருந்தது. (விபரங்கள் 32 ஆம் பக்கத்தில்)

நான்கு வருடங்களுக்குப் பின்னர் 2009 பெப்ரவரி நடுப்பகுதியிலிருந்து ஆமுலாகின்றவாறு நீர்க் கட்டணத் அறவீட்டுத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், தொழிற்பாட்டுச் செலவினங்களிலான அதிகரிப்பு, படுகடன், பணிக் கடப்பாடுகள் மற்றும் நான்கு வருடங்களாக அறவீடுகள் அதிகரிக்கப்படாதிருந்தமை ஆகியன குறிப்பிடத்தக்கதொரு பற்றாக்குறையை உருவாக்கியிருந்தமையால் தே.நீ.வ.வ.ச. யின் நிதியினை மிகக் கவனமாக முகாமை செய்ய வேண்டியிருந்தது. 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளைப் பொறுத்தவரை படுகடன் பணிக் கொடுப்பனவுகளை முழுமையாக ஈடுசெய்ய முடியாதிருந்தது.

வருவாயற்ற நீரில், அனுமதி பெற்ற ஆனால் கட்டணப் பட்டியலற்ற, கொழும்பிலுள்ள குடியிருப்புத் தோட்டங்களுக்கான நீர் வழங்கல்களும் பொது துப்புரவேற்பாட்டு வசதிகளும் உள்ளடங்குகின்றன. முன்னர் கொழும்பு மாநகர சபையினால் வழங்கப்பட்ட இச் சேவைகளைத் தொடர்ந்தும் வழங்க தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை நிர்ப்பந்திக்கப்பட்டது. கொழும்பு நகரத்திற்கான அனுமதி பெற்ற கட்டணப் பட்டியலற்ற நீர் வழங்கல் (நீர் வழங்கல் 11%என மதிப்பிடப்பட்டுள்ளது) சேர்க்கப்படாவிடின் கொழும்பு நகரத்தில் நீருக்காகக் கணிப்பிடப்படாத அளவு 42%ஆக இருக்கும். கொழும்பு நகரத்தின் அனுமதிபெற்ற பட்டியலிடப்படாத நீர் வழங்கல் சேர்க்கப்படாவிடின், மேல் மாகாணத்திலும் நாடளாவிய ரீதியிலும் வருவாயற்ற நீர் முறையே 30% மற்றும் 29% ஆக இருக்கும். 2009 ஆம் ஆண்டிலிருந்த வருவாயற்ற நீரின்அளவு 2010 ஆம் ஆண்டிலும் அதே மட்டத்தில் பேணிவரப்பட்டது.

**பொதுவான செயற்பாடுகள்**

தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் கவனிப்பு எல்லைக்குள் 315 பாரிய, சிறிய மற்றும் மிகச் சிறிய நீர் வழங்கல் திட்டங்கள் இயங்குகின்றன. இவற்றில் 31 திட்டங்கள் மாநகரங்களையும், 284 திட்டங்கள் பட்டினங்கள் மற்றும் கிராமங்களையும் உள்ளடக்குகின்றன. சனத்தொயில் 8% வீதத்தினர் கைப்பம்பிக் குழாய்க் கிணறுகளின் கீழ் உள்ளடக்கப்படுகின்றனர். கிராமிய நீர் வழங்கல் திட்டங்களைப் பொறுத்தவரை சமூக மைய நிறுவனங்களின் ஊடாக சமூக முகாமைத்துவம் மேம்படுத்தப்பட்டுள்ளது. பொருத்தமான விதத்தில் மழை நீரைச் சேகரித்தல் குடிநீர் மூலவளம் என்ற வகையில் அங்கீகரிக்கப்பட்ட தெரிவாகக் கருதப்படுகின்றது.

| | | | 2009 | **2010** | வேறுபாடு (%) |
|---|---|---|---|---|---|
| **முக்கியமான புள்ளிவிபரங்கள் - நீர் வழங்கல்** | | | | | |
| நீர் வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை | | | 312 | **315** | 1.0 |
| குழாய் நீர் உற்பத்தி (மில்லியன் க.மீ.) | | | 449 | **469** | 4.5 |
| வீட்டு நீர் இணைப்புகள் (எண்ணிக்கை) | | | | | |
| | (அ) | மேல் மாகாணம் | 575.852* | **599,846** | 4.2 |
| | (ஆ) | ஏனைய மாகாணங்கள் | 590.784* | **648,330** | 9.7 |
| **மொத்த வீட்டு நீர் இணைப்புகளின் எண்ணிக்கை** | | | 1.166.636 | **1,248,176** | 7.0 |
| பொது நீர்க் கம்பம் (எண்ணிக்கை) | | | | | |
| | (அ) | மேல் மாகாணம் | 4.411# | **4,375** | (0.8) |
| | (ஆ) | ஏனைய மாகாணங்கள் | 2.757 | **2,541** | (7.8) |
| **மொத்த பொது நீர்க் கம்பங்களின் எண்ணிக்கை** | | | 7.168 | **6,916** | (3.5) |
| வீடல்லாத இணைப்புகள் (எண்ணிக்கை) | | | | | |
| | (அ) | மேல் மாகாணம் | 47.592 | **50,087** | 5.2 |
| | (ஆ) | ஏனைய மாகாணங்கள் | 44.932 | **48,394** | 7.7 |
| **மொத்த வீடல்லாத நீர் இணைப்புகளின் எண்ணிக்கை** | | | 92.524 | **98,481** | 6.4 |
| **நீர் வழங்கல் சேவை இணைப்புகளின் மொத்த எண்ணிக்கை** | | | 1.266.328 | **1,353,573** | 6.9 |
| குடும்பமொன்றிற்கான மாதாந்த சராசரி வீட்டு நுகர்வு | | | | | |
| (வீட்டு இணைப்புகள்/கன மீற்றர்) | (அ) | மேல் மாகாணம் | 17.25 | **17.14** | (0.6) |
| | (ஆ) | ஏனைய மாகாணங்கள் | 13.53 | **13.18** | (2.6) |
| ஒரு குடும்பத்திற்கானமாதாந்த சராசரி வீட்டு கட்டண பட்டியல் (ரூபா) | (அ) | மேல் மாகாணம் | 530.92 | **566.17** | 6.6 |
| | (ஆ) | ஏனைய மாகாணங்கள் | 294.56 | **310.23** | 5.3 |
| மொத்த வருமானம் (ரூபா மில்லியன்) (பெறுமதியின் மீதான சேகரிக்கப்பட்ட வரியுடன்) | | | 11.116 | **12,409** | 11.6 |
| மொத்த மீண்டு வரும் செலவினம் (ரூபா மில்லியன்) | | | 9.186 | **10,537** | 14.7 |
| வருவாயற்ற நீர் இணைப்புகள் (%) | | | | | |
| | (அ) | மேல் மாகாணம் | 34.38 | **34.82** | 1.3 |
| | (ஆ) | ஏனைய மாகாணங்கள் | 25.93 | **26.65** | 2.8 |
| | (இ) | நாடளாவிய | 31.07 | **31.55** | 1.5 |
| செ.ம.ப. அலுவலக குழாம் /1000 நீர் வழங்கல் இணைப்புகள் | | | 5.89 | **5.52** | (6.3) |
| அலுவலக குழாம் /1000 நீர் வழங்கல் இணைப்புகள் | | | 7.16 | **6.66** | (7.0) |
| நீர் உற்பத்திக்கான சராசரி மீட்சி செலவினம் (ரூபா /க.மீ) | | | 20.48 | **22.42** | 9.5 |
| சேகரிக்கும் ஆற்றல் | | | 0.94 | **1.00** | 6.4 |
| ஆழ் கிணறுகள் (எண்ணிக்கை) | (அ) | தோண்டப்பட்ட கிணறுகள் | 622 | **299** | (51.9) |
| | (ஆ) | வெற்றிகரமான கிணறுகள் | 492 | **243** | (50.6) |
| அபிவிருத்திச் செலவினம் (ரூபா மில்லியன்) | | | 21.136 | **26,389** | 24.9 |
| **முக்கியமான புள்ளிவிபரங்கள்: கழிவு நீர் அமைப்பு** | | | | | |
| தெஹிவலை-கல்கிசை கழிவு நீர் அமைப்பின் கழிவுநீர் இணைப்புகள் | | | 2.168 | **2,221** | 2.4 |
| கொலன்னாவ கழிவு நீர் அமைப்பின் கழிவு நீர் இணைப்புகள் | | | 1.339 | **1,488** | 11.1 |
| நிறுவனங்களுக்கான கழிவு நீர் இணைப்புகள் | | | 7 | **7** | - |
| கொழும்பு பெரும்பாக வீடமைப்புத் திட்டங்களின் கழிவு நீர் இணைப்புகள் | | | 2.290 | **2,290** | - |
| கொழும்பு பெரும்பாக பிரதேசத்திற்கு வெளியேயுள்ள வீடமைப்புத் திட்டங்களில் மற்றும் | | | | | |
| கொழும்பு கழிவுநீர் அமைப்புப் பிரிவின் மூலம் பராமரிக்கப்படும் கழிவுநீர் இணைப்புகள் | | | 4.631 | **4,631** | - |
| **கழிவுநீர் இணைப்புகளின்** | | | | | |
| **மொத்த எண்ணிக்கை** | | | 10.435 | **10,637** | 1.9 |

குறிப்புகள்

*சபைகள் மற்றும் அரச விடுதிகள் உள்ளடங்கியவாறு எண்ணிக்கை இற்றைப்படுத்தப்பட்டது.

#2008 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 2009 சனவரியில் எண்ணிக்கை திருத்தப்பட்டது.

# தொழிற்பாடுகளின் சாராம்சம்

*"தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த நீரில் 60% பங்களிப்பைக் கொண்டுள்ள மேல் மாகாண நீர் வழங்கல் திட்டங்களான அம்பத்தலே, லபுகம, கலட்டுவாவ மற்றும் களுத்துறையிலுள்ள கந்தான ஆகிய நான்கு நிலையங்கள் நீர் உற்பத்தியில் பிரதானமான பங்கை வகிக்கின்றன."*

## நீர் வழங்கல்

### குடிநீர் உற்பத்தி

2010 ஆம் ஆண்டில் மொத்தமாக 470 மில்லியன் கன மீற்றர் குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த 10 வருடங்களின் போக்கு வரைபடத்தில் தரப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்த நீரில் 60% பங்களிப்பைக் கொண்டுள்ள மேல் மாகாண நீர் வழங்கல் திட்டங்களான அம்பத்தலே, லபுகம, கலட்டுவாவ மற்றும் களுத்துறையிலுள்ள கந்தான ஆகிய நான்கு நிலையங்கள் நீர் உற்பத்தியில் பிரதானமான பங்கை வகிக்கின்றன. களுத்துறையில் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

### நீர் உற்பத்தி




### மாகாண ரீதியில் நீர் உற்பத்தி



**உற்பத்திச் செலவு**

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யப்பட்ட உற்பத்திச் செலவு விபரம் (ரூபா. மில்லியன்) கீழே தரப்பட்டுள்ளது.




**சேவை இணைப்புகளின் ஒப்பீடு**

| மாகாணம்/ பி.சே.நி. | சேவை வழங்கல்களின் எண்ணிக்கை 2009 டிசெம்பர் மாத இறுதியில் | 2010 டிசெம்பர் மாத இறுதியில் | மாற்றம் % | | 2009 டிசெம்பர் மாத இறுதியில் | 2010 டிசெம்பர் மாத இறுதியில் | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் - மத்திய | 338.669 | **349,372** | 3.2 | முன்னுரிமை | 2.702 | **2,747** | 1.7 |
| | | | | கொழும்பு நகரம் | 125.529 | **126,613** | 0.9 |
| | | | | கொழும்பு வ.கிழக்கு நகரம் | 124.934 | **128,862** | 3.1 |
| | | | | கொழும்பு தெ.கிழக்கு நகரம் | 85.504 | **91,150** | 6.6 |
| மேல் - வடக்கு | 133.387 | **141,601** | 6.2 | கொழும்பு வடக்கு நகரம் | 94.105 | **99,616** | 5.9 |
| | | | | கம்பஹா | 39.282 | **41,985** | 6.9 |
| மேல் - தெற்கு | 155.799 | **163,335** | 4.8 | கொழும்பு தெற்கு நகரம் | 86.279 | **88,816** | 2.9 |
| | | | | களுத்துறை | 42.127 | **43,778** | 3.9 |
| | | | | பாணந்துறை | 27.393 | **30,741** | 12.2 |
| மத்திய | 148.470 | **164,259** | 10.6 | கண்டி வடக்கு | | **64,230** | |
| | | | | கண்டி கிழக்கு | 148.470 | **54,122** | 10.6 |
| | | | | கண்டி தெற்கு | | **45,907** | |
| வட மேல் | 36.347 | **40,947** | 12.7 | குருநாகல் | 36.347 | **40,947** | 12.7 |
| வட மத்திய | 55.669 | **62,579** | 12.4 | அநுராதபுரம் | 55.669 | **62,579** | 12.4 |
| சப்ரகமுவ | 66.121 | **69,264** | 4.8 | இரத்தினபுரி | 29.303 | **30,955** | 5.6 |
| | | | | கேகாலை | 36.818 | **38,309** | 4.0 |
| தென் | 188.550 | **203,820** | 8.1 | அம்பாந்தோட்டை | 64.482 | **68,350** | 6.0 |
| | | | | மாத்தறை | 61.642 | **65,922** | 6.9 |
| | | | | காலி | 62.426 | **69,548** | 11.4 |
| ஊவா | 52.624 | **56,771** | 7.9 | பண்டாரவளை | 32.686 | **35,217** | 7.7 |
| | | | | மொனராகலை | 19.938 | **21,554** | 8.1 |
| வடக்கு | 5.631 | **6,456** | 14.7 | யாழ்ப்பாணம் | 5.631 | **1,058** | 14.7 |
| | | | | மன்னார் | | **5,398** | |
| கிழக்கு | 85.061 | **95,169** | 11.9 | அம்பாறை | 23.732 | **25,371** | 6.9 |
| | | | | திருகோணமலை | 29.048 | **29,663** | 2.1 |
| | | | | அக்கரைப்பற்று | 32.281 | **40,135** | 24.3 |
| **மொத்தம்** | 1.266.328 | **1,353,573** | 6.9 | **மொத்தம்** | 1.266.328 | **1,353,573** | 6.9 |

### நீர் இணைப்புகளின் வளர்ச்சி




### வருடாந்த பட்டியலிடல் மற்றும் பெறுகை சேகரிப்பு சம்பந்தமான ஒப்பீடு




### ஒரு குடும்பத்திற்கான சாதாரண மாதாந்த நீர் பாவனை- நீர் வழங்கல் இணைப்புக்கு (கனமீற்)




### வீடுகளின் சராசரி மாதாந்த விலைப்பட்டியல் ஒரு குடும்பத்திற்கான சாதாரண மாதாந்த பட்டியலிடல்




### விலைப்பட்டியலிடல் சம்பந்தமான புள்ளிவிபரங்கள்

| விபரம் | 2009 | **2010** |
|---|---|---|
| விலைப்பட்டியலின் இலக்கு (ரூபா மில்லியன்) | 10,612 | **11,890** |
| உண்மை விலைப்பட்டியல் (ரூபா மில்லியன்) | 11,119 | **12,409** |
| வரவு சேகரிப்பு இலக்கு (ரூபா மில்லியன்) | 10,925 | **12,658** |
| உண்மை வரவு சேகரிப்பு (ரூபா மில்லியன்) | 10,502 | **12,453** |

### விற்பனையாகிய நீரின் அளவு மற்றும் பாவனையாளர்களின் வர்க்கப் பிரிவிற்கமைய வருமானம் (2010)

| | விற்ற தொகை | | வருமானம் | |
|---|---|---|---|---|
| **பாவனையாளர்களின் வர்க்கம்** | கன மீற்றர் 000 | % | ரூபா மில்லியன் | % |
| நேரடி கட்டணஅறவிடல் (வீட்டு. தே.நீ.வ.வ.ச. விடுதிகள், அரச விடுதிகள்) | 215,114 | 66.6 | 6,214 | 50.1 |
| பாடசாலைகள் | 4,260 | 1.3 | 96 | 0.8 |
| தோட்டக் குடியிருப்புகள் | 10,696 | 3.3 | 268 | 2.2 |
| நீர்க்கம்பங்களின் மூலம் நீர் வழங்கல் (பொது நீர்க் கம்பம்) | 2,634 | 0.8 | 37 | 0.3 |
| அரசாங்க நிறுவனங்கள், தே.நீ.வ.வ.ச. வளவுகள் | 33,107 | 10.3 | 2,153 | 17.4 |
| வர்த்தக மற்றும் கைத்தொழில் | 30,116 | 9.3 | 2,581 | 20.8 |
| சுற்றுலா ஹோட்டல்கள் | 2,197 | 0.7 | 173 | 1.4 |
| கப்பல்துறை | 180 | 0.1 | 81 | 0.7 |
| முதலீட்டுச் சபை | 7,380 | 2.3 | 436 | 3.5 |
| மத வழிபாட்டுத் தலங்கள் | 4,160 | 1.3 | 94 | 0.8 |
| **உப மொத்தம்** | **309,844** | **96.0** | **12,133** | **97.8** |
| தொகை மொத்த நீர் வழங்கலுக்காக கட்டணம் அறவிடல் | 10,449 | 3.2 | 187 | 1.5 |
| ஏனையவை* | 2,540 | 0.8 | 89 | 0.7 |
| **முழு மொத்தம்** | **322,833** | **100.0** | **12,409** | **100.0** |

* ஏனைய அனைத்து விலைப்பட்டியல் வர்க்கங்களும் 'ஏனையவை' என்ற வகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மிகைக் கொடுப்பனவுகளைத் திருப்பிச் செலுத்துதலும் இவ்வகைப்படுத்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**நீர் பாவனையாளர்களின் வகைவாரியாக உபயோகிக்கப் பட்ட நீரின் நூற்றுவீத அளவு**




**பாவனையாளர்களின் வகைவாரிக்கமைவாக வருமான நூற்றுவீதம்**




**கழிவு நீரமைப்பு**

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் அமைப்பு பிரிவு பின்வரும் கழிவுநீர் முறைமைகளின் செயற்பாடு மற்றும் பராமரிப்புக்குப் பொறுப்பாக உள்ளது.

- தெஹிவலை - கல்கிசை மாநகரசபைப் பிரதேசம்
- கொலன்னாவ நகர சபைப் பிரதேசம் மற்றும்
- கொழும்பு பெரும்பாகப் பிரதேசத்தினுள்அமைந்துள்ள வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான ஒரு சில வீடமைப்பு தொடர்மாடிகள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் சிலவற்றுக்குரிய கழிவுநீர் (பம்ப்) இறைக்கும் சாலை மற்றும் பம்ப் செய்யும் பிரதான குழாய் வழி.

2008 சனவரி மாதத்திலிருந்து கழிவுநீர் இணைப்புகளுக்கு கழிவுநீர் கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு கொழும்பு மாநகர எல்லைக்கு வெளியிலுள்ள அநேகமாக அனைத்து இணைப்புகளும் கழிவுநீர் அறவீட்டுக்காகப் பதியப்பட்டுள்ளன.

தெஹிவலை - கல்கிசை கழிவு நீரகற்றல் திட்டம்
(முகவரி 480, ரொக்சி கார்டன், வெள்ளவத்தை)

1980 ஆம் ஆண்டிற்கும் 1987 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட குறித்த கழிவுநீர் அமைப்பு 2 கழிவு நீரிறைக்கும் நிலையங்களையும், 32 கிலோ மீற்றர்கள் நீளமான கழிவு நீர்க் குழாய் வலையமைப்பையும் உள்ளடக்கியதாக உள்ளது. 5000 ஆதனங்களின் இணைப்புகளை உள்ளடக்கக்கூடிய வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள ஆதன இணைப்புக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 2,221 ஆகும்.

கொலன்னாவ கழிவு நீரகற்றல் திட்டம்
(முகவரி 400, அவிசாவலை வீதி, வெல்லம்பிட்டிய)

இவ்வமைப்பானது நான்கு கழிவு நீரிறைக்கும் நிலையங்களைக் கொண்டதாக 1980-1987 கால கட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டது. கழிவு நீர்க்குழாய் வலையமைப்பு ஏறத்தாழ 20 கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்டுள்ளது. 3,900 ஆதன இணைப்புக்களை உள்ளடக்கக் கூடியவாறு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது 1,488 ஆதன இணைப்புகள் உள்ளன.

ஒரு சில வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் கழிவு நீரகற்றல் திட்டங்கள்

மேலே குறிப்பிடப்பட்ட பாரிய கழிவு நீரகற்றல் திட்டங்களுக்கு மேலதிகமாக, கொழும்பு பெரும்பாகப் பிரதேசத்திலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு சில பாரிய வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் கொழும்பு மாநகர சபை எல்லைக்கு வெளியிலுள்ள. ஆயினும் கொழும்பு பெரும்பாகப் பிரதேசத்திற்குட்பட்ட அரசாங்க நிறுவனங்களினதும் கழிவுநீர் கழிவுநீரகற்றல் சேவை ஏற்பாடுகளுக்கு தே.நீ.வ.வ.ச. பொறுப்பாக உள்ளது. பின்வரும் திட்டங்களில் ஏறத்தாழ 6,921 கழிவுநீர் இணைப்புகள் உள்ளன.

(அ) வீடமைப்புத் திட்டங்கள்

1. சொய்சாபுர வீடமைப்புத் திட்டம்
2. மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டம்
3. மத்தெகொடை வீடமைப்புத் திட்டம்
4. ஜயவடனகம வீடமைப்புத் திட்டம்
5. காக்கை தீவு வீடமைப்புத் திட்டம்
6. மத்துமகெவத்தை வீடமைப்புத் திட்டம்
7. ஸ்டேஸ் வீதி வீடமைப்புத் திட்டம்

(ஆ) அரசாங்க நிறுவனங்கள்

1. சனாதிபதி செயலகம்
2. சபாநாயகர் இல்லம்
3. பாராளுமன்றம் (நீர் மற்றும் கழிவுநீரமைப்பு)
4. செத்சிறிபாய (நீர் மற்றும் கழிவுநீரமைப்பு)
5. இசுருபாய (நீர் மற்றும் கழிவுநீரமைப்பு)
6 ஜயவடனகம ஆஸ்பத்திரி
7. மாளிகாவத்தை வைத்தியசாலை

சீதாவக்க சொய்ஸ்சாபுர மற்றம் மத்தெகொடை ஆகிய இடங்களில் மூன்று கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ளன. தெஹிவலை-கல்கிசை மற்றும் கொலன்னாவை கழிவுநீரமைப்புத் திட்டத்தின் நீரிறைக்கும் நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படும் கழிவு நீர், வெள்ளவத்தை மற்றும் முகத்துவாரத்தில் அமைந்துள்ள கடலுக்கு செலுத்தப்படும் இரண்டு நிலையங்களினூடாக வெளியேற்றப்படுகின்றது.

# முதலீடுகளின் சாராம்சம்

*“ரூபா 3.85 பில்லியன் ரூபா ஆன மேலதிக ஒதுக்கீட்டுடன் 2009 ஆம் ஆண்டில் 69% என பதிவாகிய மூலதன நிதியப் பயன்பாடானது 2010 ஆம் ஆண்டில் அனுமதியளிக்கப்படவிருந்த மேலதிக குறை நிரப்பு நிதி ஏற்பாடுகள் உட்பட்டதாக 98% என பதிவாகியது.”*

## நிதியியல் வளங்கள்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் கருத்திட்டங்கள் தொடர்பில் மூலதனப் பணிகளின் பொருட்டு வெளிநாட்டு நிதியாக ரூபா 15.892 மில்லியன் வழங்கப்பட்டது. இலங்கை அரசாங்கம் ரூபா 5.157 மில்லியன் தொகையை மறுதரப்பு நிதியாக பங்களிப்புச் செய்தது. இதற்கு மேலதிகமாக சிறிய மற்றும் நடுத்தர நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்காக ரூபா 1.300 மில்லியன் உள்நாட்டு திரண்ட நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்டது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட நீர் வழங்கல் முறைமைகளின் மீளமைப்புக்காக ரூபா 2.100 மில்லியன் வெளிநாட்டு நிதியும் ரூபா 546 மில்லியன் உள்நாட்டு மறுதரப்பு நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

**வரவு செலவுத் திட்ட மூலதன ஒதுக்கீடுகள்**




2006 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக வருடாந்த மூலதன ஒதுக்கீடானது ரூபா 25.6 பில்லியனிலிருந்து ரூபா 30.9 பில்லியன் வரை சீராக அதிகரித்துள்ளது. ஆயினும் 2010 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மூலதன நிதியானது ரூபா 22.91 பில்லியன் வரை குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளது.

### மூலதன நிதியங்களின் பயன்பாடு

அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய செலவுகளை ஈடுசெய்யும் பொருட்டு 2010 ஆம் ஆண்டினுள் (ரூபா 2090, 1667, மற்றும் 350 மில்லியன்) மூன்று குறைநிரப்பு செலவினத் தலைப்புகளுக்கு அனுமதி வேண்டப்பட்டதோடு 2010 இறுதியாகின்றபோது இவற்றில் ஒன்று மாத்திரம் வழங்கப்பட்ட அதேவேளை இரண்டு வழங்கப்படவில்லை. ஆதலால் சில செலவினங்கள் உரிய வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டைத் தாண்டியதாகக் காணப்படலாம். அவை கிடைத்திருப்பின் அனைத்து செலவினங்களும் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டைத் தாண்டியதாகக் காணப்படலாம். அவை கிடைத்திருப்பின் அனைத்து செலவினங்களும் வரவு செலவுத் திட்டத்திற்கு உட்பட்டதாய் அமைந்திருக்கும்.

### மூலதன நிதியங்களின் பயன்பாடு




### மூலதன நிதியப் பயன்பாட்டின் ஒப்பீடு 2009 / 2010

| விளக்கம் | 2009 | | **2010** | |
|---|---|---|---|---|
| வெளிநாட்டு ஆக்கக் கூறுகள் (ரூபா மில்லியன்) | 13.838 | 62.2% | **18,602** | **103.3%** |
| வெளிநாட்டு உதவியுடன் தொடர்புடைய உள்நாட்டு ஆக்கக் கூறுகள் (ரூபா மில்லியன்) | 6.348 | 82.7% | **6,410** | **112.4%** |
| உள்நாட்டுக் கருத்திட்டங்களுக்கான திரண்ட நிதியங்கள் (ரூபா மில்லியன்) | 950 | 103.3% | **1,377** | **105.9%** |
| மொத்தம் | 21.136 | 68.5% | **26,389** | **105.6%** |

3.85 பில்லியன் ரூபா ஆன மேலதிக ஒதுக்கீட்டுடன் 2009 ஆம் ஆண்டில் 69% என பதிவாகிய மூலதன நிதியப் பயன்பாடானது 2010 ஆம் ஆண்டில் அனுமதியளிக்கப்படவிருந்த மேலதிக குறைநிரப்பு நிதி ஏற்பாடுகள் உட்பட்டதாக 98% என பதிவாகியது.

புத்தல நீர் விநியோகத் திட்டத்திற்காக (தயட கிருள கண்காட்சி) மேலதிக நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுத் தருவதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

குறித்த நிதி ஒதுக்கீட்டினைக் கருத்திற் கொண்டு தே.நீ.வ.வ. சபையானது 70 மில்லியன் ரூபாவை புத்தல நீர் வழங்கல் திட்டத்திற்காக செலவிட்டுள்ளது. ஆயினும் எதிர்பார்க்கப்பட்ட மேலதிக தொகையானது உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாமையானது மிகை செலவினத்திற்கு வழிவகுத்தது.

### வெளிநாட்டு நன்கொடை உதவிகள் வழங்கும் நிறுவனங்கள் பங்களிப்புச் செய்யப்பட வெளிநாட்டு நிதி உதவி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் உரிய நிதியங்கள்




*ஸ்பெயின் மற்றும் UNICEFPP

### தற்போது நடைமுறையிலுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு

2010 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதன் சொந்த நிதியமான ரூபா 510 மில்லியனைப் பயன்படுத்தி தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டினை தொடர்ந்தும் மேற்கொண்டது. மேற்படி நிதியம் நீர் வழங்கலின் தரம் மற்றும் அளவினை மேம்படுத்துவதற்கும், தே.நீ.வ.வ.ச.யின் சொத்துக்களைப் பராமரிப்பதற்கும், தொழிற்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உதவிச் சேவைகளை மேற்கொள்வதற்கும் பயன்படுத்தப்பட்டது. நன்கொடையாளர்களின் உதவிகள் அல்லது பாரிய அளவு நிதிகள் கிடைக்காத திட்டங்களின் மேம்பாட்டிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

**இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதியங்களின் ஊடான சிறிய அளவிலான உட்கட்டமைப்பு புனரமைப்பு மற்றும் கருத்திட்டங்களின் மேம்பாடு**

தே.நீ.வ.வ.ச.யினால் திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்பட்டு மற்றும் செலவிடப்பட்ட உள்நாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்கள் உள்ளன. உரிய மாகாண பணியாளர்களால் கருத்திட்டங்களின் அமுலாக்கல் மேற்பார்வை செய்யப்பட்டதோடு பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மாகாண தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பணியாளர்களால் பொறுப்பேற்கப்பட்டது.

உள்நாட்டு நிதியளிப்பிலான மூலதனப் பணிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 14 புதிய நீர் வழங்கல் கருத்திட்டங்களும் மேலும் 31 நீர் வழங்கல் திட்டங்களின் புனரமைப்பும் விரிவாக்கலும் 2010 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

**மாவட்ட ரீதியிலான மூலதனப் பணிகள் நிகழ்ச்சித் திட்டம் - 2010**

| மாவட்டம் | ஒதுக்கீடு 2010 ரூ.மில். | ஒதுக்கீட்டிலான கருத்திட்டங்களின் எண்ணிக்கை | நலன் பெறுநர்கள் |
|---|---|---|---|
| அம்பாறை | **97.0** | 1 | 17,500 |
| அனுராதபுரம் | **120.0** | 2 | 8,000 |
| பதுளை | **25.0** | 2 | 37,150 |
| கொழும்பு | **100.0** | 3 | 62,273 |
| காலி | **13.0** | 2 | 8,000 |
| கம்பஹா | **32.0** | 2 | 20,000 |
| களுத்துறை | **115.0** | 1 | 142,000 |
| கண்டி | **70.0** | 2 | 142,300 |
| கேகாலை | **159.0** | 5 | 122,300 |
| குருநாகல் | **80.0** | 1 | 12,000 |
| மாத்தளை | **30.0** | 2 | 25,800 |
| மாத்தறை | **108.0** | 5 | 192,000 |
| மொனராகலை | **31.0** | 3 | 37,800 |
| நுவரெலியா | **13.0** | 1 | 10,500 |
| பொலனறுவை | **159.0** | 3 | 80,200 |
| புத்தளம் | **10.0** | 1 | 2,500 |
| இரத்தினபுரி | **75.0** | 5 | 165,600 |
| திருகோணமலை | **33.0** | 3 | 60,000 |
| **மொத்தம்** | **1,300.0** | **44** | **1,145,923** |

ஆண்டினுள் முழுமையான நிதி ஒதுக்கீடும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அநேகமாக அனைத்து உள்நாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்களும் 6 தொடக்கம் 8 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சிறிதளவிலான வருடாந்த வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் காரணமாக இந்தக் கருத்திட்டங்கள் நீண்டு சென்றுள்ளன. இதன் விளைவாக, விலை அதிகரிப்பு காரணமாக இவற்றின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் அதிகரித்துள்ளது. மேலும், மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்களின் பணக்கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு உரிய நேரத்தில் உள்நாட்டு நிதியங்கள் விடுவிக்கப்படவில்லை. பல மாதங்கள் தாமதமேற்பட்டமையால் ஒப்பந்தக்காரர்களுடைய காசுப் பாய்ச்சல் பாதிக்கப்பட்டது. 2009 இல் நடைமுறையிலிருந்த அனைத்து உள்நாட்டுக் கருத்திட்டங்களின் நிலைமையையும் தே.நீ.வ.வ.ச. மதிப்பீடு செய்ததோடு, கவனத்திற்கொள்ளப்பட்ட 40 கருத்திட்டங்களையும் தே.நீ.வ.வ.ச. மதிப்பீடு செய்ததோடு, கவனத்திற் கொள்ளப்பட்ட 40 கருத்திட்டங்களையும் பூர்த்தி செய்வதற்கு ரூபா 7,365 மில்லியன் தேவைப்படுவதாக தீர்மானித்தது. ஆயினும் 2010 ஆம் ஆண்டுக்காகக் கிடைத்த ஒதுக்கீடு ரூபா 1,300 மில்லியனன் ஆகும். இவ்வாறு நீண்டு செல்வதன் காரணமாக நலன்பெறவுள்ளவர்கள் நீர் வழங்கலை இழந்துள்ளனர்.

**பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்**

மீளாய்வுக்கு உள்ளாக்கப்பட்ட ஆண்டினுள் பின்வரும் புதிய கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

| | |
|---|---|
| கிழக்கு | அம்பாறை நீர் வழங்கல் திட்டம்<br>(ஜேர்மனி அரசாங்கத்தின் கடன் உதவித்திட்டம்) |
| தெற்கு | அகுரஸ்ஸ நீர் வழங்கல் திட்டம்<br>ரதம்பொல நீர் வழங்கல் திட்டம்<br>ஜேர்மனி அரசாங்கத்தின் கடன் நிதியளிப்பிலான சுனாமி திட்டம் |
| மத்திய | நுவரெலியா மாவட்ட கூட்டு நகர நீர் வழங்கல் கருத்திட்டம் |
| மேல் | கொழும்பு தெற்கு கழிவுநீரமைப்பு<br>பிரதேச புனரமைப்பு மற்றும் மேம்பாடு<br>ஸ்பானிய நிதியுதவியில் அம்பத்தலே புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல் |
| தெற்கு மற்றும் கிழக்கு | UNICEF நிதியளிப்பிலான சுனாமி திட்டம் (திருக்கோவில்) |

**சப்பிரகமுவ கொடகாவல நீர் வழங்கல் திட்டம்**



*கொடகவெல நீர் வழங்கல் திட்டம் (2010.12.18) ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்பட்டது.*

**முன்னெடுக்கப்பட்ட கருத்திட்டங்கள்**

மீளாய்வுக்கு உள்ளாக்கப்பட்ட ஆண்டினுள் பின்வரும் புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

| | |
|---|---|
| கிழக்கு | கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி திட்டம்<br>அம்பாறை மாவட்டத்தின் கிழக்கு கரையோர நகரங்களுக்கான நீர் வழங்கல் திட்டம் (ECTAD) phase III |
| மேல் | கொழும்பு நகரத்தில் வருவாயற்ற நீரைக் குறைப்பதற்கான ஆற்றல் அபிவிருத்தி |
| தென் | பொனவிஸ்டா மலை நீர் வழங்கல் செயற்றிட்டம் |
| வடமத்திய | மஹநெலுபேவ நீர் வழங்கல் திட்டம் |

# ஊழியர்கள்

*“தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மனிதவலு அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு கடந்த காலத்தைப் போன்று, 2010 ஆம் ஆண்டிலும் ஊழியர்களுக்கு பயிற்சியளிப்பதை தொடர்ந்து மேற்கொண்டது.”*

**ஊழியர் பலம்**

| ஊழியர் குழாம் | | 2009 | **2010** | மாற்றம் % |
|---|---|---|---|---|
| (அ) | நிரந்தர* | 8,569 | **8,627** | 0.7 |
| (ஆ) | அமைய | 308 | **202** | (34.4) |
| (இ) | ஒப்பந்த | 137 | **119** | (13.1) |
| (ஈ) | பயிலுனர் | **49** | 70 | 42.9 |
| | மொத்தம் | **9,063** | 9,018 | (0.5) |

* வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்களுக்கு சேர்க்கப்பட்ட பணியாளர்கள் மேற்கண்ட எண்ணிக்கையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

2010 ஆம் ஆண்டின் இறுதியில் நிரந்தர பதவியினர்களான 8,627 பேருக்கு மேலதிகமாக 119 ஒப்பந்த ஊழியர்களும் 202 அமைய ஊழியர்கள் மற்றும் 70 பயிலுனர்களும் இருந்தனர். பெரும்பாலான ஒப்பந்த ஊழியர்கள் வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்களின் வேலைகளுக்காக ஆட்சேர்க்கப்பட்டவர்களாவர்.

2010 சனவரி முதல் திசெம்பர் வரையிலான காலத்தினுள் பல்வேறான பணியாளர்கள் வகைகளில் 491 நிரந்தர, 139 அமைய, 78 ஒப்பந்த மற்றும் 22 பயிலுனர் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர். இதே காலப்பகுதியில் பணியாளர்களின் பல்வேறு வகைகளிலும் 433 நிரந்தர, 245 அமைய, 96 ஒப்பந்த மற்றும் பயிலுனர் ஊழியர்களின் சேவை முடிவுறுத்தப்பட்டதோடு இதில் ஓய்வுபெறுதல், பதவி விலகல், பதவி விட்டு நீங்குதல், மற்றும் இறப்புக்கள் உள்ளடங்குகின்றன. இது 45 பேரின் அதிகரிப்புக்குக் காரணமாயிருந்தது. 70 பயிலுனர்கள் பொறித் தொகுதி தொழில் பயிலுனர்களாவர் என்பதோடு இவர்கள் பின்னர் நிரந்தரமாக்கப்படக் கூடியவர்களாவர்.

**பிரதானமான தொழில்களின் அடிப்படையிலான பகிர்வு**



**பிரதானமான தொழில்களினடிப்படையில் ஊழியர் குழாமின் பகிர்வு**




**பிரதானமான தொழில்களினடிப்படையில் ஊழியர் குழாமின் பகிர்வு**




**அமைவிடத்திற்கமைய ஊழியர் குழாமின் பகிர்வு**




**அமைவிடத்திற்கமைய ஊழியர் குழாமின் பகிர்வு**




| | | |
|---|---|---|
| மேல் - மத்திய | மேல்-தெற்கு | மேல் வடக்கு |
| தலைமை அலுவலகம் | தெற்கு | ஊவா |
| மத்திய | சப்பிரகமுவ | கிழக்கு |
| வடக்கு | வடமத்திய | வடமேல் |

**ஊழியர் குழாமிற்கு கிடைக்கப் பெறும் நன்மைகள்**

- வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா 23,000 ஆகும். இதற்கு மேலதிகமாக தகுதியான ஊழியர்களுக்கு உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு வழங்கப்பட்டது.
- உபயோகிக்கப்படாத மருத்துவ லீவுக்குப் பதிலாக வழங்கப்படும் பணக்கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்பட்டது.
- 1,728 சலுகைக் கடன்கள் [பத்து மாதக் கடன் 1,542 மற்றும் பன்னிரண்டு மாதக் கடன் 186] (அண்ணளவாக ரூபா 751,409,430) பணியாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது.
- 2010 இல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்ற உலக நீர் தின விழாவின் போது 325 பணியாளர்கள் அவர்களது களங்கமற்ற சேவைக்காக கௌரவிக்கப்பட்டனர்.
- ஊழியர்களின் (குடும்ப அங்கத்தவர்கள் உள்ளடங்கலாக) உள்ளக மற்றும் வெளியக சிகிச்சைக்கான மருத்துவச் செலவாக (அண்ணளவாக) ரூபா 6,944,036 செலவிடப்பட்டது. 2010 ஆம் ஆண்டிலிருந்து குடும்ப அங்கத்தவர்களுக்கும் மருத்துவ வசதிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.
- 2010 ஆம் ஆண்டில் 338 அமைய/ஒப்பந்த ஊழியர்கள் அவர்களது பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.
- அலுவலர்களுக்கு சலுகைக் கட்டண அடிப்படையில் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டன.
- நிரந்தர ஊழியர்களுக்கான மரண உதவிக் கொடுப்பனவு.
- ஊழியர்களுக்கான உள்நாட்டு/வெளிநாட்டு பயிற்சி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- ஊழியர்களுக்கான ரூபா 500 தேநீர் கொடுப்பனவு.
- அரசாங்க வங்கிகள் ஊடாக கடன் வசதிகள் (மக்கள் வங்கியிலிருந்து வீடமைப்புக் கடன் மற்றும் இலங்கை வங்கியிலிருந்து வாகனக் கடன்) பெற்றுக் கொடுத்தல்.
- ஊழியர்களுக்கு ரூபா 5000 பண்டிகை முற்பணம் தொடர்ந்து செலுத்தப்பட்டு வருகின்றது.
- வெற்றிடங்களை நிரப்புகின்றபோது தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள ஊழியர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்குதல்.

### ஊழியர் ஊதியமும் நன்மைகளும்

### 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான ஊழியர் ஊதிய ஒப்பீடு

| விபரம் | 2009 ரூ. மில். | **2010 ரூ. மில்.** |
|---|---|---|
| சம்பளங்கள் | 4,347 | **5,258** |
| ஊழியர் சேமலாப நிதியத்திற்கான | | |
| பங்களிப்பு தொகை | 390 | **480** |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கான பங்களிப்பு தொகை | 98 | **120** |
| **மொத்தம்** | **4,835** | **5,858** |

### மனிதவலு அபிவிருத்தியும் பயிற்சியும்




சிரேஷ்ட மற்றும் முகாமைத்துவ மட்டத்திலானவர்களினூடாக அடையாளம் காணப்பட்ட பயிற்சித் தேவைகளுக்கு முன்னுரிமையளிக்கின்ற அடிப்படையில் பல்வேறு வகையிலான ஊழியர்களுக்கும் பின்வரும் அணுகுமுறைகளினூடாக பயிற்சிகள் வழங்கப்பட்டன.

*2010 ஆம் ஆண்டினுள் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன*

பொறியியலாளர்கள் மற்றும் பொறியியல் உதவியாளர்களுக்கான சூத்திரத்தைப் பயன்படுத்தி விலை அதிகரிப்பைக் கணிப்பிடுதல். ஆய்வுகூட உதவியாளர்களுக்கான ICTAD நீர் தரச் சுட்டிக் கணிப்பீட்டின் மீதான நீர் தரச்சுட்டெண்கள். இரசாயனவியலாளர்களுக்கான நீர் பகுப்பாய்வின் புதிய அபிவிருத்திகளைப் பிரயோகித்தல். குழாய் பொருத்துனர்களுக்கான பொலிஎத்திலீன் (PE) குழாய்களின் இணைப்பு நடைமுறைகள். கணக்காளர்களுக்கான கணக்கீட்டு நியமங்கள் மீதான விழிப்புணர்வூட்டல். பொறியியலாளர்கள். பொறியியல் உதவியாளர்கள் மற்றும் வரைஞர்களுக்கான புவியியல் தகவல் முறைமை (GIS) பொதி தொடர்பிலான அடிப்படைப் பயிற்சி. மற்றும் பொறியியல் உதவியாளர்கள். வரைஞர்களுக்கான புவியியல் தகவல் முறைமை (GIS) கணனி மென்பொருள் படங்களைப் (Arc View) பயன்படுத்தி டிஜிட்டல் முறை வரைபடமாக்கல்.

*முறைசார் உள்ளக பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்*

2010 ஆம் ஆண்டில் மனிதவள அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய 166 உள்ளக பயிற்சி நெறிகளை நடத்தியுள்ளது. இதில் 460 முகாமைத்துவப் பதவியினர். 1,605 மேற்பார்வையாளர்கள். 931 எழுது வினைஞர் மற்றும் அதனோடு சேர்ந்த தரத்தினர். 821 இயக்குனர்கள் உள்ளடங்கியிருந்தனர். சில நிகழ்ச்சித் திட்டங்கள் பிராந்தியங்களாலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. முகாமைத்துவ மற்றும் நிதி விடயங்கள் தொடர்பில் வெளிவாரி நிபுணர்களின் சேவைகள் பெறப்பட்டன.

நீரின் தரத்தை கண்காணித்தல். நீர் மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு. நிர்மாணிப்பு முகாமைத்துவம். கேள்விப்பத்திர நடைமுறைகள் மற்றும் ஒப்பந்தக் கொடுப்பனவுகள். தலைமைத்துவம். கசிவு கண்டுபிடிப்பு. புவியியல் தகவல் முறைமை. ஒழுக்காற்று நடைமுறைகள். நிர்வாக நடைமுறைகள்.நிதியியல் நடைமுறைகள். பண்டங்கள் முகாமைததுவம். வர்த்தக நடவடிக்கைகள். வாடிக்கையாளர் தொடர்புகள் எழுதுவினைஞர் திறன்கள். கணனிப் பிரயோகங்கள். முகாமைத்துவத் திறன்கள். புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களுக்கான தொழில் பற்றிய அறிமுக நிகழ்ச்சித் திட்டம். புதுமுகங்களுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள். வீதிப் பாதுகாப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டங்களில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கையாளுதல்.

*நாட்டிலுள்ள ஏனைய பயிற்சி நிலையங்களில் பயிற்சி*

வெளிவாரிப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியில் 98%ஐ பயன்படுத்தி வெளிவாரி நிறுவனங்களின் ஊடாக பயிற்சி வழங்கப்பட்டது. உள்நாட்டிலுள்ள பயிற்சி நிலையங்களினூடாக 132 ஊழியர்கள் வெளிவாரியான பயிற்சியைப் பெற்றனர். இதில் உள்நாட்டுப் பல்கலைக் கழகங்களால் நடத்தப்பட்ட முதுமாணி மற்றும் பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களும் தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம். ஆளணி முகாமைத்துவ நிறுவனம். இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனம். வீடமைப்பு. திட்டமிடல் மற்றும் நிர்மாணிப்பு நிலையம் ஆகியவற்றினால் நடத்தப்பட்ட டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகளும் மற்றும் மனித வளம். வழங்கல்கள். நிர்மாணிப்பு. முகாமைத்துவம். தொழில்நுட்ப மற்றும் மின்னியல் துறைகளிலான சிறிய பாடநெறிகளும் உள்ளடங்குகின்றன.

*2010 ஆம் ஆண்டினுள் பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அலுவலர்கள் பெயர் நியமனம் செய்யப்பட்டனர்.*

தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தில் (ITI) நீர் சுத்திகரிப்புப்பொறித் தொகுதி தொடர்பிலான திறன் அபிவிருத்திப் பாடநெறி. விஜய கிரபிக்ஸ் நிறுவனத்தில் 'கொரல் ட்ரோ' (CorelDRAW) தொடர்பிலான பயிற்சி. இலங்கை மன்றக் கல்லூரியில் (SLFI)வாடிக்கையாளர் சேவைத் திறமை. இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தில் (SLIDA) பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி. இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தில் (IESL) ஆலோசகர்களின் தெரிவும் தொழில் வாய்ப்பும். மத்திய வங்கியில் கேள்விப் பத்திர நடைமுறையும் வழங்கல்கள் முகாமைத்துவமும். IESL நிறுவகத்தில் கொள்வனவு வழங்கல் பணிகளுடன் தொடர்புடைய ஒப்பந்தப் பிரச்சினைகள்.

*வெளிநாட்டுப் பயிற்சி/உத்தியோகபூர்வ விஜயங்கள்*

ADB, JICA, SIDA, DANIDA நெதர்லாந்து நட்புறவு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் TICA நிதி உதவியுடன் தே.நீ.வ.வ.ச.யின் 69 ஊழியர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக 75 அலுவலர்களின் மேற்பார்வை விஜயங்கள். கூட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் ஆகியவற்றில் பஙற்கேற்றனர்.

*பணியிலிருக்கும்போதே பயிற்சி*

169 தொழிற்பயிற்சிப் பயிலுனர்களுக்கு (பட்டப்படிப்பில் ஈடுபட்டுள்ளோர். விசேட தொழிற் பயிலுனர்கள். தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா/உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பயிலுனர்கள். அருங்கலைகள் பயிலுனர்கள். தொழில்நுட்பக் கல்லூரி. பட்டயக் கணக்காளர் நிறுவனம். கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் (AAT) வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை. மற்றும் தேசிய தொழில் பயிலுனர். கைத்தொழில் பயிற்சி அதிகார சபை பயிலுனர்கள்)


கவனக்குறைவான மனித நடவடிக்கைகள் வரட்சிக்கு இட்டுச் செல்லுதல்.
சூழலைப் பாதுகாத்து தேவையானளவு குடிநீரைப் பிரித்தெடுப்போம்.



நீர் விலைமதிப்பற்றது கவனமாகப் பாவிப்போம்.

புகைப்படம்: சுமுது ஹெட்டியாரச்சி

# வாடிக்கையாளர் வசதிகள்

*"தெரிவு செய்யப்பட்ட அலுவலகங்களில் புதிய இணைப்புகளுக்காக குறிப்பிடும் இடத்தில் உடனடி செலவு மதிப்பீடு, கட்டணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கூடிய பட்சம் ஏழு கடமை நாட்களினுள் புதிய இணைப்புகளை வழங்குதல், கசிவுத் திருத்தக் குழுக்களை சேவையில் ஈடுபடுத்துதல், இணையத்தளத்தின் ஊடாக வாடிக்கையாளர் குறைகளைக் கண்டறிதல் ஆகியன வாடிக்கையாளர் நேயம்மிக்க சேவைகளை வழங்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாக விளங்குகின்றன."*

தே.நீ.வ.வ.ச. அதன் வாடிக்கையாளர்களுக்கு அலுவல்களை இலகுபடுத்தும் பொருட்டு பல முயற்சிகளை மேற்கொண்டது.

**அழைப்பு நிலையம்**

தே.நீ.வ.வ.சபையின் 24 மணி நேரமும் இயங்குகின்ற அகில இலங்கை அழைப்பு நிலையம் 1939, சேவைகள் பற்றிய தகவல்களை நாடுவோருக்கு அல்லது சேவை சீர்குலைவுகள், தடங்கல்கள் மற்றும் நீர் கசிவுகள் தொடர்பான முறைப்பாடுகளை செய்வோருக்கு, கட்டணமின்றி மும்மொழியிலும் சேவையை வழங்குகிறது. அழைப்பு நிலையம் இயங்கி வருவதோடு முறைமைக்கான மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி முறைமையின் ஊடாக தற்போது 12,000 வாடிக்கையாளர் முறைப்பாடுகள் (பிரதானமாக கசிவுத் திருத்தங்கள்) கையாளப்பட்டுள்ளன. அழைப்பு நிலைய வசதிகளுக்கு SMS தொழில்நுட்பம் கூட்டிணைக்கப்பட்டது. குழாய்க் கசிவுகள் அல்லது சேவை சீர்குலைவுகள் தொடர்பாக அழைப்பு நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படுகின்றபோது உரிய பிராந்திய பொறியியலாளருக்கு/மாவட்ட பொறியியலாளருக்கு SMS அனுப்பப்படும்.

**வாடிக்கையாளர் பட்டயம்**

தே.நீ.வ.வ.ச. வாடிக்கையாளர் பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைய நீர் வழங்கல் திட்டங்களின் தற்போதைய நிலைமையை மேம்படுத்துவதன் மூலம் நலன்பெறுனர்களுக்கு வினைத்திறன்மிக்கதும் நம்பகத்தன்மையுடன் கூடியதுமான சேவையை உறுதி செய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட அலுவலகங்களில் புதிய இணைப்புகளுக்காக தலத்திலான செலவு மதிப்பீடு , கட்டணக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் கூடிய பட்சம் ஏழு கடமை நாட்களினுள் புதிய இணைப்புகளை வழங்குதல், கசிவுத் திருத்தக் குழுக்களை சேவையில் ஈடுபடுத்துதல், வெப் தளத்தினூடாக வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கண்டறிதல் ஆகியன வாடிக்கையாளர் நேயம்மிக்க சேவைகளை வழங்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாக விளங்குகின்றன.

**கட்டணப் பட்டியல் கொடுப்பனவு வசதிகள்**

அனைத்து அரச வங்கிகளும் நீர்க் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்கின்றன. அதற்கு மேலதிகமாக, சம்பத் வங்கி, நேஷன் டிரஸ்ட் வங்கி, HSBC, சிற்றி வங்கி, கொமர்ஷல் வங்கி மற்றும் பான் ஆசியா வங்கி ஆகியனவும் நீர் கட்டணப் பட்டியல்களை ஏற்றுக் கொள்கின்றன. ஸ்டான்டார்ட் சார்டற் வங்கியும் யூனியன் வங்கியும் அவர்களது வாடிக்கையாளர்களுக்கு தொலைபேசி வங்கி வசதிகளை வழங்குகின்றன. சம்பத் வங்கிக்கு நீர்க் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக அதற்குச் சொந்தமான சம்பத் நெற் வலையமைப்பு உள்ளது. தே.நீ.வ.வ.சபைக்கு பல்வேறு அலுவலகங்களிலும் அதற்குச் சொந்தமான காசாளர் நிலையங்கள் உள்ளன. மேலும், இதற்கு பதிவு செய்யப்பட்ட சேகரிப்பு முகவர்கள், முகவர் தபால் அலுவலகங்கள் மற்றும் நீர் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளைப் பெறுகின்ற LECO முகவர்களும் உள்ளன. காகில்ஸ் புட்ஸ் சிற்றி, கீல்ஸ் சிறப்புச் சந்தைத் தொகுதிகள், அபான்ஸ் காட்சியறைகள், சிங்கர் காட்சியறைகள் ஆகியனவும் நீர் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளைச் சேகரிப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ளன. அதே போன்று வாடிக்கையாளர்களுக்கு தே.நீ.வ.வ.ச. www.waterboard.lk வெப் தளத்தில் பதிவு செய்துகொண்டு அதன் பின்னர் HSBC ஊடாக கடன் அட்டைகளைப் பயன்படுத்தி மாதாந்தக் கொடுப்பனவை வெப் தளத்தின் மூலம் செலுத்தவும் முடியுமாயுள்ளது. இணையத் தள கொடுப்பனவு முறைமை இயங்கி வருவதோடு தே.நீ.வ.வ.ச. வாடிக்கையாளர்கள் அவர்களது நீர்க் கட்டணப் பட்டியலைச் செலுத்துவதை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

## சேவைகள்

**நீர்க் கட்டணப் பட்டியல்களைச் செலுத்துவதற்கான குறுஞ் செய்திச் சேவை (SMS) தொழில்நுட்பம்**
இது 2010 நவெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட மிகப் புதிய முறை இதுவாகும். செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்தி நீர்க் கட்டணப் பட்டியலை வாடிக்கையாளரால் செலுத்த முடியுமாயிருக்கும். ஆரம்பத்தில் வாடிக்கையாளரின் வங்கிக் கணக்குடன் செல்லிடத் தொலைபேசி இலக்கமும் தே.நீ.வ.வ.ச.யின் வாடிக்கையாளர் கணக்கு இலக்கமும் பதிவு செய்யப்படும். அதன் பின்னர் செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்தி வாடிக்கையாளர் பதிவு செய்யப்படுவார். இந்த சேவைக்கு ORIK கூட்டுத்தாபனம் தே.நீ.வ.வ.ச.யுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இத்தகைய செல்லிடத் தொலைபேசி கட்டணப் பட்டியல் சேவை மூலம் வாடிக்கையாளருக்கு தொல்லைகள் அற்ற, படிவங்களை நிரப்பாத, காசு செலுத்துவதற்கு வரிசைகளில் காத்திருக்காத சேவையை அனுபவிப்பதற்கு இயலுமாயிருக்கும். இத்தகைய புது முறைகள் வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்தும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செல்லிடத் தொலைபேசியின் ஊடாக வாடிக்கையாளர்களுக்கு அவர்களது மாதாந்தக் கட்டணப் பட்டியல் பெறுமதி அறிவிக்கப்படும். வாடிக்கையாளர்கள் எங்கிருந்தபோதிலும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கான அவர்களது உடன்பாட்டை வங்கிக்கு அறிவிப்பார். இந்த அறிவுரை வாடிக்கையாளரின் வங்கியினால் பெறப்பட்டு கொடுப்பனவு தே.நீ.வ.வ.ச.க்கு அனுப்பி வைக்கப்படும். மறுபுறம், தே.நீ.வ.வ.ச. வங்கியிலிருந்தான வாடிக்கையாளரின் கொடுப்பனவை அடையாளம் கண்டு அதன் கணக்குக்கு வரவு வைக்கும். இது தொடர்பில் வாடிக்கையாளரின் கணக்கை இற்றைப்படுத்தல் நாளாந்த அடிப்படையில் நடைபெறும்.

வழமையைப் போன்று, கட்டணப் பட்டியல் தினத்திலிருந்து 14 நாட்களுக்குள் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுமிடத்து 2% கழிவு வழங்கப்படும். கட்டணப் பட்டியலின் முழுப் பெறுமதியைச் செலுத்தக்கூடிய வகையில் வாடிக்கையாளர் ஏற்கனவே மேலதிக நிதியை வைப்பிலிட்டிருப்பாராயின், 4% கழிவு வாடிக்கையாளருக்கு வழங்கப்படும்.

**பொதுமக்கள் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டம்**
நீர் பாதுகாப்பு தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வூட்டலை மேம்படுத்துதல், பாடசாலை மாணவர்களுக்காக பிரதானமாகக் கவனம் செலுத்தப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட நீரைச் சேமித்தல், மனித நடவடிக்கைகளால் நீர் நிலைகள் மாசடைதலைத் தடுத்தல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. 2010 ஆம் ஆண்டினுள் தே.நீ.வ.வ.ச.யின் மக்கள் தொடர்புப் பிரிவினால் பொலன்னறுவை, அம்பாறை, கம்பஹா, களுத்துறை மற்றும் கொழும்பு மாவட்டங்களை உள்ளடக்கியவாறு 23 பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களும் அதேபோன்று அனுராதபுரம் பொது வைத்தியசாலையிலும் நாரேஹேன்பிட்ட தேசிய மத்திய இரத்த வங்கியிலும் மேலும் 2 நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றைத் தவிர இதற்குச் சமமான நடவடிக்கைகள் பிராந்திய உதவி நிலையம் மற்றும் கிராமிய நீர் வழங்கல் அலுவலகங்களின் ஈடுபாட்டுடன் செயற்படுத்தப்பட்டன.

தரப்பினர்களுக்கு மத்தியில் ஆர்வத்தைத் தூண்டுவதற்காகவும் நீர் துறை தொடர்பிலான விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காகவும் உலக நீர் தினம் மார்ச் 22 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. "ஜலய" காலாண்டுப் பத்திரிகை தொடர்ந்தும் வெளியிடப்பட்டது.

**சமூக மைய அமைப்புக்களின் மூலமான நிலைபேறான கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கான உதவி**
பல்வேறான அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களால் நாட்டிலுள்ள 3,000க்கும் அதிகமான சிறிய அளவிலான நீர் வழங்கல் திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் மொத்த சனத்தொகையில் 8%க்கு இவற்றின் மூலம் நீர் வழங்கப்படுகின்றது. தற்போது இவற்றுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கான ஒரு தெளிவான முறைமை இல்லாதுள்ளது. நீர் வழங்கல் தொடர்பில் ஆயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்கை அடையப் பெறுகின்றதான சூழமைவினுள் இவற்றின் நிலைபேறான தன்மை மிக முக்கியமாயுள்ளதால், இவற்றுக்கு உதவுவதில் தே.நீ.வ.வ.ச. சாதகமான நடபடிவக்கையினை மேற்கொண்டுள்ளது. இதற்கிணங்க, சமூகங்களுக்குச் சொந்தமான நீர் வழங்கல் திட்டங்களை நடாத்தி வருகின்றவர்களுக்குத் தேவையான உதவியினை வழங்குவதற்கு நாடளாவிய ரீதியில் பிராந்திய அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டதாக கிராமிய நீர் வழங்கல் திட்டங்களை நடாத்தி வருகின்றவர்களுக்குத் தேவையான உதவியினை வழங்குவதற்கு நாடளாவிய ரீதியில் பிராந்திய அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டதாக கிராமிய நீர் வழங்கல் அலகுகளைத் தாபிப்பதற்கு தே.நீ.வ.வ.ச. தீர்மானித்துள்ளது. 2009 இன் இறுதியாகின்றபோது 12 அலகுகள் தாபிக்கப்பட்டதோடு, மேலும் 5 அலகுகள் 2010 இல் தாபிக்கப்பட்டன. இவை அம்பாறை, வவுனியா, பதுளை, பொலனறுவை மற்றும் மாத்தளையில் தாபிக்கப்பட்டன. மன்னார், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பில் கிராமிய நீர் வழங்கல் அலகுகளைத் தாபிப்பதற்காக, இந்த அலகுகளுக்குத் தேவையான தளபாடங்கள், மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டும் மாவட்ட மட்டத்தில் தரப்பினர்களுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்காகவும் UNICEF இல் இருந்து தேவையான நிதி பெறப்பட்டது.

**நீர் தரக் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல்**
சுகாதாரப் பாதுகாப்பு, போசாக்கு அமைச்சின் உதவியோடு மாவட்ட கிராமிய நீர் வழங்கல் அலகுகளின் ஊடாக தே.நீ.வ.வ.ச.யின் மூலம் 2009 ஆகஸ்ட் மாதம் முதல் கிராமிய நீர் வழங்கல் திட்டங்களுக்கான நீர் தரக் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், பாதுகாப்பான குடிநீரை உறுதிப்படுத்தும் பொருட்டு ஒவ்வோர் ஆண்டும், சமுதாயத்தினால் முகாமை செய்யப்படுகின்ற நீர் வழங்கல் திட்டங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் ஆகக் குறைந்தது இரண்டு நீர் மாதிரிகள் பெறப்பட்டு நுண்ணுயிர் ஆய்வுப் பரிசோதனை நடத்தப்பட்டது. பொது சுகாதாரப் பரிசோதகர்கள் (PHIs) நீர் மாதிரிகளைச் சேகரித்து முறையே தே.நீ.வ.வ.ச. யின் ஆய்வு கூடங்களுக்கு ஒப்படைப்பார்கள். நீர் மாதிரிகளைப் பரிசோதிப்பதற்கான செலவு தே.நீ.வ.வ.ச.யின் தொழிற்பாட்டு, பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஏற்கப்படும்.

மேற்படி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய மட்ட மற்றும் மாவட்ட மட்ட இணைப்புப் பொறிமுறையொன்று ஏற்கனவே தாபிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தை மீளாய்வு செய்வதற்காக தேசிய மட்ட செயற்பாட்டுக் குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. தேசிய மட்ட செயற்பாட்டுக் குழுவில் சுகாதார அமைச்சு, நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சு, தே.நீ.வ.வ.ச. மற்றும் ஏனைய துறைப் பங்காளர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர். மாவட்ட மட்டத்தில் நீர் தரக் கண்காணிப்புக் குழுவுக்கு மாவட்ட செயலாளர் தலைமை வகிப்பார் என்பதோடு ஏனைய துறைப் பங்குதாரர்கள் பங்குபற்றுவார்கள். இக் கூட்டத்தில் சமுதாய முகாமைத்துவ நீர் வழங்கல் திட்டங்களின் நீர் மாதிரிப் பரிசோதனைப் பெறுபேறுகள் மதிப்பிடப்பட்டுத் தேவையான தீர்வு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு அத்தகைய பிரச்சினைகளைத் தடுப்பதற்காக சமுதாய மைய அமைப்புகளுக்கு அறிவிக்கப்படும்.

சமூக மைய அமைப்புகளால் முகாமை செய்யப்படுகின்ற நீர் வழங்கல் திட்டங்களின் நீர் தரப் பிரச்சினைகளைத் தடுப்பதற்காக UNICEF நிதியத்தின் உதவியோடு நீர் பாதுகாப்புத் திட்டமிடல்களைத் தயாரித்தல் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராமிய மற்றும் நகர நீர் வழங்கல் திட்டங்களுக்கான நீர் பாதுகாப்புத் திட்டமிடல்களை அபிவிருத்தி செய்வதற்கு தே.நீ.வ.வ.ச.யின் பிரதேச பணியாட்டொகுதியினருக்கு பயிற்சியளிக்கப்பட்டது. நீர் பாதுகாப்புத் திட்டமிடல்களைத் தயாரிப்பதற்காக பிராந்திய உதவி நிலையங்களின் தெரிவு செய்யப்பட்ட முக்கியமான பணியாட்டொகுதியினருக்கு தேசிய மட்டத்தில் பயிற்றுவிப்பவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கான (TOT) நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. பிராந்திய சேவை நிலையத்தின் ஏனைய தேவையான பணியாட்டொகுதியினருக்கு TOT நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்குத் தேவையான நிதியங்கள் பிராந்திய உதவி நிலையங்களுக்கு மாற்றல் செய்யப்பட்டன.

தென் மாகாணத்தில் அமைந்துள்ள செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பு நிலையிலுள்ள கிராமிய மற்றும் சிறிய நகர, சமூக நீர் வழங்கல் திட்டங்கள் 330 இற்கும் உள்ளூராட்சி மன்றங்களினால் நிர்வகிக்கப்படும் 17 நீர் வழங்கல் திட்டங்களிற்கும் தென் பிராந்திய ஆதரவு சேவை நிலையத்தின் கிராமிய நீர் வழங்கல் பிரிவுகளின் மூலம் தொழில்நுட்ப உதவிகள் செய்து கொடுக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக நீரின் தரத்தினை கண்காணிப்பதற்கான தென் மாகாணத்திற்கான குழு ஆரம்பிக்கப்பட்டதுடன், மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்ட குழுவும் ஸ்தாபிக்கப்பட்டது.

**நீர் மற்றும் கழிவுநீர் தரத்தைப் பரிசோதித்தல்**
அடிப்படை இரசாயன, பௌதீக மற்றும் நுண்ணுயிரியல் அளவீடுகளுக்கான சுத்திகரிக்கப்படாத மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. விசேடமான சம்பவங்களின் போது தகுந்தவாறு, மொத்த உயிர்க் கரியச் சேர்மம் (TOC), உலோகம்/கன உலோகம் மற்றும் பாசி வகை தொடர்பில் நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. குறித்த மாகாண பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் ஏனைய பிரிவுத் தலைவர்களின் மீளாய்வின் பொருட்டும் ஏதேனும் தீர்வு நடவடிக்கைகளின் பொருட்டும் பெறுபேறுகள் மாதாந்த அடிப்படையில் அட்டவணைப்படுத்தப்பட்டன. தே.நீ.வ.வ.ச.யினால் நடத்தி வரப்படுகின்ற கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் பொருட்டும் தனியார்துறை தொடர்பில் கொடுப்பனவு அடிப்படையிலும் கழிவுநீர் தரப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்பரப்பு நீர் தரக் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டத்துடன் சேர்ந்ததாக பூச்சி கொல்லிகள் எச்சம், பாசி வகைகள் பற்றிய விபரம் சேகரித்தல், கரைந்துள்ள மொத்த உயிர்க் கரியச் சேர்மம் தொடர்பான பகுப்பாய்வும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டது. குடிநீர் தேக்கங்கள் பூச்சி கொல்லிகளின் எச்சத்தினால் மாசடைதலை பரிசோதிப்பதற்கான கற்கைகள் வடமத்திய மாகாணத்தின் நுவரவெவயில் மேற்கொள்ளப்பட்டது. நீர் வளமாகப் பயன்படுத்தப்படுகின்ற ஒருசில நீர்த் தேக்கங்களில் பாசி வகை தொடர்பிலான பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டது. வாவிப் படிமங்களில் கன உலோகங்களிலான மாசடைதலைப் பரிசோதிக்கும் பொருட்டு வட மத்திய மாகாணத்தின் நுவரவெவவில் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, அம்பதலே நீர் சுத்திகரிப்புப் பொறிமுறைத் தொகுதிக்கான சாக்கடை நீர் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்பட்டது. இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற நீர் சுத்திகரிப்பு கெட்டியாக்கல்களுக்கான ஒப்பீட்டுக் கற்கையும் மேற்கொள்ளப்பட்டது.



பாசிவகைகள் பற்றிய விபரம் சேகரிப்புக்குப் பயன்படுத்தப்படும் டிஜிடெல் பூதக்கண்ணாடி

## புதிய முன்னெடுப்புகள்

2010 ஆம் ஆண்டில் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரமைப்புச் சேவைகளின் ஏற்பாடுகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட புதிய முன்னெடுப்புகளில் கீழே பட்டியலிடப்பட்டுள்ள விடயங்கள் முன்னிலை வகிக்கின்றன.

- அரச தனியார் கூட்டுமுயற்சி [கட்டியெழுப்புதல், தொழிற்படுத்தல் மற்றும் சொந்தமாக்கிக் கொள்ளல் (BOO/கட்டியெழுப்புதல், தொழிற்படுத்துதல், சொந்தமாக்கிக் கொள்ளல் மற்றும் மாற்றுதல் (BOOT) முறைகள்] ஊடாக பாதுகாப்பான முதலீடுகளுக்கான மாற்று வியாபார முறைகளை அபிவிருத்தி செய்தல்.
- நாட்டின் சில பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் நீண்டகால சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களின் குடிநீர் இதற்கான காரணமாகாலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அவர்களது குடிநீர் மற்றும் சமையற் தேவைகளுக்காக, உதாரணமாக 10 லீற்றர் கொள்ளளவைக் கொண்ட, பாரிய பிளாஸ்டிக் குவளைகளில் நீரை வழங்குவதற்காக விசேட முயற்சியொன்று மேற்கொள்ளப்படும்.
- நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புக்காக அரசாங்க முதலீடுகளின் குறைநிரப்பின் பொருட்டு, தே.நீ.வ.வ.ச.க்கு மொத்தமாகக் குடிநீரை வழங்குவதற்கான நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல், அதேபோன்று இதற்கான ஒரு அறவீடு தொடர்பில் இணக்கத்துக்கு வருதல்/இந்த அறவீடு அவர்களது முதலீட்டுச் செலவில் சேர்த்துக் கொள்ளப்படும்.
- உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு உள்நாட்டு அபிவிருத்தி வங்கிகளிலிருந்து பாதுகாப்பான கடன்களைப் பெறுவதற்கான இயலுமை பற்றியும் ஆராயப்படும்.
- நுகர்வு தவிர்ந்த பாவனைகளின் நோக்கத்துக்காக மழை நீர் மற்றும் வீட்டுக் கழிவு நீரைப் பெற்று, சுத்திகரித்து அதனைப் பயன்படுத்துகின்றதான "புதிய நீர்" எண்ணக்கரு மேம்படுத்தப்படும்.
- மழை நீரையும் கழிவு நீரையும் பெற்று, தலத்திலான சுத்திகரிப்பை மேற்கொள்வதற்கும் அவற்றைப் பயன்படுத்துவதற்குமான வசதிகளைத் தாபிக்குமாறு பாரிய நிறுவனங்கள் மற்றும் வர்த்தகக் கட்டிடத் தொகுதிகளிடம் வேண்டப்படும். இதனை அவர்கள் கடைப்பிடிக்காதவிடத்து, தேவைப்படின் நீர் வழங்கல் இணைப்புகளை அவர்களுக்கு வழங்காதிருப்பதைப் பற்றி ஆராயப்படும்.
- நீர் மானிகளை, பாகங்களை ஒன்றுகூட்டி அமைப்பதற்கும் அதன் பின்னர் தயாரிப்பதற்கும் உள்ள இயலுமை பற்றி ஆராயப்படும்.
- தே.நீ.வ.வ.ச.விடம் தற்போது ஏறத்தாழ 9,000 பலம் பொருந்திய தொழிற்படையொன்று உள்ளது. நாடு முழுவதிலும் 300க்கு மேற்பட்ட நீர் வழங்கல் திட்டங்களின் தொழிற்பாடு மற்றும் பராமரிப்பில் இது ஈடுபட்டு வருகின்றது. தொழிற்பாட்டுச் செலவைச் சிக்கனமாக்கும் பொருட்டு, வாடிக்கையாளர்களுக்கு குறித்துரைக்கப்பட்ட நீர் மற்றும் சாக்கடை தொடர்பிலான சேவைகளை வழங்குவதற்காக தே.நீ.வ.வ.ச.யின் முழு உரிமையைக் கொண்ட துணைக் கம்பனிகளை உருவாக்குவதற்கு முன்மொழியப்பட்டது.
- முடியுமான சந்தர்ப்பங்களில் குழாய்களை இடுகின்றபோது வீதிகளுக்கு நேரிடுகின்ற சேதங்களையும் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களையும் குறைக்கும் பொருட்டு அகழிகளற்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான இயலுமை பற்றி ஆராயப்படும்.

# வருவாயற்ற நீரைக் குறைத்தல்

அங்கீகாரமற்ற நுகர்வு மற்றும் இலவச (கட்டணப் பட்டியலற்ற ஆயினும் சட்ட ரீதியிலான) நீர் நுகர்வு ஆகியனவாகும். இலவச நீர் குழாய்கள் மற்றும் அங்கீகாரமற்ற நுகர்வின் ஊடான நீர் இழப்புகளைக் குறைப்பதற்கும் கீழே விளக்கப்பட்டுள்ள. அதிக சராசரி சதவீத இழப்பைக் கொண்டுள்ளதான பிரதானமாக கொழும்புப் பிரதேசத்தின் வருவாயற்ற நீரைக் குறைப்பதற்குமான கொள்கைகளை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



*கொழும்பு சமுதாயத் தோட்டமொன்றில் இலவச நீர் குழாயைப் பயன்படுத்துதல்*

**இலவச நீர்க் குழாய்களின் மூலமான இழப்பைக் குறைத்தல்**
பொது நீர்க் குழாய்களின் இணைப்பைத் துண்டித்தலும், சலுகை அடிப்படையில் தனிப்பட்ட இணைப்புகளை வழங்குதலும் நடைபெற்று வருகின்றது. கொழும்பு நகரத்தில் 1,500 குடியிருப்புப் பகுதிகள் உள்ளன. வீட்டு நீர்க் குழாய் இணைப்புகளைப் பெற்றிருப்பதன் பெறுபேறாக நலன் பெறுனர்கள் மேம்படுத்தப்பட்ட உடல்நல நிலைமையை அனுபவிக்கின்றனர். 2010 ஆம் ஆண்டினுள், 828 நலன்பெறும் குடும்பங்கள் தனிப்பட்ட இணைப்புகளைப் பெறுவதற்கு விருப்புத் தெரிவித்ததோடு, 126 பொது நீர்க் குழாய்களின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன. மேற்படி குடியிருப்புகளில் அநேகமான குடியிருப்பாளர்கள் நாள் சம்பளத்தை ஈட்டுகின்றவர்களாவர் என்பதோடு இவர்கள் விண்ணப்பிப்பதற்கும் கொடுப்பனவைச் செலுத்துவதற்கும் வசதியாக இருக்கும் 6 பாருட்டு குடியிருப்புப் பகுதியிலேயே நடமாடும் அலுவலகமொன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய அனைத்து நலன் பெறுனர்களும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து கொடுப்பனவுகளைச் செய்ததன் பின்னர் தனிப்பட்ட நீர் இணைப்புகளுக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாற்றுகையானது காலம் எடுக்கின்றதும் பேச்சுவார்த்தை நடைமுறையைக் கொண்டதுமாயுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த 28 குடியிருப்புப் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந் நிகழ்ச்சித் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு அரசியல் ரீதியிலான விருப்பம் உள்ள அதேவேளை இக் குடியிருப்புப் பகுதிகளின் அரசாங்க மீளமர்த்துகைத் திட்டம் பற்றி சில குழப்பமான நிலைகள் நிலவுகின்றன.

வீடுகளுக்கு தனிப்பட்ட நீர் இணைப்புகளை வழங்குவதற்குச் சிரமமாக இருப்பின், அதாவது இடவசதி போதியதாயில்லாமை அல்லது வடிகால் வசதிகள் இல்லாமை போன்ற சந்தர்ப்பங்களில் பொது நீர்க் குழாய்களைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு மத்தியில் ஒரு குழுவை உருவாக்கி அவர்களின் நுகர்வு மானி மூலம் அளவிடப்படும். அதன் பின்னர் நீர் நுகர்வுக்கான கொடுப்பனவை அவர்கள் பகிர்ந்துகொள்ள வேண்டிவரும்.

**அங்கீகாரமற்ற நுகர்வைக் குறைத்தல்**
பொறியியல் உதவியாளர்களின் தலைமையிலான ஐந்து குழுக்களின் மூலம் அங்கீகாரமற்ற நுகர்வு தொடர்பில் அடையாளம் காணல் மேற்கொள்ளப்பட்டது. அங்கீகாரமற்ற நுகர்வோரைக் கண்டுபிடிப்பதற்கு பல்வேறான வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. அங்கீகாரமற்ற நுகர்வு தொடர்பில் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற தகவல்களுக்கு பிரதிபலிப்புக் காட்டுதல், வர்த்தக இடங்களில் திட்டமிடப்பட்ட சோதனையிடல், இணைப்பு துண்டிக்கப்பட்ட இடங்களில் நீர் பயன்பாட்டைப் பரிசோதித்தல், முழுக் கொழும்பு நகரத்தையும் உள்ளடக்குகின்ற நோக்கத்தில் திட்டமிடப்பட்ட விதத்தில் அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களை (வாக்காளர் பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) அனைத்து இடங்களையும் பரிசோதித்தல் ஆகியன கடைப்பிடிக்கப்பட்ட ஒரு சில வழிமுறைகளாகும்.



*நீர்மானி பொருத்தப்பட்ட பொது நீர்க் குழாய்*

அங்கீகாரமற்ற நுகர்வானது மிக வறியவர்களுடைய வீடுகள், அல்லது வேறு பிரசித்திபெற்ற வர்த்தக இடங்கள், மிக முக்கியமான நபர்களின் இடங்கள் அல்லது வெளிநாட்டுப் பிரமுகர்களின் இடங்களாக இருக்கலாம். அனைவரும் நாட்டின் சட்டத்தின் கீழ் ஒரே விதமாகக் கவனிக்கப்படுவார்கள். கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்ட உடனேயே தே.நீ.வ.வ.ச.க்கு இரண்டு வருட காலத்தில் எற்பட்ட இழப்பு அறவிடப்பட்டதோடு, இயலுமானவிடத்து இணைப்புகளை ஒழுங்கு முறையாக்குவதன் மூலம் எதிர்காலத்தில் நிகழக்கூடிய இழப்புகள் ஒழிக்கப்பட்டன.

2010 ஆம் ஆண்டினுள் மாத்திரம் 1,669 கண்டு பிடிப்புகள் மேற்கொள்ளப்பட்டதோடு, ரூபா 55.07 மில்லியன் அறவிடப்பட்டது. கண்டுபிடிக்கப்பட்ட 78அங்கீகாரமற்ற நுகர்வோர் ஒவ்வொருவரும் ரூபா 100,000க்கு மேற்பட்ட தொகையை தனித்தனியாகச் செலுத்தினர் என்பதை இங்கே குறிப்பிடுதல் முக்கியமானதாகும். கடந்தகாலப் பதிவுகளுடன் ஒப்பிடுகின்றபோது கடந்த இரண்டு வருட காலத்தினுள் சட்ட விரோத நுகர்வு தொடர்பில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுகின்றது. கட்டணமற்ற தொலைபேசி இல. 1939இன் ஊடாகப் பொதுமக்களிடமிருந்து சட்டவிரோத நீர் பயன்பாடு தொடர்பில் பெறப்படுகின்ற தகவல்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதோடு இது விரைவில் வெளியிடப்படும்.

**பௌதீகரீதியில் நிகழக்கூடிய இழப்புக்களை குறைத்தல்**
கொழும்பு நகரத்தில் அதிகமாக நிகழ்கின்ற நீர் இழப்பிற்கான பிரதானமான காரணமாக அமைவது மிகவும் மோசமடைந்த நிலையிலுள்ள பழைய நீர்க் குழாய் வலையமைப்பாகும். பாவனையாளர்களின் மூலம் பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு கட்டணம் அறவிடப்படாத தொலைபேசி அழைப்பிலக்கமாகிய 1939 இற்கு அழைத்து நீர் கசிவு சம்பந்தமான தகவல்களை வழங்க முடியும். நீர் கசிவானது பிரதான நீர் குழாயின் மூலம் அல்லது நீர் இணைப்பை வழங்கும் சேவைக் குழாய்களின் மூலம் நிகழக்கூடியதாகவுள்ளது. பிரதான நீர் குழாயில் ஏற்பட்ட 2059 நீர் கசிவுகளும் 4289 ஆன நீர் இணைப்பை வழங்கும் சேவைக் குழாயில் ஏற்பட்ட நீர் கசிவுகளும் 2010 ஆம் ஆண்டினுள் கண்டறியப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது.

**நிர்வாக ரீதியில் ஏற்படத்தக்க நீர் இழப்பினை குறைத்தல்**

தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை பழுதடைந்த நீர் மானியின் அளவினை மொத்த நீர் இணைப்புக்களின் எண்ணிக்கையில் 1% வீதம் என்னுமடிப்படையில் குறைத்துக் கொள்வதனை இலக்காகக் கொண்டுள்ளது. 2010 ஆம் ஆண்டில் முதல் தடவையாக மேல்-மத்திய பிரதேசங்களில் இவ் இலக்கை அண்மிக்கக் கூடியதாக இருந்தது. 2009 ஆம் ஆண்டில் காணப்பட்ட நீர்மானி பொருத்தப்படாத 1307 நீர் இணைப்புக்களின் எண்ணிக்கையை 2010 ஆம் ஆண்டாகின்ற போது 587 ஆகக் குறைத்துக் கொள்ள முடியுமானது. நீர் பாவனையாளர்களுக்கிடையே மற்றும் மானி வாசிப்பாளர்களுக்கிடையே ஏற்படக் கூடிய ஒழுங்கின்மைகளைத் தடுப்பதன் பொருட்டு மானி வாசிப்பாளர்களை காலத்துக்குக் காலம் சுழற்சி அடிப்படையில் இடமாற்றத்திற்கு உட்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனூடாக மானி வாசிப்பின் சரிநிலையினைப் பேணக்கூடியதாகவுமுள்ளது. இந் நடைமுறையினை மற்றைய பிரதேசங்களிலும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

**வருவாயற்ற நீரைக் குறைத்துக் கொள்வதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட பிற நடவடிக்கைகள்**

*அ) கணிப்பிற்கு உட்படுத்தப்படாத நீரினைக் குறைத்துக் கொள்ளவதற்காக பாவனையாளர்களின் வளாகங்களை ஆய்வு செய்தல்*

நுகர்வோரின் இடங்களைப் பார்வையிடச் செய்யும் செயற்பாடானது கணிப்பிற்கு உட்படாத நீருக்கும் (UFW) பங்களிப்புச் செய்கின்ற அனைத்துக் காரணிகளையும் கண்டறிந்த இல்லாதொழிக்கின்ற குறிக்கோளுடன் 2009 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் முறைமை அழுத்த மேம்பாடு, வருவாயற்ற நீரைக் குறைத்தல் மற்றும் நுகர்வை அதிகரிக்கச் செய்தல் ஆகியன இந் நடைமுறையின் பெறுபேறுகளாக இருந்தன. 2010இல் வரவு செலவுத் திட்ட நிதி குறைக்கப்பட்ட போதிலும் அடுத்துள்ள பிரதேசங்களிலும் இந் நடைமுறை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இது காலம் எடுக்கின்ற ஒரு நடைமுறையாகும் என்பதோடு ஒரு நாளைக்கு 8 முதல் 10 வரையிலான இடங்களையே பூர்த்தி செய்ய முடியுமாயிருக்கும். தற்போது 6186 இடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. பொதுவான அவதானிப்பு மானியிடப்படவில்லை என்பதாகும். குடியிருப்புக்கள் நிறைந்துள்ள பிரதேசங்களில் கூட அங்கீகாரமற்ற நுகர்வைக் காணக் கூடியதாகவுள்ளது.

*ஆ) வருவாயற்ற நீரைக் குறைப்பதற்கான செயற்பாடு மற்றும் பராமரிப்பு பணியாளர் குழாமை வலுவூட்டுதல்*

வருவாயற்ற நீரைக் குறைக்கும் நடவடிக்கையை மிக செயற்திறன் மிக்கதாக மேற்கொள்ள வேண்டுமாயின் அவ் விடயம் குறித்து தாக்கம் செலுத்தக் கூடியதாகவுள்ள நான்கு விடயங்களுக்குமான தீர்வுகளை ஒரே நேரத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

இந் நடவடிக்கையானது JICA நிதியளிப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் "கொழும்பு நகரத்தில் வருவாயற்ற நீரைக் குறைப்பதற்கான பிரிவு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. கருத்திட்ட விடயப் பரப்பிற்குள் கொழும்பு நகரத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும் இரண்டு பிரதேசங்கள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டது. மற்றைய பிரதேசங்களில் (வலயங்களில்) பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கு இவ்விடயம் குறித்த தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக் கொடுப்பதற்காக குறித்த திட்டத்தினூடாக வாராந்தம் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

இந் நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்துகின்ற போது வீதிகளுக்குள் புதைந்துள்ள வால்வுகளை கண்டறிதல் மற்றும் தேவைக்கேற்ப புதிய வால்வுகளைப் பொருத்துதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இப் புதிய தகவல்களிற்கமைய நீர் குழாய் வலையமைப்புக்களின் அமைப்பு ரீதியான பட வரைவுகளை புதுப்பித்தல் மற்றும் தற்போது பாவனைக்குட்படுத்தப்படும் நீர்க் குழாய்களின் தர நிலைமைகள் குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமாயிருந்தது. தெரிவு செய்யப்பட்ட சில பிரதேசங்களுக்கான நீர் வழங்கலை மேற்கொள்ளும் இணைப்புக்களை கண்டறிந்து அவற்றை குறைத்து நீர் பகிர்ந்தளிக்கப்படும் வலையமைப்பினை மீண்டும் நிர்மாணிப்பதனூடாக பல வீதிகளினூடாக ஒரே இடத்திற்கு வழங்கப்பட்டுள்ள நீர் இணைப்புக்களைப் பற்றிய தகவல்களை கண்டறிய முடியுமானது.

2010 ஆம் ஆண்டில் 2,330 நீர் இணைப்புக்களைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட துணை வலயங்கள் (பிரதேசங்கள்) 5இல் இச் செயற்பாடானது அமுல்படுத்தப்பட்டது. மேலும், திட்டங்களுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசங்கள் தவிர்த்து பிரதேச பொறியியலாளர் /வேலைப் பொறுப்பதிகாரிகள் மூலம் மூன்று துணை வலயங்களுக்கான 963 நீர் இணைப்புகளும் இம் முறைக்குள் உட்படுத்தப்பட்டன.

குறித்த திட்டமுறையின் மூலம் வருவாயற்ற நீரைக் குறைப்பதன் பொருட்டு கூட்டு வேலைத் திட்டங்களின் தேவையினை செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் பணியாளர் குழாமினர் நன்கு உணர்ந்து கொண்டனர்.

**வருவாயற்ற நீர்ப் பிரிவினூடாக ஆற்றப்படும் சேவைகள் கசிவுகளை அடையாளம் காணல்**

*அ) தனியார் இடங்கள்*

விநியோக முறைமையிலான ஒரு கசிவை அடையாளம் காண்பதற்குக் கிடைக்கத்தக்கதான நிபுணத்துவம் வீட்டு நுகர்வோருக்கும் ஏனையோருக்கும் கட்டணம் அறவிடுவதன் மீது வழங்கப்பட்டது. மீளாய்வுக்குள்ளான ஆண்டினுள் 441 இடங்கள் பரிசோதிக்கப்பட்டன. இது முன்னைய ஆண்டில் பரிசோதிக்கப்பட்ட இடங்களை விட மிக அதிகமாகும் என்பதோடு 294 இடங்களில் கசிவுகள் உறுதி செய்யப்பட்டன. இதற்கு மேலதிகமாக, நான்கு வர்த்தக இடங்கள் பரிசோதிக்கப்பட்டதோடு இதன் பொருட்டு பராமரிப்பு நோக்கங்களுக்காக தொழிற்சாலையை மூடுகின்ற நாட்கள் தெரிவு செய்யப்பட்டன.

*ஆ) விநியோக முறைமை*

கட்புலனாகின்ற கசிவுகள் அல்லது சந்தேகிக்கப்படுகின்ற கசிவுகள் உள்ள சந்தர்ப்பங்களில் மேல் - மத்திய பிராந்தியத்திற்கு அல்லது பிராந்தியத்திற்கு வெளியே உதவிகள் வழங்கப்பட்டன. வாகனப் போக்குவரத்தால் ஏற்படுகின்ற வெளிவாரித் தொந்தரவுகள் இல்லாததால், கசிவுகளை அடையாளம் காணல் இரவு நேரங்களில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. 2010 ஆம் ஆண்டினுள் 76 கசிவுகள் கண்டுபிடிக்கப்பட்டதோடு இதில் 32 பிராந்தியத்திற்கு வெளியிலானதாக இருந்தது.

*கட்புலனாகின்ற கசிவு ஆய்வுகளை மேற்கொள்ளல்*

**நீர் ஓட்டம் மற்றும் அழுத்தம் தொடர்பாக அளவிடுதல்**

(இ) கையடக்கக் கருவிகளைப் பயன்படுத்தி நீரின் ஓட்டத்தையும் அழுத்தத்தையும் அளவிடுதல் வழக்கமானதொரு தொழிலாகும் என்பதோடு முறைமைக் கண்காணிப்புக்குத் தேவையானதுமாகும். இந்த அளவிடுதல் வேண்டுகோளின் மீதும் மேற்கொள்ளப்படலாம்.

அளவிடுதலுக்கு ஆகக் குறைந்தது 24 மணித்தியாலங்கள் எடுக்கலாம். 2010 ஆம் ஆண்டினுள் ஏறத்தாழ 17 அளவிடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் 50 வழமையான அளவிடுதல்களும் அதற்கு மேலதிகமாக வேண்டுகோள்களின் மீது 119 அளவிடுதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

**வால்வுகளை (Valve) கண்டுபிடித்தல்**

(ஈ) திருத்தங்களைச் செய்வதற்காக நீர் ஓட்டத்தை நிறுத்துதல், விநியோக முறைமையில் நீர் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தல், ஒரு பிரதேசத்தை தனிமைப்படுத்துதல் போன்ற ஒரு சில தொழிற்பாட்டு நோக்கங்களுக்காக தொழிற்படுத்த வேண்டியுள்ளபோது வால்வின் முக்கியத்துவம் அதிகமாக உணரப்படுகின்றது. வால்வைத் தொழிற்படுத்த வேண்டிய அவசியம் அரிதாகவே நேரிடுகின்றது. ஏனைய முகவர் நிறுவனங்களினால் கவனமற்ற விதத்தில் வீதி மேம்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றபோது எப்போதுமே வால்வுகள் மறைக்கப்பட்டு விடுகின்றன. 2010 ஆம் ஆண்டில் புதைந்திருந்த 250 வால்வுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

**நவகம்புர திட்டம் கட்டம் I மற்றும் II**

கொழும்பு நகரத்தில் குறை சேவையைப் பெறுகின்ற 300 குடியிருப்புக்களின் நிலைமையை மேம்படுத்துவதற்காக கொழும்பு மாநகர சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபை, இலங்கை மின்சார சபை, தே.நீ.வ.வ.ச. மற்றும் ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்களால் நவகம்புர திட்டம் கூட்டாக மேற்கொள்ளப்பட்டது.

பொது நீர்க் குழாய்களிலிருந்தான நீர் விரயத்தைக் குறைத்தல் தொடர்பில் தே.நீ.வ.வ.ச. கவனம் செலுத்தியது. மேலும் 143 குறைச் சேவைக் குடியிருப்புகளில் இதே நிகழ்ச்சித் திட்டம் மீண்டும் மேற்கொள்ளப்பட்டது.

**ஏனைய ஒரு சில பகுதிகளிலான பிரதானமான செயற்பாடுகள்**

மேல் - வடக்கு பிராந்திய சேவை நிலையத்தின் வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகளில் முக்கியமானவை வருமாறு: 16,652 பழுதடைந்த மானிகளை மாற்றீடு செய்தலும் 4.5 கிலோ மீற்றர் நீளத்துக்கு AC குழாய்களை இடுதலும், தொம்பே, மல்வான, மஹர, ராகம, எல்பிட்டிவல மற்றும் ஜா-எல ஆகிய இடங்களில் நீர் கோபுரங்களுக்கு நீர் பெருக்கெடுத்து ஓடுகின்ற அறிவிப்புப் பொறிகளைப் பொருத்துதல், வேயங்கொட, கம்பஹா மற்றும் நிட்டம்புவ நீர் வழங்கல் திட்டங்களுக்கு நீர் மட்டத்தைச் சுட்டிக்காட்டும் முறைமையைத் தாபித்தல் மற்றும் கம்பஹா பிராந்தியத்திற்கு கசிவு கண்டு பிடிப்புக் கருவியைக் கொள்வனவு செய்தல்.

மேல்-தெற்கு பிராந்திய சேவை நிலையத்தின் வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகளில் முக்கியமானவை வருமாறு: பாணந்துறை-ஹொரணை பிராந்தியத்தில் பொது நீர்க் குழாய்களை 27 இல் இருந்து 18 வரை குறைத்தல், வாதுவை விநியோக முறைமையில் 4 கிலோ மீற்றர் நீளத்திற்கும் பாணந்துறை பிரதேசத்தில் காலி வீதி நெடுகிலும் 5 கிலோ மீற்றர் நீளத்துக்கும் AC குழாய்களை பதிலீடு செய்தல் மற்றும் தெஹிவலை நீர் கோபுரத்தின் நீர் வெளிச்செல்லும் குழாய்க்கு மொத்த நீர் ஓட்ட மானியைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

மத்திய பிராந்திய சேவை நிலையத்தின் வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகளில் முக்கியமானவை வருமாறு:

பழுதடைந்த மானிகளைத் திருத்துதல் மற்றும் 10,500 பழுதடைந்த மானிகளைப் பதிலீடு செய்தல், 38 புதிய வால்வுகளைப் பொருத்துதல் மற்றும் தற்போதுள்ள வால்வுகளை புதுப்பித்தல் மாவட்ட மானிகளைப் பொருத்துதல் இரவு நேர ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் 118 நீர்க் கசிவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. கட்டுக் குழாய்களை பதிலீடு செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. நாவலப்பிட்டிய நீர் வழங்கல் திட்டத்தில் 2010 சனவரியில் 36% ஆக இருந்த வருவாயற்ற நீர் 2010 செப்தெம்பரில் 10.6 வரை குறைக்கப்பட்டதோடு 2010 இல் மிகச் சிறந்த நீர் வழங்கல் திட்டமாக விளங்கியது. வீட்டுக்கு வீடு ஆய்வுகள் 400 மேற்கொள்ளப்பட்டன. 31 நீர் ஓட்ட அளவிடுதல்களும் படிநிலை பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

வட மத்திய (NC) மற்றும் வட மேல் (NW) பிராந்திய சேவை நிலையங்கள் ஒவ்வொன்றும் இரண்டு பிராந்தியங்களிலும் பழைய குழாய் வழிகள், வால்வுகள் என்பவற்றை பதிலீடு செய்தல் மற்றும் விசேட விடயங்கள், அத்துடன் வட மத்திய பிராந்தியத்தில் முறைமை மேம்பாட்டுக்காக வலயங்களுக்கு புதிய வால்வுகளைப் பொருத்துதல், வடமேல் மாகாணத்தில் நீர் கோபுரங்களுக்கு தன்னியக்க தடை சமிக்ஞை முறைமைகளை பொருத்துதல் என்றவாறு ரூபா 16 மில்லியன் வருவாயற்ற நீர் குறைப்புக்காகச் செலவிட்டது.

சப்பிரகமுவ மற்றும் ஊவா பிராந்திய சேவை நிலையத்தின் வருவாயற்ற நீர் குறைப்புச் செயற்பாடுகளில் முக்கியமானவை வருமாறு: சப்பிரகமுவ மற்றும் ஊவா பிராந்தியங்களில் முறையே 6,482 மற்றும் 9,525 பழுதடைந்த மானிகளைப் பதிலீடு செய்தல், மொனராகல நீர் வழங்கல் திட்டத்தில் 5 கிலோ மீற்றர் நீளமான கட்டுக் குழாய்களைப் பதிலீடு செய்தல், ஹாலிஎல நீர் வழங்கல் திட்டத்தில் 4 மொத்த மானிகளைப் பதிலீடு செய்தல், வெல்லவாய நீர் வழங்கல் திட்டத்தில் அழுத்தக் குறைப்பு வால்வுகளைப் பொருத்துதல் மற்றும் ஹப்புத்தளை நீர் வழங்கல் திட்டத்தில் கட்டுக் குழாய்கள் மற்றும் ஆழமற்ற குழாய் வழிகளைப் பதிலீடு செய்தல். மேற்படி அனைத்து நீர் வழங்கல் திட்டங்களிலும் வருவாயற்ற நீர் குறிப்பிடத்தக்களவில் குறைக்கப்பட்டது.

# வலுசக்தி முகாமைத்துவம்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வலுசக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டமானது உறுதியான முன்னேற்றத்தை அடைந்துள்ளதோடு செயற்பாடுகள் தர ரீதியிலும் அளவு ரீதியிலும் உயர் மட்டத்திற்கு உயர்வடைந்துள்ளன.

அறவீட்டு வகைகள் திருத்தியமைக்கப்பட்டமை, இயந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகள் ஆகியன முன்னைய ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டமை காரணமாக சேமிப்பு 100% தொடர்ந்து நிலவியதோடு இந்த சேமிப்புகள் 2010 ஆம் ஆண்டிலும் திரட்சியடைதல் தொடர்ந்தது. இச் சேமிப்புகள் ஆண்டுதோறும் ஏறத்தாழ ரூபா 15 மில்லியனாகும். 2010 ஆம் ஆண்டில் 32 வலுசக்திக் கணக்காய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டு, வலுசக்திப் பயன்பாட்டிலிருந்தான சேமிப்புகளை அதிகரிக்கச் செய்கின்ற நடைமுறை தொடர்ந்து நடைபெறுகின்றது. மேற்படி வலுசக்திக் கணக்காய்வுகளின் விதப்புரைகள் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படும். இவை பூர்த்தியடைந்ததும், இவற்றிலிருந்தான மொத்த மதிப்பிடப்பட்ட சேமிப்பு மேலதிகமாக ரூபா 35 மில்லியனாக இருக்கும்.

மேலும், ரூபா 22 மில்லியன் செலவில் பழைய வக்வெல்ல உள்வாங்கும் பம்பி நிலையத்தின் வேலை ஆரம்பிக்கப்பட்டதன் பெறுபேறாக வருடாந்தம் ரூபா 12 மில்லியன் சேமிக்கப்படும். 2011 ஏப்பிரலில் வேலை பூர்த்தி செய்யப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. சப்பிரகமுவ பிராந்திய சேவை நிலையத்தில் ரூபா 5 மில்லியன் செலவில் 03 திட்டங்களின் எந்திரவியல் மற்றும் மின்னியல் மூலதன வேலைகள் நடைபெற்று வருவதோடு, இவை பூர்த்தியடையும் போது அதன் பெறுபேறாக வருடாந்தம் ரூபா 960,000 சேமிக்கப்படும். 2011 யூன் மாதத்தில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தே.நீ.வ.வ.ச.யின் வலுசக்தி சேமிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கான இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகார சபையின் (SEA) ஊடாக முன்மொழியப்பட்டுள்ள JICA நிதியிடல், 2010 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது. JICA மற்றும் SEA யினால் மேற்கொள்ளப்பட்ட தே.நீ.வ.வ.ச.யின் வலுசக்தி நிலைமை தொடர்பிலான விரிவான சாத்தியக் கூறுக் கற்கையின் இறுதியில், ரூபா 4 மில்லியன் செலவிலான முன்னோடிக் கருத்திட்டமொன்றுக்கு JICA வினால் நிதியிடப்பட்டது. இக் கருத்திட்டமானது ஜுபிலி பம்பி நிலையத்தில் தே.நீ.வ.வ.ச.யினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. JICA நடைமுறைகளை SEA யினால் 2011 இல் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு கருத்திட்டம் 2012 இல் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கையின் தூய்மையான அபிவிருத்திப் பொறிமுறைக்கான (CDM) குறித்துரைக்கப்பட்ட தேசிய அதிகார சபையாக விளங்குகின்ற சுற்றாடல் அமைச்சுடன் (MOE) சேர்ந்து தே.நீ.வ.வ.ச.யின் அனைத்து வலுசக்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் உள்ளடக்குகின்றவாறு காலநிலை மாற்றத்தின் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் வரைச்சட்ட சமவாயத்தின் (UNFCC) தூய்மையான அபிவிருத்திப் பொறிமுறை நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சுற்றாடல் அமைச்சில் CDM தொடர்பில் ஆற்றல் வளர்ச்சிக்கான வழிகாட்டல்கள் JICA குழுவினால் வழங்கப்பட்டது. தே.நீ.வ.வ.ச.யின் மீதான ஆரம்ப ஆவணங்கள் JICA குழுவுக்கு ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நடைமுறைகள் இயல்பிலேயே கடும் உழைப்பையும் கடின தன்மையையும் கொண்டுள்ள போதிலும், தே.நீ.வ.வ.ச.யின் உயர் மட்டத்திலான வலுசக்தி நுகர்வின் காரணமாக, CDMஐ அமுல்படுத்துவதன் ஊடாக அடையப்பெறக்கூடிய நிதியியல், சுற்றாடல் மற்றும் ஏனைய தொட்டு உணர முடியாத நன்மைகள் மிக அதிகமாகும்.

# நிறுவன அபிவிருத்தி

நிறுவன அபிவிருத்தியின் முக்கியத்துவமானது தே.நீ.வ.வ.ச.க்கு அதன் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலை அபிவிருத்தி செய்வதற்கான முன்தேவைப்பாடாகும் என அடையாளம் காணப்பட்டுள்ளது. தேவைகளைப் பற்றியதொரு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதோடு, தேவைகளை நிறைவு செய்வதற்கான ஒரு நிகழ்ச்சித் திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. நிகழ்ச்சித் திட்டத்தின் செயல் நோக்கங்கள் வருமாறு:

- மேம்படுத்தப்பட்ட உற்பத்தித் திறன் மற்றும் நுகர்வோர் கவனிப்பை அடையப் பெறுவதை முன்னிட்டு அனைத்து மட்டங்களிலான பணியாளர்களின் மனப்பாங்குகளை மாற்றுதல்
- கூட்டு இலக்குகளை அடையப்பெறுவதை நோக்கமாகக் கொள்ளல்
- இலக்குகளை அடையப்பெறும் நோக்குடன் அனைத்துப் பணியாளர்களும் பணியாற்றுதல்
- பங்கேற்பு அணுகுமுறையின் ஊடாக ஒவ்வொரு பணியாளரினதும் பங்களிப்பை கண்டுணர்தல்.

பயிற்சிகளின் தோற்றப்பாடுகள், திறன் அபிவிருத்தி, கணனி அறிவை வளர்த்தல், நட்புறவுடனானதும் சேவை திசைமுகப்படுத்தப்பட்டதுமான அலுவலக சுற்றாடலைப் பேணிவருதல், மற்றும் 5 எஸ் திட்டம் சம்பந்தமாக அறிவூட்டல் கோட்பாடுகளைக் கடைப்பிடித்தல், உற்பத்தித்திறன் விருதுப் போட்டிகளில் பங்கேற்றல் மற்றும் அவற்றில் சில விருதுகளை வென்றெடுத்தல் ஆகியன பொதுவாக தொடர்ந்து நடைபெற்றன. 2010 கால கட்டத்தினுள் நிறுவன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட செயற்பாடுகளின் அடைவுகள் மற்றும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

“தயட்ட செவன” தேசிய மரநடுகை இயக்கம் நாடளாவிய ரீதியில் தே.நீ.வ.வ.ச. அலுவலகங்களில் நடத்தப்பட்டது.

மேல் - மத்திய பிராந்திய உதவி நிலையத்தின் மூன்று அலுவலகங்கள் உற்பத்தித்திறன் விருதுப் போட்டியில் பங்குபற்றியதோடு கோட்டே முகாமையாளர் அலுவலகம் சிறப்புத் தகுதிச் சான்றிதழை வென்றுள்ளது. மேல் - மத்திய பிராந்திய அலுவலகத்தில் நத்தார் பண்டிகை கொண்டாடப்பட்டதோடு, வறிய மக்களுக்கு அத்தியாவசிய பண்டங்கள் அடங்கிய பரிசுப் பொதிகளை விநியோகித்தல், நத்தார் கீதம் இசைத்தல், இறுதியில் ஒன்று கூடலொன்றுடன் கூடியதாக இது நடைபெற்றது.

மேல் - தெற்கு பிராந்திய உதவி நிலையப் பணியாட்டொகுதியினருக்காக பணியாளர்களின் மனப்பாங்கு மாற்றத்திற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றும் கந்தானையிலுள்ள களுகங்கை நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கான கள விஜயமொன்றும் மேற்கொள்ளப்பட்டது. பாணந்துறை - ஹொரண பிராந்திய அலுவலகத்திலும், பாணந்துறை உதவிப் பொறியியலாளர் அலுவலகத்திலும் நீர் பாவனையாளரின் வசதிக்காக அலுவலகத்தின் திட்ட வரைபடத்தை காட்சிப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பாணந்துறை - ஹொரண பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திலும் கொழும்பு தெற்கு நகர பிராந்தியத்திலும் வாடிக்கையாளர் தொடர்புப் பிரிவின் இட வசதிகள் அதிகரிக்கப்பட்டன. வாத்துவை, களுத்துறை, பயாகலை மற்றும் அளுத்கமை அலுவலக நிலையப் பொறுப்பதிகாரி அலுவலகங்களில் உற்பத்தித்திறன் மேம்பாட்டு விரிவுரைகள் நடத்தப்பட்டன.

மத்திய பிராந்திய சேவை அலுவலகத்தின் அனைத்து நீர் வழங்கல் திட்ட இடங்களிலும் சேதனப் பண்ணை மற்றும் மர நடுகைகள் ஒழுங்கு செய்யப்பட்டன. தர வட்டங்கள் நடத்தப்பட்டன. கண்டி வடக்கு அலுவலகம், கண்டி பெரும்பாக நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி மற்றும் பாததும்பர திட்டங்கள் உற்பத்தித்திறன் விருதுகளை வென்றன. கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில் முயற்சி மேம்பாட்டுத் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட போட்டியில் கண்டி கிழக்கு முகாமையாளர் அலுவலகம் மத்திய மாகாணத்தில் 3வது இடத்தை வென்றது.

**ஆ.அ.வ. இல் தொழில்நுட்ப உதவி** (TA)

நீர் துறைப் பயன்பாடுகள், முகாமைத்துவம் மற்றும் தொழிற்படுத்தலை மேம்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தினதும் தே.நீ.வ.வ.ச.யினதும் முயற்சிகளுக்கு உதவி வழங்குகின்றதான நிறுவனப் பலப்படுத்தல்களுக்காக 2009 யூன் மாதத்தில் ஆ.அ.வ. தொழில்நுட்ப உதவி (இல. 7078) வடிவமைக்கப்பட்டது. மேற்படி தொழில்நுட்ப உதவியானது பின்வரும் குறித்துரைக்கப்பட்ட நான்கு ஆக்கக்கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

**பிராந்திய அளவுக் குறியீடு**

முக்கியமான பிராந்திய செயலாற்றுகைத் தரவுகளின் சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் ஒப்பீட்டுக்கு பிராந்திய அளவுக் குறியீடுகள் இட்டுச்செல்கின்றன. தகவல் தொழில் நுட்பமானது முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் பிரச்சினைகள் பரவாது தடுப்பதற்கு உதவி புரிகின்ற பயனுறுதியான திட்டமிடல் கருவியாகவும் ஒட்டுமொத்தமான செயலாற்றுகை மேம்பாட்டுக்கும் உதவியாகச் செயற்படுகின்றது.

**பிராந்திய வியாபாரத் திட்டம்**

தே.நீ.வ.வ.ச.யின் சேவை மட்டத்தினை மேம்படுத்துதல், பன்முகப்படுத்தப்பட்டுள்ளதான பிராந்திய மட்டத்தின் தனிப்பட்ட வியாபாரத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் குடிநீரின் சிறந்த வியாபாரத்தினைத் தொடர்ந்து நடத்துதல் என்றவாறு குறிக்கோளைப் பேணிவருதல். இலங்கை மர்சன்ற் வங்கியினால் தே.நீ.வ.வ.ச.க்கான கூட்டு வியாபாரத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. வியாபாரத் திட்டத்தைத் தயாரிப்பதன் ஊடாக பிராந்திய அறிவீட்டின் தேவை வலியுறுத்தப்படுகின்றது.

**ஆதன முகாமைத்துவத் திட்டம்**

ஆதன முகாமைத்துவத் திட்டமிடல் உள்ளிட்ட ஆதன முகாமைத்துவத்திற்கு பொதுவாக பிராந்திய சேவை நிலையங்கள் பொறுப்பாக உள்ளன. எனவே தொழில்நுட்ப உதவியானது கொள்கை வடிவமைப்புக்கான வழிகாட்டலுக்கு மத்தியில் அமைந்துள்ள செயற்குழுவின் தேவையை வலியுறுத்துகின்றதோடு, அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்கான செயலாற்ற ஆதன முகாமைத்துவத்துக்குத் தேவையான திறன்களையும் ஆற்றல்களையும் அபிவிருத்தி செய்வதில் பிராந்திய சேவை நிலையங்களுக்கு உதவிகளை வழங்குகின்றது.

**உள்ளகக் கண்காணிப்பும் ஒழுங்குவிதியும்**

உள்ளகக் கண்காணிப்பு முறைமையின் நடைமுறைப்படுத்தலையும் அதே போன்று தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒழுங்குவிதிகளினதும் இயைபியக்க ஊக்குவிப்பின் பொருட்டு, தொழில்நுட்ப உதவியானது செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் அட்டவணைகள் உள்ளடங்கலாக ஒரு நிகழ்ச்சி நிரலை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதற்கு தே.நீ.வ.வ.ச.க்கு ஒத்தாசை வழங்கியது. தே.நீ.வ.வ.ச.யானது குறிக்கோள்களைக் கூட்டிணைத்து கொள்கைக் கூற்றொன்றை வடிவமைத்தல் வேண்டுமெனவும், பணி ஆணை, செயற்பாடுகள் மற்றம் அதிகாரம் உள்ளடங்கியவாறு உள்ளகக் கண்காணிப்பு மற்றும் ஒழுங்கு முறையாக்கல் அலகொன்றைத் தாபித்தல் வேண்டுமெனவும் முன்மொழியப்பட்டது.

2010 மே மாதத்தில் ஆ.அ.வ. தொழில்நுட்ப உதவி 7078 வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

# ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டினுள், பிரதானமாக குடிநீர் வழங்கலின் தரத்தை மேம்படுத்துவதற்காக, வினைத்திறன்மிக்க குடிநீர் வழங்கலை நோக்கமாகக் கொண்டு பின்வரும் ஆராய்ச்சிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**புத்தளம் நீர் வழங்கல் திட்டத்தில் கடினத் தன்மையை மற்றும் மங்கனீசை அகற்றுதல்**

புத்தளம் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற நீரின் தரமானது நீண்ட காலமாக திண்மை மிக்கதாக விளங்கியது. துரித மணல் வடிகட்டல் ஊடகத்தின் கெட்டியான தன்மை வடிகட்டலை இயங்காதிருக்கச் செய்துள்ளமையே இதற்கான காரணம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. நீர் தர அறிக்கைகளுக்கு இணங்க சுத்திகரிக்கப்படாத நீர் உயர் திண்மத் தன்மை மற்றும் மங்கனீசு மட்டத்தைக் கொண்டுள்ளமையே இதற்கான காரணமாகலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. தற்போதைய சுத்திகரிப்பு முறையானது திருப்திகரமற்ற காற்றூட்டல் மற்றும் வடிகட்டலைக் கொண்டுள்ளமை தெளிவாகின்றது.

இப் பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியாக, ஆய்வுகூட பாவனையொன்றுடன் கூடியதாக இயங்குகின்ற ஒரு முன்னோடிப் பொறித் தொகுதி பொருத்தமான தீர்வாகும் என்ற முடிவுடன் நடாத்தப்பட்டது. ஆரம்பத்தில் அமிலப் பெறுமானத் (pH) திருத்தத்துடன் கூடியதாக சுண்ணாம்புக் கார நடைமுறை பரிசீலிக்கப்பட்டது. இந்த முறையானது மாதிரிப் பொறித் தொகுதியில் உணர்திறன் பிரச்சினை உருவாகியமை மற்றும் குழாய் வழிகள் தடைப்படுகின்ற பிரச்சினையைத் தொடர்ந்து முடிவுற்றது. அதிக உற்பத்திச் செலவு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீரில் இருந்த ஏற்றுக்கொள்ள முடியாத அளவிலான ஊடுகடத்தும் தன்மையின் காரணமாக இறுதிப் பெறுபேறு திருப்திகரமற்றதாக இருந்தது. இதைத் தொடர்ந்து ஆய்வுகூடப் பரிசோதனை மூலம் ஒரு செயல்முறை உருவாகியது. இந்த செயல் முறையானது pHஐ உயர்த்துவதற்காக சுண்ணாம்புக் காரத்தையும் NaOHஐயும் பயன்படுத்துவதோடு அதைத் தொடர்ந்து படிமங்களைப் படியச் செய்வதற்காக களிமண்ணும் படிகாரமும் பயன்படுத்தப்படுகின்றது. இந்த செயல் முறையிலுள்ள அனுகூலம் யாதெனில், சுத்திகரிப்பு நடைமுறையின் இறுதியில் விசேட pH திருத்தம் தேவைப்படாது என்பதோடு சுத்திகரிக்கப்பட்ட நீரில் ms/cm 1500 முதல் 1800 வரையிலான வீச்சிடையில் ஊடுகடத்தும் தன்மையைக் குறைக்கின்றது. இதற்கு மேலதிகமாக அமோனியா மற்றும் காரப் பொருட்கள் குறைக்கப்படுதலும் ஒரு அனுகூலமாயிருக்கும். இறுதியாக ஒரு கன மீற்றருக்கான சுத்திகரிப்புச் செலவு ரூபா 13 வீச்சிடையில் இருந்தது.

பாடப் புத்தகங்களில் சுண்ணாம்பு மென்மையாக்கல் நடைமுறை காணப்பட்ட போதிலும் இலங்கையில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட முதல் முயற்சி இதுவாகும்.

**கொண்டுவட்டுவான் நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் அலகு நடைமுறைகளின் வடிவமைக்கப்பட்ட அளவுகோல்களுக்கு எதிரான செயலாற்றுகையின் மதிப்பீடு**

அம்பாறை மாவட்டத்தின் கிழக்குக் கரையோர நகரங்களின் (ECTAD) நீர் வழங்கல் திட்டம் இரண்டு கட்டங்களில் அமுலாக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. நாளொன்றுக்கு 17,500 கன மீற்றர் கொண்ட கட்டமும் நாளொன்றுக்கு 72,000 கன மீற்றர் கொண்ட கட்டமும் முறையே 2001இலும் 2007இலும் இயங்க வைக்கப்பட்டன. இரண்டு கட்டங்களிலும் பாசியை அகற்றுவதற்கு கரையவிடப்பட்ட காற்று மிதக்கவிடுதல் பயன்படுத்தப்பட்டது. சுத்திகரிப்புப் பொறித்தொகுதி இயங்க வைக்கப்பட்டதன் பின்னர், தாம் பெறுகின்ற நீரின் நிறம், வாடை மற்றும் சுவை தொடர்பில் நுகர்வோரிடமிருந்து இடைக்கிடை முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்கான பல்வேறு சுத்திகரிப்புத் தெரிவுகளின் கீழ் பொறித்தொகுதியை இயங்கச் செய்வது மற்றும் மிகச் சிறந்த தீர்வை அடையப்பெறுதல் தொடர்பில் இக் கற்கை கவனம் செலுத்தியது.

சுத்திகரிப்பு நடைமுறையிலிருந்த பல குறைபாடுகளை அடையாளம் காண்பதற்கு இக் கற்கை உதவியாயமைந்தது. இரசாயனப் பயன்பாட்டை கட்டாயமற்றதாக்குதல் மற்றும் பொறித்தொகுதியின் வினைத்திறன்மிக்க மங்கனீசு அகற்றல் தொடர்பில் மேலும் கற்கைகளை மேற்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டது.

**நுவரெலியா போமுருஎல்ல நீர்த் தேக்கத்தின் மாசுக்கள்**

போமுருஎல்ல நீர்த் தேக்கமானது நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டு தொழிற்படுத்தப்பட்டு வருகின்ற நுவரெலியா பிரதேசத்திலுள்ள முக்கியமானதொரு நீர் வளமாகும். போமுருமுல்ல நீரோட்டத்தின் கீழ் பகுதி நீரைப் பயன்படுத்தி அம்பகஸ்தூவ, லுனுவத்த, வெலிமட, ஊவாபரணகம மற்றும் கெப்பெட்டிபொல பிரதேசங்களுக்கு குடிநீர் வழங்கப்படுகின்றது. பல மாசாக்கல் காரணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதால், போமுருஎல்ல நீர்த் தேக்கத்தின் நீர் மாசடைதல் தொடர்பான இக் கற்கையானது முக்கியமானதாயுள்ளது. நில நிரப்புதலின் மூலமான நீர்மக் கசிவுகள், மரக்கறி கழுவப்படும் நீர், மாநகர கழிவு நீர் வெளியேற்றம், பயிர்ச் செய்கைகளிலிருந்து வெளியேறுகின்ற நில மேல் மட்ட நீர் மற்றும் வீடமைப்புப் பிரதேசங்களிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவு நீர், என இவற்றில் சிலவற்றைப் பெயரிடலாம். ஆண்டின் சில காலங்களில் லீட்டருக்கு 225 மில்லி கிராம் என்றவாறு உயர்ந்தளவு COD பெறுமானத்துடன் கூடியதான சேதன கழிவுகளின் அதிகளவு சுமை நீர்த் தேக்கத்திற்கு உட்பாய்ச்சப்படுகின்றதென்பது கற்கையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. உயர்ந்தளவு BOD, கலங்கிய நிலை மற்றும் அமோனியா மட்டம் ஆகியனவும் அவதானிக்கப்பட்டது. உயர்ந்தளவு BOD, கலங்கிய நிலை மற்றும் அமோனியா மட்டம் ஆகியனவும் அவதானிக்கப்பட்டது. சாதாரண சுத்திகரிப்புடன் கூடியதாகவெனினும் நீர்த் தேக்கத்திலுள்ள நீர் குடிப்பதற்குப் பொருத்தமற்றதென முடிவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும் கன உலோகத்தின் காரணமாக மாசடைதல் சொற்பமாகலாம் என்பது இக் கற்கையின்போது கண்டறியப்பட்டது. கீழ் நீரோட்டத்தின் உள்வாங்கு பிரதேசம் கடுமையாகப் பாதிக்கப்படலாம் என்பதால் நீர்த் தேக்கம் மேலும் மாசடைவதைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வு நடவடிக்கைகள் விதந்துரைக்கப்பட்டன. பூச்சி கொல்லிகள் மற்றும் பாசி வகைகளின் அளவீடுகள் தொடர்பிலான மேலதிக கற்கைகள் விதந்துரைக்கப்பட்டன.

**மாத்தளை மாவட்டத்தில் இயற்கை நீர் ஊற்றுக்கள் தொடர்பிலான நீர் புவி அமைப்பியல் மற்றும் புவி இரசாயனவியல் ஆய்வு**

**நீர்ப் புவிச்சரிதவியல் அமைப்பு**

மாத்தளையின் இயற்கை நீர் ஊற்றுக்கள் நீர் வழங்கலில் முக்கியமான வகிபாகத்தை ஏற்கின்றன. நீர் தர அளவீடுகளைப் பொறுத்தவரை புவிச் சரிதவியல், கட்டமைப்பு, புவிஇயல்பு, வடிகால், வானிலையின் மிகைப்புஞ, உலகியல் மற்றும் வானியல் நடத்தைப் போக்குகள் நீர் ஊற்றுக்களின் நீர்புவியியல் மற்றும் நீர் புவி இரசாயனவியல் சார்ந்த பண்புகளில் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பீடு செய்யும் பொருட்டு இக் கற்கை மேற்கொள்ளப்பட்டது. விரிவான கள வரைபடமிடல், ஈரலிப்பு மற்றும் உலர் பருவங்களின் விளைச்சலை அளவிடுதல் மற்றும் நீரூற்றின் விளைச்சல் ஆகியன பிரதேசத்தின் புவிச் சரிதவியல், கட்டமைப்பு, இடஇயல்பு மற்றும் வடிகால் முறைகளுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டன. மேற்படி பண்புகளுடன் உள்ள தொடர்பைக் கண்டறிவதற்காக நீரூற்றிலிருந்து வெளியிடப்படுபவை அளவிடப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன. மாதாந்த மழை வீழ்ச்சியும் மேல்தட்டு

ஆவியாதல் தரவுகளும் சராசரியாக இருந்ததோடு அவை ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டன. மொத்தம் 27 நீரூற்றுக்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. pH, ஊடுகடத்தும் தன்மை, திண்ம நிலை, பிரதானமான மின் அணுக்கள் மற்றும் எதிர் மின்மங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. மாதாந்த மழை வீழ்ச்சியும் மேல்தட்டு ஆவியாதல் தரவுகளும் சராசரியாக இருந்ததோடு அவை ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டன. மொத்தம் 27 நீரூற்றுக்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. pH, ஊடுகடத்தும் தன்மை, திண்ம நிலை, பிரதானமான மின் அணுக்கள் மற்றும் எதிர் மின்மங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

மாத்தளை பிரதேசத்தின் நீரூற்றுக்கள். ஒழுங்கற்ற சுண்ணாம்புக் கற்பாறை இணைப்புகள் மற்றும் முறிவுகள் அத்துடன் தானிய அளவிலான சலவைக் கற்களின் வேறுபட்ட பருமன்கள் காரணமாக பிரதானமாக சலவைக் கற்களிலேயே அமையப் பெற்றுள்ளன. பிரதானமாக கோடுகள் கிழக்கு-மேற்கு மற்றும் வடக்கு-தெற்கு திசைகளில் அமைந்துள்ளன. நீரூற்றுகளின் உருவாக்கமானது, குறுக்கு நெடுக்குக் கோடுகள் மற்றும் தாழ் உயர்வைக்கொண்ட பள்ளத்தாக்குப் பிரதேசத்துடன் தொடர்புள்ளதென்பது கண்டறியப்பட்டது. பொதுவாக வடக்கை நோக்கிச் செல்கின்றபோது நீரூற்றுக்களின் விளைச்சல் அதிகரிக்கின்றது. பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப நீரூற்றுக்களின் விளைச்சல் குறிப்பிடத்தக்களவில் மாற்றமடைதென்படவில்லை. மழை வீழ்ச்சியானது தெளிவான சுழற்சியுடன் கூடிய இரு பரிமாண வேறுபாடுகளைக் காட்டுகின்ற பிரதானமான மீள்செறிவூட்டல் வளமாகும். ஆழமற்ற நீர் மட்டம் மற்றும் ஆழமான முறிவுகள் உள்ள பிரதேசங்களில் நீரூற்றுக்களின் விளைச்சல் அதிகமாகும் என்பது தோண்டப்பட்ட குழிகளிலான பகுப்பாய்வுகள் வெளிப்படுத்தின.

சலவைக் கற்களிலிருந்தான ஊற்றுநீர் கல்சியம்-மக்னீசியம் பைகாபனேற் வகையைச் சேர்ந்ததாகும். மின் ஊடுகடத்தி தவிர்ந்த, அநேகமான மின் அணுச் செறிவு ஈரலிப்பு பருவத்துடன் ஒப்பிடுகின்றபோது உலர் பருவத்தில் அதிகரிக்கின்றது. அளவீடுகளின் பிரதேசவாரியான விநியோகமானது விநியோக முறையின் பொதுவான வடிவைப் பொறுத்தவரை கவனத்தை ஈர்க்கின்ற விதத்தில் ஒத்த தன்மையை கொண்டுள்ளதைக் காட்டுகின்றது. காரத்தன்மை, ஊடுகடத்தல், பைகாபனேற் மற்றும் மொத்த திண்மக் கரைசல்கள் தென் மேற்கு திசையிலிருந்து அதிகரிக்கின்ற போக்கைக் காட்டுவதோடு குளோரைட், பொட்டாசியம், சல்பேற் ஆகியன அதே திசையில் குறைந்து செல்வதைக் காட்டுகின்றன.

பிரதேசத்திலுள்ள நீரூற்றுக்களின் நில நீர் நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் நோக்கங்களுக்கு பொருத்தமானதென்பதை நீர் தர அளவீடுகள் சுட்டிக்காட்டுகின்றன. பிரதேசத்திலுள்ள சமுதாயத்தினரில் குறிப்பிடத்தக்களவு பிரிவினருக்கு நீர் வழங்கல் வளமென்ற வகையில் ஊற்றுநீரை அபிவிருத்தி செய்து வழங்குவதற்கு இயலுமாயுள்ளது.

## கிராமிய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு

இரண்டாம் நிலை நகரங்கள் மற்றும் கிராமிய அடிப்படையிலான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு கருத்திட்டத்தின் கீழ் பாரிய அளவிலான சமுதாயப் பங்களிப்புடனான கிராமிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன. (பக்கம் 40 இல் மேலதிக விபரங்கள் உள்ளன). பொலனறுவை, மாத்தளை மற்றும் குருநாகல் மாவட்டங்களுக்கும் ஊவா மாகாணத்திற்குமான கிராமிய நீர் வழங்கல் கருத்திட்ட முன்மொழிவுகளுக்கு கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவின் (PAC) அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. தென் மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு, கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கியதான 'வடக்கின் வசந்தம்' நிகழ்ச்சித் திட்டத்திற்கான கிராமிய நீர் வழங்கல் முன்மொழிவுகள் மீள் குடியமர்த்துகை அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குருநாகல், பதுளை, மொனராகலை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் கிராமிய நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கான உலக வங்கி நிதியளிப்பிலான முன்னோடிக் கருத்திட்டம் பேச்சுவார்த்தைக் கட்டத்தில் உள்ளதோடு, இது 2011 முதல் காலாண்டினுள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

2011 உலக நீர் தினத்துக்காக சமூக மைய அமைப்புகளுக்கு மத்தியிலானதொரு போட்டி திட்டமிடப்பட்டுள்ளது. போட்டிக்கான விழிப்புணர்வூட்டல் பிரசாரங்களுக்குத் தேவையான நிதியை UNICEF, IFRC மற்றும் ஏனைய அரச சார்பற்ற அமைப்புகளிலிருந்து பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது. கிராமிய நீர் வழங்கல்களுக்கான தரவுத் தளமொன்றைத் தாபிப்பதற்கு UNICEFஇல் இருந்து தேவையான நிதியங்கள் பெறப்பட்டுள்ளன. மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், மாவட்ட மட்டத்திலான கிராமிய நீர் வழங்கல் அலகுகளுக்கு கணனி வசதிகள் வழங்கப்பட்டதோடு, தரவுத் தளத்தைத் தாபிப்பதற்கான மென்பொருள் செயற்திட்டங்கள் கணனிகளில் நிறுவப்பட்டுள்ளன. மாவட்ட மட்ட தரவுத் தளங்கள் பிராந்திய சேவை நிலையங்களில் தற்போதுள்ள சேவையகங்கள் (Servers) ஊடாக கிராமிய நீர் வழங்கல் பிரிவுகளுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. மாவட்ட கிராமிய நீர் வழங்கல் அலகுகளால் மேற்படி தரவுத் தளங்களில் கிராம உத்தியோகத்தர் பிரிவு வாரியான தரவுகள் பதியப்பட்டு வருவதோடு அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவு வாரியான தரவுப் பதிவுகளும் 2011 ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்படும்.

### SACOSAN - IV சர்வதேச மாநாட்டுக்கான தயார்படுத்தல்கள்

சர்வதேச மாநாட்டுக்கு தயாராகும் பொருட்டு பிரதான தரப்பினர்களுக்கு மத்தியிலான ஒரு தேசிய செயலமர்வு மற்றும் பிராந்திய செயலமர்வுகளை ஒழுங்கு செய்வதில் SACOSAN - IV தேசிய செயற்குழுவுக்கு தே.நீ.வ.வ.ச. உதவியளித்தது. தேசிய செயலமர்வு கொழும்பில் நடைபெற்றதோடு இரண்டு மாகாண செயலமர்வுகள் மாத்தறை மற்றும் பண்டாரவளையில் நடாத்தப்பட்டன. கண்டி, அனுராதபுரம், வவுனியா மற்றும் அம்பாறை ஆகியவற்றுக்கான விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் 2011 சனவரி - பெப்ருவரி காலத்தினுள் நடத்தப்படவுள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக 2011 ஏப்பிரலில் SACOSAN - IV மாநாட்டை நடத்துவதற்கான உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## நிலக்கீழ் நீர்

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டினுள், நிலக்கீழ் நீர் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பணிகள் வருமாறு: கைப்பம்பி மற்றும் பயன்தரும் குழாய்க் கிணறுகளுக்கான நீரக, புவிச்சரிதவியல் மற்றும் புவிப் பௌதீக பரிசோதனைகள், ஆழமான மற்றும் ஆழமற்ற குழாய்க் கிணறுகளைத் தோண்டுதல், புதிய கைப்பம்பிகளைப் பொருத்துதல், பயன்தரும் குழாய்க் கிணறுகளுக்கான பம்பிப் பரிசோதனைகள், நீரோட்ட அளவீடுகள், நீர் பீற்றுவிசை செயற்பாடுகள் மற்றும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தோண்டப்பட்ட கிணறுகளைத் துப்புரவு செய்தல். 478 நீரக, புவிச்சரிதவியல் பரிசோதனைகள், 276 குழாய் கிணறுகள் (ஆழமான மற்றும் ஆழமற்ற), 82 பம்பி பரிசோதனைகள், 448 கைப்பம்பி திருத்தங்கள் மற்றும் புனரமைத்தல்கள், 114 கைப்பம்பி பொருத்துதல்கள், 105 கிணறு அபிவிருத்திகள், 4 நீர் பீற்றுவிசை செயற்பாடுகள், 2 மேல்மட்ட நீரோட்ட அளவீடுகள் மற்றும் 646 தோண்டப்பட்ட கிணறுகளின் துப்புரவுச் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டமை இதன் முன்னேற்றமாகும்.

## சமூகவியல் செயற்பாடுகள்

2010 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட சமூகவியல் செயற்பாடுகளின் முக்கிய நிகழ்வுகள் கீழே நிரல்படுத்தப்பட்டுள்ளன.

- குழாய் நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பில் கொழும்பு பல்கலைக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சமூகவியல் ஆராய்ச்சிக்கு வசதியேற்பாடு செய்தல்.
- கருத்திட்டத் திட்டமிடல் பற்றிய நடைமுறைக் கைநூலுடன் தொடர்புடைய சமூக நோக்கு தொடர்பில் பயற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துதலும் பொறியியலாளர்கள், சமூகவியலாளர்கள், இரசாயனவியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான சாத்தியக்கூறு அறிக்கையைத் தயாரித்தலும்.
- அளவு மற்றும் தரத்தைப் பொறுத்தவரை நீர் வழங்கல் திட்டங்களின் பாதுகாப்பை முன்னிட்டு பிராந்திய சமூகவியலாளர்களினால் கண்டி பிராந்தியத்தில் நுகர்வோர் விழிப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டன.
- இரத்மலானை, அங்குலானையில் உத்தேச கழிவு நீரை அகற்றும் கடலுக்கான வாயிலின் நிர்மாணிப்பு காரணமாக பாதிக்கப்படக்கூடிய மீனவர்களுக்கான இழப்பீடுகளுக்கான வழிகாட்டி தயாரிக்கப்பட்டது. அத்துடன் கழிவு நீர் சுத்திகரிப்பு வசதிகளின் அனுகூலங்கள் தொடர்பில் மீனவர்களை அறிவூட்டும் பொருட்டு பொதுசன ஆலோசனைக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.
- சமுதாய ஈடுபாட்டுக்கு உரிய விதத்தில், பிராந்திய சேவை நிலையங்களில் கைப்பம்பிக் கிணறுகள் தொடர்பான (மூன்று அடுக்கு முறைமை) கைப்பம்பிப் பராமரிப்புக் கொள்கை தொடர்பில் அவசியமான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. கைப்பம்பிக் கிணறுகளின் மூன்று அடுக்கு முறைமையை விசேடமாகக் குறிப்பிட்டு, நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான சமுதாயப் பங்களிப்பு தொடர்பிலான ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்கும் வசதியேற்பாடு செய்யப்பட்டது.
- கிராமிய நீர் வழங்கல் மற்றும் பிரசாரப் பிரிவின் ஈடுபாட்டுடன் நீர் பாதுகாப்பு மற்றும் வருவாயற்ற நீர் குறைப்பு தொடர்பில் சில பொதுசன விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.
  பிராந்திய சமூகவியலாளர்களால் மொரட்டுவை பிரதேசத்தில் கட்டணப் பட்டியல்கள் செலுத்தப்படாமை தொடர்பில் விசேட கற்கையொன்று மேற்கொள்ளப்படல்.
- சிறிய அளவிலான நீர் வழங்கல் திட்டங்களுக்கான திட்டமிடல் வழிகாட்டியொன்றைத் தயாரித்தல்.
- பொது மக்களுக்கு ஒழுங்கான துப்புரவேற்பாட்டுச் சேவைகளை வழங்குவதற்கு அரசியல் தலைமைத்துவங்களுக்கு உணரச் செய்யும் பொருட்டு SACOSAN தொடர்பில் சில விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

### கொள்கை வகுத்தல்

நீரிற்கான தேசிய கொள்கை மற்றும் துப்புரவேற்பாட்டிற்கான தேசிய கொள்கை இரு வேறுபட்ட கொள்கைகள் வகுக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இக் கொள்கைகள் பற்றி ஊடகங்களினூடாக மற்றும் கூட்டங்கள் / வலுவூட்டல்கள் ஆகியவற்றின் ஊடாக பங்குதாரர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் கருத்துக் கணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இக் கருத்துக்களை கொள்கை அறிக்கைகளுக்கு உட்படுத்தியபின்னர் குடிநீரிற்கான தேசிய கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. துப்புரவேற்பாட்டுக்கான தேசிய கொள்கையானது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அங்கீகாரம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## தகவல் தொழில் நுட்பம்

தே.நீ.வ.வ.ச.யின் முக்கியமான வியாபாரத் தொழிற்பாடுகளை உள்ளடக்கியதான 11 பாரிய மொடியுல்களைக் கொண்ட, இந்திய நிதியளிப்பிலான தகவல் தொழில்நுட்ப (IT) கருத்திட்டத்தின் அமுலாக்கலைத் தொடர்ந்து, தொழில்முயற்சி - தழுவிய தகவல் தொழில்நுட்பத் தீர்வு அறிமுகப்படுத்தப்பட்டது. 2010 ஆம் ஆண்டினுள், தொழில் முயற்சி தழுவிய தகவல் தொழில்நுட்பத் தீர்வுக் கருத்திட்டத்தை நிறுவுவதில் இது பிரதானமாக ஈடுபட்டிருந்தது. தே.நீ.வ.வ.ச.யின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு பலப்படுத்தப்பட்டதோடு, நாடளாவிய ரீதியில் தீர்வுத் திட்டத்தை அமுலாக்கும் பொருட்டு சிறந்த முறையில் தயார்படுத்தப்பட்டு, உள்ளக பணியாளர்கள்/வளங்களை பயன்படுத்தி தீர்வுத் திட்டம் பராமரிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டினுள் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ரூபா 10 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

தகவல் தொழில்நுட்பக் கருத்திட்டத்தின் கீழ், கோட்டே பிரதேசத்தில் மானி வாசிப்பவர்களுக்கு கையில் வைத்திருக்கக்கூடிய கருவிகள் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டன. அச்சிடுவதற்கான கையில் வைத்திருக்கக்கூடிய கருவிகள் கருவிக்கான கொள்வனவு வழங்கல் 2010 ஆம் ஆண்டினுள் தொடர்ந்து நடைபெற்றது. தகவல் தொழில்நுட்பத் தீர்வுத் திட்டத்தின் மென்பொருள் மொடியுல்களுடன் கருவிக்கான பிரயோகம் விருத்தி செய்யப்பட்டுள்ளது. 2010 இல் கோட்டேயில் அச்சிடல் பொறிகள் விநியோகிக்கப்பட்டன. தே.நீ.வ.வ.ச.யின் இணையத் தளத்தின் ஊடாக தே.நீ.வ.வ.ச.யின் நுகர்வோர்களது முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு வசதியேற்பாடு செய்யப்பட்டுள்ள நுகர்வோர் முறைப்பாட்டு முறைமை மேம்படுத்தப்பட்டது.

தே.நீ.வ.வ.ச.யின் நாடளாவிய ரீதியிலுள்ள அலுவலகங்களை இணைக்கின்றதான தத்ரூபமான தனியார் வலையமைப்பு (VPN) 2010 ஆம் ஆண்டினுள் விஸ்தரிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா உட்பட ஒருசில அலுவலகங்கள் தவிர்ந்த நாடளாவிய ரீதியிலுள்ள அநேகமான அலுவலகங்களை தத்ரூபமான தனியார் வலையமைப்பு உள்ளடக்குகின்றது. தே.நீ.வ.வ.ச.யின் மின்அஞ்சல் முறைமை 2010 ஆம் ஆண்டிலும் செயற்பட்டுக் கொண்டிருந்தது. தற்போது தே.நீ.வ.வ.ச.யின் பணியாளர்களுக்கு 300 மின் அஞ்சல் கணக்குகள் உள்ளன.

தற்போது ADSL வசதியின் ஊடாக இணையத்தின் மூலம் பிராந்திய ஆய்வு கூடங்களிலிருந்து தெலவலவில் உள்ள மத்திய ஆய்வு கூடத்தில் நீர் தரத் தரவுகளைப் பதிவு செய்யக் கூடியதாகவுள்ளது.

### எதிர்காலத் திட்டங்கள்

தன்னியக்க நீர் மானி வாசிப்பு, நீர் கட்டணப் பட்டியல்களுக்கான முன்கூட்டிச் செலுத்தப்படும் அட்டை முறைமை, இலத்திரனியல் கருவிகள் மூலமான நீர் மட்டக் கண்காணிப்பு, இலத்திரனியல் கருவிகள் மூலமான இரசாயன செறிவை அளவிடுதல் மறறும் பட்டைக் குறிமுறை/குறிப்பு அடையாளம் காணல் முறையைப் பயன்படுத்தி ஆதன முகாமைத்துவம் ஆகியவற்றை அமுல்படுத்துவதற்கான ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன.


உங்களின்
வரண்ட உலகம்
கவனக் குறைவான மனித செயற்பாடுகள் எமது சூழலின் தரத்தைக் குறைக்கும். எனவே எமது சுற்றுச் சூழலை நாம் பாதுகாப்போம்.



## தெரிவு என்ன?

### பசுமையான உலகம்

எம் எதிர்காலச் சந்ததியின் தரமான வாழ்க்கைக்கும் சுத்தமான குடிநீர் வசதிக்கும் ஆதாரமாக இருக்கும்.

நீர் விலைமதிப்பற்றது கவனமாகப் பாவிப்போம்.

புகைப்படம்: சுமுது ஹெட்டியராச்சி

# நடைமுறையிலுள்ள கருத்திட்டங்கள்

**நிறைவேற்றப்பட்ட பாரிய நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரமைப்புத்திட்டங்கள்**

**2010 ஆம் ஆண்டினுள் வெளிநாட்டு நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு/விரிவாக்கப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களின் அமைவிட வரைபடம்**



| | திட்டங்கள் | நிதியுதவியளிக்கும் நிறுவனம்/நாடு |
|---|---|---|
| A | களுகங்கை நீ.வ.தி. - கட்டம் I, படிநிலை II | JICA - ஜப்பான் |
| B | கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புத் திட்டம் | JICA - ஜப்பான் |
| C | கொழும்பு வடக்கு நகர நீ.வ.தி. - கட்டம் II | JICA - ஜப்பான் |
| D | கண்டி பெரும்பாக நீ.வ.தி. - படிநிலை I - கட்டம் II | JICA - ஜப்பான் |
| E | கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி | JICA - ஜப்பான் |
| F | வவுனியா மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் காணப்படும் இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குதல் | JICA - ஜப்பான் |
| G | கொழும்பு நகரில் வருவாயற்ற நீரைக் குறைப்பதற்கான திட்டம் | JICA - ஜப்பான் |
| H | கண்டி தெற்கு நகர நீ.வ.தி. | DANIDA-டென்மார்க் |
| I | நுவரெலியா மாவட்ட கூட்டு நகரங்கள் நீ.வ.தி. | DANIDA-டென்மார்க் |
| J | களனி கங்கை தெற்குக் கரை நீ.வ.தி. | DANIDA-டென்மார்க் |
| K | ஆ.அ.வ. 4வது நீ.வ. & துப்புரவேற்பாட்டுக் கருத்திட்டம் | ADB 4th |
| L | சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீளமைப்புக் கருத்திட்டம் | ADB |
| M | உலர் வலயத்திற்கான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் திட்டம் | ADB 5th |
| N | ஹம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை மற்றும் வெலிகமை நீ.வ.திட்ட அமுலாக்கம் | ஆஸ்திரியா |
| O | கிரிந்தி ஓயா நீ.வ.தி. | ஆஸ்திரியா |
| P | சுனாமி புனரமைப்புத் திட்டம் (காலி மாவட்டம்) | ஜேர்மனி |
| Q | அம்பாறை, நாவலப்பிட்டி, கொக்கலை நீ.வ.தி.விரிவாக்கம் | கொரியா |
| R | நீர்கொழும்பு நீ.வ. மற்றும் மேம்பாட்டுத் திட்டம் | நெதர்லாந்து |
| S | சுனாமி புனரமைப்புத் திட்டம் | UNICEF |
| T | சுனாமி புனரமைப்புத் திட்டம் | IFRC |
| U | திருகோணமலை பெரும்பாக ஒருங்கிணைந்த நீ.வ.தி. | பிரான்ஸ் |
| V | மொரட்டுவை, பாணந்துறை மற்றும் நீர்கொழும்பு நீர் சுத்திகரிப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக அபதலை மற்றும் நீர்கொழும்பு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல் | ஸ்பெயின் |
| 1 | கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவத் திட்டம் | ADB |
| 2 | கண்டி மாநகர சபைப் பிரதேசத்துக்கான கழிவுநீரகற்றல் திட்டம் | ஜப்பான் |
| 3 | இரத்மலானை/மொரட்டுவை மற்றும் ஜா-எல/ஏக்கல கழிவுநீர் அகற்றல் | SIDA சுவீடன் |
| 4 | கொழும்பு தெற்கு பிரதேச கழிவுநீரமைப்பு புனரமைப்புத் திட்டம் | ஆஸ்திரியா |

● நீர் வழங்கல் கருத்திட்டம்  ● கழிவு நீரமைப்புத்திட்டம்

**வெளிநாட்டு நிதியளிப்பிலான நீர் வழங்கல் திட்டங்கள்**
**JICA உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்**

**1. களுகங்கை நீர் வழங்கல் திட்டம் படிநிலை கட்டம் I படிநிலை II**

களுகங்கை நீர் வழங்கல் திட்டம் படிநிலை II கட்டம் I 2008 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது. படிநிலை II கட்டம் I இற்கான விபரமான வடிவமைத்தல் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு, 2009 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது.

கொழும்புப் பெரும்பாகப் பிரதேசத்தின் தென் பகுதியில் அதிகரித்துவரும் குடி நீருக்கான கேள்வியை நிறைவு செய்தல் இக் கருத்திட்டத்தின் நோக்கமாகும் என்பதோடு, கெஸ்பாவ, பிலியந்தல ஐம்புரலிய, கும்புக்கே மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் 250,000 மக்கள் இதன் மூலம் நலன் பெறுவார்கள்.

கருத்திட்டத்தின் உள்ளீடுகள் மற்றும் பரப்பெல்லை வருமாறு:

- கந்தானை மற்றும் ஹொரணையில் நாளொன்றுக்கு 60,000 கன மீற்றர்கள் கொள்ளளவை உள்வாங்கக் கூடிய சுத்திகரிப்பு பொறித் தொகுதி
- 1,000/800 மி.மீ. விட்டத்தையும் 15 கி.மீ. நீளத்தையும் கொண்ட நீரைப் பாய்ச்சும் முலாம் பூசப்பட்ட இரும்பு (DI) பிரதான குழாய் மற்றும் 450/400 மி.மீ. விட்டத்தையும் 7 கி.மீ. நீளத்தையும் கொண்ட இரண்டாம் நிலை பிரதான குழாய்
- கொழும்பில் புதுக்கடை மற்றும் ஆட்டுப்பட்டித்தெரு, கொட்டாஞ்சேனையின் ஒரு பகுதி மற்றும் மருதானை ஆகிய பிரதேசங்களில் விநியோகக் குழாய்கள் புனரமைக்கப்பட்டதன் மூலம் கொழும்பு நகரத்தில் வருவாயற்ற நீரைக் குறைத்தல். மொத்த நீளம் 57 கி.மீற்றர்.
- கெஸ்பாவ, ஐம்புரலிய மற்றும் கும்புக்கே ஆகிய இடங்களில் நீர்த் தாங்கிக் கோபுரங்கள் நிர்மாணிக்கப்படுதல் (கேள்விப்பத்திரம் கோரல் கையளிக்கப்பட்டுள்ளது)

DI குழாய்கள், பொருத்துகள் வழங்குவதற்கான ஒப்பந்தம் முன்னேற்றம் கண்டு வருவதோடு PVC குழாய்கள் மற்றும் பொருத்துகள் ஆகியவற்றை வழங்குதல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இரண்டு வழங்குதல்களும் விநியோக முறைமைக்கானதாகும். 2010 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 15% மற்றும் 7% ஆகும்.



*கெஸ்பாவ நீர் கோபுரத்தின் நிர்மாணிப்பு*

**2. கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புத் திட்டம்**

இது கொழும்புப் பிரதேசத்தின் பாதுகாப்பான குடிநீர் வழங்கலின் சேவை மட்டத்தை மேம்படுத்துவதற்கான ஒரு புனரமைப்புத் திட்டமாகும்.

ஆயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளை எய்தும் நோக்கத்துடன் பல பாரிய கருத்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதோடு இக் கருத்திட்டமும் அவ்வாறானதொரு பாரிய கருத்திட்டமாகும். இக் கருத்திட்டம் கொழும்பு பெரும்பாகப் பிரதேசத்தின் வருவாயற்ற நீரைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் தொடர்பிலான தே.நீ.வ.வ.ச.யின் நீண்டகால உபாய வழிமுறையை நடைமுறைப்படுத்துகின்ற ஒரு கருத்திட்டமாகும். கருத்திட்ட காலம் 2007 முதல் 2012 வரையிலாகும். JICA நிதியளிப்பை உள்ளடக்கியதாக மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபா 5,380 மில்லியனாகும். கொழும்பு மாநகர சபைப் பிரதேசம் மற்றும் கொட்டிகாவத்தை - முல்லேரியா பிரதேசத்தின் நீர் வழங்கல் முறைமையை புனரமைத்து மேம்படுத்துதல் கருத்திட்டத்தின் நோக்கமாகும். திட்டம் நான்கு பொதிகளைக் கொண்டுள்ளது.

i. மாளிகாகந்தயில் புதிய அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல்
ii. கொட்டிகாவத்தை - முல்லேரியா பகுதிக்கு விநியோக வலையமைப்பொன்றை வழங்குதலும் இடுதலும்
iii. பாரிய சிவில் மற்றும் மின்னியல் செயன்முறைகள், கொட்டிகாவத்தை - முல்லேரியா பகுதிக்கான பிரதான அனுப்பல் குழாய், மாளிகாகந்தை நீர் தேக்கத்தை நிர்மாணித்தல், எலிஹவுஸ் புதிய நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தல் மற்றும் கொத்தட்டுவ கோபுரம்.
iv. குறைந்த வருமானம் பெறும் குடியேற்றங்களுக்கான நீர் வழங்களை மேம்படுத்தும் பொருட்டு கொழும்பு நகரத்திலுள்ள 8-10 குடியிருப்புக் காணிகளுக்கு 1000 நீர் இணைப்புகளை வழங்குதல். சில பணிகளுக்கான இணக்கத்தை JICA வழங்கியுள்ளது.

திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 28% ஆகும்.

**3. கொழும்பு வடக்கு நகரத்தின் நீர் வழங்கல் திட்டம் கட்டம் II**

கொழும்புப் பெரும்பாக பிரதேசத்தின் வட பகுதிக்கு நீர் வழங்கல் சேவையை நீடிக்கும் பொருட்டு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. உத்தேச திட்டம் முழுமையாக அமுலாக்கப்படுவதன் ஊடாக 2025 ஆம் ஆண்டாகின்றபோது ஜா-எல, கந்தான, ராகம, வெலிசர, ஏக்கல, மஹர, கனேமுல்ல மற்றும் பியகம பகுதிகளுக்கு நீர் விநியோகிப்பதன் மூலம் 500,000 மக்களுக்கு சேவை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டுள்ளது. 2006 நவெம்பரில் இக் கருத்திட்டத்தின் கட்டம் I பூர்த்தி செய்யப்பட்டது. கருத்திட்டத்தின் கட்டம் II இற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 6,487 மில்லியன் ஆகும். இதில் ரூபா 4,869 மில்லியன் JICAவிலிருந்தும் எஞ்சியவை இலங்கை அரசாங்கத்திலிருந்துமாகும். கட்டுப்பாட்டின் உச்ச கட்டத்தில் மறுதரப்பினரின் நிதி வழங்கலானது தீர்க்கமான காரணியாயிருந்தது.. பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 62% மற்றும் 48% ஆகும்.

**4. கண்டி பெரும்பாக நீர் வழங்கல் திட்டம் படிநிலை 1- கட்டம் II**

கண்டி மாநகர சபைப் பிரதேசம், அம்பிட்டிய, ரஜபிகில்ல, குளுகம்மன, நுகவெல, ஹீரஸ்ஸகல, மீகனுவ, முல்லெபிஹில்ல, எல்ஹேன, கொஹாகொட, கொண்டதெனிய மற்றும் தெலம்புகஹவத்த பிரதேசங்களை உள்ளடக்கிய கண்டி பெரும்பாகத்தின் 231,000 மக்களுக்கான சேவை மட்டத்தினை மேம்படுத்தலும் 30,000 புதிய இணைப்புகளை வழங்குதலும் இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். II கட்டத்துக்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 4,164 மில்லியனாகும். கருத்திட்டத்தை 2012 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. ஐந்து ஒப்பந்தங்கள் நடைமுறையில் உள்ள அதேவேளை இரண்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நிதி நெருக்கடி காரணமாக ஐந்து ஒப்பந்தங்களும் நீக்கப்பட்டன. பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 42% மற்றும் 84% ஆகும்.

**5. கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தித் திட்டம்**

அம்பாறை பிரதேசத்தின் ஏறத்தாழ 110,000 மக்களுக்கு இத் திட்டத்தினூடாக சேவையளிக்கப்படுகின்றது. மகாவலி கங்கை, கொண்டுவட்டுவான் மற்றும் நம்புக்கன ஓயா நீர்த் தேக்கம் நீர் வளங்களாக உள்ளன. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 7,703 மில்லியனாகும். பொத்துவிலுக்கான கொண்டுவட்டுவானிலிருந்து

கல்முனை வரையிலான விநியோக முறைமைக்கான பிரதான அனுப்பல் குழாய், உஹன, தமன மற்றும் ஹிங்குரானவிலுள்ள சுனாமி வீடமைப்புத் திட்டங்களுக்கான நீர் வழங்கல் திட்டங்கள் ஆகியன முன்னுரிமை அடிப்படையில் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள உப திட்டங்களாகும்.

மண் பரிசோதனையும் புவி இயல்பு ஆய்வுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு மேற்படி பணிகளுக்கான நிலுவைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. கொள்வனவு வழங்கல் நடைமுறைகள் நடைபெற்று வருகின்றன. பௌதீக முன்னேற்றம் ஏறத்தாழ 20% ஆக உள்ளது.

**6. வவுனியாவிலுள்ள இடம்பெயர்ந்தோர்களுக்கான நலன்புரி நிலையங்களுக்கு பாதுகாப்பான நீர் வழங்குதல் மற்றும் தாங்கிகளின் மூலம் கொண்டு செல்லப்படும் கழிவு நீர்ற்காக சுத்திகரிப்பு நிலையங்களை நிர்மாணிப்பதற்கு தேவையான உபகரணங்களை வழங்குதல்**

பொம்பேமடுவில் நச்சுத் தடை மலக் கழிவுநீர் நிலையத்தை நிர்மாணித்தல். உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர்களின் குடிநீர் வசதிகளுக்கான செயற்பாடுகளைப் பலப்படுத்துவதற்காக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் மீள் குடியமர்த்துகைக் கட்டங்களில் நிலக்கீழ் நீர் பரிசோதனை மற்றும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளை உபகரணங்களையும் கருவிகளையும் கொள்வனவு செய்தல் பிரதானமான செயற்பாடுகளாக உள்ளன. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 302.8 மில்லியனாகும்.

ஆண்டின் முதலாவது காலாண்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் நிர்மாணிப்பு பூர்த்தி செய்யப்பட்டு தற்போது திருப்திகரமான விதத்தில் செயற்பட்டு வருகின்றது. அநேகமான உபகரணங்கள் வவுனியாவுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டதோடு தற்போதுள்ள மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் உள்ள நீர் வழங்கல் திட்டங்களின் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இப் பிரதேசத்தின் நீர் வழங்கல் செயற்பாடுகளுக்கு இவ்வுபரகணங்கள் பெரிதும் உதவியாயமைந்துள்ளன. மீதியுள்ள உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு 2011 இல் நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. பௌதீக முன்னேற்றம் ஏறத்தாழ 70% ஆக இருந்ததோடு 2011இல் கருத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**7. கொழும்பு நகரத்தில் வருவாயற்ற நீரைக் குறைப்பதற்கான இயலளவு அபிவிருத்தி**

கொழும்பு நகரத்தின் வருவாயற்ற நீரைக் குறைப்பதற்கான இயலளவை அபிவிருத்தி செய்தல் இக் கருத்திட்டத்தின் பிரதானமான குறிக்கோளாகும். பொரளை மற்றும் கொட்டாஞ்சேனை ஆகிய இரண்டு முன்னோடி வலயங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, இரண்டு வலயங்களிலும் வருவாயற்ற நீரைக் குறைப்பதற்காக நிறுவத் தேவையான கருவிகள் கிடைத்து வருகின்றன. தெரிவு செய்யப்பட்ட இரண்டு வலயங்களிலும் குழாய்களைப் பதிலீடு செய்தல், வால்வுகள் மற்றும் மானிகளைத் திருத்துதல் அல்லது பதிலீடு செய்தல், வால்வுகள் மற்றும் சட்ட விரோத இணைப்புகளை அகற்றுதல் போன்ற வருவாயற்ற நீரைக் குறைப்பதற்கான முறைமை மேம்பாடுகள் மேற்கொள்ளப்படும். பிரதேசத்திலுள்ள 267,000 மக்களுக்கு இக் கருத்திட்டம் நன்மையளிக்கும். மதிப்பீட்டுச் செலவு ரூபா 200 மில்லியனாகும்.

JICA மதியுரையாளர்கள் தே.நீ.வ.வ.ச.யின் வருவாயற்ற நீர் அலகுடன் சேர்ந்து கொழும்பு நகரத்தின் விநியோக முறைமையை மீளாய்வு செய்து வருகின்றனர். ஒட்டுமொத்தமான முன்னேற்றம் 25% ஆகும் என்பதோடு 2011 இல் கருத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## DANIDA உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்

**1. கண்டி தெற்கு நகர நீர் வழங்கல் திட்டம்**

தற்போதுள்ள திட்டத்தை ஒருங்கிணைத்தல் மற்றும் விஸ்தரிப்பதன் மூலம் கண்டி தெற்குப் பிரதேசத்திற்கு பாதுகாப்பான குடி நீரை வழங்குதல் இக் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

கருத்திட்ட காலம் 2006 மே மாதம் முதல் 2010 வரையிலாகும். நீர் வளங்கள் மகாவலி கங்கையாகும். எல்பிட்டியவிலுள்ள மகாவலி கங்கைக் கரையின் உள்வாங்கும் கிணறுகள் கிருமிகள் அகற்றப்படுவதை மட்டும் கொண்டுள்ள அதேவேளை பாரதெக சிற்றாறு மற்றும் உலபனே ஓயா ஆகியவற்றிலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்படாத நீர் முழுமையாக சுத்திகரிக்கப்படுகின்றது. சுத்திகரிப்பு பொறித் தொகுதியிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் சாக்கடைச் சுத்திகரிப்பு முறைமைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் பின்னர் இயற்கை நீரோட்டத்தில் சேர்க்கப்படும் திருத்தப்பட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 9,626 மில்லியன் ஆகும்.

டென்மார்க்கைச் சேர்ந்த MTHojaard A/S இக் கருத்திட்டத்தின் பிரதான ஒப்பந்தக்காரராவர். வடிவமைப்பு தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற உள்நாட்டு உப ஒப்பந்தக்காரரின் உதவியுடன் மற்றும், சுத்திகரிப்பு பொறித் தொகுதியின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணிப்பு தொடர்பில் வெளிநாட்டு உப ஒப்பந்தக்காரரின் உதவியுடன் அனைத்துக் கருத்திட்டச் செயற்பாடுகளும் பிரதான ஒப்பந்தக்காரரால் கையாளப்படுகின்றது. கருத்திட்டச் செயற்பாடுகளுக்கு உள்நாட்டு மனிதவலு, பொருட்கள் மற்றும் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

தற்போதுள்ள முறைமையை விரிவாக்குதலுடன் சேர்த்து இக்கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற மொத்த நீர் உற்பத்தி நாளொன்றுக்கு 68,000 கன மீற்றர்களாகும் என்பதோடு, திட்டமிடப்பட்டுள்ள 2025 ஆம் ஆண்டாகின்றபோது பேராதனை, பிலிமத்தலாவ, கடுகன்னாவ, முருதலாவ, தந்துரே, கம்பறை, உலப்பனை மற்றும் வெலம்பொட ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 350,000 மக்களுக்கு சேவை வழங்குவதற்கு இலக்கிடப்பட்டுள்ளது.

நீரை அனுப்புவதற்கான உயர் அடர்த்தியுடன் கூடிய பொலி எத்திலீன் குழாய்கள் போன்ற புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல், SCADA முறையைப் பயன்படுத்தி முக்கிய செயன்முறைகளை முழுமையாக தன்னியக்கமாக்குதல் ஆகியவற்றை இக் கருத்திட்டத்தின் முக்கியமான அம்சங்கள் உள்ளடக்கியுள்ளன. விநியோக குழாய்கள் இடப்படுவதற்கு சமாந்தரமாக 19,000 சேவை இணைப்புகளை வழங்குதல் ஊடாக மேம்படுத்தப்பட்ட முறைமை முகாமைத்துவம் பயன்படுத்தப்படும் என்பதால் திட்டத்தை ஆரம்பித்து வைக்கின்ற போது பாவனையாளர்கள் உடனடியாக நன்மைபெறக் கூடியதாக இருக்கும். மேற்படி நுணுக்கங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நீர் விரயமாவதைக் குறைத்தல் இக்கருத்திட்டத்தின் பிரதானமான அம்சமாகும். திட்டம் அநேகமாகப் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதோடு, 2010 ஆம் ஆண்டின் இறுதியில் சராசரி பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 99% மற்றும் 88% வீதமாகும்.



*மீவத்துரவிலுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையம்*

**2. நுவரெலியாவிலுள்ள மாவட்ட கூட்டு நீர் வழங்கல் திட்டம்**

நுவரெலியா மாவட்டத்தைச் சார்ந்த ரிகில்லகஸ்கட, கினிகத்ஹேன, வலப்பனை- நில்தண்டாஹின்ன, மஸ்கெலியா, ராகல மற்றும் ஹற்றன் - திக்ஓயா ஆகிய ஆறு பெரிய நகரங்களிலுள்ள 96,000 (2025 இல்) மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கும் பொருட்டு இக்கருத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. முல்ஓயா, லொனாச் சிற்றாறு, குருந்து ஓயா, மஹநெலுவ ஓயா, ஹல்திரன் ஓயா மற்றும் சாஞ்சிமலை ஓயா ஆகியன நீர் வளங்களாகும். இவை முறையே நாளொன்றுக்கு 4,000, 3,000, 3,000, 2,500, 1,500 மற்றும் 4,000 கன மீற்றர்கள் சுத்திகரிப்புக் கொள்ளளவுகளைக் கொண்டுள்ளன. அனைத்து 6 நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதிகளிலும் முழுமையான சுத்திகரிப்பு மேற்கொள்ளப்படும். ஹற்றன் நீர் வழங்கல் திட்டம் ஒரு விரிவாக்கல் திட்டமாகும் என்பதோடு ஏனைய 5 நீர் வழங்கல் திட்டங்களும் புதியனவாகும். கருத்திட்ட காலம் 2006 முதல் 2010 வரையிலாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 4,462 மில்லியனாகும். 2010 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியிலான முன்னேற்றம் முறையே 100% மற்றும் 89% ஆகும்.

**3. களனி வலது கரை நீர் சுத்திகரிப்பு நிலையம்**

கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டங்களின் நீர் வழங்கல் நிலைமையிலான மேம்படுத்தும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட இது மிக முன்னுரிமை வழங்கப்படும் நீர் வழங்கல் கருத்திட்டமாகும். இது ச.கூ.ஜ.வ.யினால் நிதியளிக்கப்படும் கொழும்பு வடக்கு நகர விநியோக வலையமைப்பின் கீழ் ஊட்டமளிப்பதற்கு கருதியுள்ளது. அம்பதலே, பட்டிவிலவில் களனி கங்கையின் வலது கரையில் நாளொன்றுக்கு 40 மில்லியன் கலன் கொள்ளளவுடன் கூடிய சுத்திகரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்படுதலை இத்திட்டம் உள்ளடக்கியுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 8,100 மில்லியனாகும். 2010 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியிலான முன்னேற்றம் முறையே 71% மற்றும் 27% ஆகும். 2011 இன் ஆரம்பத்தில் உவர்ப்புத் தன்மைத் தடைக்கான ஆவணங்கள் வழங்கப்படும்.



*களனி கங்கையில் உவர்ப்புத் தன்மைத் தடைக்கான உத்தேச அமைவிடம்*

**ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்**

**1. இரண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராமிய சமூக மைய நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுத் திட்டம் (ஆ.அ.வ. நான்காவது திட்டம்)** (ADB 4th)

இத்திட்டம் 2025 ஆம் ஆண்டாகின்றபோது மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, மூதூர் மற்றும் பொலனறுவை ஆகிய நான்கு நகரங்கள் மற்றும் வட மத்திய மாகாணத்தின் கிராமப்புறங்களின் 969,000 மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் மற்றும், 171,500 மக்களுக்கு துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குதலையும், சமமான சமூகங்களுக்கு பாதுகாப்பான நீரை வழங்குவதில் தொடர்பில் நீர்த்துறை நிறுவனங்களின் இயலளவைக் கட்டியெழுப்புவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 19,272 மில்லியனாகும் என்பதோடு, இது ஆரம்பக் கடன் மற்றும் இரண்டு குறைநிரப்புக் கடன்களின் ஊடாக நிதியளிக்கப்படுகின்ற ஆ.அ.வ. ஆக்கக்கூறான ரூபா 13,241 மில்லியனை உள்ளடக்கியதாயுள்ளது.

2010 திசெம்பரில் கருத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் நகர ஒப்பந்தங்களின் கேள்விப் பத்திர நடைமுறையிலான தாமதத்தின் காரணமாக 2012 வரை நீடிக்கப்பட்டுள்ளது. மூதூரின் பிரதான வேலைகள், பிரதான அனுப்பல் குழாய்கள் மற்றும் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளை வழங்குவதற்கு ஆ.அ.வ. இணக்கம் அளித்துள்ளது.



*அம்பாந்தோட்டை நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவுகள் கையாளப்படும் பிரதேசம்*

2010 இன் இறுதியில் ஒட்டுமொத்தமான பௌதீக முன்னேற்றமும் நிதி ரீதியான முன்னேற்றமும் முறையே 84% மற்றும் 100% ஆகும்.

நகர நீர் ஆக்கக்கூறுகளின் முன்னேற்றம், 16 ஒப்பந்தங்களில் பத்து ஒப்பந்தங்கள் 2010 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. நகர நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு, கிராமிய நீர் வழங்கல் மற்றும் இயரளவைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றின் முன்னேற்றம் முறையே 82%, 95% மற்றும் 72% ஆகும்.

**2. சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்பும் கருத்திட்டம் (*ADB/ TAARF*)**

அடிப்படை சமூக உட்கட்டமைப்புகள், சமுதாய மற்றும் பொதுச் சேவைகள் மற்றும் வாழ்வாதாரத்தை மீளத் தாபிப்பதன் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள குறிப்பிடத்தக்க ஒருதொகை மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், நன்நிலைத்திருத்தலையும் துரிதமாக மேம்படுத்துதல் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டம் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புதிய நீர் வழங்கல் திட்டங்களை நிர்மாணித்தலையும் தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் புனரமைத்தல் மற்றும் விரிவாக்கலையும் உள்ளடக்கியுள்ளது. கருத்திட்ட காலம் 2005 ஏப்ரல் முதல் 2010 வரையிலாகும். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 83,000, மட்டக்களப்பு மாவட்டத்தில் 73,325 மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் (மூதூர்) 5,393 பேர் நலன்பெறுனர்களாக உள்ளனர்.

மேற்படி மூன்று மாவட்டங்களிலும் மேலும் பல உப கருத்திட்டங்கள் உள்ளன. மேற்படி திட்டங்களில் சில சிறிய திட்டங்களாக உள்ளதோடு அவற்றின் நீர் வளங்களாக கிணறுகளும் தோண்டப்பட்ட நீர் நிலைகளும் உள்ளன. ஏனைய திட்டங்கள் தற்போதுள்ள திட்டங்களின் நீடிப்புகளாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ஆ.அ.வ. யிலிருந்தான (கொடை) ரூபா 1,230 மில்லியனும் இலங்கை அரசாங்கத்திலிருந்தான ரூபா 220 மல்லியனும் ஆகும். 23 உப கருத்திட்டங்களில் அம்பாந்தோட்டையில் 11, மட்டக்களப்பில் 3, மூதூரில் 2 பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, ஏனையவை 2010இன்

இறுதியாகின்றபோது ஒட்டுமொத்தமாக 80% பௌதீக முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. களுவாஞ்சிக்குடி ஒப்பந்தத்தை வழங்குதல் காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது. கருத்திட்ட காலம் 2011 மார்ச் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**3. உலர் வலய நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் திட்டம் (ஆ.அ.வ. 5வது திட்டம்)**

இலங்கையின் வடமேல் மற்றும் வட மாகாணங்களின் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடுகளின் மேம்பாட்டுக்கான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தே.நீ.வ.வ.ச. ஈடுபட்டு வருகின்றது. மேற்படி முன்னெடுப்புகளின் கீழ் புத்தளம், சிலாபம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய நகரங்களுக்கு மேம்படுத்தப்பட்ட நீர் வழங்கல் வசதிகளும் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு வசதிகளும் வழங்கப்படும். கருத்திட்டத்தின் மூலம் ஆரம்பத்தில் மேற்படி நகரங்களைச் சேர்ந்த 206,000 மக்களுக்கு நீர் வழங்கப்படும். கருத்திட்டத்திற்கான மொத்த செலவினம் ரூபா 13,030 மில்லியனாகும் என்பதோடு ஆ.அ.வ. கருத்தித்திட்டச் செலவில் 75% வீதத்தினை வழங்குவதோடு நெதர்லாந்து ரூபா 230 மில்லியன் கொடையை வழங்கும். கருத்திட்டக் காலம் ஐந்து வருடங்கள் ஆகுமென்பதோடு 2010 இன் இறுதியில் பௌதீக முன்னேற்றம் 11% ஆகும்.

**ஆஸ்திரிய உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்**

**1. அம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை, வெலிகம, கதிர்காமம் நீர் வழங்கல் கருத்திட்டங்கள் அமுலாக்குதலும் பதுளை – பண்டாரவளை ஒருங்கிணைந்த சாத்தியக்கூறு கற்கைகளும் *(UNIHA)***

இது 2004 நவெம்பரில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு விரிவாக்கல் கருத்திட்டமாகும். இக்கருத்திட்டத்தின் பிரதானமான குறிக்கோள், 28,000 புதிய இணைப்புகளை வழங்குதலும், தற்போது நீர் வழங்கப்படும் அம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை, வெலிகம மற்றும் கதிர்காமம் பிரதேசங்களின் 150,000 மக்களுக்கான சேவை மட்டத்தினை மேம்படுத்துதலும் ஆகும். வளவை கங்கை (அம்பலாந்தோட்டை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய இரண்டிற்கும்), பொல்லதுமோதரை மற்றும் மாணிக்க கங்கை ஆகியன நீர் வளங்களாக உள்ளன. வெலிகம மற்றும் கதிர்காமத்திற்கு நாளொன்றுக்கு 5,000 கன மீற்றர் கொள்ளளவையும், அம்பலாந்தோட்டைக்கு நாளொன்றுக்கு 7,500



*வெலிகம நீர் சுத்திகரிப்புநிலையத்தின் கழிவுநீர்த் தொட்டி*

கன மீற்றர் கொள்ளவையும் கொண்ட சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல் பாரிய செயற்பாடுகளாயுள்ளன.

ஆஸ்திரிய அரசாங்கத்தின் நிதியளிப்பின் கீழான ஆரம்பக் கருத்திட்டத்திற்கான நீடிப்பாக கதிர்காமத்திலிருந்து செல்ல கதிர்காமம் வரையிலான பிரதான நீர்க் குழாயை வழங்குதலும் இடுதலும் அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் நிதியளிப்பின் கீழ் செல்ல கதிர்காமத்திற்கான தற்போதைய முறையை மேம்படுத்தலும் அடையாளம் காணப்பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்டுள்ள கருத்திட்டத்தின் மேலதிக வேலைகள் 2011 திசெம்பரில் பூர்த்தி செய்யப்படவுள்ளன. கருத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 2,126 மில்லியனாகும். கதிர்காமத்திற்கான அடையாளம் காணப்பட்டுள்ள மேலதிக வேலை வடிவமைப்புக் கட்டத்தில் உள்ளது. பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றமும் பதுளை - பண்டாரவளை ஒருங்கிணைந்த சாத்தியக்கூறுக் கற்கைகளும் நீடிக்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் உள்ளன.

**1. கிரிந்தி ஓயா நீர் வழங்கல் திட்டம்**

இது லுனுகம்வெஹர, பன்னகமுவ, வீரவில, பெரலிஹெல, மத்தல மற்றும் தெவ்ரம்வெஹர நகரங்களின் 50,000 மக்களை இலக்காகக் கொண்டதொரு புனரமைப்பு மற்றும் விரிவாக்கல் கருத்திட்டமாகும். லுனகம்வெஹர நீர்ப்பாசனக் குளம் இதன் நீர் வளமாக உள்ளதோடு, நாளொன்றுக்கு 6,500 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய முழுமையான சுத்திகரிப்பு வசதியைக் கொண்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினமான யூரோ 10 மில்லியன் மற்றும் ரூபா 401 மில்லியன் முறையே ஆஸ்திரியாவினாலும் இலங்கை அரசாங்கத்தினாலும் நிதியிடப்படுகின்றது. கிரிந்தி ஓயா நீர் வழங்கல் திட்டமானது 1989 இல் கிரிந்தி ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்டவர்களுக்காக ஆரம்பத்தில் நிர்மாணிக்கப்பட்டது. தற்போதைய கொள்ளளவான நாளொன்றுக்கு 5,900 கன மீற்றரானது தற்போதைய கேள்வியை நிறைவு செய்வதற்குப் போதுமானதல்ல. இத் திட்டத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு தற்போதுள்ள திட்டத்தை புனரமைப்பதற்கும் விரிவாக்குவதற்கும் தேவையாயுள்ளது. இக் கருத்திட்டத்தின் ஒப்பந்தக்காரர் M-U-T GmbH, ஆஸ்திரியா ஆகும். 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்து இறுதியில் நீர் சுத்திகரிப்பு நிலையம் இயங்கச் செய்யப்பட்டது. பௌதீக முன்னேற்றம் 99% ஆகும்.



*கிரிந்தி ஓயா நீர் வழங்கல் திட்டத்தின் நிலக் கழிவுநீர்த் தொட்டியை நிர்மாணித்தல்*

**மீள்கட்டமைப்புக் கடன் (KfW) உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்**

**1. சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் நீர் வழங்கல் புனரமைப்பு மற்றும் விரிவாக்கல் திட்டம் (காலி மாவட்டம்)**

இது ஜுன் 2006 முதல் மார்ச் 2010 வரையிலான (கட்டம் I மற்றும் II உள்ளடங்கலாக) காலத்தினுள் அம்பலாங்கொடையின் நீர் சுத்திகரிப்பு வசதிகளை விரிவாக்குகின்ற மற்றும் நீர் வழங்கப்படும் பிரதேசங்களை விஸ்தரிக்கின்ற ஒரு கருத்திட்டமாகும். இதன் மூலம் பலப்பிட்டிய தெற்கு, அம்பலாங்கொடை, ஹிக்கடுவை மற்றும் ரத்கம பிரதேச செயலாளர் பிரிவுகள் மற்றும் அம்பலாங்கொடை நகர சபைப் பிரதேசத்தின் 194,000 மக்களுக்கு சேவையாற்றப்படவுள்ளது. பத்தேகம, கிரிபத்தவிலவில் உள்ள கிங்கங்கை நீர் வளமாக உள்ளதோடு, நீர் சுத்திகரிப்புக் கொள்ளவு மரபு ரீதியிலான நீர் சுத்திகரிப்பு முறையில் நாளொன்றுக்கு 36,000 கன மீற்றர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி முறைமையானது காற்றூட்டல், இறுகச் செய்தல்/ஒன்றாகச் சேர்த்தல், குழாய் பொருத்தப்பட்ட நீள்சதுர வடிகட்டல் பாத்திரம் மற்றும் துரித மணல் வடிகட்டி ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

தற்போது கழிவுகள் மற்றும் வடிகட்டலிலிருந்து நீக்கப்படும் நீர் கைவிடப்பட்டுள்ள வயலொன்றுக்கு விடுவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் விரிவாக்கலின் பின்னர் வடிகட்டலிலிருந்து நீக்கப்படும் நீர் மீளப்பெறப்பட்டு அதிலிருந்தான கழிவுகள் உலர்த்தும் மேடைக்கு அனுப்பப்படும். மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 4,202 மில்லியனாகும் என்பதோடு, இது KfW இன் கொடை ரூபா 3,393 மில்லியனையும் இலங்கை அரசாங்கத்தின் ரூபா 809 மில்லியனையும் உள்ளடக்கியுள்ளது.

சுனாமியைத் தொடர்ந்து காலி மாவட்டத்தின் நீர் வழங்கல் புனரமைப்புக்காக ஜேர்மன் அரசாங்கம் உடனடி மற்றும் நடுத்தரகால நடவடிக்கையாக யூரோ 22 மில்லியன் கொடையை மீள்கட்டமைப்புக் கடனாக (KfW) இரண்டு கட்டங்களைக் கொண்டதாக இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கியதன் பின்னர் இத்திட்டம் உருப்பெற்றது.

i. கட்டம் I - உடனடி நடவடிக்கைகள் மற்றும் மீள்கட்டமைப்பு (2005 சனவரியில் யூரோ 7 மில்லியன் இணங்கப்பட்டது)
ii. கட்டம் II - நடுத்தரகால நடவடிக்கையாக பத்தேகமவிலுள்ள நீர் சுத்திகரிப்பு உட்கட்டமைப்பு வசதியின் புனரமைப்பு மற்றும் நீடிப்பு. அத்துடன் நீர் அனுப்பல், சேமித்து வைத்தல் மற்றும் விநியோக வலையமைப்புகள் (2005 ஜூலை மாதத்தில் யூரோ 15 மில்லியன் இணங்கப்பட்டது)



*பத்தேகம நீர் சுத்திகரிப்பு நிலையம்*

கருத்திட்டப் பிரதேசம் தென் மேற்குக் கரையோரத்தில் கொஸ்கொடை தொடக்கம் ரத்கமை வரை நீண்டு செல்கின்றது. பத்தேகமையின் நீர் சுத்திகரிப்பு மேம்பாட்டிலிருந்து 2025 இல் உருவாகும் கேள்வியை நிறைவு செய்தல் வரையான அனைத்து வேலைகளுக்கும் தற்போதுள்ள நிதி போதியதாயில்லை. ஆதலால் கருத்திட்டத்தில் முன்னுரிமையளிக்க கருதப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

- சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகள் மற்றும் ஆழமற்ற கிணறுகளுக்கு உவர்த்தன்மை ஊடுருவுகின்ற பிரதேசங்கள்
- மீள்குடியமர்த்தல் பிரதேசங்கள்
- எதிர்கால வளர்ச்சிக்கான இயலுமையைக் கொண்டுள்ள பிரதேசங்கள்.

2010 இன் இறுதியில் திட்டம் பூர்த்தி செய்யப்படும்.

### 2. அம்பாறை, நாவலப்பிட்டி மற்றும் கொக்கலை நீர் வழங்கல் திட்டங்களை மேம்படுத்துதல்

*அம்பாறை* - இக்கருத்திட்டத்தின் கீழ் அம்பாறை நகர சபைப் பிரதேசத்திலுள்ள 35,000 மக்களுக்கு குடிநீர் வசதியை வழங்கும் பொருட்டு அம்பாறையிலுள்ள தற்போதைய நீர் வழங்கல் திட்டம் விரிவாக்கப்பட்டது. மதிப்பீட்டுச் செலவு ரூபா 982 மில்லியனாகும். கொண்டவட்டுவான் குளம் நீர் வளமாக உள்ளதோடு நாளொன்றுக்கு 6,500 கன மீற்றர் சுத்திகரிப்புக் கொள்ளளவைக் கொண்டதாயுள்ளது. முழுமையான சுத்திகரிப்பு இதன் சுத்திகரிப்பு நடைமுறையாயுள்ளது. கசிவு கண்டுபிடிப்புப் பணிகள், துரித மணல் வடிகட்டலின் பிழைகளைத் திருத்தல், வால்வ் அறைகளை நிர்மாணித்தல் மற்றும் கெமுனுபுரவிலும் சத்தாதிஸ்ஸபுரவிலும் நீர் தாங்கிக் கோபுரங்களின் புனரமைப்பு ஆகியன இவ்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டன. சுத்திகரிப்பு பொறித் தொகுதியை செயல்படவைத்தலும் எஞ்சியுள்ள கசிவு கண்டுபிடிப்புப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன. வடிகட்டல்களை செயற்பட வைக்கின்றபோது எழுந்த தொழில்நுட்பப் பிரச்சினைகளை கவனிக்க வேண்டியிருந்தன.

*நாவலப்பிட்டிய* - இப் புதிய கருத்திட்டத்தின் மூலம் நாவலப்பிட்டிய நகர சபைப் பிரதேசத்தைச் சேர்ந்த 22,000 மக்களுக்கு சேவையாற்றப்படவுள்ளது. ஹங்கரன் ஓயா (மகாவலி கங்கையின் ஒரு கிளைஆறு) நீர் வளமாக உள்ளதோடு நாளொன்றுக்கு 4,500 கன மீற்றர் சுத்திகரிப்புக் கொள்ளளவைக் கொண்டதாயுள்ளது. மேல்நோக்கிப் பாய்ச்சப்படும் செப்பனிடப்படாத வடிகட்டல்கள், மெதுவான மணல் வடிகட்டல்கள் மற்றும் தொற்று நீக்குவதற்கான குளோரின் இடல் ஆகியவற்றை சுத்திகரிப்பு நடைமுறை உள்ளடக்கியுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 1,151 மில்லியனாகும். விநியோக முறைமைக்கு வேண்டப்பட்டிருந்த நீடிப்பு தொடர்பில் குழாய்களை இடுதல், எஞ்சியிருந்த வடிகட்டல் ஊடகங்களை வழங்குதல் மற்றும் பொருத்துதல், நில வடிவமைப்பு ஆகியன இவ்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டன. ஐந்து வடிகட்டல்களில் வடிகட்டல் ஊடகங்களைப் பொருத்துதல் மற்றும் சில நில வடிவமைப்புப் பணிகள் தவிர்ந்த நிர்மாணிப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. இத் திட்டம் 2007 திசெம்பரில் செயற்பட வைக்கப்பட்டது. ஆறுகளில் மணல் மற்றும் முருகைக் கல் அகழ்தல் தொடர்பிலான பல்வேறுபட்ட சுற்றாடல் ஒழுங்குவிதிகள் மற்றும் ஏற்றிச் செல்லல் தொடர்பிலான கடுமையான ஒழுங்குவிதிகளின் காரணமாக வடிகட்டல் ஊடகங்களின் வழங்கலில் தாமதம் ஏற்பட்டது.

*கொக்கலை* - கொக்கலை நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கமானது கொக்கலை ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தின் 17,000 ஊழியர்கள் உள்ளடங்கலாக ஹபராதுவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஏனையோரைச் சேர்த்து 37,000 பேர் வரை நலன் பெறுனர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்கின்றது. காலி பெரும்பாக நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியினூடாக கிங் கங்கை நீர் வளமாக உள்ளதோடு நீருக்கான கேள்வி நாளொன்றுக்கு 7,300 கன மீற்றர்களாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 531 மில்லியனாகும். இத் திட்டம் 2008 இல் பூர்த்தி செய்யப்பட்டதோடு இது ஒப்பந்த கடப்பாட்டுக் காலகட்டமான 2009 ஆம் ஆண்டினுள்ளாகும்.

திட்டம் 2010இன் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டது. உள்நாட்டு நிதி ஒதுக்கீட்டினை அதிகரிக்கச் செய்வதற்காக நீர் வழங்கல் வடிகாலமைப்புகள் அமைச்சு திறைசேரியுடன் தொடர்புகளை மேற்கொண்டது.

### நெதர்லாந்து உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டம் நீர்கொழும்பு நீர் வழங்கல் மற்றும் உச்சப்படுத்தல் திட்டம்

இது மூன்று வருட காலத்திற்கான புனரமைப்பு மற்றும் விரிவாக்கல் கருத்திட்டமாகும். முழுமையான சுத்திகரிப்புடன் கூடியதாக மகா ஓயாவும் களனி கங்கையும் நீர் வளமாக உள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் நெதர்லாந்திலிருந்தான ரூபா 7,288 மில்லியனாகும். வெளிநாட்டு ஆக்கக் கூறுகளில் 54% வீதம் கொடையாக உள்ளதோடு 46% கடனாக உள்ளது. நீர்கொழும்பு மாநகர சபைப் பிரதேசம் தற்போது 59% வீத குழாய் உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளதோடு, நீர் சுத்திகரிப்பு மற்றும் அனுப்பல் போதியதாயில்லாமையால் பெரும்பாலான பகுதிகளுக்கான நீர் வழங்கல் நாளாந்தம் மு.ப. 8.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கட்டுப்படுத்தப்படுகின்றது.

சேவை வழங்கப்படும் பகுதிகளின் 100% வீதமான சனத்தொகைக்கும் 24 மணி நேரமும் கிடைக்கக் கூடிய வகையில் நீர் மற்றும் சேவைகளை வழங்குதலே இக் கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். நீர்கொழும்பு மாநகர சபைப் பிரதேசத்திற்கு

மேலதிகமாக கொச்சிக்கடை மற்றும் தூவ-பிட்டிபனை பகுதிகளை இப் பிரதேசம் உள்ளடக்கியுள்ளது. 2011 இல் 198,000 மக்களும் 2025இல் 215,000 மக்களும் இதன் மூலம் நன்மை பெறுவார்கள். நாளொன்றுக்கு 12,500 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட புதிய நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதியொன்றை பம்புகுளியவில் நிர்மாணித்தல். உத்தேச களனி வலது கரை பொறித் தொகுதியிலிருந்து நாளொன்றுக்கு 21,000 கன மீற்றர் சுத்திகரிக்கப்பட்ட நீரை ஜா-எலவிலிருந்து நீர்கொழும்புக்கு அனுப்புகின்ற 600 மி.மீ. விட்டத்தையும் 14 கி.மீற்றர் நீளத்தையும் கொண்ட பிரதான அனுப்பல் குழாய்களை இடுதல். தற்போதுள்ள பிரதான பம்பிக் குழாய்களை (6 கி.மீ.) 350 மி.மீ. முலாம் பூசப்பட்ட இரும்புக் குழாய்களாக மேம்படுத்துதல். மின்னியல் தொழில்நுட்பக் கருவிகளை மேம்படுத்தல். 200 கிலோ மீற்றர்கள் நீளமான புதிய விநியோக முறைமை மற்றும் நவீன நீர் ஆதன முகாமைத்துவ முறைமையொன்றைத் தாபித்தல் ஆகியவற்றைக் கருத்திட்ட பரப்பெல்லை உள்ளடக்கியுள்ளது. 2010 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 66% மற்றும் 62% ஆகும்.

**செஞ்சிலுவை உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள்**

**சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நீர் வழங்கல் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் திட்டம்**

சுனாமியின் பின்னர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்கள் மற்றும் செம்பிறைச் சங்கங்களுடன் சேர்ந்து நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறையின் மேம்பாட்டுக்கு உதவிகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தது. தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அவை விநியோக பிரதேசத்தை விஸ்தரித்தல், சுத்திகரிப்பு பொறித் தொகுதிகளை மேம்படுத்தல், துருப்பிடித்த குழாய்களை பதிலீடு செய்தல், சுனாமியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் குடியேறியுள்ள புதிய பகுதிகளுக்கு நீர் வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. திட்டம் 2005ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு அடுத்த ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செஞ்சிலுவைச் சங்க உதவியின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவு அண்ணளவாக ரூபா 3,750 மில்லியனாகும். பௌதீக முன்னேற்றம் 75%ஆக உள்ளது.

*மாத்தறை மாவட்டத்தில் நீர் வழங்கல் மேம்பாடுகள்*

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் உதவியளிக்கப்பட்ட பின்வரும் கருத்திட்டங்கள் 2009ஆம் ஆண்டினுள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு தே.நீ.வ.வ.ச.க்கு கையளிக்கப்பட்டன.

- மாத்தறை சமூக நீர் வழங்கல் திட்டத்தின் சுனாமி வீடமைப்புத் திட்டங்களுக்கான குழாய் நீடிப்புகள் மற்றும் விநியோக முறைமையின் மேம்பாடு
- குடாவெல்ல நீர் வழங்கல் திட்டத்தின் மேம்பாடு திக்வெல்ல நீர் தேக்கத்திலிருந்து நடுகல் நீர் கோபுரம் வரை பிரதான நீர் பாய்ச்சும் குழாய்களை இடுதல்
- கம்புருகமுவ, சமுத்ரதெர பிரதேசத்தில் நீர் கோபுரத்தை நிர்மாணித்தல்
- மாத்தறை நீர் வழங்கல் திட்டத்தின் தன்னியமாக்கல்

மேற்படி கருத்திட்டத்திற்கான மொத்தச் செலவினம் ரூபா 170 மில்லியனாகும்.

வெலிகம நீர் வழங்கல் திட்டத்தின் மேம்பாட்டுக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ரூபா 300 மில்லியன் மொத்தச் செலவிலான உதவியை வழங்கியது. ஆண்டின் இறுதியில் நிர்மாணிப்புப் பணிகளில் 90% பூர்த்தி செய்யப்பட்டிருந்ததோடு எஞ்சியவை 2010 நடுப் பகுதியில் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

*காலி மாவட்டத்தின் நீர் வழங்கல் மேம்பாடுகள்*

காலி மாவட்டத்தின் உட்புறப் பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டுள்ள சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களின் நலனுக்காக எட்டு சிறிய அளவிலான கிராமிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு இயக்கம் மற்றும் பராமரிப்பின் பொருட்டு உரிய சமூக மைய அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டன. மேற்படி கருத்திட்டத்தின் செலவு ரூபா 90 மில்லியனாகும் என்பதோடுஇது ச.செ.சி.ச.வினால் வழங்கப்பட்டது. சமூக மைய அமைப்புகளுக்கான பயிற்சி வழங்கல் மற்றும் இணைப்பாக்க நடைமுறைகளுக்கு பிரதேச சேவை நிலையம் வசதியேற்பாடு செய்தது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் வக்வெல்ல நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பீக்க நீர்த்தேக்கம் வரையிலான புதிய பிரதான அனுப்பல் குழாய்களை இடுகின்ற புதிய கருத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. கருத்திட்டத்துக்கான மொத்தச் செலவு ரூபா 300 மில்லியனாகும்.

**பிரான்ஸ் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டம்**

**திருகோணமலை பெரும்பாக ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம்**



*அல்லை கந்தளாயில் புதிய உள்வாங்கு நிலையம் நிர்மாணிக்கப்படுதல்*

கந்தளாய் நீர் சுத்திகரிப்பு பொறித் தொகுதியின் உற்பத்திக் கொள்ளவை நாளொன்றுக்கு 12 மில்லியன் கலன்கள் வரை அதிகரிப்பதும் திருகோணமலை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதலும் அத்துடன் புல்மோட்டை மற்றும் ஈச்சலம்பத்தில் புதிய திட்டங்களை நிர்மாணித்தலும் இக் கருத்திட்டத்தின் செயற்பரப்பாகும். திருகோணமலை நகரம் மற்றும் சுற்றிலுமுள்ள பிரதேசங்கள், கந்தளாய், தம்பலகாமம், கிண்ணியா, குச்சவெளி மற்றும் ஈச்சிளம்பத்து பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய 330,000 மக்கள் இக்கருத்திட்டத்தின் மூலம் நன்மை பெறுவார்கள். மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 4,200 மில்லியனில் பிரான்ஸ் அபிவிருத்தி முகவராண்மை யூரோ 10 மில்லியனையும், பிரான்ஸ் நிதி அமைச்சு யூரோ 10 மில்லியனையும், இலங்கை அரசாங்கம் ரூபா 1,003 மில்லியனையும் நிதியிடுகின்றது. மரபு ரீதியான சுத்திகரிப்பு முறையுடன் கூடியதாக மகாவலி கங்கை நீர் வளமாக உள்ளது.

கருத்திட்ட ஆக்கக்கூறுகள் சுருக்கமாக பின்வருமாறு:

- புதிய உள்வாங்கும் நிலையமொன்றையும் பம்பி நிலையமொன்றையும் அல்லை கந்தளாய் பாலத்துக்கு அருகில் நிர்மாணித்தல்
- சுத்திகரிக்கப்படாத நீரினைக் கொண்டு செல்வதற்காக புதியதொரு பிரதான குழாய் வழியினை இடுதல்
- புதிய பிரதான அனுப்பல் குழாயை இடுதல்
- நீர் பகிர்ந்தளிப்பு வலையமைப்பினை மேம்படுத்துதல்
- கந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் புனரமைத்தல், விரிவாக்கல் மற்றும் நீர்த் தேக்கங்களின் பராமரிப்பு வேலைகள்
- மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு பெறுகைகள் (SCADA) முறைமையை அறிமுகப்படுத்தல்

- புல்மோட்டை மற்றும் ஈச்சிலபத்தில் புதிய நீர் வழங்கல் திட்டங்களை நிர்மாணித்தல்

2006ஆம் ஆண்டில் மதியுரை நிறுவனமொன்று நியமிக்கப்பட்டது. தற்போது உள்வாங்கு நிலையத்தை நிர்மாணித்தல், நீர் பாய்ச்சும் நிலையம், நீர்த் தேக்கங்கள் ஆகியன வழங்கப்பட்டுள்ளன. ஏனைய கொள்வனவு நடைமுறைகள் நடைபெற்று வருகின்றன. இக்கருத்திட்டத்தை 2011இல் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

### UNICEF உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டம்

**சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் நீர் வழங்கல் புனரமைப்பு மற்றும் விரிவாக்கல் திட்டம்**
சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பின்வரும் பாரிய செயற்பாடுகளுக்கு உதவி வழங்குவதற்கு UNICEF இணக்கத்தைத் தெரிவித்தது.

(அ) தங்காலை நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கம்
மேற்படி கருத்திட்டத்தின் கீழ் அப்போதிருந்த தங்காலை மற்றும் பெலியத்த நீர் வழங்கல் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு அதன் கொள்ளளவு நாளொன்றுக்கு 6,500 கன மீற்றர்களிலிருந்து நாளொன்றுக்கு 15,000 கன மீற்றர்கள் வரை மேம்படுத்தப்பட்டது. மேம்பாட்டுக்கான செலவினம் ரூபா 1,000 மில்லியனாகும் என்பதோடு, UNICEF 800 மில்லியன் ரூபாவை கொடையாக வழங்கியது. திட்டம் முழுமையான கொள்ளளவுடன் நடைமுறைக்கு வருகின்றபோது 52,000 மக்களுக்கு நீர் வழங்கப்படும். தங்காலை நீர் வழங்கல் திட்டம் பூர்தி செய்யப்பட்டு 2008 ஆகஸ்ட் மாதம் செயற்பட ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(ஆ) திருக்கோவிலுக்கான புதிய நீர் வழங்கல் திட்டம்
இத்திட்டம் 30,000 மக்களுக்கு நீர் வழங்கும் என்பதோடு, இப் பிரதேசத்தில் நீண்டகாலமாக நிலவிவந்த ஒரு தேவையை நிறைவு செய்கின்றது. இத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூபா 1,100 மில்லியனாவதுடன் ரூபா 900 மில்லியனை கொடையாக வழங்குவதற்கு UNICEF இணக்கம் தெரிவித்த அதேவேளை இலங்கை அரசாங்கம் எஞ்சிய தொகையை வழங்குகின்றது. 2009 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் பகுதியளவு செயற்படுத்தப்பட்டது. 2010 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது.

(இ) புத்தளம் நீர் வழங்கல் திட்டத்தின் விரிவாக்கம்
அப்போதிருந்த புத்தளம் நீர் வழங்கல் திட்டம் பிரதேசத்தில் வசிக்கும் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு மேம்படுத்தப்பட்டது. மேம்பாட்டிற்கான செலவினம் ரூபா 180 மில்லியனாகும். இக் கருத்திட்டத்தின் ஊடாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த 2000 மக்களுக்கு நீர் வழங்குவதற்கு UNICEF கருதியது. வரிவாக்கம் 2009 ஆகஸ்டில் பூர்த்தி செய்யப்பட்டது.

### ஸ்பானிய உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டம்

**அம்பத்தலே மற்றும் நீர்கொழும்பில் நீர் சுத்திகரிப்புப் நிலையத்தை நிர்மாணிப்பதற்கான திட்டம்**
சுனாமியின் காரணமாக அழிவுற்ற பொதுப் பயன்பாடுகளின் மீள்கட்டமைப்பு மற்றும் புரனமைப்புக்கு நிதியிவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு சலுகைக் கடன் வசதிகளை வழங்குவதற்கு ஸ்பானிய அரசாங்கம் முன்வந்தது. மொரட்டுவை, பாணந்துளை மற்றும் நீர்கொழும்பில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான நீர் வழங்கல் வசதிகளை நிர்மாணிப்பதற்காக இந் நிதி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மொரட்டுவை மற்றும் பாணந்துறைக்கான குடிநீரை வழங்கும் பொருட்டு நாளொன்றுக்கு 50,000 கன மீற்றர்கொள்ளளவுடன் கூடிய முழுமையான சுத்திகரிப்பு பொறித் தொகுதியொன்றை அம்பத்தலேயில் நிர்மாணித்தல் மற்றும் நீர்கொழும்பில் நாளொன்றுக்கு 3,000 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய உவர்ப்புத்தன்மையை அகற்றும் (சவ்வூடு பரவுதலை திருப்புதல் - RO) பொறித் தொகுதியொன்றை நிர்மாணித்தல் ஸ்பானிய கம்பனியொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2008 ஜுன் மாதம் தொடக்கம் திட்டம் முன்னேற்றம் கண்டு வருகின்றது.

பொறித்தொகுதிகள் மற்றும் கருவிகளில் 80% ஸ்பெயினில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு சுத்திகரிப்பு பொறித் தொகுதிகள் தலத்தில் முன்கூட்டியே ஒன்று சேர்க்கப்பட்டு பொருத்தப்படுவதை இத்திட்டம் உள்ளடக்கியுள்ளது. பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 99% மற்றும் 100% ஆகும்.



*நீர்கொழும்பு RO நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி*

### வெளிநாட்டு நிதியுதவியளிக்கப்பட்ட கழிவுநீர்த்திட்டங்கள்

### ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

**பாரிய கொழும்பு கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம்**

கொலன்னாவை, தெஹிவளை மற்றும் கல்கிசை கழிவுநீர் பம்பி நிலையத்தின் புனரமைப்பை இக் திட்டம் உள்ளடக்கியுள்ளது. இது கொலன்னாவை, தெஹிவளை மற்றும் கல்கிசை பிரதேசத்திலுள்ள 838,000 மக்களுக்கு சேவை வழங்குகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் 13.3 பில்லியனாகும். கருத்திட்ட காலம் 2010 தொடக்கம் 2014 வரையிலாகும். பௌதீக வேலைகள் 2010இல் ஆரம்பிக்கப்படும். இதன் மூலம் தற்போதுள்ள கழிவுநீர் இணைப்புகளின் நீடிப்பை, வரைபடமாக்கல் பிரிவுடன் சேர்ந்து வரைபடமாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### சுவீடன் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள்

**இரத்மலானை/மொரட்டுவை மற்றும் ஜாஎல/ஏக்கல பிரதேசங்களுக்கான கழிவுநீரகற்றல் முறைமை**

இச்செயற்திட்டம் நன்கொடையின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. கருத்திட்ட ஆக்கக்கூறுகள் வருமாறு:

- இரத்மலானை/மொரட்டுவை மற்றும் ஜாஎல/ஏக்கல பிரதேசங்களுக்கான கழிவுநீரகற்றல் முறைமையை நிர்மாணித்தல் (வேலை ஒப்பந்தம்) - ஐ.அ.டொலர் 91 மில்லியன் - SIDA நன்கொடையின் கீழ்
- மேற்பார்வை ஒப்பந்தம் - சுவீடன் குரோனா 28 மில்லியன் - SIDA நன்கொடையின் கீழ்
- வீட்டு இணைப்புகள் மற்றும் வலையமைப்புக்குப் புறம்பான துப்புரவேற்பாட்டுத் தீர்வுகளுக்கான கற்கை - மதிப்பீட்டுச் செலவு ஐ.அ.டொடலர் 2 மில்லியன் - உலக வங்கியின் நிதியளிப்பு
- சுற்றாடல் நேயம்மிக்க துப்புரவேற்பாட்டு முன்னோடிக் திட்டம் - மதிப்பீட்டுச் செலவு ஐ.அ. டொலர் 0.2 மில்லியன் - SIDA நன்கொடையின் கீழ்

வேலை ஒப்பந்தம் 2008 பெப்ருவரியில் ஆரம்பிக்கப்பட்டதோடு, தொழிற்படுத்தல் மற்றும் பராமரிப்புக் காலமான 18 மாதங்கள் உள்ளடங்கலாக 2013 சனவரியில் பூர்த்தி செய்யப்படும். வேலை ஒப்பந்தமானது கழிவுநீர் வலையமைப்பை இடுதல், பிரதான விசைக்குழாய், பம்பி நிலையம், இரண்டு பிரதேசங்களுக்குமான சுத்திகரிப்புப் நிலையம் ஆகியவற்றை உள்ளடக்கிய வடிவமைத்து நிர்மாணிக்கின்ற ஒப்பந்தமாகும். சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் இரத்மலானை/மொரட்டுவை பிரதேசத்தில் லுணாவை கடலேரிக்குப் பக்கத்தில் கடலுக்கும், ஜா-எல/ஏக்கல பிரதேசத்தில் தண்டுகம் ஓயாவுக்கும் விடுவிக்கப்படும்.



*லுணாவ ஏரிக்கு அருகாமையில் கடலுக்குள் கழிவு நீரை விடுவிக்கும் வடிகாலினை நிர்மாணித்தல்*

### சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பான் வங்கியின் (JICA) உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள்

**கண்டி நகர கழிவு நீரகற்றல் கருத்திட்டம்**

கண்டி நகரத்தில் வகைதொகையற்ற விதத்தில் நடைபெறுகின்ற கழிவு நீரகற்றலானது, கண்டி, வாவி, மெத எல அத்துடன் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களின் பிரதான குடிநீர் வளமாயுள்ள மகாவலி கங்கையையும் இறுதியில் மாசடையச் செய்கின்றது. இதற்கான ஒரு நிரந்தர தீர்வைக் காணும் பொருட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கண்டி நகரத்திற்கான கழிவு நீரகற்றல் முறைமையொன்றை அமுலாக்குவதற்கு முன்மொழிந்துள்ளது. உத்தேச திட்டமானது, கழிவு நீரை நகரத்தின் 732 ஹெக்டயர்களில் சேகரித்து அதன் பின்னர் 94 கிலோ மீற்றர் நீளமான குழாய் வலையமைப்பொன்றின் ஊடாக நாளொன்றுக்கு 14,000 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கு திருப்புவதற்குக் கருதியுள்ளது. இப் புதிய திட்டம் 2007 இல் ஆரம்பிக்கப்பட்டதோடு 2017 இல் பூர்த்தி செய்யப்படும். இக் கருத்திட்டத்தின் மூலம் கண்டியில் வசிப்பிடத்தைக் கொண்டுள்ள 55,000 மக்களும் புலம்பெயர்ந்த 150,000 மக்களும் பயனடைவார்கள்.

கழிவுகளை அப்புறப்படுத்தல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:

உயிரியல் ஒட்சிசன் கேள்வி (5 நாட்களில் $20^{0}$C) 20 mg/l க்கு குறைவாயிருத்தல், இரசாயன ஒட்சிசன் கேள்வி 250 mg/l, மொத்த கெஜல்தால் நைதரசன் 100 mg/lக்கு குறைவாயிருத்தல், மலத்திலுள்ள பற்றீரியாக்கள் (அநேகமாக ஒவ்வொரு 100 மில்லி லீற்றருக்கான எண்ணிக்கை) 40க்கு குறைவாயிருத்தல். ஒட்சிசனூட்டல் வடிகால் முறை சுத்திகரிப்பு நடைமுறை யாயுள்ளதோடு மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 21,982 மில்லியனாகும். 2010 இன் இறுதியில் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் ஏறத்தாழ 58% ஆகும்.

முக்கியமான அடைவுகளில் பின்வருபவை உள்ளடங்கும்.

- கண்டி மாநகர சபைப் பிரதேசததின் கட்டட வரைபடங்களை அங்கீகரிக்கின்ற வரைபடமிடல் குழு, நச்சுத்தடை மலத் தொட்டிகள் மற்றும் கழிவுநீர் உறிஞ்சும் குழிகளின் வடிவமைத்தலுக்கான இலங்கை தரக் கட்டளைகள் நடைமுறைக் கோவை பற்றி அறிவூட்டப்பட்டது. கட்டட விண்ணப்பங்களை அங்கீகரிக்கின்ற செயற்பாட்டின் போது மேற்படி தரக்கட்டளைகளைப் பின்பற்றும்படியான வழிகாட்டல்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.
- இலங்கை தரக் கட்டளைகள் நடைமுறைக் கோவையைப் பயன்படுத்தி நச்சுத்தடை மலத் தொட்டிகள் மற்றும் கழிவுநீர் உறிஞ்சும் குழிகளை வடிவமைத்தல் தொடர்பிலான கணனி மென்பொருளொன்று அபிவிருத்தி செய்யப்பட்டு கண்டி மாநகர சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்களுக்கும் வீடமைப்பு வரைபடங்களை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கின்ற கண்டி மாநகர சபையின் பதிவு செய்யப்பட்ட கட்டடவியலாளர்கள் மற்றும் கட்டட வரைஞர்களுக்கும் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது.
- உத்தேச கழிவுநீர் வலையமைப்பு தொடர்பிலான வீட்டு கழிவுநீர் சேகரிப்புக்கான குழாய் முறைமைகளின் நியம ரீதியிலான வரைவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
- கழிவுநீர் அகற்றுதல் தொடர்பிலான கண்டி மாநகர சபையின் திருத்தப்பட்டவாறான துணைச் சட்டங்கள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் சட்ட வரைஞருக்கு அனுப்புவதற்காகவும் கருத்துக்களைப் பெறுவதற்காகவும் சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

**ஆஸ்திரிய உதவியுடன் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்கள்**

**கொழும்பு கழிவுநீரமைப்பு (தெற்கு நீரேந்து பிரதேசம்) புனரமைப்புத் திட்டம்**

இது 2007 தொடக்கம் 2010 வரையிலான கருத்திட்ட காலத்துடன் கூடிய தற்போதுள்ள கழிவுநீரமைப்பு முறைமையை புனரமைக்கின்ற ஒரு கருத்திட்டமாகும். இக் கருத்திட்டத்தின் மூலம் கொழும்பு நகரத்தின் தென் பாகத்திலுள்ள ஏறத்தாழ 180,000 மக்கள் பயனடைவார்கள் என்பதோடு, நாளொன்றுக்கு 25,920 கன மீற்றர் கையாளுகைக் கொள்ளளவைக் கொண்டிருக்கும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 2,222 மில்லியனாகும்.

கொழும்பு நகரத்தின் தெற்கு நீரேந்து பிரதேசத்தில் உருவாகின்ற கழிவு நீர் சேகரிப்பினை மேம்படுத்துதலும் வினைத்திறன்மிக்க விதத்தில் அகற்றுதலும் இக்கருத்திட்டத்தின் குறிக்கோளாகும். முழுக் கருத்திட்டமும் வடிவமைத்து நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் M/s Angerlehner Hoch-und Tiefbau Gasellschaft mBH மூலம் நிறைவேற்றப்படும்.

வெள்ளவத்தை பம்பி நிலையம் வரை செல்கின்ற ஏறத்தாழ 8 கிலோ மீற்றர் நீளமான பிரதானமான இரண்டு கழிவுநீர்க் குழாய்களை புனரமைத்தல், மற்றும் வெள்ளவத்தையில் புதிய பம்பி நிலையமொன்றை அமைத்தல் ஆகியன இக்கருத்திட்டத்தின் முக்கியமான விடயப் பரப்புகளாக உள்ளன. 2010 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டத்தின் நிலைமை வருமாறு: காலி வீதி, டுப்ளிகேஷன் வீதி, ஹெவ்லொக் வீதி, டிவோஸ் அவனயூ, கிருளப்பனை வீதி, ரிஜ்வே வீதி, ராஜசிங்க ஒழுங்கை, விவேகானந்த மாவத்தை, களனி வீதி மற்றும் வஜிர வீதி நெடுகிலுமுள்ள ஏறத்தாழ 8 கிலோ மீற்றர் நீளமான கழிவுநீர்க் குழாய்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. ஏழு பிரிவுகளில் ஐந்து பிரிவுகள் புனரமைக்கப்பட்டு தொழிற்படுத்தலின் பொருட்டு கொழும்பு மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. வெள்ளவத்தை பம்பி நிலையம் பூர்த்தி செய்யப்பட்டு கொழும்பு மாநகர சபைக்கு ஒப்படைக்கப்படவுள்ளது.



*பூர்த்தி செய்யப்பட்ட வெள்ளவத்தை கழிவுநீர் பம்பி நிலையம்*

2010 இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றம் முறையே 100% மற்றும் 79% ஆக இருந்தது.

**இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் கருத்திட்டங்கள்.**

**மத்திய மாகாணம்**

**குண்டசாலை நீர்வழங்கல் திட்டம்**

இது குண்டசாலை, பலகல்ல, திகன, அரத்தன மற்றும் வாவின்ன பிரதேசங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 100,000 மக்களுக்கு சேவையாற்றுகின்ற இரண்டு வருட காலத்தைக் கொண்ட ஒரு விரிவாக்கமாகும். நாளொன்றுக்கு 20,000 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய முழுமையான சுத்திகரிப்பைக் கொண்டுள்ள இதன் நீர் வளமாக மகாவலி கங்கை/ஹுலுகங்கை விளங்குகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 1,250 மில்லியனாகும். தற்போது அரத்தன சுத்திகரிப்புப் பொறித் தொகுதியிலிருந்து நாளொன்றுக்கு 13,000 கன மீற்றர் உற்பத்தி பெறப்படுகின்றது. இக் கருத்திட்டத்தின் கீழ் பிரதேசத்தின் கேள்வியை நிறைவு செய்யும் பொருட்டு உடனடி மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. 2010இன் இறுதியில் ஒட்டுமொத்தமான முன்னேற்றம் 75%ஆக இருந்தது.

**பலாபத்வெல நீர் வழங்கல் திட்டம்**

இது பலாபத்வெல மற்றும் கோட்டேகொட பிரதேசங்களின் ஏறத்தாழ 22,000 மக்களுக்கு சேவையாற்றுகின்ற ஒரு விரிவாக்கல் திட்டமாகும். நாளொன்றுக்கு 4,000 கன மீற்றர் கொள்ளளவுடன் முழுமையான சுத்திகரிப்பைக் கொண்டுள்ள இதன் நீர் வளமாக சுதுகங்கை விளங்குகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 150 மில்லியனாகும். பலாபத்வெலயில் அமைந்துள்ள நில நீர்த்தேக்கத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட நீர் பாய்ச்சப்படும் என்பதோடு, அங்கிருந்து 9 கிலோ மீற்றர் நீளமான பிரதான பம்பிக் குழாய்களின் மூலம் நீர் விநியோகிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. உள்வாங்கும் கொள்ளளவை நாளொன்றுக்கு 4,000 கன மீற்றர்களால் அதிகரிக்கச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு, அவசியமான திருத்தங்கள் நடைபெற்று வருகின்றன. விநியோகக் குழாய்கள் மற்றும் பிரதான பம்பிக் குழாய்களை இடுதல் நடைபெற்று வருகின்ற அதேவேளை பம்பி நிலையத்தின் நிர்மாணிப்பு பூர்த்தியடைந்துள்ளது. 2010 இன் இறுதியில் ஒட்டுமொத்தமான முன்னேற்றம் 80% ஆக இருந்தது.

**மாத்தளை நீர் வழங்கல் திட்டம்**

இது மாத்தளை நகரம் மற்றும் சுற்றுபுறங்களின் ஏறத்தாழ 15,000 மக்களுக்கு சேவை வழங்குகின்ற தற்போதுள்ள திட்டத்தை புனரமைக்கின்றதான ஒரு திட்டமாகும். கருத்திட்ட காலம் நான்கு வருடங்களாகும். நாளொன்றுக்கு 12,000 கன மீற்றர் கொள்ளவைக் கொண்ட முழுமையான சுத்திகரிப்புடன் கூடிய இதன் நீர் வளைமாக சுதுகங்கை விளங்குகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 385 மில்லியனாகும். மேற்படி மேம்பாட்டின் கீழ் புதிய உள்வாங்கு அமைப்பை நிர்மாணித்தல், பம்பி நிலையம், சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை விரிவாக்குதல், பம்பிகள் மற்றும் விநியோக முறைமையின் மேம்பாடு ஆகியன ஊடாக கொள்ளளவு நாளொன்றுக்கு 16,000 கன மீற்றர்கள் வரை மேம்படுத்தப்பட வேண்டுமென முன்மொழியப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறையின் காரணமாக கழிவுநீர் அகற்றல் முறையை நிர்மாணித்தல் மற்றும் வடிகட்டல் புனரமைப்பு ஆகியன தாமதமாயுள்ளன. 2010இன் இறுதியில் ஒட்டுமொத்தமான முன்னேற்றம் 75% ஆக இருந்தது.

# இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழுங்கல் கருத்திட்டங்கள்

**2010ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினால் நிதியிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு/விரிவாக்கப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களின் அமைவிட வரைபடம்**

| மாகாணம்/பி.சே.நி | கருத்திட்ட எண்ணிக்கை |
|---|---|
| மத்திய | 05 |
| கிழக்கு | 04 |
| வடமத்திய | 05 |
| வடமேல் | 02 |
| சம்பிரகமுவ | 10 |
| தெற்கு | 07 |
| ஊவா | 05 |
| மேல் மத்தி | 03 |
| மேல் வடக்கு | 02 |
| மேல் தெற்கு | 01 |
| மொத்தம் | 44 |



**மாரஸ்ஸன நீர் வழங்கல் செயற்திட்டம்**
இது மாரஸ்ஸன நகரம் மற்றும் அதனைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களில் வசிக்கும் 25,000 மக்களுக்கு சேவையாற்றுகின்ற ஒரு விரிவாக்கல் திட்டமாகும். நாளொன்றுக்கு 5,000 கன மீற்றர் கொள்ளளவுடன் முழுமையான சுத்திகரிப்பைக் கொண்டுள்ளதோடு மா-ஓயா இதன் நீர் வளமாக விளங்குகின்றது. திருத்தப்பட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 222 மில்லியனாகும். பிரதேசத்தின் துரிதமாக வளர்ந்து வரும் நீருக்கான கேள்வியை நிறைவு செய்வதற்கு தற்போதைய நாளொன்றுக்கான 2,200 கன மீற்றர் கொள்ளளவு போதியதாயில்லை. ஒட்டுமொத்தமாக இங்கு 3,500 சேவை இணைப்புகள் உள்ளதோடு, விநியோகத்தின் பொருட்டு வலய முறை பயன்படுத்தப்படுகிறது. கருத்திட்டத்தின் முன்னேற்றத்திற்கு நிதியங்கள் போதாமை மற்றும் காணி விடயங்கள் தடைகளாயுள்ளன. 2010இன் இறுதியில் ஒட்டுமொத்தமான முன்னேற்றம் 79% ஆகும்.

**தலவாக்கலை – லிந்துலை நீர் வழங்கல் செயற்திட்டம்**
தலவாக்கலை மற்றும் லிந்துலை பகுதியிலுள்ள ஏறத்தாழ 15,000 மக்களுக்கு சேவை வழங்குகின்றதான இது தற்போதுள்ள திட்டத்தின் விரிவாக்கமாகும். கிரேட் வெஸ்ரன் மற்றும் நானுஓயா இதன் நீர் வளமாக உள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 172 மில்லியனாகும் என்பதோடு, இலங்கை அரசாங்கமும் இலங்கை மின்சார சபையும் (மீள்அறவிடக்கூடிய) நிதியிடுகின்றது. தற்போதுள்ள நாளொன்றுக்கு 1650 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி (பகுதியளவு சுத்திகரிப்பு) நாளொன்றுக்கு 2,500 கன மீற்றர் உற்பத்திக் கொள்ளளவைக் கொண்டதாக விரிவாக்கப்படுகின்றது. இதில் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கான உள்வாங்கு அமைப்பின் மேம்பாடு, காற்றூட்டற் கலம், கழிவு நீர் சுத்திகரிப்புப் பொறி, படிமங்களுடனான வடிகட்டல் மற்றும் அழுத்த வடிகட்டல் ஆகியவை உள்ளடங்கியுள்ளன. இவற்றிற்கு மேலதிகமாக மேல் கொத்மலை நீர் மின்சக்திக் கருத்திட்டத்தின் காரணமாக மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள பகுதிகளுக்கு தற்போதுள்ள விநியோக முறைமையை விஸ்தரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. 2009இன் இறுதியில் ஒட்டுமொத்தமான முன்னேற்றம் 15% ஆக இருந்தது.

**வடமத்திய மாகாணம்**
**மெதிரிகிரிய நீர் வழங்கல் திட்டம்**



*மெதிரிகிரிய நீர் வழங்கல் திட்டத்தின் நீர் வளம்*

இது மெதிரிகிரிய பழைய நகரம் மற்றும் புதிய நகரம், திவுலன்கடவெல, தியசென்புர மற்றும் விஜயபுர ஆகிய பிரதேசங்களின் ஏறத்தாழ 60,000 நலன்பெறுனர்களுக்கு சேவை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்ட ஒரு புதிய திட்டமாகும். நாளொன்றுக்கு 9,000 கன மீற்றர்களைக் கொண்ட துரித மணல் வடிகட்டல் மற்றும் தொற்றுநீக்கி முறையிலான சுத்திகரிப்புடன் கூடியதான இதன் நீர் வளமாக கவுடுள்ள குளம் விளங்குகின்றது. வினைத்திறன்மிக்க சுத்திகரிப்பின் பொருட்டு கழிவு கெட்டியாக்கலும் கழிவு உலர்த்தல் மேடைகளும் முன்மொழியப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 1,890 மில்லியனாகும். கவுடுள்ள குளத்திலிருந்து பாதுகாப்பான குடிநீரை வழங்குவதை இத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. இக் கருத்திட்டமானது உள்வாங்கு அமைப்பு, சுத்திகரிக்கப்படாத நீரைக் குழாய் மூலம் பாய்ச்சும் முறை, நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி, களஞ்சியப்படுத்தல் வசதிகள், அனுப்பல் முறை மற்றும் விநியோக முறையை உள்ளடக்கியுள்ளது. கருத்திட்டத்தின் முன்னேற்றத்திற்கு வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு தடையாயிருந்தது. 2010இன் இறுதியியல் பௌதீக முன்னேற்றம் 35% ஆக இருந்தது.

**மின்னேரிய ஹிங்குரக்கொட நீர் வழங்கல் செயற்திட்டம்**
இது மின்னேரிய, கிரிதலே மற்றும் ஹிங்குரக்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 60,000 மக்களுக்கு சேவை வழங்குகின்ற தற்போதுள்ள திட்டத்திற்கான ஒரு விரிவாக்கமாகும். திட்டம் மூன்று வருட காலத்தைக் கொண்டுள்ளது. நாளொன்றுக்கு 10,900 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்ட துரித மணல் வடிகட்டல் மற்றும் தொற்றுநீக்கி முறையுடன் கூடிய சுத்திகரிப்பு நடைமுறையைக் கொண்டதான இதன் நீர் வளமாக மின்னேரிய குளம் விளங்குகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 100 மில்லியனாகும். முழுப் பிரதேச செயலகப் பிரதேசத்திற்குமான நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியாகவுள்ள மின்னேரியா நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியிலிருந்து மின்னேரியா மற்றும் ஹிங்குரக்கொடை நீர் வழங்கல் திட்டம் செயற்படுகின்றது. கருத்திட்டத்தின் பரப்பெல்லையானது உள்வாங்கு அமைப்பின் கொள்ளளவினை நாளொன்றுக்கு 13,600 கன மீற்றர் வரை அதிகரிக்கச் செய்தல், தற்போதுள்ள மின்னேரியாவின் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை விரிவாக்கல், மற்றும் மின்னேரியா மற்றும் ஹிங்குரக்கொடை ஆகிய இரண்டு திட்டங்களினதும் களஞ்சியப்படுத்தல் கொள்ளளவினை மேம்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. 2010இன் இறுதியில் பௌதீக முன்னேற்றம் 35% ஆக இருந்தது.

**இபலோகம நீர் வழங்கல் கருத்திட்டம்**
இது இபலோகம ரணவிரு கிராமம் மற்றும் இபலோகம பிரதேச செயலாளர் பிரிவின் 4 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள ஏறத்தாழ 18,000 நலன்பெறுனர்களுக்கு சேவை வழங்குகின்ற ஒரு புதிய திட்டமாகும். சுத்திகரிப்புப் பொறித் தொகுதி மற்றும் உள்வாங்கு அமைப்பானது இபலோகம மற்றும் கெகிராவயின் தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டம் ஆகிய இரண்டிற்கும் பொதுவானதாகும். நாளொன்றுக்கு 4,500 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய முழுமையான சுத்திகரிப்பைக் கொண்டதான இதன் நீர் வளமாக கலாவெவ விளங்குகின்றது. பிரதானமான சுத்திகரிக்கப்படாத நீர் பம்பிக் குழாயின் மொத்த நீளம் 4 கிலோ மீற்றர்களாகும் என்பதோடு பிரதான அனுப்பல் குழாயின் நீளம் 4 கிலோ மீற்றர்களாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் இலங்கை அரச நிதியளிப்பின் கீழ் ரூபா 798 மில்லியனாகும். 2010இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியிலான முன்னேற்றம் முறையே 75% மற்றும் 90% ஆக இருந்தன.



*இப்பலோகம நீர் வழங்கல் திட்டத்தின் காற்றூட்டல் பொறித்தொகுதி*

**கிழக்கு மாகாணம்**

**கந்தளாய் ~ (அக்போபுர) நீர் வழங்கல் திட்டம்**

இது திருகோணமலை மாவட்டத்தின் 1,100 நலன் பெறுனா்களுக்காகத் திட்டமிடப்பட்ட ஒரு கருத்திட்டமாகும். இணைந்த மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 275 மில்லியனாகும். 2010இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியிலான முன்னேற்றம் முறையே 86% மற்றும் 66% ஆகும்.

**தம்பகாமம் நீர் வழங்கல் திட்டம்**

இத் திட்டத்தின் மூலம் திருகோணமலை மாவட்டத்தின் 30,000 நலன்பெறுனா்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழுங்குவதற்குக் கருதியுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 95 மில்லியனாகும். 2010இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியிலான முன்னேற்றம் முறையே 76% மற்றும் 76% ஆகும்.

**சேருநுவர நீர் வழங்கல் திட்டம்**

இது சேருநுவர, கல்லாறு மற்றும் சுற்றுப்புறங்களிலுள்ள 9,500 நலன்பெறுனா்களுக்கு சேவை வழங்குவதற்கு உத்தேசமாயுள்ள ஒரு புதிய திட்டமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 110 மில்லியனாகும். 2010இன் இறுதியில் பௌதீக முன்னேற்றம் 70% ஆகும்.

**தெஹியத்தக்டிய நீர் வழங்கல் திட்டம் ~ கட்டம் 1**

தெஹியத்தகண்டியவில் 16,000 புதிய நலன்பெறுனா்களுக்கு பாதுகாப்பான குடிநீா் வழங்கலை நீடிப்பதற்கு இத்திட்டத்தின் மூலம் எதிா்பாா்க்கப்படுகின்றது. இது மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 300 மில்லியனைக் கொண்ட ஒரு கருத்திட்டமாகும். 2010இன் இறுதியில் நிதி ரீதியான முன்னேற்றம் 56% ஆகும்.

**வடமேல் மாகாணம்**

**மஹவ நிக்கவெரட்டிய ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டம்**

இது நிக்கவெரட்டிய, மஹவ, வாரியபொல மற்றும் சுற்றிலுமுள்ள பிரதேசங்களின் 9,000 குடும்பங்களுக்கு சேவையாற்றுவதற்கு திட்டமிடப்பட்ட ஒரு புதிய செயற்திட்டமாகும். இதன் நீா் வளமாக மாகல்ல விளங்குவதோடு நாளொன்றுக்கு 6,500 கன மீற்றா் கொள்ளளவுடன் கூடிய முழுமையான சுத்திகரிப்பைக் கொண்டுள்ள நிக்கவெரட்டிய நீா் வழங்கல் திட்டத்தின் நீா் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியைக் கொண்டதாயுள்ளது. திருத்தப்பட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 996 மில்லியனாகும். நிக்கவெரட்டிய நீா் வழங்கல் திட்டத்தின் நீா் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியைக் கொண்டதாயுள்ளது. திருத்தப்பட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 996 மில்லியனாகும். நிக்கவெரட்டிய நீா் வழங்கல் திட்டத்தின் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, விநியோக முறைமை மற்றும் களஞ்சியப்படுத்தல் நீா்த்தேக்கம் பூா்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, சனவரி மாதத்தில் செயற்படுதல் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. 12 கிலோ மீற்றா் நீளமான பிரதான பம்பிக் குழாயில் 4.5 கிலோ மீற்றா் நீளம் இடப்பட வேண்டியுள்ளதோடு மஹவ நீா் வழங்கல் திட்டத்தை 2011இன் இறுதியில் செயற்படவைக்க முடியுமாயிருக்கும். வாரியபொல நீா் வழங்கல் திட்டத்தின் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி வடிவமைப்புக் கட்டத்தின் கீழ் உள்ளது. ஒட்டுமொத்தமான பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே 75% மற்றும் 68% ஆகும்.

**சுருக்கபொன நீர் வழங்கல் திட்டம்**

புத்தளம் மாவட்டத்தின் கருக்கபொனவிலுள்ள 2,500 நலன்பெறுனா்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு இத் திட்டம் கருதியுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 51 மில்லியனாகும். 2010இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியிலான முன்னேற்றம் முறையே 80% மற்றும் 53% ஆகும்.

**சப்பிரகமுவ மாகாணம்**

**எம்பிலிபிட்டிய நீர் வழங்கல் திட்டம்**

இது 84,000 நலன்பெறுனா்களுக்கான சுத்திகரிப்புப் பொறித் தொகுதியுடன் கூடியதாக, தற்போதுள்ள திட்டத்தை விரிவாக்குகின்ற ஒரு திட்டமாகும். சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை நிா்மாணித்தல் பூா்த்தியடைந்துள்ளது. இலங்கை அரச நிதியிலான மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 363 மில்லியனாகும். 2010இன் இறுதியில் நிதி ரீதியான முன்னேற்றம் ஆரம்ப மொத்த மதிப்பீட்டுச் செலவினத்தில் 86% ஆக இருந்தது. மொத்த மதிப்பீட்டுச் செலவினத்தின் திருத்தத்திற்கான அங்கீகாரம் பெறவேண்டிய நிலையிலுள்ளது.

**உடவலவை நீர் வழங்கல் திட்டம் படிநிலை I மற்றும் II**

இது தற்போதுள்ள நீா் வழங்கல் திட்டத்தின் ஒரு விரிவாக்கமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 974 மில்லியன் ஆகும். சுத்திகரிப்புப் பொறித் தொகதி மற்றும் உள்வாங்கு அமைப்பை நிா்மாணித்தல் 2009ஆம் ஆண்டினுள் பூா்த்தி செய்யப்பட்டது. விநியோக முறைமை பூா்த்தி செய்யப்பட வேண்டியதாயுள்ளது. எஞ்சியுள்ள பணிகளைப் பூா்த்தி செய்வதற்கான திருத்தப்பட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவினத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டியுள்ளது. 2010இன் இறுதியில் நிதி ரீதியிலான முன்னேற்றம் 49% ஆகும்.

**கொடகவல நீர் வழங்கல் திட்டம்**

இது கொடகவல, கொஸ்னாதொட்ட, ரிதீவெல்ல மற்றும் சுற்றுப்புறங்கின் 22,500 நலன்பெறுனா்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்ட ஒரு புதிய கருத்திட்டமாகும். நாளொன்றுக்கு 4,500 கன மீற்றா் கொள்ளளவுடன் கழிவுநீா் சுத்திகரிப்பு, மணல் வடிகட்டல் மற்றும் குளோரீனிடல் மூலம் சுத்திகரிக்கப்படுகின்ற நீா் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியைக் கொண்ட இதன் நீா் வளமாக ரக்வான கங்கை விளங்குகின்றது. நீா் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, பாதுகாவலா் விடுதி, எரிவாயுவில் இயங்குகின்ற குளோரினிடல் இயந்திரம் மற்றும் கழிவுநீா் அகற்றல் பம்பி ஆகியன கருத்திட்ட ஆக்கக்கூறுகளாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 289 மில்லியனாகும். திட்டம் 2010இல் பூா்த்தி செய்யப்பட்டு செயற்பட ஆரம்பித்தது.



*கொடகவெல நீர் சுத்திகரிப்புப் நிலையத்தின் ஒரு பகுதி*

**கலிகமுவ நீர் வழங்கல் திட்டம்**

தற்போது கலிகமுவ நகரத்தில் குழாய் மூலமான நீா் வழங்கல் கிடையாது. இக்கருத்திட்டமானது, புதிய உள்வாங்கு அமைப்பை (நாளொன்றுக்கு 5,000 கனமீற்றா்) அலவ்வவில் நிா்மாணித்தல், நாளொன்றுக்கு 5,000 கனமீற்றா் கொள்ளளவைக் கொண்ட மரபு ரீதியிலான நீா் சுத்திகரிப்பு நிலையம், நில நீா்த்தேக்கங்களை (225 கன மீற்றா் மற்றும் 1,800 கன மீற்றா்) நிா்மாணித்தல், பம்பி நிலையம், 12 கிலோ மீற்றா் நீளமான முலாம் பூசப்பட்ட இரும்பிலான பிரதான நீா்க் குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல் தற்போதுள்ள விநியோக வலையமைப்பின் மேம்பாடு மற்றும் பம்பிகளைப் பொருத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 841 மில்லியனாகும் என்பதோடு, கலிகமுவ நகா் பிரதேசத்தைச் சோ்ந்த 30,800 மக்கள் இதன் மூலம் பயனடைவாா்கள். இது 3 வருட காலத்தைக் கொண்ட ஒரு புதிய கருத்திட்டமாகும். 2010இன் இறுதியில் நிதி ரீதியிலான முன்னேற்றம் 10% ஆக இருந்தது.

### நிவித்திகல நீர் வழங்கல் திட்டம்

இத் திட்டம் மூலம் இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகல பிரதேசத்திலுள்ள 9,400 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 99 மில்லியனாகும். 2010இன் இறுதியில் நிதி ரீதியிலான முன்னேற்றம் ஆரம்ப மொத்த மதிப்பீட்டுச் செலவில் 56% ஆக இருந்தது. திருத்தப்பட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவுக்கான அங்கீகாரம் கிடைக்க வேண்டியுள்ளது.

### பெல்மடுல்ல நீர் வழங்கல் திட்டம்

இத் திட்டம் மூலம் இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்ல பிரதேசத்திலுள்ள 14,500 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 195 மில்லியனாகும். 2010இன் இறுதியில் நிதி ரீதியிலான முன்னேற்றம் ஆரம்ப மொத்த மதிப்பீட்டுச் செலவில் 107% ஆக இருந்தது. திருத்தப்பட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவுக்கான அங்கீகாரம் கிடைக்க வேண்டியுள்ளது.

### யட்டியன்தோட்ட நீர் வழங்கல் திட்டம்

இத் திட்டம் மூலம் கேகாலை மாவட்டத்தின் 6,700 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 166 மில்லியனாகும். திட்டம் 2009இன் ஆரம்பப் பகுதியில் பகுதியளவு செயற்பட ஆரம்பித்து வைக்கப்பட்டது. 2010இன் இறுதியில் நிதி ரீதியிலான முன்னேற்றம் 91% ஆக இருந்தது.



*யட்டியன்தோட்ட நீர் வழங்கல் செயற்திட்டத்தின் உள்வாங்கு நிலையம்*

### தென் மாகாணம்

### அகுரஸ்ஸ நீர் வழங்கல் திட்டம்

இத் திட்டம் அக்குரஸ்ஸ மற்றும் அத்துரலிய பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஏறத்தாழ 15,000 மக்களுக்கு நீரை வழங்கும். நில்வலா கங்கையிலிருந்து உறிஞ்சப்படும் நீர் விநியோகத்திற்கு முன்னர் முழுமையாகச் சுத்திகரிக்கப்படும். இத்திட்டம் நாளொன்றுக்கு 3,150 கன மீற்றர் கொள்ளளவைக் கொண்டுள்ளதோடு கருத்திட்டச் செலவு ரூபா 338 மில்லியனாக இருந்தது. நீர் சுத்திகரிப்புப் நிலையத்தின் அமைவிடம் மாற்றமடைந்தமை மற்றும் நீர் வளம் மாற்றமடைந்தமையின் காரணமாக நிர்மாணிப்புப் பணிகள் தாமதமடைந்தன. திட்டம் 2010இல் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு செயற்பட ஆரம்பித்து வைக்கப்பட்டது.



*அக்குரஸ்ஸ நீர் வழங்கல் திட்டத்தின் மணல் வடிகட்டல் தொட்டி*

### ஹக்மன நீர் வழங்கல் திட்டம்

உத்தேச ஹக்மன நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ஹக்மன பிரதேத்திலுள்ள 10,000 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
திட்டம் 2010-2012 காலகட்டத்தினுள் அமுலாக்கப்படவுள்ளது. நாளொன்றுக்கு 1,800 கன மீற்றர் கொள்ளளவுடன் கூடிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் பாதியளவு சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்ற இதன் நீர் வளமாக தோண்டப்பட்ட நீர் நிலை விளங்குகின்றது. உள்வாங்கு நிலைய மேம்பாடு, புதிய நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, அனுப்பல் மற்றும் விநியோகக் குழாய்கள், பம்பிகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல் ஆகியன முக்கியமான கருத்திட்ட ஆக்கக் கூறுகளும் கருத்திட்டத்தின் ஆரம் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 140 மில்லியனாகும் என்பதோடு திருத்தப்பட்ட மொத்த மதிப்பீட்டுச் செலவினத்துக்கான அங்கீகாகரம் பெறப்பட வேண்டியுள்ளது. நிர்மாணச் செயற்பாடுகள் 2010 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டன.

### திஹகொட நீர் வழங்கல் திட்டம்



*திஹகொட நீர் வழங்கல் திட்டத்தின் மெதுவான மணல் வடிகட்டல்*

திஹகொட மற்றும் சுற்றுப்புற பிரதேசத்தில் அபிவிருத்தியின் காரணமாக எழுந்த கேள்வியை நிறைவு செய்யும் பொருட்டு இத்திட்டம் திட்டமிடப்பட்டதோடு இது ஏறத்தாழ 6,500 மக்களுக்கு சேவையாற்றும். தோண்டப்பட்ட இரண்டு நீர் நிலைகள் இதன் நீர் வளமாக உள்ளதோடு நாளொன்றுக்கு 1,000 கனமீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் நீர் பகுதியளவு சுத்திகரிக்கப்படுகின்றது. இத்திட்டத்தின் மொத்த செலவினம் 162 மில்லியனாகும். வடிகட்டல் ஊடகத்துக்கான பற்றாக்குறை மற்றும் ஒப்பந்தக்காரரால் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கை முன்னேற்றத்தைத் தீவிரமாகப் பாதிக்கச் செய்தது. இத்திட்டம் 2010இல் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு செயற்பட ஆரம்பித்து வைக்கப்பட்டது.

### உடுகம நீர் வழங்கல் திட்டம்

பிற்றபேதர மற்றும் அதனைச் சுற்றிலுமுள்ள 6,000 மக்களின் நீர்த் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2004ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 145 மில்லியனாகும். குழாய்க் கிணறுகளின் மூலம் உறிஞ்சியெடுக்கப்படுகின்ற நிலநீர் நாளொன்றுக்கு 1,200 கனமீற்றர் கொள்ளளவுடைய மரபு ரீதியிலான நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் முழுமையாக சுத்திகரிக்கப்படுகின்றது. ஒப்பந்தக்காரரின் குறைந்தளவிலான செயலாற்றுகை மற்றும் வடிகட்டல் ஊடகத்துக்கான பற்றாக்குறை ஆகியன கருத்திட்டத்தின் தாமதத்திற்குப் பிரதானமான காரணங்களாயுள்ளன. 2009இல் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகதி நிர்மாணிக்கப்பட்டு வடிகட்டல் ஊடகம் வழங்கப்பட்டது. 2011ஆம் ஆண்டினுள் இத் திட்டம் பூர்த்தி செய்யப்படும்.



உடுகம நீர் வழங்கல் திட்டத்தின் காற்றூட்டி

**பிடபெத்தர நீர் வழங்கல் திட்டம்**
பிடபெத்தர நகர் பிரதேசத்தில் வசிக்கும் 6,000 மக்களின் நீர்த் தேவையை நிறைவு செய்வதே குறித்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். நாளொன்றுக்கு 1,200 கனமீற்றர் கொள்ளவுடைய மரபு ரீதியிலான நீர் சுத்திகரிப்பு நிலையத்தை கொண்டமைந்ததுடன் பிரதானமான நீர் வளமாக நிலக்கீழ் குழாய் கிணறுகள் 02 பயன்படுத்தப்படுகின்றது. திட்டத்திற்கான மொ.ம.செ. ரூபா 130 மில்லியனாகும். 2007 ஆம் ஆண்டில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் நிதிப் பற்றாக்குறை மற்றும் ஒப்பந்தக்காரர்களின் திருப்தியற்ற செயலாற்றுகை ஆகிய காரணங்கள் திட்டத்தின் முன்னேற்றத்திற்கு தடையாக அமைந்ததுடன் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மிகுதியாயுள்ள நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதன் பொருட்டு ஒப்பந்தம் வழங்க வேண்டியேற்பட்டுள்ளதுடன், பம்பி வழங்கி பாருத்துதல் ஒப்பந்தமானது மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட உள்ளது. 2010 ஆம் ஆண்டின் இறுதியில் பௌதீகரீதியிலான முன்னேற்றம் 28 % ஆகும்.

**ரதம்பொல நீர் வழங்கல் திட்டம்**
இது ரதம்பொல மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களின் நன்மைக்காக திட்டமிடப்பட்ட ஒரு புதிய திட்டமாகும். இத் திட்டம் சனத்தொகையில் 13,000 மக்களுக்கு சேவை வழங்கும். நாளொன்றுக்கு 1,800 கனமீற்றர் இத் திட்டத்தின் கொள்ளளவாகும் என்பதோடு பகுதியளவிலான சுத்திகரிப்பு வசதியை இது கொண்டிருக்கும். இரண்டு குழாய்க் கிணறுகள் நீர் வளமாகப் பயன்படுத்தப்படும். மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 133 மில்லியனாகும். 2009ஆம் ஆண்டில் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு செயற்பட ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**ஊவா மாகாணம்**

**ஒஹிய நீர் வழங்கல் திட்டம்**
இது வெலிமட நகரம் மற்றும் சுற்றிலுமுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த 10,000 மக்களுக்கு சேவையாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள 3 வருட காலத்தைக் கொண்ட ஒரு புதிய திட்டமாகும். நாளொன்றுக்கு 2,000 கனமீற்றர் கொள்ளளவுடன் கூடிய முழுமையான சுத்திகரிப்பைக் கொண்டுள்ள இதன் நீர் வளமாக உமா ஓயா விளங்குகின்றது. மொத்த மதிப்பீட்டுச்



ஒஹிய நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் ஒரு பகுதி

செலவினம் ரூபா 189 மில்லியனாகும் என்பதோடு 2010இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே ஏறத்தாழ 80% மற்றும் 90% ஆக இருந்தது. நிதியத்திற்கான கட்டுப்பாடுகள் கருத்திட்டத்தின் முன்னேற்றத்தைத் தாமதிக்கச் செய்கின்றது.

**மொனராகலை நீர் வழங்கல் திட்டம் – 2வது கட்டம்**
இது மொனராகலை நகரம் மற்றும் சுற்றிலுமுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 10,000 மக்களுக்கு சேவையாற்றுகின்றான தற்போதுள்ள திட்டத்தின் ஒரு விரிவாக்கமாகும். கருத்திட்ட காலம் 2 வருடங்களாகும். நாளொன்றுக்கு 3,500 கனமீற்றர் கொள்ளளவுடன் கூடிய பகுதியளவிலான சுத்திகரிப்பைக் கொண்டுள்ள இதன் நீர் வளமாக G-Lon தோட்டத்தினூடாக வருகின்ற ஒரு நீரோட்டம் விளங்குகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 154 மில்லியனாகும் என்பதோடு 2010இன் இறுதியில் நிதி ரீதியான முன்னேற்றம் ஏறத்தாழ 82% ஆக இருந்தது.

**அம்பஸ்தோவ நீர் வழங்கல் திட்டம்**
இது அம்பகஸ்தோவ மற்றும் சுற்றிலுமுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 6,000 மக்களுக்கு சேவையாற்றுகின்ற ஒரு விரிவாக்கல் திட்டமாகும். நாளொன்றுக்கு 3,000 கனமீற்றர் கொள்ளளவுடன் கூடிய முழுமையான சுத்திகரிப்பைக் கொண்டுள்ள இதன் நீர் வளமாக பொம்புருஎல்ல விளங்குகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 185 மில்லியனாகும். 2010இன் இறுதியில் நிதி ரீதியான முன்னேற்றம் ஏறத்தாழ 83% ஆக இருந்தது.

**வெல்லவாய நீர் வழங்கல் திட்டம்**
இது மொனராகலை மாவட்டத்தின் 6,000 நலன்பெறுனர்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழ்குவதற்குத் திட்டமிடப்பட்ட ஒரு கருத்திட்டமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 250 மில்லியனாகும் என்பதோடு 2010இன் இறுதியில் நிதி ரீதியான முன்னேற்றம் ஏறத்தாழ 4%ஆக இருந்தது.

**படல்கும்புற நீர் வழங்கல் திட்டம்**
இது மொனராகலை மாவட்டத்தில் படல்கும்புற பிரதேசத்தின் 22,000 நலன்பெறுனர்களுக்கு நீர் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்ட ஒரு கருத்திட்டமாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 124 மில்லியனாகும். 2010இன் இறுதியில் பௌதீக மற்றும் நிதி ரீதியான முன்னேற்றம் முறையே ஏறத்தாழ 35% மற்றும் 36%ஆக இருந்தது.

**மேல் மாகாணம்**

**கிரிந்திவலை நீர் வழங்கல் திட்டம்**
இது, கிரிந்திவலை பிரதேசத்தின் 8,000 மக்களுக்குச் சேவை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்ட ஒரு புதிய கருத்திட்டமாகும். கருத்திட்ட காலம் 5 வருடங்களாகும். முழுமையான சுத்திகரிப்புடன் கூடியதாக களனி கங்கை இதன் நீர் வளமாக உள்ளதோடு, கழிவு நீர் உள்நாட்டு கால்வாய்க்க விடுவிக்கப்படுகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 198 மில்லியனாகும். நாளொன்றுக்கு 2,750 கனமீற்றர் நீரை வழங்கக் கூடிய புதிய சுத்திகரிப்புப் நிலையமொன்று பூகொடையில் தற்போதுள்ள சுத்திகரிப்புப் நிலையம் அமைந்துள்ள இடத்தில் நிர்மாணிக்கப்படும். 2010இன் இறுதியில் ஒட்டுமொத்தமான முன்னேற்றம் ஏறத்தாழ 75% ஆக இருந்தது.

**நிட்டம்புவ – வேயங்கொட நீர் வழங்கல் திட்டம்**
இது நிட்டம்புவ, திஹாரிய, வராண மற்றும் கலகெடிஹேன பிரதேசங்களின் 12,000 நலன்பெறுனர்களுக்கு சேவை வழங்குவதற்காகத் திட்டமிடப்பட்ட ஒரு புதிய/விரிவாக்கல் கருத்திட்டமாகும். அத்தனக்கலு ஓயாவிலிருந்து நீர் உறிஞ்சியெடுக்கப்படும். நாளொன்றுக்கு 3,000 கனமீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் முழுமையான சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்படும். கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 211 மில்லியனாகும். 2009ஆம் ஆண்டினுள் வராண பன்சாலை வீதி வரை PVC குழாய்கள் இடப்பட்டன என்பதோடு 2010இன் இறுதியாகின்றபோது ஒட்டுமொத்தமான முன்னேற்றம் 85% ஆக இருந்தது.

**களுத்துறை ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம் படிநிலை II**

இத் திட்டம் பயாகலை, மக்கொன, பேருவளை, தர்கா நகர், பெந்தோட்டை மற்றும் அளுத்கம பிரதேசங்களின் ஏறத்தாழ 210,000 மக்களுக்கு நீர் வழங்கலை நீடிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. கருத்திட்ட காலம் 2006இல் ஆரம்பிக்கப்பட்டது. நாளொன்றுக்கு 56,250 கனமீற்றர் கொள்ளளவையும் முழுமையான சுத்திகரிப்புடனும் கூடியதான இதன் நீர் வளமாக களுகங்கை உள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 1,366 மில்லியனாகும்.

களுத்துறையின் தென் பிரதேசத்திற்கான விநியோக முறைமையை மேம்படுத்தல் கட்டம் 2இன் பிரதானமான குறிக்கோளாகும். சென்றல் சந்தியிலிருந்து மக்கொன வரை பிரதான அனுப்பல் குழாய்களுக்கான முலாம் பூசப்பட்ட இரும்பிலான குழாய்களை இடுதல் மற்றும் பொருத்துதல் பணிகள் நடைபெற்று வருகின்றன. மக்கொன தொடக்கம் பேருவளை வரையிலான மேற்படி பிரதான அனுப்பல் குழாய்களின் 2வது கட்டம் 2011ஆம் ஆண்டினுள்ள அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. 2010இன் இறுதியில் பௌதீக முன்னேற்றம் ஏறத்தாழ 34%ஆக இருந்தது.

**கட்டுநாயக்க – சீதுவை நீர் வழங்கல் திட்டம்**

நாளொன்றுக்கு 4,500 கனமீற்றர் கொள்ளளவைக் கொண்ட இக்கருத்திட்டத்தின் மூலம் கட்டுநாயக்க, சீதுவை மற்றும் ரத்தொழுகமவிலுள்ள 29,000 மக்கள் நன்மை பெறுவார்கள். நீர் வளமாக தண்டுகம ஓயா உள்ளதோடு, தேவையான நீர் விரிவாக்கப்பட்ட ரத்தொழுகம நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியிலிருந்து பெறப்படும். மொத்த மதிப்பீட்டுச் செலவு 470 மில்லியனாக திருத்தப்பட்டுள்ளது. தற்போதுள்ள ரத்தொழுகம நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் விரிவாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, விநியோக முறைமையின் ஒரு பகுதி இடப்படவேண்டியுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரச்சினைகள் மற்றும் நிதி கிடைக்காமையின் காரணமாக கருத்திட்டத்தின் முன்னேற்றம் தாமதமடைந்தது. 2010இன் இறுதியில் நிதி ரீதியான முன்னேற்றம் ஏறத்தாழ 36% ஆக இருந்தது.

**அவிசாவலை புதிய நகர திட்டம்**

மேற்குறித்த நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் 2500 கனமீற்றர் கொள்ளளவையுடைய புதிய நீர் சுத்திகரிப்பு நிலையமொன்றினை மற்றும் நீர் பகிர்ந்தளிப்பு வலையமைப்பினைக் கொண்டதாக அமைவதுடன் அவ் வலையமைப்பானது தற்போது பாவனையிலுள்ள அமைப்புடன் இணைக்கப்படும். இத் திட்டத்திற்கான நீர் வளமானது நதியாவதுடன் அதன் கொள்ளளவானது 9000 கனமீற்றர்களாகும். தற்போதுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்ளளவானது 2010 ஆம் ஆண்டிற்கான நீர் தேவைக் கோரிக்கையை பூர்த்தி செய்வதற்கு போதாதாகையால் அதன் பொருட்டு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கொள்திறன் அளவை 4500 கன மீற்றராக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்குரிய மதிப்பீட்டுத் தொகையானது அண்ணளவாக ரூபா 30 மில்லியனாகும். இவ்வாறு திட்டமிடப்பட்ட போதும் 2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் நிதி கிடைக்காமையினால் இந்த விரிவாக்கத்தினை மேற்கொள்ள முடியாது போனது.

தற்போது நடைமுறையிலுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மேம்படுத்தலுக்கு மேலதிகமாக 4500 கனமீற்றர் கொள்ளவுடையை புதிய நீர் சுத்திகரிப்பு நிலையமொன்றினை 2018 ஆம் ஆண்டுக்கு முன்னதாக பென்றிக் தோட்டத்தில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் எதிர்நோக்க வேண்டியுள்ள குடிநீர்க் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக தற்போது செயற்பாட்டிலுள்ள அவிசாவலை பழைய நீர்வழங்கல் திட்டத்தின் குளோரினிடல் வலையமைப்புனரமைத்து 3000 கனமீற்றர் கொள்ளவைக் கொண்ட நீரினைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்து கொள்வதற்கான மேலும், அவிசாவலை நீர் வழங்கல் திட்டத்தில் எஞ்சியுள்ள விரிவாக்க நடவடிக்கைகள் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாவது கட்டம் ரூபா 1228 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், பணி நடவடிக்கைகளை 2012-2014 வரையான காலப்பகுதியினுள் ஆரம்பித்து நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி திட்ட ஒதுக்கீட்டுக் குழுவின் மூலம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இரண்டாவது கட்ட நடவடிக்கையானது 2030 ஆம் ஆண்டில் எதிர்கொள்ள வேண்டியேற்படும் நீர் தேவைக் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய விதத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை முழுமையாக பூர்த்தி செய்வதன் மூலம் 2030 ஆம் ஆண்டினுள் 65-000 பயன்பெறுனர்களுக்கான நீர் சேவையினை வழங்குவதற்கு இத் திட்டத்தின் மூலம் முடியுமாகும்.

**ஜலதர – ரணல நீர் வழங்கல் திட்டம் – படிநிலை 1 கட்டம் 1**

இது கடுவெல மற்றும் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு சேவை வழங்குகின்ற ஒரு புதிய கருத்திட்டமாகும். படிநிலை 1 கட்டம் 1இற்காக 2030இல் திட்டமிடப்பட்ட சனத்தொகை 7,646 ஆகவும் 2030இல் படிநிலை 1 கட்டம் 2இற்கான சனத்தொகை 10,273 ஆகவும் 2030இல் படிநிலை 2இற்கான சனத்தொகை 92,118ஆகவும் உள்ளது. படிநிலை 1இற்கான நீர் வளமாக கலட்டுவாவ/லபுகம (D20) உள்ளதோடு, கட்டம் 2இற்கான பொறித் தொகுதியை சிலோன் ஹெவி இன்டஸ்ரீஸ் கம்பனி பொறுப்பேற்று மேற்கொள்கின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு 1வது படிநிலைக்கு 217 மில்லியனாகவும், 2வது படிநிலைக்கு ரூபா 1,295.95 மில்லியனாகவும் உள்ளது. மேற்படி கருத்திட்டத்தின் கீழ் ஜலதர-ரனால பிரதேசம் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய பிரதேசமாக அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, மேற்படி நீர் வழங்கல் திட்டத்தை இரண்டு படிநிலைகளில் அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. படிநிலை 1 கட்டம் 1இன் கீழ் ஜல்தர மற்றும் ஹென்பிட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளடக்கப்படும் என்பதோடு, படிநிலை 1 கட்டம்2இன் கீழ் ஆட்டிகல கிழக்கு, ஆட்டிகல மேற்கு, பானலுவ மற்றும் பட்டவெல உள்ளடக்கப்படுகின்றது. கடுவலை மற்றும் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய எஞ்சிய பகுதிகள் படிநிலை 2இன் கீழ் உள்ளடக்கப்படும். கருத்திட்டத்திற்காக நிதியத் தடைகள் நிலவுகின்றன.

**ஹன்வெல்ல நீர் வழங்கல் திட்டம்**

இது ஹன்வெல்ல பிரதேசத்தில் ஏறத்தாழ 20,000 மக்களுக்கு நீர் வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட ஒரு விரிவாக்கல் கருத்திட்டமாகும். இத்திட்டத்திற்கான நீர் லபுகம-கலட்டுவாவ முறைமையிலிருந்து பெறப்படுகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 47 மில்லியனாகும். தற்போதைய நீர் வழங்கல் திட்டத்தின் விநியோக வலையமைப்பை விஸ்தரிக்கும் பொருட்டு இதனை விரிவாக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. புதிய விநியோக வலையமைப்பின் மொத்த நீளமான 15 கிலோ மீற்றில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய வீதிகளை விடுத்து, 9 கிலோ மீற்றர் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பௌதீக முன்னேற்றம் 60% ஆகும். எஞ்சியுள்ள பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு ரூபா 29 மில்லியன் தேவைப்பட்டுள்ளமை கருத்திட்டத்திற்கான பெரும் தடையாக இருக்கிறது.

**மாகாணங்களுக்கு இடையிலான சிறிய திட்டங்கள்**

**வேகந்தலே நீர் வழங்கல் திட்டம்**

இது வகன்தலே மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் வாழும் 5,000 நலன்பெறுனர்களுக்கு சேவை வழங்குவதற்காக திட்டமிடப்பட்ட ஒரு புதிய கருத்திட்டமாகும். மா ஓயா இதன் நீர் வளமாகும். 225 கனமீற்றர் நில நீர்த்தேக்கம் மற்றும் பிரவேசப் பாதையை நிர்மாணித்தலை கருத்திட்ட ஆக்கக்கூறுகள் உள்ளடக்குகின்றன. மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 30 மில்லியனாகும்.

**பஹல கடுகன்னாவ நீர் வழங்கல் திட்டம்**

இது பஹல கடுகன்னாவ மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் வாழும் 5,000 நலன்பெறுனர்களுக்கு சேவை வழங்குவதற்காக திட்டமிடப்பட்ட ஒரு புதிய கருத்திட்டமாகும். கருத்திட்ட காலம் 2010 தொடக்கம் 2012 வரையிலாகும். கடுகன்னாவயில் அமைந்துள்ள ஒரு நீரூற்று இதன் நீர் வளமாகும் என்பதோடு நாளொன்றுக்கு 1,000 கனமீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் தொற்று நீக்குதல் உட்பட நீர் சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்படும் மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூபா 30 மில்லியனாகும்.

# 2011இல் பௌதீகரீதியில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ள திட்டங்கள்

**லபுகம கலட்டுவாவ நீர் சுத்திகரிப்புப் நிலையத்தின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கம் (ஹங்கேரி)**

கருத்திட்டமானது, லபுகம மற்றும் கலட்டுவாவ நீர் சுத்திகரிப்புப் நிலையங்களின் (ஆரம்பத்தில் முறையே 1886 மற்றும் 1957இல் ஆரம்பித்து வைக்கப்பட்டன) புனரமைப்பு மற்றும் விரிவாக்கம், சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரம் மற்றும் பொறித் தொகுதிகளின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தல் அத்துடன் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இது கொழும்பு நகரம், கடுவல மற்றும் ஹங்வெல்ல பிரதேசங்களுக்கு சேவை வழங்குகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 6,800 மில்லியனாகும் என்பதோடு, ஹங்கேரிய அரசாங்கத்திலிருந்து நிதியளிக்கப்படுகின்றது. கடன் உடன்படிக்கையும் ஒப்பந்த உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

**இரத்தினபுரி பெரும்பாக ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் – கட்டம் I (ஸ்பானியா)**

கருத்திட்டத்தின் 1வது கட்டம் தற்போதுள்ள பாவனையாளர்களுக்கு வழங்குகின்ற சேவையை மேம்படுத்தும் என்பதோடு புதிய பிரதேசங்களுக்கும் அதன் சேவையை நீடிக்கும். 2025ஆம் ஆண்டாகின்றபோது இரத்தினபுரி, குருவிட்ட மற்றும் சுற்றுப்புறங்களிலுள்ள ஏறத்தாழ 160,000 மக்கள் இக் கருத்திட்டத்தின் மூலம் நலன்பெறுவார்கள். நாளொன்றுக்கு 13,000 கனமீற்றர் கொள்ளளவைக் கொண்ட புதிய நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை நிர்மாணித்தல், அனுப்பல் முறைமையை பூர்த்தி செய்தல், விநியோக முறைமையின் ஒரு பகுதி மற்றும் குருவிட்டவிலுள்ள குரு கங்கையில் உள்வாங்கு நிலையம் ஆகியன இக் கட்டத்தின் பிரதானமான ஆக்கக் கூறுகளாகும். நாளொன்றுக்கு 6,500 கனமீற்றர் கொள்ளளவுடன் தற்போதைய நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி தற்போதுள்ள பாவனையாளர்களுக்கு சேவையைத் தொடர்ந்து வழங்கும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 9,928 மில்லியனாகும். கருத்திட்டத்தின் விளைவுத்திறனின் பொருட்டு வர்த்தக ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியுள்ளது.

**யாழ்ப்பாணக் குடாநாட்டு நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு (ஆ.அ.வ.)**

இது யாழ்ப்பாண நகரம், சுற்றுப்புறம் மற்றும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள ஒரு சில நகர்ப்புறங்களிலுள்ள ஏறத்தாழ 689,000 மக்களுக்கான குடிநீர் வழங்கல் வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒரு கருத்திட்டமாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் நில நீர் வளத்திற்குக் குறைநிரப்பாக கிளிநொச்சியில் அமைந்துள்ள இரணைமடுக் குளத்திலிருந்து நீர் உறிஞ்செடுக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அமுலாக்கல் இரண்டு கட்டங்களில் நடைபெறவுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவு 1வது கட்டத்திற்கு ரூபா 12 மில்லியனாக இருக்கின்ற அதேவேளை 2ஆம் கட்டத்திற்கு 8 பில்லியனாக உள்ளது.

**கொலன்ன மற்றும் பலாங்கொடை நீர் வழங்கல் திட்டம் (பெல்ஜியம்)**

நாளொன்றுக்கு 7,700 கனமீற்றர் கொள்ளளவைக் கொண்ட முழுமையான நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை நிர்மாணித்தல், உள்வாங்கு அமைப்பு, நில நீர்த்தேக்கம் (1,000 கனமீற்றர்) நீர்த் தாங்கி (1,500 கனமீற்றர்), 25 கிலோ மீற்றர் நீளமான முலாம் பூசப்பட்ட இரும்பினாலான பிரதான அனுப்பல் குழாயை வழங்குதல் மற்றும் இடுதல், விநியோக வலையமைப்பு ஆகியவற்றை பிரதானமான ஆக்கக்கூறுகள் உள்ளடக்கியுள்ளன. எரிபொருள், கொலொன்ன, மடுவன்வெல, நந்தனகம, பலாங்கொடை, சமலவெவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 117,500 மக்கள் இக் கருத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 4,956 மில்லியனாகும். ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

**ருகுணுபுர நீர் வழங்கல் அபிவிருத்தி (கொரியா)**

இது 2025ஆம் ஆண்டில் 112,000 மக்களுக்கு சேவை வழங்குகின்ற ஒரு புதிய கருத்திட்டமாகும். ரிதியகம குளம் நீர் வளமாக உள்ளது. கொரிய அரசாங்கம் நிதியளிப்பு மூலமாக உள்ளது. கட்டம் 1இற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 9,742 மில்லியனாகவும் கட்டம் 2இற்கு ரூபா 3,760 மில்லியனாகவும் உள்ளது. உத்தேச ருகுணுபுர நீர் வழங்கல் கருத்திட்டத்தின் மூலம் ருகுணுபுர மற்றும் அம்பாந்தோட்டை பிரதேசங்களுக்கு குடிநீரை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. கருத்திட்டத்தை இரண்டு கட்டங்களில் அமுலாக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதிலான தாமதம் பௌதீக வேலைகளை ஆரம்பிப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கருத்திட்டத்திற்கான காணிகளை சுவீகரித்தலும் நடைபெற்று வருகின்றது.

**அம்பாறை மாவட்டத்தின் கிழக்குக் கரையோர நகரங்கள் (ECTAD) நீர் வழங்கல் திட்டம் கட்டம் III (ஆஸ்திரியா)**

இப் புதிய கருத்திட்டமானது, நாளொன்றுக்கு 12,000 கனமீற்றர் மற்றும் நாளொன்றுக்கு 22,250 கனமீற்றர் கொள்ளளவுகளைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிகளை நிர்மாணித்தல், நில நீர் பம்பிகள், உயர்த்தப்பட்ட கோபுரம், பம்பி நிலையம், பொறியியல் மற்றும் மின்னியல் வேலைகள், அலுவலகக் கட்டிடம், பிரதான அனுப்பல் குழாய்கள் மற்றும் விநியோகக் குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. இக் கருத்திட்டத்தின் மூலம் அம்பாறை பிரதேசத்தைச் சேர்ந்த ஏறத்தாழ 150,000 மக்கள் நலன்பெறுவார்கள். ஹிம்துறுவ குளம் நீர் வளமாக விளங்குகின்றது. மொத்த மதிப்பீட்டுச் செலவு அமெரிக்க டொலர் 18,012 மில்லியனாகும். 2010இன் நான்காம் காலாண்டினுள் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. குறைநிரப்பு நிதி ஏற்பாடுகள் பெறப்பட்டு முற்பணக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**அம்பத்தலே நீர் சுத்திகரிப்புப் நிலையதின் வலுசக்தி பேணல் திட்டம் (ஜேர்மனி)**

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது அம்பத்தலே நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியில் இரண்டு வலுசக்திக் கணக்காய்வுகளின் கீழ் வலுசக்தி பேணல் உபாயங்களை மேற்கொண்டது. ஒரு மாதத்திற்கு ரூபா 10 மில்லியன் அளவிலான குறிப்பிடத்தக்க சேமிப்பை மேற்கொள்ளக்கூடியவாறு 31% வலுசக்திச் செலவினத்தைக் குறைக்கக் கூடிய வாய்ப்புள்ளதென்பது வலுசக்திக் கணக்காய்வின்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கருத்திட்டமானது, முழுமையான வலுசக்திக் கணக்காய்வினை மேற்கொள்ளல், சக்தியைப் பேணும் பொருட்டு அம்பத்தலேயிலிருந்து கொழும்புக்கு பாரிய அனுப்பல் முறைமையொன்றை பதிலீடு செய்தல், வலுசக்தியைப் பேணும் பொருட்டு வினைத்திறன்மிக்க விதத்தில் குழாய் இணைப்புகளை மீள அமைத்தல் மற்றும் பம்பி அலகுகள் மற்றும் பம்பி அமைப்புகளை மீள அமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 7,303 மில்லியனாகும். ஒப்பந்தமும் கடன் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட வேண்டியுள்ளதோடு கருத்திட்ட தயாரிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**கொழும்பு பெரும்பாகத்தில் வீட்டு கழிவுநீர் அமைப்புக்களை அதிகரிக்கச் செய்தலும் வலையமைப்புக்குப் புறம்பான துப்புரவேற்பாட்டுத் தீர்வுகளும் (உலக வங்கி)**

தெஹிவலை/கல்கிசை மாநகரசபை, மொரட்டுவை நகர சபை, கொலன்னாவ பிரதேச சபை மற்றும் ஜா-எல பிரசே சபைப் பிரதேசங்களில் பாதுகாப்பான துப்புரவேற்பாட்டை வீடுகள் எளிதாக அடைவதை அதிகரிப்பதற்காக விளைவு அடிப்படையிலான உலக கூட்டு உதவித் (GPOBN) திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது திருப்திகரமற்ற குழி மலசலகூடங்கள், செயற்படாத நச்சுத்தடை மலக்குழிகள் உள்ள அல்லது துப்புரவேற்பாட்டு வசதிகள் அறவேயற்ற 15,275 வறிய குடும்பங்களுக்கு (76,400 மக்கள்) கருத்திட்டத்தின் மூலம் நன்மை கிடைக்கும். இது நேரடியான இணைப்புகளாகக் கருதப்படுகின்ற அண்ணளவாக 11,247 இணைப்புக்கள் மற்றும் மரபு ரீதியானதும் இலகுபடுத்தப்பட்டதுமான குறுகிய கழிவுநீர் வலையமைப்புக்களின் நீடிப்புக்கள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட சுத்திகரிப்பு முறைமைகளுடன் கூடிய சிறியவலையமைப்புக்களுக்கான இணைப்புக்கள் மற்றும் உரிய அகற்றல் சேவைகளுடனான மேம்படுத்தப்பட்ட தளத்திலான துப்புரவேற்பாட்டை அடையப் பெறுகின்ற 4,028 வீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கும். உலக வங்கிக்கான மேற்பார்வை நிதியளிப்பு உள்ளடங்கலாக கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 797 மில்லியனாகும் என்பதோடு OBA நிதியத்தினூடாகரூபா 354 மில்லியன் உலக வங்கியினால் மீளளிப்புச் செய்யப்படும். இலங்கை அரசாங்கம் ரூபா 345 மில்லியனை வழங்கும் என்பதோடு மிகுதி ரூபா 46 மில்லியனும் நலன் பெறுனர்களிடமிருந்து அறவிடப்படும். உலக வங்கியினால் சாத்தியக்கூறுக் கற்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

# உத்தேசத் திட்டங்கள்

**குருநாகல் பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு (சீனா)**

இக் திட்டம் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் தீர்வுப் பொதியினை உள்ளடக்கியுள்ளது. குருநாகல் நகர சபைப் பிரதேசம் மற்றும் பிரதேச செயலகப் பிரதேசத்தின் ஒரு பகுதியை இக் கருத்திட்டத்தின் நீர் வழங்கல் ஆக்கக்கூறு உள்ளடக்கியதாயுள்ளது. நாளொன்றுக்கு 6,500 கன மீற்றரிலிருந்து நாளொன்றுக்கு 14,000 கனமீற்றர் வரை நீர் வழங்கல் கொள்ளளவை விரிவாக்கி 28 சதுர மைல் பிரதேசத்திலுள்ள 66,450 மக்களுக்கு சேவையாற்றவுள்ளது. மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 8,283 மில்லியனாகும். டனிடா உதவி நிறுத்தப்பட்டதன் பின்னர் மாற்றுவழி நிதி மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. சீன ஒப்பந்தக்காரரால் வடிவமைத்துக் கட்டியெழுப்புகின்ற முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது.

**தம்புள்ள பெரும்பாக நீர் வழங்கல் செயற்திட்டம்**

நாளொன்றுக்கு 30,000 கனமீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை நிர்மாணித்தல் மற்றும் விநியோக மற்றும் பிரதான அனுப்பல் குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல் கருத்திட்டத்தின் விடயப்பரப்பில் உள்ளடங்குகின்றது. தம்புள்ள நகரம் மற்றும் சுற்றுப்புறங்களிலுள்ள 60,000 மக்கள் இக்கருத்திட்டத்தின் மூலம் நன்மை பெறுவார்கள். கருத்திட்ட காலம் 3 வருடமாகும் என்பதோடு மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 10,629 மில்லியனாகும். கருத்திட்ட முன்மொழிவின் மதிப்பாய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு ஒப்பந்த உடன்படிக்கை தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவேண்டியுள்ளது.

**பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம்**

திட்ட விடயப்பரப்பானது, புதிய நீர் சுத்திகரிப்புப் நிலையத்தை நிர்மாணித்தல், (நாளொன்றுக்கு 15,000 கனமீற்றர்) பம்பி நிலையம் மற்றும் தற்போதுள்ள முறைமையைப் புனரமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல பிரதேசத்திலுள்ள ஏறத்தாழ 109,036 மக்கள் இதன் மூலம் பயனடைவார்கள். கருத்திட்ட காலம் 4 வருடங்களாகும். மொத்த மதிப்பீட்டச் செலவினம் ரூபா 8,707 மில்லியனாகும். தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கருத்திட்டத்துக்குக் கிடைத்துள்ளது. சுய விருப்பிலான முன்மொழிவு மதிப்பாய்வுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றது.

**கம்பஹா, அத்தனகல்லை மற்றும் மினுவங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற் திட்டம்**

பஸ்னாகொட நீர்த்தேக்கம் மற்றும் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியை (நாளொன்றுக்கு 22,500 கனமீற்றர் கொள்ளளவைக் கொண்ட) நிர்மாணித்தல், பிரதான அனுப்பல் குழாய் மற்றும் விநியோக - முறைமையை வழங்கல் மற்றும் இடுதல் ஆகியவற்றை கருத்திட்ட விடயப்பரப்பு உள்ளடக்குகிறது. வேயங்கொடை, அத்தனகல்ல, ஊராபொல, கம்பஹா, யக்கல, நிட்டம்புவ பிரதேசத்தில் வாழ்கின்ற ஏறத்தாழ 250,00 மக்கள் இக் கருத்திட்டத்தின் மூலம் நன்மை பெறுவார்கள். கருத்திட்ட காலம் 4 வருடங்களாகும் என்பதோடு மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 10,674 மில்லியனாகும். தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கருத்திட்டத்துக்குக் கிடைத்துள்ளது. சுய விருப்பிலான முன்மொழிவு மதிப்பாய்வுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றது.

**களுத்துறை நீர் வழங்கல் விரிவாக்கம் ~ கட்டம் 3**

குழாய்களை வழங்கல் மற்றும் இடுதல், நீர் கோபுரத்தை மற்றும் நிலநீர் தேக்கத்தை நிர்மாணித்தல் ஆகியவற்றை கருத்திட்ட விடயப்பரப்பு உள்ளடக்குகிறது. களுத்துறை, தர்கா நகர், பேருவளை மற்றும் வாத்துவை பிரதேசத்தில் வாழ்கின்ற ஏறத்தாழ 400,00 மக்கள் இக் கருத்திட்டத்தின் மூலம் நன்மை பெறுவார்கள். கருத்திட்ட காலம் 3 வருடங்களாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 1,367 மில்லியனாகும். தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கிடைத்துள்ளது. EOI பெறப்பட்டு கருத்திட்ட அமுலாக்கல் குழுவினால் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

**மாத்தளை பெரும்பாக நீர் வழங்கல் செயற் திட்டம்**

உத்தேச கருத்திட்டத்தின் மூலம் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் கொள்ளளவை நாளொன்றுக்கு 38,500 கனமீற்றர் வரை அதிகரிப்பதற்கும், 4 நில நீர்த் தேக்கங்களை (ஒவ்வொன்றும் 3,200 கனமீற்றர் கொண்ட) நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்படும். உகுவெல, மாத்தளை, யட்டவத்தை, பல்லேபொல மற்றும் இரத்தோட்டையில் வசிக்கும் ஏறத்தாழ 150,000 மக்கள் இக் கருத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள். கருத்திட்ட காலம் 3 வருடங்களாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 8,000 மில்லியனாகும். கருத்திட்டத்துக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. EOI பெறப்பட்டு கருத்திட்ட அமுலாக்கல் குழுவினால் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

**அலவ்வ ~ பொல்கஹவெல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற் திட்டம்**

நாளொன்றுக்கு 12,000 கனமீற்றர் உள்வாங்கு கட்டமைப்பு, நாளொன்றுக்கு 8,000 கனமீற்றர் முழுமையான நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி ஆகியவற்றை நிர்மாணித்தல், 35 கிலோ மீற்றர் மற்றும் 450 கனமீற்றர் விநியோக வலையமைப்பு, உயர்த்தப்பட்ட நீர் கோபுரம் ஆகியவற்றை திட்டம் திட்டமிட்டுள்ளது. பொல்கஹவெல மற்றும் அலவ்வ பிரதேசத்தில் வாழ்கின்ற ஏறத்தாழ 250,00 மக்கள் இக் கருத்திட்டத்தின் மூலம் நன்மை பெறுவார்கள். கருத்திட்ட காலம் 4 வருடங்களாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 11,807 மில்லியனாகும். திட்டம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மதிப்பீட்டுக்கு உள்ளாகின்ற கட்டத்தில் உள்ளது. EOI பெறப்பட்டு கருத்திட்ட அமுலாக்கல் குழுவினால் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

**படல்கும்புர அலுபொத்த ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற் திட்டம்**

நாளொன்றுக்கு 3,300 கனமீற்றர் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி, இரண்டு நில நீர்த் தேக்கங்கள் ஆகியவற்றை நிர்மாணித்தல், 18 கிலோ மீற்றர் நீளமான சுத்திகரிக்கப்படாத பிரதான நீர்க் குழாய் மற்றும் பிரதான விநியோக குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல் ஆகியவற்றை கருத்திட்டத்தின் விடயப்பரப்பு உள்ளடக்குகின்றது. பியஸ்ஸ எல்ல மற்றும் மில்ல எல்ல பிரதேசத்தில் வசிக்கும் ஏறத்தாழ 2,600 மக்கள் இக் கருத்திட்டத்தின் மூலம் நன்மை பெறுவார்கள். கருத்திட்ட காலம் 2 வருடங்களாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 1,400 மில்லியனாகும். தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கிடைத்துள்ளதோடு நிதியளிப்புக் கடப்பாடு கிடைக்கவில்லை.

**வரகபொல நீர் வழங்கல் செயற் திட்டம்**

நாளொன்றுக்கு 16,000 கனமீற்றர் உள்வாங்கு அமைப்பை நிர்மாணித்தல், பம்பி நிலையம், பிரதான அனுப்பல் குழாய்கள் மற்றும் விநியோக குழாய்களை வழங்குதல் மற்றும் இடுதல், மின்னியல் மற்றும் பொறியியல் கருவிகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல் ஆகியவற்றை திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. வரகபொல அலவ்வ, கலிகமுவ மற்றும் ருவன்வெல்ல பிரதேசத்தில் வசிக்கும் ஏறத்தாழ 25,000 மக்கள் இக் கருத்திட்டத்தின் மூலம் நன்மை அடைவார்கள். கருத்திட்ட காலம் 3 வருடங்களாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 3,442 மில்லியனாகும். தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் EOI அனுமதி கிடைத்துள்ளது.

**மொனராகல ~ புத்தள ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற் திட்டம்**

நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி (நாளொன்றுக்கு 3,500 கனமீற்றர்), உள்வாங்கு அமைப்பு (நாளொன்றுக்கு 4,800 கனமீற்றர்) ஆகியவற்றை நிர்மாணித்தல், அனுப்பல் மற்றும் விநியோக வலையமைப்பை வழங்குதல் மற்றும் இடுதல், பம்பிகளை பொருத்துதல் ஆகியவற்றை கருத்திட்ட விடயப்பரப்பு உள்ளடக்குகின்றது. படல்கும்புர, புத்தல, வெல்லவாய, மொனராகல, மடுல்ல பிரதேசங்களில் வசிக்கும் ஏறத்தாழ 26,000 மக்கள் இக் கருத்திட்டத்தின் மூலம் நன்மை அடைவார்கள். கருத்திட்ட காலம் 2 வருடங்களாகும். மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 1,955 மில்லியனாகும். தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி கிடைத்துள்ளது. EOI பெறப்பட்டு கருத்திட்ட மதிப்பாய்வுக் குழுவினால் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

# திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல்

**நீர் வழங்கல் திட்டங்கள்**

நீர் வழங்கல் கருத்திட்ட நிலையப் பொறுப்பதிகாரியினால் புதிய (அல்லது விரிவாக்கல்) நீர் வழங்கல் திட்டங்களுக்கான தேவை முதலில் உணரப்பட்டது. குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்காக இப் பிரதேசங்களில் ஏனைய பாரிய கருத்திட்டங்களையும் அமுலாக்க வேண்டியுள்ளது அவசியமாகும். இதற்கிணங்க குழாய் நீர் வழங்கலுக்கான கேள்வி மதிப்பிடப்பட்டு, நீர் வழங்கல் திட்டங்களுக்கான முன்மொழிவுகள் பிராந்திய சேவை நிலையங்களுக்கு சமா்ப்பிக்கப்பட்டுள்ளன. முன்மொழியப்பட்ட கருத்திட்டங்களின் நிதி மற்றும் தொழில்நுட்ப ரீரியிலான நிலைப்பாட்டைக் கண்டறிவதற்கான பூர்வாங்க சாத்தியக் கூறுகக் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பின்னர் ஆரம்ப கருத்திட்ட முன்மொழிவ தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவுக்குச் சமா்ப்பிக்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட அளவீடுகளின் அடிப்படையில் துறைவாரியான திட்டமிடல் நோக்கத்தின் பொருட்டு புதிய கருத்திட்டங்கள் மாகாண மற்றும் நாடளாவிய ரீதியில் தரப்படுத்தப்பட்டு அங்கீகாரமளித்தல், நிதியியல் விசாரணை மற்றும் அமுலாக்கலின் பொருட்டு முன்னுரிமையளித்தலுக்காகப் பயன்படுத்தப்பட்டது.

அமுலாக்கப்படவுள்ள கருத்திட்டங்களின் பாரிய வடிவமைத்தல்கள் மற்றும் சாத்தியக்கூறுக் கற்கைகள் தலைமை அலுவலகத்தின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. வெளிநாட்டு நிதியங்களைப் பயன்படுத்தி அமுலாக்கப்படுகின்ற கருத்திட்டங்களுடன் தொடர்புடைய வடிவமைத்தல்களின் மீளாய்வுக்கு இப் பிரிவு குறிப்பாகப் பொறுப்பாயுள்ள அதேவேளை ஒரு சில வெளிநாட்டு, அதேபோன்று இலங்கை அரச நிதியளிப்புக் கருத்திட்டங்களின் விரிவான வடிவமைத்தல்களையும் மேற்கொள்கின்றது. அத்தகைய செயற்பாடுகளின் பொழிப்பை பின்வரும் பந்திகள் விளக்குகின்றன.

2010ஆம் ஆண்டு காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் பணிகளின் மொத்த நிர்மாணிப்புப் பெறுமதி ரூபா 3,101.7 மில்லியனாக உள்ள அதேவேளை, இப் பிரிவின் மொத்த தொழிற்பாட்டுச் செலவினம் ரூபா 103.7 மில்லியனாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணிப்புப் பெறுமதியைக் கொண்ட வேலைகள், வடிவமைத்துக் - கட்டியெழுப்புகின்ற வெளிநாட்டு நிதியளிப்பிலான பாரிய அளவிலான வடிவமைத்தல் மீளாய்வுகளுக்கான பாரிய உள்ளீடுகளின் வழங்கல்களையும் திட்டமிடல்/சாத்தியக்கூறுப் பணிகளையம் உள்ளடக்கவில்லை.

**2010ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல் பணிகள் வருமாறு:**

கொழும்பு கிழக்கு நகரங்களின் நீர் வழங்கல், கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல், கொழும்பு நீர் வழங்கல் விநியோக மினுவங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல், கொழும்பு நீர் வழங்கல் விநியோக முறைமையின் மேம்பாடு, ஜல்தர - ரணால நீர் வழங்கல் கட்டம் 2, களுத்துறை நீர் வழங்கல் விரிவாக்கல் - கட்டம் 3, களனி வலது கரை நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 2, கொழும்பு பெரும்பாக பிரதேசத்தின் அனுப்பல் முறைமையின் பகுப்பாய்வு மற்றும் கொழும்பு நகர விநியோக முறைமை, வீ ஓயா நீா்த்தேக்கம் (களனி கங்கையின் மேல் நீரோட்டப் பகுதியில் 11 மில்லியன் கன மீற்றா் கொள்ளளவு), உலக வங்கி உதவியளிப்பிலான அவசர வடக்குப் புனரமைப்புக் கருத்திட்டத்தின் (ENREP) கீழான அடம்பன், விடத்தல்தீவு மற்றும் தேவன்பிட்டி நீர் வழங்கல், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழான மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேச அவசர திட்டம் (CAREP) முல்லைத்தீவு, மாங்குளம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் கருத்திட்டங்கள்.

**2010ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட வடிவமைப்பு மீளாய்வுப் பணி**

- கொழும்பு பெரும்பாக நீர் புனரமைப்புக் கருத்திட்டத்தின் கட்டமைப்பு, நீரியல், விநியோகம் மற்றும் அனுப்பல் முறைமை மற்றும் நடைமுறை வடிவமைத்தல்களின் மீளாய்வு, நீர்கொழும்பு நீர் வழங்கல் கருத்திட்டத்தின் விரிவாக்கம், களனி வலது கரை நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக் திட்டம், கிரிந்தி ஓயா நீர் வழங்கல் திட்டம், அம்பாறை மாவட்டத்தின் கிழக்குக் கரையோர நகரங்களின் நீர் வழங்கல் திட்டம் - படிநிலை 3, திருகோணமலை பெரும்பாக ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் மற்றும் ஆ.அ.வ. யின் 4வது கருத்திட்டத்தின் கீழான பொலநறுவை நீர் வழங்கல்.
- பொலநறுவை நீர் வழங்கல் தவிர்ந்த ஆயினும் ஆ.அ.வ. உதவியுடனான உலர் வலய நகர நீர் வழங்கல் திட்டம் உட்பட மேலேயுள்ள பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டங்களின் தொழில்நுட்ப, மின்னியல் மற்றும் தன்னியக்க வடிவமைப்புகளின் மீளாய்வு.

**2010ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ஒருசில விரிவான வடிவமைத்தல்கள் வருமாறு:**

- மாகும்புரவில் வெளிச் சுற்றுப் பாதையை சேர்த்துக்கொள்ளும் பொருட்டு கலட்டுவாவ - தெஹிவலை அனுப்பல் (N33) குழாயை மீள்-வழிப்படுத்தல் மற்றும் இடம் மாற்றுதல், மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டுத் துறைக் கட்டிடத்தொகுதி உள்ளடங்கலாக தியகம நகர அபிவிருத்திக்கான நீர் வழங்கல் மற்றும் மேல் மாகாணத்தில் மாலம்பேயில் உள்ள தகவல் தொழில்நுட்பப் பூங்காவுக்கான நீர் வழங்கல் வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்.



*மாகும்புறவில் N33 பிரதான குழாயின் மீள்-வழிப்படுத்தல்*

- யட்டியன்தோட்ட நீர் வழங்கல் திட்டத்தின் உள்வாங்கல் அமைவிடத்தின் ஆற்றங்கரைப் பாதுகாப்பு, எம்பிலிபிட்டிய நீர் வழங்கலுக்கான சந்திரிக்கா வாவியின் புதிய உள்வாங்குக் கட்டமைப்பு மற்றும் பிரவேசப் பாலம், தென்/கிழக்கு வலயத்தினுள் பிரச்சினைகளுக்குட்பட்டிருந்த பிரதேசங்களில் அவசர நீர் வழங்கல் திட்டங்களின் கீழ் செயற்படுத்தப்பட்ட ஈச்சிளம்பத்து நீர் வழங்கல் திட்டம்



*ஈச்சிளம்பத்து நீர் வழங்கலுக்கான உள்வாங்கு அமைவிடம்*



ருகுணுபுர நீர் வழங்கல் திட்டத்துக்கான, ரிதியகமகுளத்திலிருந்தான கால்வாயிலுள்ள உத்தேச உள்வாங்கு அமைவிடம்

- ENRePயின் கீழான அடம்பன், விடத்தல்தீவு மற்றும் தேவன்பிட்டி நீர் வழங்கல், CAREPஇன் கீழான பருத்தித்துறை நீர் வழங்கல், வடக்கு/மத்திய வலயத்தில் ஆ.அ.வ.யின் உதவியின் கீழான உலர் வலய நகர நீர் வழங்கல் கருத்திட்டத்தின் முருங்கன்-மன்னார் பிரதான அனுப்பல் குழாய்



முருங்கன் வயல் கிணறு - மன்னார் நீர் வழங்கலுக்கான மூலம்

### 2010ஆம் ஆண்டினுள் ஒரு சில சக்தி சேமிப்பு முயற்சிகள்

- JICA நிதியளிப்புடனான கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் உஹன, தமன மற்றும் ஹிங்குரான நீர் வழங்கல் திட்டங்களின் நேரடியான நீர் பம்பி விநியோக முறைமைக்க பல்வேறான விரைவூட்டல் கருவிகள் இணைக்கப்படுவதை வடிவமைத்தல்.
- கொழும்பு கிழக்கு நகரங்களின் நீர் வழங்கல் கருத்திட்டத்திற்காக கலட்டுவான மற்றும் லபுகமவிலிருந்து கிடைக்கின்றதான ஈர்ப்புவிசை நீர் வழங்கல் தெரிவுகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுக் கற்கையை ஆரம்பித்து வைத்தல்.
- கலட்டுவாவ மற்றும் லபுகம முறைமையில் கிடைக்கின்றதான சக்தியின் உச்ச பயனைப் பெறும் பொருட்டு கொழும்பு ஈர்ப்புவிசை முறைமைக்கான அனுப்பல் மாதிரியொன்றைத் தயாரித்தல்.
- சக்திச் செலவையும் அதேபோன்று நீர் அனுப்பல் செலவையும் குறைப்பதற்காக உத்தேச கொலொன்னாவ நீர் தேக்கத்தின் ஊடாக அம்பதலேயிலிருந்து மாளிகாகந்தை வரை புதிய அனுப்பல் குழாயை வடிவமைத்தல்.

### குழாய் நீர் வழங்கல் திட்டங்களின் திட்டமிடல் மற்றும் வடிவமைத்தலிலான பொதுவான பிரச்சினைகள்

- சுய விருப்பிலான வடிவமைத்துக் கட்டியெழுப்பும் கருத்திட்டங்களின் வடிவமைத்தல்கள் மீளாய்வு செய்தல், வேலைகளின் சிக்கலான தன்மை மற்றும் மிகக் குறைந்ததொரு காலம் வழங்கப்பட்டுள்ளமையினால், அனுபவம் வாய்ந்த வடிவமைப்புப் பொறியியலாளர்கள் தேவைப்படல். அநேகமான புதிய கருத்திட்டங்கள் வடிவமைத்துக் கட்டியெழுப்புகின்ற போக்கை தற்போது கொண்டுள்ள அதேவேளை மிகக் குறைந்தளவு கருத்திட்டங்களே விரிவான வடிவமைத்தல்களைக் கொண்டதாயுள்ளன. ஆதலால் பொறியியலாளர்களும் ஏனைய நிபுணர்களும் வடிவமைத்தல் தொடர்பில் எவ்வித அனுபவத்தையும் பெறுகின்றார்களில்லை.
- தே.நீ.வ.வ.ச.யின் பணியாளர்களால் முன்மொழியப்படும் மாற்றங்களை ஏற்றுக்கொள்வதற்கு கருத்திட்ட மதியுரையாளர்கள் விரும்புவதில்லை. வடிவமைப்பாளர்களால் முழுமையான வரைதல்கள் மற்றும் முழுமையான வடிவமைப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவதிலுள்ள தாமதம் மற்றும் மதியுரையாளர்களால் மேற்கொள்ளப்படும் வேலைகளின் தரம் மோசமானதாயிருத்தல்.
- அங்கீகரிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களின் திட்டமிடல் பணிகளை பூர்த்தி செய்வதற்கு மற்றும் விரிவான வடிவமைத்தல்களை ஆரம்பிப்பதற்கான பரிசோதனைகளையும் ஏனைய ஆரம்பப் பணிகளையும் மேற்கொள்வதற்கான உள்ளூர் நிதியங்களின் பற்றாக்குறை.
- சுத்திகரிக்கப்படாத நீரை உறிஞ்சியெடுப்பதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதிலுள்ள தாமதம் மற்றும் சிரமம்.
- புதிதாக அடைக்கப்பட்ட நீர்த் தேக்கங்கள் மற்றும் சுத்திகரிக்கப்படாத நீர் களஞ்சியப்படுத்தலின் மேம்பாடு உள்ளடங்கலாக நீர் மூல மேம்பாட்டுக்கான திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல்களுக்கான நிபுணர்களின் பற்றாக்குறை.
- நில நீர்த்தேக்கங்கள், கோபுரங்கள் மற்றும் சுத்திகரிப்புப் பொறிகளுக்கான அமைவிடங்களைப் பெறுதல் மற்றும் உரிய காலத்தில் பொருத்தமான காணிகளைச் சுவீகரித்தல்.
- வீதிகளில் குழாய்களை இடுவதற்காக RDA/PRDA அங்கீகாரத்தைப் பெறுதல்.

### 2011இல் புதிதாகக் கவனம் செலுத்தப்படவுள்ள ஒரு சில விடயங்கள்:

- அதிகளவில் விரிவான வடிவமைப்புப் பணிகளுக்கு கருத்திட்ட நிதியளிப்பினை உறுதி செய்வதற்கான புதிய உபாய முறைகளை ஆரம்பித்து வைத்தல். அடையாளங் காணப்பட்ட உபாயமுறைகள் தொடர்பில் தே.நீ.வ.சபை சுயவிருப்புடனான முன்மொழிவாளர்களுடன் உடன்பட்ட செலவினத்தில் விரிவான வடிவமைப்புகளை மேற்கொள்வதற்கு பேச்சுவார்த்தை நடத்துதல் மற்றும் கருத்திட்டத்திற்கு உள்நாட்டு வங்கிகளிலிருந்து நிதியங்களைப் பெறுவதற்குள்ள சாத்தியப்பாடுகளைப் பற்றிக் கண்டறிதல்.
- வெளியீடுகளின் (கொள்வனவு வழங்கல் ஆவணங்கள், விளக்கமான வரைதல்கள், அளவைப் பட்டியல்கள், செலவின மதிப்பீடு) தரத்தினை மேம்படுத்தல்.
- வடிவமைப்புக் கைநூல் மற்றும் நடைமுறைக் கைநூல் ஆகியவற்றின் எஞ்சியுள்ள இற்றைப்படுத்தல்களுக்கான நிதியளிப்பை உறுதிசெய்தல் மற்றும் தேவையான வளங்களைப் பெறுவதில் ஈடுபடுதல்.
  உரிய வகையிலான அனைத்து வேலைகளுக்குமாகத் தயாரிக்கப்பட வேண்டியுள்ள அளவைப் பட்டியல்களை அச்சிடல்
- நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக்கான கட்டட அட்டவணைக் கட்டணங்களை அமைப்பதற்கான வேலைக் கற்கைகளின் அடிப்படையிலான கட்டண அட்டவணைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன.
- வரைஞர்களுக்கான விரிவான கைநூலைத் தயாரித்தல்.

**கழிவுநீரமைப்புத் திட்டங்கள்**
அனைத்து கழிவுநீரமைப்புத் திட்டங்களினதும் வடிவமைப்பு மற்றும் சாத்தியக் கற்கைகளின் அமுலாக்கல் தலைமை அலுவலகத்தின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

**2010ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட திட்டமிடல் பணிகள்**
கதிர்காமம் புண்ணிய நகர கழிவு நீரமைப்புத் திட்டத்தின் விரிவாக்கத்திற்கும் காத்தான்குடி கழிவுநீர் அகற்றல் கருத்திட்டத்திற்கும் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டது. ஶ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே கழிவுநீர்த் திட்டம், நீர்கொழும்பு மற்றும் காலி கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமை மற்றும் அம்பாந்தோட்டை கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமை ஆகியவற்றிற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டது. ஜா-எல/ஏக்கல-இரத்மலான/மொரட்டுவை படிநிலை 1 கட்டம் 2 மற்றும் கதிர்காமம் புண்ணிய நகர கழிவு நீர் அகற்றுதல் முறைமை ஆகியவற்றுக்கான சாத்தியக் கூறுக்கற்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு கருத்திட்ட எண்ணக்குழு தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. மஹரகம மற்றும் பொரலஸ்கமுவ நகர சபைப் பிரதேசத்திற்கான கழிவுநீர் அகற்றல் முறைமை, தெஹிவலை/கல்கிசைக்கான குழாய் கழிவுநீரமைப்பு உள்ளடக்கத்தின் விரிவாக்கத்திற்கான திட்டம், சிலாபம் கழிவுநீர் அகற்றல் முறைமை மற்றும் புத்தளம் கழிவுநீர் அகற்றல் முறைமை ஆகியவற்றுக்கான சாத்தியக்கூறுக் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2010ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட வடிவமைப்பு மீளாய்வுப் பணிகள்

ஜா-எல/ஏக்கல-இரத்மலானை/மொரட்டுவ கழிவு நீர் அகற்றல் திட்டம் படிநிலை 1 கட்டம் 2, மற்றும் கொழும்பு - தென் நீரேந்து பிரதேசம் கழிவுநீரமைப்பு புனரமைப்புக் திட்டம், கண்டி நகர கழிவு நீர் அகற்றல் மற்றும் குருநாகல் பெரும்பாக நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் ஆகிய வெளிநாட்டு நிதியளிப்பிலான கருத்திட்டங்களுக்கான விரிவான வடிவமைத்தல்கள் மீளாய்வு செய்யப்பட்டு நிபுணத்துவ உதவிகள் வழங்கப்பட்டன.

**2010ஆம் ஆண்டினுள் கழிவுநீரமைப்புத் திட்டங்களின் திட்டமிடல் மற்றும் வடிவமைப்புகள் தொடர்பில் நடைபெற்ற விசேடமான சம்பவங்கள்**

- 2010-2015இற்கான துப்புரவேற்பாட்டு அபிவிருத்தித் திட்டம் இற்றைப்படுத்தப்படல்.
- 2010ஆம் ஆண்டுக்கான கழிவுநீரமைப்பு பணிகளுக்கான அறவீட்டுப் புத்தகத்தைத் தயாரித்தல்.
- கழிவு திடப்படுத்துல் தடாக முறைமைக்கான தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புக் கைநூலை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில்தயாரித்தல்
- தலத்திலான துப்புரவேற்பாட்டு வேலைகளுக்கான புதிய முறையிலான வரைவுகளின் அபிவிருத்தி.
- வாடிக்கைக்காரர்களால் எதிர்பார்க்கப்படும் தொழில்நுட்ப உதவிகளில் சார்ந்துள்ள பல்வேறு நோக்கெல்லைகளைக் கொண்ட சாக்கடை வேலைகளுக்கான பதினொரு மீள்செறிவூட்டல் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. நான்கு கருத்திட்டங்களில் 75%-85%க்கு மேற்பட்ட முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. ஆண்டினுள் வழங்கப்பட்ட ஆலோசனைச் சேவைகளுக்காக 2010 செத்தெம்பர் மாதமளவில் மீள்செறிவூட்டல் கருத்திட்டங்களிலிருந்து ரூபா 4.4 மில்லியன் வருமானமாகப் பெறப்பட்டது.
- 2011 ஏப்பிரல் மாதத்தில் நடத்தப்படவுள்ள 4வது SACOSAN செயலமர்வுக்கான ஒழுங்கமைப்புகளுக்கு பங்களிப்புச் செய்யப்பட்டது.

**பிராந்திய உதவி நிலையங்கள்**
தே.நீ.வ.வ.சபையின் பத்து பிராந்திய உதவி நிலையங்களாலும் புதிய கருத்திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. கருத்திட்ட மீளாய்வுக் குழுவின் பிரதிநிதிகள் என்ற வகையில், பிராந்திய உதவி நிலையங்களின் பணியாளர்கள் புதிய கருத்திட்டங்களின் திட்டமிடல் மற்றும் ஒழுங்குமுறையாக்கல் நடைமுறைகளை நெருக்கமாயிருந்து இணைப்பாக்கம் செய்கின்றனர். அத்துடன் தற்போதுள்ள நீர் வழங்கல் மற்றும் கழிவுநீரமைப்புத் திட்டங்களையும் அவர்கள் தொழிற்படுத்தியும் பராமரித்தும் வருகின்றனர். உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வருவாயற்ற நீரைக் குறைத்தல், வலுசக்தி முகாமைத்துவம் மற்றும் நிறுவன அபிவிருத்திப் பணிகள் அத்துடன் பிராந்திய உதவி நிலையங்களின் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் துறை ஆகியன பொருத்தமான பகுதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் உள்ளடக்கப்படாதுள்ள ஏனைய சில முக்கியமான தகவல்கள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

## பிராந்திய உதவி நிலையங்கள்

| மாகாணம்/பி.உ.நி. | திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மத்திய | 164,259 |
| கிழக்கு | 95,169 |
| வடமத்திய | 62,579 |
| வடமேல் | 40,947 |
| வடக்கு | 6,456 |
| சப்பிரகமுவ, ஊவா | 126,035 |
| தென் | 203,820 |
| மேல் மத்திய | 349,372 |
| மேல் வடக்கு | 141,601 |
| மேல் தெற்கு | 163,335 |
| மொத்தம் | 1,353,573 |



**மேல்-மத்திய**

புனரமைப்பு நிதியங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒருசில முறைமை மேம்பாடுகள் முன்னேற்றம் கண்டு வருகின்றன. அவையாவன: கொழும்பு நகரத்தில் நீர்க் குழாய்களில் படிந்துள்ள திடப் படிமங்களை அகற்றுதல், பெத்தகானவில் வார்க்கப்பட்ட இரும்பினாலான CI குழாய்களைப் பதிலூடு செய்தல், கடுவல, ரத்னாராம வீதி, மற்றும் மொரகஸ்முல்ல விநியோக முறை மேம்பாடு, குடிநீர் பரிசோதனை CAD பகுப்பாய்வுக்குப் பயன்படுத்தக்கூடிய கொழும்பு நகர குழாய் வலையமைப்பு மாதிரியின் தயாா்படுத்தல் மற்றும் கேள்விக் கணிப்பீடு நடைபெற்று வருகின்றது. முறைமை மேம்பாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்ட நான்கு புதிய முன்மொழிவுகள் ஆரம்ப கட்டத்தில் உள்ளன. ஹன்வெல்ல மற்றும் ஜல்தர-ரணால சிறு வீதிகளில் விநியோக குழாய்களின் நீடிப்பு/இடைவெளிகளை நிரப்பல், குழாய் இடுதல்களுக்கான அகழ்வுகளுக்கு மற்றும் மீள நிரப்புதல்களுக்கு சமுதாய பங்களிப்பைப் பயன்படுத்துதல் முறையே 100% மற்றும் 65% பூர்த்தியடைந்துள்ளது. நான்கு மீள்செறிவூட்டல் வேலைகள் பொறுப்பேற்கப்பட்டு அதில் இரண்டு பூர்த்தியடைந்துள்ளதோடு இரண்டு நடைபெற்று வருகின்றது.

அவசர கசிவுத் திருத்த வேலைகளுக்கு உரிய அதிகார சபைகளால் வீதி அகழ்வு அனுமதி வழங்குவதிலுள்ள தாமதமானது கொழும்பு நகரத்தில் பொதுவான தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரச்சினையாக உள்ளது.

**மேல் - தெற்கு**

களுத்துறை மற்றும் பாணந்துறை-ஹொரன பிராந்தியத்தில் பல்வேறு விட்டங்களைக் கொண்ட முறையே ஏறத்தாழ 16.5 கி.மீ. நீளமான நீடிப்பு/இடைவெளி நிரப்பு விநியோகக் குழாய்கள் இடப்பட்டுள்ளன. 33 குழாய் நீடிப்பு மீள்செறிவூட்டல் பணிகளில் 21 பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு ஏனையவை நடைபெற்று வருகின்றது.

**மேல் - வடக்கு**

கட்டானைப் பிரதேசத்திற்கான புதிய கருத்திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு கருத்திட்ட மதிப்பாய்வுக் குழுவின் PAC அனுமதி பெறப்பட்டது. ரூபா 23.6 மில்லியன் செலவில் நுகே வீதி மற்றும் துட்டுகெமுனு மாவத்தையில் குழாய்களைப் பதிலீடு செய்தல், திவுலபிட்டிய நீர் வழங்கல் திட்டத்திற்கான 100 கனமீற்றர் கொள்ளளவைக் கொண்ட நீர் சேகரிப்புக் கிடங்கை நிர்மாணித்தல் ஆகியன புனரமைப்பு நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சில முறைமை மேம்பாடுகளாகும். நீர்க்குழாய் வழிகளை இடமாற்றுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்ட மூன்று மீள்செறிவூட்டல் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. மாவட்ட சபை நிதியத்துடன் பியகமவிலும் மாகாண சபை நிதியத்துடன் களனி, மஹர,வத்தளை மற்றும் ஜா-எலயிலும் நீர்க்குழாய் நீடிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ரண் அருண நிதியத்தின் மூலம் ஏறத்தாழ 26 கி.மீ. குழாய் இடுதல்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

**தென் மாகாணம்**

தென் பிராந்திய சேவை நிலையம் எட்டு சாத்தியக்கூறுக் கற்கைகளை மேற்கொண்டு முன்மொழிவுகளைத் தயாரித்தது. இதில் 6 அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆறு நீர் வழங்கல் கருத்திட்டங்களும் வடிவமைப்புக் கட்டத்தில் உள்ளதோடு நிதியளிப்புகள் இனங்காணப்பட வேண்டியுள்ளன. ஆறு மீள்செறிவூட்டல் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு, மூன்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தென் மாகாணத்தில் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளால் முகாமை செய்யப்படுகின்ற 330 சிறிய நகரங்களின் நீர் வழங்கல் திட்டங்களுக்கும் பிராந்திய நீர் வழங்கல் அலகுகளின் ஊடாக தேவையான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

**வடமேல் மாகாணம்**

2010 ஒக்ரோபர் மாதத்தில் உடப்புவ நீர் வழங்கல் திட்டம் பகுதியளவில் இயங்க வைக்கப்பட்ட அதேவேளை 2010 திசெம்பரில் மாவத்தகம நீர் வழங்கல் திட்டம் மாகாண சபையிடமிருந்து பொறுப்பேற்கப்பட்டது. ஆறு புதிய கருத்திட்டங்கள் திட்டமிடல் கட்டத்தில் உள்ளதோடு இதில் குருநாகல் பெரும்பாக நீர் வழங்கல் திட்டத்திற்கான நிதி மூலங்கள் அடையாளங் காணப்பட்டு கருத்திட்ட ஆக்கக் கூறுகளுடனான பேச்சுவார்கள் பூர்த்தி செய்யப்பட்டன. UIDE நிதியளிப்பின் கீழ் பொல்கஹவெல பொதி சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் அனைத்து பொருட்களும் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்துதல்களில் 50% பூர்த்தி செய்யப்பட்டது. குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் முறையே 13 மற்றும் 8 விநியோகக் குழாய் நீடிப்புகள்/இடைவெளி நிரப்பல்கள் இடப்பட்டுள்ளன. மீள்செறிவூட்டல் பணிகளாக 8 நீர்க்குழாய் நீடிப்புகளும் லுனுவில தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்திற்கான நீர் வழங்கலும் பொறுப்பேற்கப்பட்டன. புனரமைப்பு நிதியத்தின் மூலம் 9 நீர் வழங்கல் திட்டங்களுக்கான முறைமை மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**வடமத்திய மாகாணம்**

அனுராதபுர மாவட்டத்தில் பதினொரு புதிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள் பல கட்டங்களில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. பதவிய மற்றும் சிறிபுர பிரதேசத்தின் 42,000 மக்களுக்கான பதவிய நீர் வழங்கல் திட்டம், மதவாச்சி, கெபித்திகொல்லாவ மற்றும் பதவிய பிரதேசத்தின் 142,000 மக்களுக்கான போத்தல் நீர் திட்டம் ஆகியன வடிவமைத்தலின் இறுதிக் கட்டத்தில் உள்ளன. அதேபோன்று பொலனறுவை மாவட்டத்துக்கான பத்து புதிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள் பல கட்டங்களில் கீழ் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில், பிம்புருத்தேவ, களுகெலே, சேனபுர, மனம்பிட்டி, வெலிகந்த மற்றும் திம்புலாகல போன்ற சிறிய நகரங்களுக்கான ஆறு கருத்திட்டங்களின் முன் சாத்தியக்கூறு அறிக்கைகளைத் தயாரித்தல் நடைபெற்று வருகின்றது.

ஆண்டினுள் விசேட நிகழ்வுகள் வருமாறு: திரப்பனை நீர் வழங்கல் திட்டத்தை ஆரம்பித்து வைத்தல், பிராந்திய உதவி நிலையப் பணியாளர்கள், வடமத்திய மாகாண சமுதாய மட்டத்திலான அமைப்புகள் மற்றும் பிளான் ஸ்ரீலங்கா போன்ற ஏனைய அமைப்புகளின் பங்களிப்புடன் நீர் பாதுகாப்பு தொடர்பிலான பொதுமக்கள் விழிப்புணர்வூட்டல் பேரணி உள்ளடங்கலாக 2010 திசெம்பரில் நீர் வாரம் கொண்டாடப்படுதல்.

**மத்திய மாகாணம்**

ஆண்டினுள்ளான ஒருசில விசேட நிகழ்வுகள் வருமாறு: கம்பொல நீர் வழங்கல் திட்டத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்தல், நீர்மானி திருத்தல்கள் மற்றும் பரிசோதனை அலகை நடைமுறைப்படுத்தல், “தயட்ட கிருள” கண்காட்சியில் பங்கேற்றலும் அதில் அமைப்புகளுக்கு மத்தியிலான கண்காட்சிக் கூடங்கள் போட்டியில் 4வது இடத்தை வென்றமை, பாதுகாப்புப் படையினருக்கு (பொலிஸ், இராணுவம் மற்றும் சனாதிபதி பாதுகாப்புப் பிரிவு) குடிநீர் வழங்கல் மற்றும் நீர்த் தாங்கிகளை வழங்கல், 2010 பெப்ருவரியில் “தயட்ட கிருள” கண்காட்சிக்கும் 2010 ஆகஸ்டில் ‘தலதா பெரஹர’வுக்கும் வந்திருந்த பொலிஸார் தங்கியிருந்த (அண்ணளவாக 5000 பேர்) அனைத்து



*நீர் பாதுகாப்பு வாரத்திற்காக நடத்தப்பட்ட பேரணியின் ஒரு பகுதி*

பாடசாலைகளுக்கும் பௌசர்கள் மூலமும் தொடர்ச்சியாகவும் நீர் வழங்கல்.

**சப்பிரகமுவ மற்றும் ஊவா மாகாணங்கள்**

வரகாபொல மற்றும் ருவன்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டங்கள் மற்றும் சப்பிரகருவ பல்கலைக் கழகத்திற்கான நீர் வழங்கல்களுக்கான திட்டமிடல் பணிகள் சாத்தியக்கூறுக் கற்கைகள் நடைபெற்ற வருகின்றன. எம்பிலிப்பிட்டிய, பெல்மடுல்ல, இரத்தினபுரி, உடவலவை, பலாங்கொடை, மொனராகலை மற்றும் பதுளை நீர் வழங்கல் திட்டங்களுக்கான (முறையே 27, 3, 1.3, 0.3, 10, 48.5 மற்றும் 5.5) விநிளோக நீர்க் குழாய்களின் நீடிப்பு/இடைவெளிகள் இடப்பட்டன. தீவெல/பல்லெகம மற்றும் அலகம/வரகபொல சிறு நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணிப்பு, கேகாலை மழைநீர் நீர் வழங்கல் திட்டம் மற்றும் பின்னவல மிருகக் காட்சி சாலைக்கான நீர் வழங்க் ஆகிய ஏனைய மீள்செறிவூட்டல் கருத்திட்டங்களாகும்.

ஆண்டினுள்ளான விசேட நிகழ்வுகள் வருமாறு: கொடகவெல நீர் வழங்கல் திட்டத்தை திறந்து வைத்தல், பெல்மடுத்த நீர் வழங்கல் திட்டத்தின் நீர் மூலமான கிரிந்திஎல்ல பிரதேசத்தில் 200



*நீர்மானி திருத்த மற்றும் பரிசோதனை அலகு*



*2010 "தயட்ட கிருள"வி தே.நீ.வ.வ.ச.யின் காட்சிக் கூடம்*

ஏக்கர்களை நீரேந்து பிரதேசமாக ஒதுக்குதல் மற்றும் 2,500க்கு மேற்பட்ட மரங்களை அப் பிரதேசத்தில் நடுதல், சப்பிரகமுவ மற்றும் ஊவா பிராந்திய சேவை நிலையத்தைத் திறந்து வைத்தல், மொனராகலை பிராந்திய அலுவலகத்தில் பிரித் ஓதுதல் மற்றும் தானம் வழங்குதல் மற்றும் "தயட்ட கிருள 2011"க்காக புத்தள நீர் வழங்கல் திட்டத்தின் கொள்ளளவு மற்றும் நீர் தரத்தை மேம்படுத்துவதற்காக 5 மாத கால கட்டத்தினுள்ளான விசேட திட்டம்.

**வட மாகாணம்**

UNICEF நிதியளிப்பின் கீழான மேம்பாடுகளில் குறிப்பிடத்தக்கவையாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கைதடி நீர் வழங்கல் திட்டம் இயங்க வைக்கப்படுதலும் வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் நீர் வழங்கல் திட்டம் பூர்த்தி செய்யப்படுதலும். 2010ஆம் ஆண்டினுள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் அண்ணளவாக ரூபா 32 மில்லியன் செலவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் (ENReP) நிதியளிப்பின் ஊடாக ஒன்பது புதிய கருத்திட்டங்கள் கொள்வனவு வழங்கல் கோரல் கட்டத்தில் உள்ளன. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கீழ் மன்னார் மாவட்டத்தின் அடம்பன் பிரதேச செயலாளர் பிரிவில் பள்ளிமுனை நீர் வழங்கல் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியளிப்பின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை நீர் வழங்கல் திட்டம் கொள்வனவு வழங்கல் கட்டத்தில் உள்ளதோடு 2010ஆம் ஆண்டினுள் அண்ணளவாக 1 மில்லியன் செலவிடப்பட்டது. ய.ச.கூ.மு.யின் நிதியளிப்பின் கீழான கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் புனரமைப்பு கருத்திட்ட தயாரிப்புக் கட்டத்தில் இருந்தது. 2010ஆம் ஆண்டினுள் யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் நீடிப்பு மற்றும் மேம்பாட்டுக்காகவும் மெனிக்பாம் இடம்பெயர்ந்தோர் முகாம்களின் நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் தே.நீ.வ.வ.ச.யின் நிதியத்திலிருந்து அண்ணளவாக ரூபா 22 மில்லியன் செலவிடப்பட்டது.

**கிழக்கு மாகாணம்**

ஆண்டினுள்ளான ஒரு சில விசேட நிகழ்வுகள் வருமாறு: நேரடியான உழைப்பின் ஊடாக ஹிங்குரான நீர் வழங்கல் திட்டம் பூர்த்தி செய்யப்படுதல் (மொத்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 10 மில்லியன்), ஐகுசுஊ நிதியளிப்பின் கீழ் கரையோரப் பகுதிகளில் 250 கிலோ மீற்றர் விநியோகக் குழாய்களின் நீடிப்பு பூர்த்தி செய்யப்படுதல், ஆ.அ.வ. நிதியளிப்பின் கீழ் களுவாஞ்சிக்குடி நீர் வழங்கல் ஆரம்பித்து வைக்கப்படுதல், உஹன நீர் வழங்கல் திட்டத்திற்கு முழுமையாக சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குதல் (மொத்த மதிப்பீட்டுச் செலவு 3 மில்லியன்), வலத்தபிட்டிய நீர் வழங்கல் திட்டத்தின் மேம்பாடு (மொத்த மதிப்பீட்டுச் செலவு 12 மில்லியன்), ஐகுசுஊ நிதியளிப்பின் கீழ் நில நீர் கிடங்கை நிர்மாணித்தல், அம்பாறையில் 36%இல் இருந்து 32% வரை வருவாயற்ற நீர் குறைப்பு, நீர் கோபுரத்திற்கு நேரடியாக நீர் பாய்ச்சப்படுதலைப் பயன்படுத்தல் மற்றும் மட்டக்களப்பில் முகாமையாளர் (தொழிற்பாட்டு பாராமரிப்பு) அலுவலகத்தைத் தாபித்தல் அத்துடன் கிழக்கு பிராந்திய சேவை நிலையத்தை திருகோணமலைக்கு இடமாற்றுதல்.

# ஆண்டறிக்கை 2010
# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிக்கை

*“மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு கணக்காய்வு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வது சம்பந்தமான வழிகாட்டல்களை தே.நீ.வ.வ.சபைக்கு வழங்கியது.”*

பொது திறைசேரியின் மூலம் வெளியிடப்பட்ட 2000ம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம்:PF/PE 4 இன் பிரகாரம், பணிப்பாளர் சபைக்கு உதவும் பொருட்டு நியமிக்கப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட வருடத்திலும் அதன் செயற்பாடுகளை மேற்கொண்டது.

மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் கீழ் காணப்படும் உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இக் குழு காணப்பட்டது.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. திரு. ஏ. கே. சேனவிரத்ன<br>சபை உறுப்பினர் | - | தலைவர் |
| 02. திரு. கே.டி. காமினி குணரத்ன<br>உப தலைவர் | - | உறுப்பினர் |
| 03. திரு. கே.எல்.எல். பிரேமநாத்<br>பொது முகாமையாளர் | - | உறுப்பினர் |
| 04. திரு. எச். ஆரியசேன<br>பிரதி பொது முகாமையாளர் (மனித வளம்) | - | உறுப்பினர் |
| 05. திரு. டீ. தொடவத்த<br>பிரதி பொது முகாமையாளர் (நிதி) | - | உறுப்பினர் |
| 06 திரு. டபிள்யூ.ஏ.ஜெ. வீரசிங்க<br>பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | - | உறுப்பினர் |
| 06. திரு. கே.கே. சந்திரசிறி<br>சபை செயலாளர் | - | செயலாளர் |

மேற்கண்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது 2010.07.23 ஆந் திகதி தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் ஒன்று கூடி குழுவின் நோக்கெல்லைகளுக்கு உட்பட்டதாக விடயங்கள் ஆராயப்பட்டது. நோக்கெல்லையின் இறுதி விடயத்திற்கமைய இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கீழ் காணப்படும் விடயங்கள் யாவும் அதற்குள் உள்ளடங்கும்.

இந்தக் குழுவினால் முன்னைய வருடங்களுக்கான தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதி அறிக்கை சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு நீண்ட காலமாக கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இவ் விடயம் குறித்து அதிகூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும் எனக் கருதிய குழு ஓய்வு பெற்ற தலைமை கணக்காளர் ஒருவரை 6 மாதங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமித்து குறித்த பணியை நிறைவு செய்யும் பொறுப்பை அவ் அதிகாரியிடம் கையளிப்பதற்கு தீர்மானித்தது. ஆயினும் குறித்த அதிகாரி கடமையிலிருந்து நீங்கும் போது அவரால் அப்பணியை முழுமையாக முடிக்க முடியாது இயலாது போனது. அச் சந்தர்ப்பத்தின் பிரதி பொது முகாமையாளர் (நிதி) அவர்கள் இவ்விடயம் குறித்து தனிப்பட்ட ரீதியில் அவதானம் செலுததி அவரது அலுவலக குழாமுடன் இணைந்து அப் பணியை நிறைவு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றார். அவரது இச் செயற்பாடு குறித்து கணக்காய்வு மற்றும்

முகாமைத்துவ குழுவினால் திருப்தியடைய முடியுமாகவுள்ளதுடன், 2010 ஆம் ஆண்டின் இறுதியில் இப் பணியை நிறைவடையச் செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வது சம்பந்தமான வழிகாட்டுதல்களை வழங்கியதுடன், செயற்திட்டங்களின் கணக்குகள் யாவும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன், கணக்காளர்களின் பற்றாக்குறை காரணமாக சில செயற்திட்டங்களின் இறுதிக் கணக்கு அறிக்கையானது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த திட்டங்களின் இறுதிக் கணக்கு அறிக்கையை தயாரித்து அவற்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்குமாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய குறித்த திட்டங்களின் நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உரிய நேரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை முறையாக ஒழுங்குபடுத்துவதற்கான சாத்தியம் குறித்து இக் குழு சோதித்துப் பார்த்ததுடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் ஊழியர் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் அலுவலக குழாமிற்கு முறையான பயிற்சிகளை வழங்குவதற்கான வாய்ப்புக்களை அதிகரித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பணிப்பாளர் சபைக்கு பரிந்துரைத்தது. அதே நேரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது அமைப்பு முறையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், முறையான செயல் முறைகளை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைய உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலம் மையப்படுத்தப்பட்ட கடமை குறித்து அதிகூடிய கவனம் செலுத்தி கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் விளைவாக சபையின் செயலாற்றுமை மேம்பாட்டிற்கு தடையாகக் காணப்பட்ட விடயங்களை கண்டறிந்து அவ் விடயங்கள் குறித்து மேல் நிலை முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடப்பட்டது.

# நிதிக் கூற்றுகள்


66 வருமானக் கூற்று

67 ஐந்தொகை

68 காசுப் பாய்ச்சல் கூற்று

69 ஒப்புரவிலான மாற்றங்கள் பற்றிய கூற்று

70 கூறுசார் மொத்த இலாபம் 31 டிசெம்பர் 2010

71 நிதிக் கூற்றுக்கான குறிப்புகள்

84 31 டிசெம்பர் 2010 இல் முடிவடைந்த கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை

# தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை

## 2010 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று

| முடிவடைந்த ஆண்டுக்கான | குறிப்பு | வரவு செலவு 2010 ரூபா | **உண்மையான 2010 ரூபா** | உண்மையான 2009 ரூபா |
|---|---|---|---|---|
| நீர் விற்பனை | 3 | 11,301,290,000 | 10,744,059,534 | 9,669,975,867 |
| கழிக்க:நேரடி இயக்கச் செலவு | 4 | (7,332,102,367) | (7,061,727,544) | (6,321,949,712) |
| நீர் விற்பனையிலான இயக்க இலாபம் | | 3,969,187,633 | 3,682,331,990 | 3,348,026,155 |
| ஏனைய இயக்க வருமானம் | 5 | 2,021,050,000 | 1,566,297,797 | 1,397,317,115 |
| நிர்வாக ஆகு செலவுகள் | 6 | (2,391,787,633) | (2,564,857,342) | (2,062,268,144) |
| தேய்மானம் | 7 | (1,400,000,000) | (3,258,762,679) | (1,409,852,073) |
| மீள்மதிப்பீட்டு தேய்மானம் | 7 | - | (3,684,342,399) | - |
| ஏனைய இயக்க செலவுகள | 7 | (356,580,000) | (268,745,918) | (1,089,308,312) |
| **இயக்கும் நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்/(நட்டம்)** | | 1,841,870,000 | (4,528,078,550) | 183,914,742 |
| நிதிசார் செலவு | 8 | (1,426,000,000) | (1,419,459,214) | (1,568,941,934) |
| இயக்கமல்லா வருமானம் | 9 | 100,000,000 | 97,644,018 | 48,782,302 |
| **வரிக்கு முன்னர்** | | 515,870,000 | (5,849,893,746) | (1,336,244,891) |
| வரியிடல் | 10 | (120,000,000) | (105,273,966) | (89,009,061) |
| **ஆண்டுக்கான தேறிய இலாபம்/(நட்டம்)** | | 395,870,000 | (5,955,167,712) | (1,425,253,952) |

71 தொடக்கம் 74 வரையிலான பக்கங்களில் காணப்படும் கணக்கீட்டுக்கொள்கைகளும் குறிப்புகளும் நிதிக் கூற்றுக்களின் ஒரு அங்கமாய் அமைகின்றது.

| ஆண்டினுள் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி | | 381,631,564 | 332,066,729 |
| | | **2,532,250,115** | **2,150,618,551** |
| **21. செலுத்த வேண்டிய கடன்** | | | |
| திறைசேரியுடனான வெளிநாட்டுக் கடன்கள் | | 22,451,615,595 | 19,517,083,197 |
| உள்ளூர் கடன்கள் | | 124,274,006 | 124,859,451 |
| செலுத்த வேண்டிய வட்டி | | 494,735,575 | 494,735,575 |
| | | **23,070,625,176** | **20,136,678,223** |
| **22. ஏனைய பிற்போடப்பட்ட பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வில் செல்லும் பணிக்கொடை எற்பாடு | | 2,402,977,185 | 2,333,955,232 |
| வாடிக்கையாளர் மற்றும் பணியாளர் பாதுகாப்பு பண வைப்புகள் | | 1,001,715,117 | 853,754,473 |
| | | **3,404,692,303** | **3,187,709,705** |
| **22.1** ஓய்வில் செல்லும் பணிக்கொடை ஏற்பாடு அசைவு | | | |
| ஆண்டு தொடக்கத்தில் நிலுவை | | 2,333,955,232 | 1,442,337,046 |
| கூட்டுக: நடைமுறை ஆண்டுக்கான ஒதுக்கீடு | | 220,195,945 | 1,012,860,343 |
| | | **2,554,151,177** | **2,455,197,389** |
| கழிக்க: ஆண்டின் போதான பணிக்கொடைக் கொடுப்பனவு | | (151,173,991) | (121,242,157 ) |
| | | **2,402,977,185** | **2,333,955,232** |
| **23. கடனாளிகள்** | | | |
| மீள அறவிடக்கூடியதான வேலை-வாடிக்கையாளர் முற்பணங்கள் | | 1,264,869,393 | 1,072,039,002 |
| ஒப்பந்தக்காரரின் பிடித்து வைத்த தொகை | | 1,060,004,822 | 1,084,803,972 |
| குத்தகைக் கடனாளிகள் | 29,615,417 | | 27,476,516 |
| கழிக்க: தீர்மானிக்கப்படாத வட்டி | (9,605,875) | 20,009,542 | (10,879,546 ) |
| | | **2,344,883,758** | **2,173,439,944** |

| | 2010.12.31 | 2009.12.31 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **24. 2010இல் செலுத்த வேண்டிய கடன் மூலதனம்** | | |
| ஐ.டீ.ஏ. 10411 | 141,065,865 | 163,678,288 |
| பிரான்சு - திருகோணமலை | 20,556,464 | 20,556,464 |
| பிரான்சு - நீர்கொழும்பு 1 | 5,037,467 | 5,037,467 |
| பிரான்சு - நீர்கொழும் பு 2 | 4,490,036 | 4,490,036 |
| பிரான்சு - குருநாகல் | 3,097,060 | 3,097,060 |
| பிரான்சு - பதுளை | 4,080,480 | 4,080,480 |
| பிரான்சு - அப்பத்தலைள | 49,479,984 | 56,321,059 |
| ஏ.டீ.பீ. 817 | 131,404,027 | 155,799,463 |
| ஐ.டீ.ஏ. 1700 | 96,646,476 | 114,853,524 |
| ஓ.ஈ.சீ.எப்.எஸ்.எல்.பி. 19 | 54,943,550 | 68,359,998 |
| கல்முனை (அவுஸ்திரேலியா) | 2,522,312 | 3,152,890 |
| யூ.எஸ்.எயிட் | 6,974,972 | 6,974,972 |
| ஏ.டீ.பீ. (1235) | 89,688,575 | 111,653,123 |
| எஸ்.எல்.பி. 37 | 217,215,035 | 244,366,915 |
| யூ.டீ.ஏ. ஏ.டீ.பீ. 111 | 132,440,547 | 132,440,547 |
| ஓ.ஈ.சீ.எப்.எஸ்.எல்.பி. 49 | 220,772,759 | 275,974,534 |
| ஓ.ஈ.சீ.எப்.எஸ்.எல்.பி. 66 | 33,473,280 | 27,894,400 |
| காலி பெரும்பாகம் 1 | 81,245,753 | 67,704,794 |
| காலி பொரும்பாகம் 2 | 14,673,930 | - |
| கண்டி - டனிடா | 68,680,800 | - |
| நுவரெலியா - டனிடா | 26,004,210 | - |
| யூ.என்.எச்.ஏ. | 7,185,871 | - |
| ஓ.டீ.ஏ. மலைநாடு | 3,732,138 | 6,163,782 |
| ஏ.டீ.பீ. 1757 | 6,996,189 | 5,830,157 |
| ஓ.ஈ.சீ.எப்.எஸ்.எல்.பி. 55 | 728,995,055 | 593,015,856 |
| மாத்தறை/நிலம்பே (ஓ.டீ.ஏ) | 49,532,586 | 61,915,731 |
| அம்பத்தலே நெடுங்காலத்திற்கு முந்திய கடன் | 24,939,249 | 20,788,431 |
| அம்பத்தலே புதுப்பித்தல் கடன் | 21,722,729 | 18,102,275 |
| கொழும்பு வடக்கு நீ.வ.தி. | 6,673,026 | 6,673,026 |
| பிரான்சு - அநுராதபுரம் | 43,708,070 | 33,809,964 |
| கே.எப்.டபிள்யூ. கருத்திட்டம் அம்பாறை | 64,345,499 | 42,897,000 |
| | **2,362,323,996** | **2,255,632,239** |

| | 2010.12.31 | 2009.12.31 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **25. செலுத்த வேண்டிய ஏனையவை** | | |
| கடனாளிகள் கட்டுப்பாடு | 125,883,574 | 139,058,407 |
| செலுத்தவேண்டிய பெ.சே.வ. | 41,814,353 | 53,365,762 |
| பாதுகாப்பு பணவைப்பு | 2,108,742 | 623,931 |
| ஏனைய கடனாளிகள் | 41,687,764 | 21,907,747 |
| மீளளிக்கப்பட வேண்டிய கேள்விப் பத்திர வைப்புப் பணம் | 29,382,854 | 26,286,492 |
| செலுத்த வேண்டிய சம்பளம் | 112,258,613 | 100,773,472 |
| பிடித்து வைத்தல் வரி | 1,420,225 | 2,075,584 |
| உண்ணாட்டரசிறைக்கு செலுத்த வேண்டிய ப.சே.வ. | 761,037,716 | 418,944,559 |
| பிடித்து வைத்தல் CIGF | 172,716 | 1,080,577 |
| பிடித்துவைத்தல் பெ.சே.வ. | 16,983,344 | 4,135,047 |
| திரண்ட செலவுகள் | 176,826,595 | 167,935,386 |
| காசு இழப்புகளுக்கான ஏற்பாடு | 1,075,000 | 1,075,000 |
| செலுத்தவேண்டிய ஏனையவை | 1,730,805 | 1,730,805 |
| | **1,312,382,299** | **938,992,770** |

**26. மூலதனக் கடப்பாடுகள்**

இலங்கை அரசாங்கம் தேசிய மதிப்பீடுகளிலிருந்து அல்லது வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கியுள்ள நிதியங்களில் 2010ஆம் ஆண்டுக்கென மேற்கொள்ளப்பட்ட மூலதனசி செலவினம் ரூபா 29,000 மில்லியனாகும்.

**27. ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களின் அக்கறை**

சபையின் ஒப்பந்தங்களில் சபையின் எந்தவொரு பணிப்பாளருக்கும் நேரடியான அல்லது மறைமுகமான எவ்வித அக்கறையும் இருக்கவில்லை.

**28. ஒப்பீட்டுத் தகவல்**

நடைமுறை ஆண்டின் சமர்ப்பணத்தை உறுதி செய்வதற்குத் தேவையானவிடத்து முன்னைய ஆண்டின் இலக்கங்கள் மீளக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**29. பணிப்பாளர்களின் பொறுப்பு**

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதிலும் சமர்ப்பிப்பதிலும் உள்ள எல்லாப் பொறுப்புக்களையும் பணிப்பாளர்கள் எற்கின்றனர்.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் 2010 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுககள் மீது 1971இன் 38ஆம் இலக்க நிதிய அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

தேசிய நீர் வடங்கல் வடிகாலமைப்புச் சபையின் 2010 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு-1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலக்க சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1)ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டிறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை காலக்கிரமத்தில் சபையின் தலைவருக்கு வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதியக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்து வத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு எற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத் திற்கான அடிப்படையும்**

எனது கணக்காய்வுப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்த நிதிசார் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம். கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள் நேரம் என்பவற்றின் வரையறுக்குட்பட்டு இயலுமானளவு வரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது. நிதிசார் கூற்றுக்கள் பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதை நியாயபூர்வமாக உத்தரவாதம் செய்யும் வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கேற்ப கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதிசார் கூற்றுக்களில் உள்ள வெளிப்படுத்தல்களையும் தொகைகளையும் ஆதரிக்கவல்ல சான்றுகளைப் பரீட்சித்தல், நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவம் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கொள்கைகள் முக்கியமதிப்பீடுகள் மற்றும் நிதிசார் கூற்றுக்களது ஒட்டு மொத்தச் சமர்ப்பணம் என்பவற்றை மதிப்பாய்வு செய்தலை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமிணங்க கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமான போதிய தகவல்களையும், விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன். ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான போதியளவு அடிப்படை எனது கணக்காய்வின் மூலம் வழங்கப்பட்டது எனவும் நான் நம்புகின்றேன். 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரசட்டத்தின் 13ஆம் பிரிவின் (3) மற்றும் (4)ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை 2010 திசெம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 2.2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத் தவிர தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் 2010 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்)**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான (எஸ்எல்ஏஎஸ்) இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) இ.க.நி. - 3**

பின்னர் நிறுத்திவைக்கப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டங்களில் செலவிடப்பட்ட ரூபா 444.3 மில்லியன் தொகை நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் மூலதன நடைபெறும்

வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

**(ஆ) இ.க.நி - 5**

2010 திசெம்பர் 31இல் உள்ளவாறான ரூபா 3,282,670,013 பெறுமதியிலான கையிருப்பு நிதிக்கூற்றுக்களில் வகைப்படுத்தப்பட்டுக் காட்டப்பட்டிருக்கவில்லை.

**(இ) இ.க.நி - 9**

காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் உருவாக்கம் மற்றும் பயன்பாட்டின் மாதிரிகளைக் காட்டும் வண்ணம் காசோட்டக் கூற்று தயாரிக்கப்படவேண்டிய தேவை இருந்த போதிலும், ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கையேற்றலில் வெளியேறிய உண்மையான காசு முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டத்தின்கீழ் காட்டப்பட்டதற்கான சான்றுகளெதுவும் இருக்கவில்லை.

**(ஈ) இ.க.நி - 13**

நிருமாண ஒப்பந்தங்களின் (மீள்தாக்கலுக்குரிய வேலைகள்) வருமான அங்கீகரிப்பு இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்கியதாக செயலாற்றப்பட்டிருக்கவில்லை.

**(உ) இ.க.நி - 18**

(i) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு விடயம் மீள் மதிப்பீடு செய்யப்படும்பொழுது பயன்பாட்டுக் காலம் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு விடயம் மீள்மதிப்பீடு செய்யப்படும்போது, அந்தச் சொத்து அடங்கியுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முழு வகையும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், மாத்தறை அலுவலகத்தில் ரூபா 46.8 மில்லியன் பெறுமதியான சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 2002 தொடக்கம் 2009 வரையான காலத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதியிலேயே மூலதனமாக்கப்பட்டிருந்தன. எனினும், அவற்றின் மீதான முன்னைய ஆண்டுகளின் பெறுமானத்தேய்வு கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற் காட்டப்பட்ட ரூபா 75,843,711,555 தொகையான நடைபெறும் வேலைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தலைமை அலுவலக நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டப்பட்ட ரூபா 979,750,333 பெறுமதியான விடயங்கள் தொடர்பான தகவல்கள் கோரப்பட்ட போதிலும் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 1,749,927,354 பெறுமதியான பூர்த்தி யாக்கப்பட்ட நீர்வழங்கல் செயற்திட்டங்கள் மற்றும் மூலதன நிருமாண சேவைகள் மூலதனமாக்கப்பட்டிருக்காததுடன்காரணங்களாக, பூர்த்தியாக்கல் அறிக்கைகள் கையேற்றல் சான்றிதழ்கள், நிலையான சொத்துப்படிவங்கள் முதலியன சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை என்று கூறப்பட்டிருந்தது. இந்தச் சொத்துக்கள் பாவனையிலிருந்த போதிலும் பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) வெளித்தரப்பிடமிருந்து சபையால் பொறுப்பேற்கப்பட்ட ரூபா 114,790,004 பெறுமதியான நிருமாணங்கள் (மீள்தாக்கல் வேலைகள்) பூர்த்திசெய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கையளிக்கப்பட்டிருந்தபோதிலும், அந்தப் பெறுமதி கணக்குகளில் சீராக்கப்படாது தொடர்ந்து நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 3,330,055,379 தொகையான இருப்புக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இருப்புப் பதிவேடுகளின் நாளது வரையாக்கல் திருப்திகரமாக இல்லாதிருந்ததுடன் ரூபா 550,362,242 மற்றும் ரூபா 521,486,532 தொகையான முறையே வரவு மற்றும் சீராக்கங்கள், 2010 சனவரி தொடக்கம் ஒக்ரோபர் வரையான காலத்தின் போது இடம்பெற்ற இருப்பு நகர்வுகள் தொடர்பாக ஒக்தோபரில் மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்விற்குப் பின்னர் பேரேட்டுக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) ஆண்டுதோறும் இனங்காணப்பட்ட இருப்பு வேறுபாடுகள் புறம்பான கணக்கிற்கு மாற்றப்பட்ட போதிலும் சம்பந்தப்பட்ட அலுவலகர்கள் மீது பொறுப்பை சுமத்துவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2010 திசெம்பர் 31இல் உள்ளவாறு இந்த மீதி ரூபா 29,028,765 ஆக இருந்தது.

(iii) ஒரு கணனி மயப்படுத்தப்பட்ட பொருள் பதிவேட்டு முகாமைத்துவ முறைமை ரூபா 3 மில்லியன் கிரயத்தில் பிரதான களஞ்சியத்தில் அமுலாக்கப்பட்டிருந்த போதிலும், முறைமையினூடாக போதிய தகவல்களை உருவாக்கத் தவறியமை காரணமாக குறித்த நோக்கங்கள் அடையப்பட்டிருக்கவில்லை. மேலும் களஞ்சியங்கள் தொடர்பான பேரேட்டு மீதிகளிற்கும் கணனிமயப்படுத்தப்பட்ட பொருள் பதிவேட்டு முறைமையால் உருவாக்கப்பட்ட தொகைகளிற்குமிடையில் ரூபா 35,860,672 மொத்தத் தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. சபையின் தலைவரின்படி, தற்போது ஒரு புதிய கணனிமய பொருள் பதிவேட்டு முறைமை அமுலாக்கப்பட்டிருக்கிறது என்பதாகும்.

(iv) ரூபா 1,144,232 தொகையிலான இடைப்போக்கிலுள்ள இருப்புக்கள் ஐந்து ஆண்டுகளிற்கு மேல் சீராக்கப்படாது கணக்குகளில் மாற்றமின்றி இருந்தன.

(v) மொத்தப் பதிவேட்டுப் பொருட்களில் 16

சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 507,626,012 பெறுமதியான சேவையிலில்லாத மற்றும் நகர்வற்ற இருப்புக்கள் நீண்டகாலமாகக் களஞ்சியத்தில் பயன்பாடின்றி வைக்கப்பட்டிருந்தன.

(vi) அம்பத்தலை களஞ்சியம் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பௌதீக மெய்மையாய்வு மீதிகளிற்குப் பதிலாக பேரேட்டு மீதிகள் கணக்கிடப்பட்டிருந்ததுடன் அதன் விளைவாக இருப்பு மீதி ரூபா 3,350,532ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(vii) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து கிடைத்த ரூபா 7,635,325 பெறுமதியான இருப்புக்கள் கணக்கிடப்பட்டிருக்காததுடன் மேலும் 933 இரசாயன விடயங்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) பெறுமதி சேர்வரி (VAT) தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் அனுமதி மறுக்கப்பட்ட உள்நாட்டு கொள்வனவுகள் தொடர்பான ரூபா 28,533,669 கூட்டுமொத்தத் தொகையான கிடைக்க வேண்டிய வற்வரி கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்காததுடன், தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டு வருகின்றது.

(ii) இண்டாந்தர நகரங்கள் மற்றும் கிராமிய நீர்வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் ஒரு ஒப்பந்தக்காரர் தே.நீ.வ.வ.சபையின் சார்பில் ரூபா 151,585,173 தொகையான பெறுமதிசேர் வரியைச் செலுத்தியிருந்தார். இந்தத் தொகை பின்னர் சம்பந்தப்பட்ட செயற்திட்டத்தால் ஒப்பந்தக்காரருக்கு மீளளிப்பு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, அது தே.நீ.வ.வ. சபையிடமிருந்து கிடைக்க வேண்டியதாக செயற்றிட்டக் கணக்குகளில் காட்டப்பட்டிருந்த அதேநேரம் ரூபா 72,917,861ஆன தொகை மட்டுமே செயற்திட்டத்திற்குச் செலுத்தப்பட வேண்டியதாக தே.நீ.வ.வ. சபையின் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. அதன் விளைவாக வற் உள்ளீட்டுக் கணக்கில் ரூபா 78,667,312 ஆன தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 151,585,173ஆன கிடைக்க வேண்டிய வற் தொகை கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்காக வெளிநாட்டுக் கடன்களில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,706,802 தொகையான வட்டிக்கு கணக்குகளில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 1999இலிருந்து நீண்டகாலப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட ரூபா 494,735,575ஆன நீண்டகாலமாக நிலுவையிலுள்ள கொடுபடவேண்டிய வட்டியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வங்கிக் கணக்குகளின் பேணுகை தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள், ரூபா 1,999,466 மற்றும் ரூபா 630,744 கூட்டுத்தொகையான முறையே இனங்காணப்படாத வரவு மற்றும் செலவு மீதிகள் இனங்காணப்படாது பல ஆண்டுகளாக முன்கொண்டுவரப்பட்டிருந்தமையை வெளிப்படுத்தியது.

(ii) ரூபா 480,498 கூட்டு மொத்தத் தொகையான காசு மற்றும் காசோலை வைப்புக்கள் நீண்டகாலமாக தேறாதிருந்ததுடன் இனங் காணப்படாது 2011 யூன் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றிலும் தொடர்ந்து காட்டப்பட்டது.

(iii) ரூபா 469,424 தொகையான இடைப்போக்கிலுள்ள காசு 1997லிருந்து தேறாதவையாக இருந்தன.

(ஊ) சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுப் பரிசோதனை 2005 ஆம் ஆண்டில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குக்கையளிக்கப்பட்டிருந்ததுடன்ஐந்து ஆண்டுகள் கடந்த பின்னர் 2007 திசெம்பர் 31இல் உள்ளவாறான மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகள் கணக்குகளிற்குக்கொண்டுவரப்பட்டிருந்தன.இதுதொடர்பில் பின்வரும்அவதானிப்புக்கள்மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள ரூபா 8,663,620,800 தொகையான ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எனவே கணக்குகளில் காட்டப்பட்ட தொகைகளின் சரியான தன்மையை திருப்திகரமாக ஆய்வுசெய்ய முடியவில்லை.

(ii) தே.நீ.வ.வ.சபைக்குச் சொந்தமான 29 வாகனங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளால் காணாமற் போயிருந்ததுடன் அவற்றில் 26 வாகனங்களின் ஏட்டுப் பெறுமதி ரூபா 63,633,473 ஆக இருந்தது. இந்த வாகனங்களின் கிரயம் மீள் மதிப்பீட்டு நட்டமாகக் காணப்பட்டிருந்ததுடன் பரிசீலனை செய்யப்படாது பதிவேடுகளிலிருந்து அகற்றப் பட்டிருந்தன.

(iii) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் கணிப்பீட்டு வழு காரணமாக ரூபா 1,594,655,643ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(i) 2010 திசெம்பர் 31இல் உள்ளவாறான பின்வரும் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகள் தொடர்புபட்ட உபபதிவேடுகள் பட்டோலைகள் முதலியவற்றுடன் இணக்கம் செய்யப்படாதிருந்தன.

| கட்டுப்பாட்டுக் கணக்குகளின் | கட்டுப்பாட்டுக் கணக்குகளின்படி தொகை ரூபா | உபபேரோடு களின்படி தொகை ரூபா | வித்தியாசம் ரூபா |
|---|---|---|---|
| தலைமை அலுவலக தண்ணீர் கடன்பட்டோர் (தலைமை அலுவலகம்) | 2,721,022,814 | 2,637,440,000 | 83,582,814 |
| செலுத்த வேண்டிய வற் | 539,437 | இல்லை | 539,437 |
| செலுத்த வேண்டிய வற் (125,00) புதிய இணைப்புக்கள் | 4,409,605 | 291,123 | 4,700,728 |
| செலுத்த வேண்டிய வற் நீர்ப்பட்டியல்கள் | 115,798 | 7,967,615 | 7,851,817 |
| செலுத்த வேண்டிய வற் நீர்ப்பட்டியல் பியகம | 6,227,151 | 2,738,827 | 8,965,978 |
| செலுத்த வேண்டியவற் (12518) | 4,722,762 | 2,357,177 | 2,365,584 |
| நீர் கடன்பட்டோர் (3100) | 63,370,100 | 64,142,256 | 772,156 |
| விழா முற்பணங்கள் | 10,749,904 | 10,642,756 | 107,148 |
| இடர் கடன்கள் (தலைமை அலுவலகம்) | 1,235,866,508 | 1,235,610,664 | 255,844 |
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (212) | 231,404,538 | 179,436,794 | 51,967,744 |
| இடர் கடன்கள் (கொழும்பு பெரும்பாகம்) | 126,076,510 | 120,298,883 | 5,777,627 |

(ii) கடன்பட்டோரின் சேகரிப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளை தனித்தனி மீதிகளுடன் இணக்கம் செய்வதற்கான பொருத்தமான நடைமுறை சபையால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே ஐந்து கணக்குகளில் வரவு மீதிகளாக ரூபா 209,642,090 ஆன தொகை காட்டப்பட்டிருந்ததுடன் நான்கு கணக்குகளில் செலவு மீதிகளாக ரூபா 153,977,666 ஆன தொகைகள் 3 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தமை தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது 3 வருடங்களிற்கு மேலாக வரவு மற்றும் செலவு மீதிகள் நிலுவையுடன் காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளதுடன், அவையாவன, முறையே ரூ. 6,893,441 மற்றும் ரூ. 3,670,621,512 ஆகும்.

### 2.2.4 தொங்கல் கணக்கு மீதிகள்

**(அ) செயற்பாடற்ற மீதிகள்**

முறையான மேற்பார்வை இன்மை மற்றும் நலிந்த உள்ளகக் கட்டுப்பாடு போன்ற காரணங்களினால் 1994 இலிருந்து முன்கொண்டு வரப்பட்ட இனங்காணப்படாத மற்றும் முறையே ரூபா 602,537,737 மற்றும் ரூபா 577,155,279 ஆக இருந்தன. இணக்கம் செய்யப்படாது இருந்த அத்தகைய மீதிகளின் தொடரும் தன்மை மோசடியான கொடுக்கல் வாங்கல்களினூடாக சபைக்கு நட்டத்தை விளைவிக்க வழிகோலக் கூடும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சபையின் ஊழியர்களுக்கு ஊக்குவிப்புக்களின் அடிப்படையில் பொறுப்பளிக்கப்பட்ட அத்தகைய மீதிகளை இணக்கம் செய்வதற்கான முயற்சி வெற்றியளித்திருக்கவில்லை.

(ii) ரூபா 1,035,000 கிரயத்தில் அந்தக் கணக்குகளை இணக்கம் செய்வதற்காக ஒரு கணக்கீட்டு நிறுவனத்தின் சேவை பெறப்பட்டிருந்த போதிலும் அதற்காக செய்யப்பட்ட செலவுகள் அறிக்கையில் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சபையால் ஏற்றுக் கொள்ளப்படாமையால் பயனற்றதாக ஏற்பட்டிருந்தது.

(iii) இரகசியமான ஆவணங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அதனால் குறிப்பிடத்தக்களவு அத்தகைய ஆவணங்கள் காணாமற் போயிருந்தன.

(iv) செயற்பாடற்றவை என்று ஏற்கெனவே பெயர் கொடுக்கப்பட்ட மேலே காட்டப்பட்ட மீதிகளிற்கு மேலாக மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 119,846,220 தொகையான இனங்காணப்படாத மீதிகளும் இருந்தன.

**(ஆ) மீள்தாக்கல் செய்யப்படவேண்டிய வேலைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 3 ஆண்டுகளிற்கு முன்னர் 50 ஒப்பந்த வேலைகளைப் பொறுப்பேற்ற சமயத்தில் ரூபா 222.9 மில்லியன் கூட்டுத் தொகையான வாடிக்கையாளர் முற்பணங்கள் பெறப்பட்டிருந்த போதிலும், அந்தச் செயற்திட்டங்களின் தற்போதைய நிலைமை பற்றிய விபரங்கள் மற்றும் பூர்த்திசெய்தல் நிலைமை என்பன சபையால் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) அந்த முற்பணங்களில் ரூபா 7,117,911 தொகை இனங்காணப்படாத மீதியாக இருந்தது. ரூபா 40,412,951 தொகையான 19 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுவிட்ட போதிலும் அந்த மீதிகள் தீர்க்கப்படாது சம்பந்தப்பட்ட தரப்பினருக்குக் கையளிக்கப்பட்டிருந்தன.

(iii) 3 சந்தர்ப்பங்களில் நிர்மாண வேலைகள் அமுலாக்கப்படாத காரணத்தால் நீண்டகாலமாக ரூபா 9,614,817 தொகையான முற்பணங்கள் தீர்க்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.2.5 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கணக்காய்விற்குத் தரப்பட்ட பட்டோலைகளின்படி, மீளாய்வாண்டினிறுதியிலுள்ளவாறான நீர் கடன்பட்டோர், கழிவுநீரமைப்பு கடன்பட்டோர் மற்றும் கொழும்பு மாநகரசபைக் கடன்பட்டோர்கள் ரூபா 1,892 மில்லியன் தொகையாக இருந்ததுடன் அதில் ரூபா 660 மில்லியன் அல்லது 35% மூன்று ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது. மூன்று ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக நின்ற மீதிகளிற்கான காலப் பகுப்பாய்வை சபை தயாரித்திருக்கவில்லை.

(ii) கொழும்பு மாநகரசபையின் (சிஎம்சீ) ரூபா 79.6 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான வடிகால் மற்றும் ஏனைய கடன்பட்டோர்கள் ஐந்தொகை திகதியிலுள்ளவாறு 3 ஆண்டுகளிற்கு மேல் நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவையான மீதிகளை அறவிடுவதற்கு தாக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சபைக்குச் சொந்தமான 12 ஊழியர்களும் 5 வாகனங்களும் மீளாய்வாண்டில் ஏனைய நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்தன. மேலும், 2003 யூன் 02ஆம் திகதிய பீஈடி/12ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்திற்கு முரணாக மேற்படி ஊழியர்களின் வேதனங்களாக சபையால் ரூபா 3,434,862 செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| விடயங்கள் | தொகை<br>ரூபா | தரப்பட்டிருக்காத சான்றுகள் |
|---|---|---|
| ஏனைய கடன்பட்டோர்கள் | 47,984,264 | விபரமான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வுகள் |
| வழங்கல் முற்பணங்கள் | 631,463 | |
| கிடைக்க வேண்டிய வட்டி | 4,424,718 | |
| வியாபார கடன்பட்டோர் | 1,000,918,724 | |
| கொழும்பு மாநகர சபை கடன்பட்டோர் | 16,257,771 | |
| பிரயாண முற்பணங்கள் | 261,032 | |
| கழிக்கப்படவேண்டிய மிகையூதியம் | 25,033,581 | |
| ஒப்பந்தக்காரர்களிற்கான முற்பணம் | 837,849 | |
| குறுங்கால வைப்புக்கள் | 71,615,320 | |
| புதிய இணைப்பு தவணைக் கட்டண கடன்பட்டோர் | 11,678,324 | |
| அமைச்சிற்கு வழங்கப்பட்ட காசு முற்பணங்கள் | 6,450,000 | |
| சில்லறைக் காசு கொள்வனவுகளிற்கான முற்பணம் | 120,290 | |
| ஊழியர்களின் பாதுகாப்பு பிணைவைப்புக்கள் | 1,817,713 | |
| கழிவுநீரமைப்பு கடன்பட்டோர் | 6,317,419 | |
| கிடைக்கவேண்டிய வற் | 283,150 | |

**3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 நிதிசார் மீளாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 5,955 மில்லியன் தேறிய நட்டத்தின் முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,425 மில்லியன் நேரொத்த தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் பிரதானமாக வருமானத்திற்கெதிராகச் சாட்டுதல் செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பீட்டிலான நட்டம் காரணமாக ரூபா 4,530 மில்லியனால் நட்டத்தல் அதிகரிப்பைக் காட்டுகின்றது. நிதிசார் விளைவுகளின் பல்வேறு கட்டங்களிலுமான பொழிப்பை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டு<br>2010<br>ரூபா (மில்லியன்) | <br>2009<br>ரூபா (மில்லியன்) |
|---|---|---|
| மேந்தலைகள் மற்றும் ஏனைய தொழிற்பாட்டு செலவுகளைத் தாக்கல் செய்வதற்கு முன்னரான இலாபம் | 3,682 | 3,348 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்/(நட்டம்) | (4,528) | 184 |
| வரிக்கு முன்னர் ஆண்டிற்கான தேறிய நட்டம் | (5,850) | (1,336) |
| வரிக்குப் பின்னர் ஆண்டிற்கான தேறிய நட்டம் | (5,955) | (1,425) |
| திரண்ட நட்டம் | (15,588) | (9,560) |

ஒவ்வொரு உற்பத்தி அலகுகள் தொடர்பாக நேர்தொழிற்பாட்டு இலாபங்களை சபை உழைத்திருந்தமையை முன்னைய ஐந்து ஆண்டுகளிற்கான விபரங்கள் காட்டியிருந்த போதிலும் பின்வரும் அட்டவணைப்படங்களில் காட்சிப்படுத்தப்பட்டவாறு உயர் மேந்தலைச் செலவுகள் காரணமாக திரண்ட தேறிய நட்டம் தொடர்ந்து அதிகரித்திருந்தது.

**நிதி நட்டம்**




**திரட்டிய நட்டம்**




### 3.2 காசு மோசடிகள்

சபையின் சில உத்தியோகத்தர்களால் திருகோணமலை, களனி, அம்பாறை பிராந்திய அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் முறையே ரூபா 171.94 மில்லியன், ரூபா 52.46 மில்லியன் ரூபா 21.38 மல்லியன் மற்றும் ரூபா 1.8 மில்லியன் தொகையான காசு மோசடிகளைச் செய்திருந்தனர். நிதிக்கட்டுப்பாடுகளில் நலிவுகள் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளில் பலமின்மை அறிமுகப்படுத்தப்பட்ட முறைமைகளை நிறைவேற்றாமை மற்றும் மேற்பார்வையில் நலிவுகள் என்பவை காரணமாக இந்த மோசடிகளிற்கு சபை வழிகோலியிருந்தது. இது சம்பந்தமான புலனாய்வு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், களனி பிராந்திய அலுவலகத்தின் மோசடி தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களால் ரூபா 1,075 மில்லியன் தொகை மீளச் செலுத்தப்பட்டிருந்தது. தற்போது இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், பின்வரும் நலிவுகள் உள்ளமை காரணமாக உள்ளகக் கட்டுப்பாடு இன்னமும் நலிவாக இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

(அ) நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்களை அனுமதித்தல் மற்றும் செல்லுபடியாக்குதல் மீதான கட்டுப்பாடுகள் மிக நலிந்த நிலையிலிருந்ததுடன் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் அதிகார எல்லைகளைக் கருத்திற்கொள்ளாமலும், உறுதிச்சீட்டுக்களிற்கான ஆதார ஆவணங்களை இணைக்காமலும் உறுதிச்சீட்டில் எதுவித விளக்கக் குறிப்புக்களின்றியும் செல்லுபடியாக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால் போலியான உறுதிச் சீட்டுக்களைச் செல்லுபடியாக்குதல் அல்லது தொகைகளில் மாற்றங்கள் செய்தல் என்பவற்றை நிராகரிக்க முடியாது.

(ஆ) வங்கிக் கணக்கிணக்கங்கள் தயாரிக்கப்படுவதை மேற்பார்வை செய்தல் நலிவாக இருந்தது.

(இ) கட்டுப்பாட்டுக் கணக்குகள் நேரகாலத்துடன் இணக்கம் செய்யப்பட்டிருக்காததுடன் அது அத்தகைய மீதிகள் திரளுவதற்கு வழிசமைக்கும்.

### 3.3 செயற்பாட்டு மீளாய்வு

#### 3.3.1 வருமானமற்ற நீர் (என்ஆர்டபிள்யூ)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வருமானமற்ற நீர் காரணமாக சபைக்கு ஏற்பட்ட நட்டம் இனங்காணப்பட்டு, புறம்பாகக் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. ஆனால் அது சாதாரண ஒரு செயற்பாட்டு நட்டமாகக் கணக்கிற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றது.

| | 2010 | 2009 | 2008 | 2007 |
|---|---|---|---|---|
| நீர் உற்பத்தி (க.மீ) | 469.0 | 449.0 | 440.2 | 424.0 |
| நீர் பாவனை (க.மீ) | 321.5 | 309.6 | 300.9 | 285.3 |
| வருமானமற்ற நீர் (க.மீ) | 146.2 | 139.4 | 139.3 | 138.7 |
| வருமானமற்ற நீர் (%) | 31.17% | 31.04% | 31.64% | 32.71% |

(ஆ) கீழே தரப்பட்டவாறு கொழும்பு பெரும்பாகம் தொடர்பான கூட்டுத்திட்டத்தில் வருமான நீரின் விகிதமாகக் காட்டப்பட்ட இலக்குகள் அடையப்படுவதற்கு சபை தவறியிருந்தது.

கொழும்பு பெரும்பாகம்

| ஆண்டு | கூட்டுத் திட்டத்தின்படி இலக்கு | உண்மையானது |
|---|---|---|
| 2007 | 50 | 53.19 |
| 2008 | 49 | 53.96 |
| 2009 | 48 | 53.05 |
| 2010 | 47 | 52.03 |

ஏனைய பெரிய ஆசிய நகரங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்பு நகரத்தின் வருமானமற்ற நீர் விகிதம் இரண்டாவது உயர் நிலையிலுள்ளதை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது. வரைபடத்திலுள்ள கொழும்பு நகரத்தை தவிர்ந்த அநேகமாக எல்லா பிரதான நகரங்களிலும் வருமானமற்ற நீரின் விகிதத்தைக் குறைத்து சமாளித்துள்ளன. கொழும்பு நகரம் கடந்த 12 ஆண்டுகளில் அதேசம விகிதத்தையே பேணிவருகின்றது.




மூலம்: 2009 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நீர்க் கசிவுகள், சட்டவிரோத இணைப்புக்கள், நிருவாகத்தில் நலிவுகள் மற்றும் பெருந்தோட்ட வீடுகளிற்கும் பொது பைப்புக்களிலும் இலவசமான நீர் வழங்கல் என்பன வருமானமற்ற நீர் விகித அதிகரிப்பிற்கான பிரதான காரணங்களாகும்.

(ii) உற்பத்தி செய்யப்பட்ட நிரை அளவையிடுதல் மொத்த நீர் மானிகள் மூலம் செய்யப்பட்ட போதிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான மானிகள் இயங்கியிருக்கவில்லை. ஆகையால் உற்பத்தி, மதிப்பீட்டின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிரு கணிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்தத் தரவுகளின் சரியான தன்மை கேள்விக்குரியதாகும். அண்மைக் காலத்தில் புதிய மொத்த நீர்மாணிகள் நிறுவப்பட்டிருந்தபோதிலும் குறித்த சில பிரதேசங்களிற்கு தேவைப்பட்ட மொத்த நீர்மாணிகள் நிறுவப்பட்டிருக்கவில்லை.

(iii) கொழும்பு நகரத்திலுள்ள 77 சதவீதமான நீர் விநியோகக் குழாய் வரிசைகள் 55 ஆண்டுகள் பழமையாக இருந்ததுடன் இந்த விநியோக முறைமையில் 97 சதவீதம் பழைய இரும்புக் குழாய்களைக் கொண்டவையாக உள்ளன. அது கசிவுகளில் அதிகரிப்பை விளைவித்திருந்தது. தேவைப்பாடு இருப்பினும் சபையால் பாரியளவான நீர் விநியோக செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதிலும் புதிய குழாய் வரிசைகளை அமைப்பதற்கான நீண்ட காலத்திட்டமெதுவும் தயாரிக்கப்பட்டு, அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2010ஆம் ஆண்டில் பாவனையாளர்களால் நுகரப்பட்ட ஒவ்வொரு நிலரகிற்கும் ரூபா 13.14 ஆன மேலதிக கிரயத்தை நீர்பாவனையாளர்கள் மேற்கொள்ளவேண்டியிருந்ததென்று அவதானிக்கப்பட்டுடன் இந்த மேலதிகக் கிரயம் 2006இல் ரூபா 9.27 ஆக இருந்தமை கடந்த நான்கு ஆண்டுகளில் இந்தத் தொகை 41 சதவீதத்தால் அதிகரித்திருந்தமையைக் காட்டுகின்றது.

### 3.3.2 வெளிநாட்டு நிதியுதவிச் செயற்திட்டங்கள்

ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறு வெளிநாட்டு கொடையாளி முகவர்களால் வழங்கப்பட்ட நிதிகளுடன் 26 பாரியமட்ட செயற்திட்டங்களும் 6 சுனாமி புனரமைப்பு செயற்திட்டங்களும் செயற்பாட்டிலிருந்தன. இது சம்பந்தாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையால் பெரும் எண்ணிக்கையான பாரிய மட்ட செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் எதுவித நன்மை கண்காணிப்பு மதிப்பாய்வும் (பீஎம்ஈ) வெளியீட்டு இலக்குகள் அடையப்பட்ட அளவை இனங்காண்பதற்காக சபையால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகமான வெளிநாட்டு நிதியளிப்புச் செயற்திட்டங்கள் ஆரம்ப செயற்திட்ட காலத்திற்கிடையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், அதிகமான தடவைகள் செயற்திட்டக் காலங்கள் நீடிக்கப்பட்டிருந்தமையால் அதன் விளைவாக, மேலதிக வேலைகள் மற்றும் விலை அதிகரிப்பு காரணமாக கிரய அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

(இ) மூன்று குறித்த செயற்திட்டங்களிற்காக திறைசேரியால் வழங்கப்பட்ட ரூபா 42 மில்லியன் தொகை திறைசேரி மற்றும் சம்பந்தப்பட்ட கொடையாளி முகவரிடமிருந்து எதுவித அனுமதியும் பெற்றுக்கொள்ளாது தே.நீ.வ.வ. சபையால் வேறு சில செயற்திட்டங்களிற்குப் பயன்பட்டிருந்தன.

(ஈ) முன்னேற்றத்திற்கான சில செயற்திட்டங்கள் தொடர்பாக சபையால் புறம்பான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் அதன் விளைவாக முழுமையான கணக்காய்வை மேற்கொள்ளும் சாத்தியமிருக்கவில்லை.

### 3.3.3 சிறிய மட்ட உள்நாட்டு நிதியளிப்பு செயற்றிட்டங்கள்

பல ஆண்டுகளிற்கு முன்னர் பதினாறு சிறிய மட்ட செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 10 ஆண்டுகளிற்கு மேலான காலம் கடந்திருந்தும் கூட அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்தச் செயற்திட்டங்களிற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகையுடன் ஒப்பிடுகையில் அத்தகைய நீண்டகாலம் நியாயமானதாகத் தெரியவில்லை.

### 3.3.4 வெளிநாட்டுக் கடன்கள்

ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறு நிலுவையாக நின்ற வெளிநாட்டுக் கடன் மீதி மொத்தச் சொத்துக்களில் 15.8 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 25,434 மில்லியன் கூட்டுத்தொகையாகும். மீளாய்வாண்டிற்கான வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டி ரூபா 1,867.5 மில்லியன் தொகையாக இருந்ததுடன் அது சபையின் மொத்த வருமானத்தில் 15 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. 2009ஆம் ஆண்டிலிருந்து அமுலாகுமாறு அரசாங்கம் சலுவைக் கட்டண வட்டி வீதத்தை வழங்கியிருந்த போதிலும் குறிப்பிடத்தக்களவு தொகையான கடன் தவணைக் கட்டணம் மற்றும் வட்டி என்பன நிதிப் பற்றாக்குறை காரணமாக செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2010 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவையாக உள்ள தொகைகள் முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிட்டுக் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | கடன் தவணைக் கட்டணங்கள் | வட்டி | மொத்தத் தொகை |
|---|---|---|---|
| | ரூ.மில் | ரூ.மில். | ரூ. மில் |
| 2008 | 235.0 | 235.4 | 470.4 |
| 2009 | 330.5 | 1060.6 | 1,391.1 |
| 2010 | 840.1 | 1,861.0 | 2,701.1 |
| மொத்தம் | 1,405.6 | 3,157.0 | 4,562.6 |

### 3.4 சுத்தமான நீரின் உற்பத்தி மற்றும் விநியோகம்

தற்போது செயற்பாட்டிலுள்ள அரசாங்கத்தின் பத்தாண்டு அபிவிருத்தித் திட்டத்தின்படி, 2009ஆம் ஆண்டளவில் சனத்தொகையின் 80 சதவீதத்திற்கும் 2013ஆம் ஆண்டளவில் 85 சதவீதத்திற்கும் 2016ஆம் ஆண்டளவில் 90 சதவீதத்திற்கும் போதிய நீரை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2010ஆம் ஆண்டில் சபை 469 மில்லியன் கனமீற்றர் அளவான சுத்தான நீரை உற்பத்தி செய்திருந்தது. 2009ஆம்

ஆண்டுடன் இந்த உற்பத்தியை 2008ஆம் ஆண்டின் 2 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 4 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. முன்னைய ஆண்டினிறுதியிலுள்ளவற்றுடன் ஒப்பிடும்போது 2010ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான நீர் சேவை இணைப்புக்களின் தொகை 6 சதவீத அதிகரிப்பைக் காட்டும் 1,353,573 ஆக இருந்தது. 2009ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான அதிகரிப்பு 6.6 சதவீதமாகும். குழாய் நீருக்கான அபரிமிதமான அதிகரித்த தேவை காரணமாக நீரிணைப்புக்களிற்காக பாவனையாளர்கள் நீண்டகாலம் காத்திருக்க வேண்டியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. தற்போது சனத்தொகையில் 39.2 சதவீதம் சபையின் கீழ் செயற்படுத்தப்படும் குழாய் நீர்த் திட்டங்களுக்குள் அடங்கியிருந்த அதேநேரம் 2015ஆம் ஆண்டளவில் இந்த உள்ளடக்கத்தை 45 சதவீதம் வரை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

குழாய் நீர் வழங்கல் தொடர்பான தரவுகளை சபை தயாரித்திருந்த போதிலும் அரசாங்கத்தின் பத்தாண்டு அபிவிருத்தி திட்டத்துடன் இணங்கியதாக ஒட்டுமொத்த நீர்வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சரியான தரவுகளை சேகரித்தல் மற்றும் தயாரித்தலிற்காக பொருத்தமான நடைமுறை எதுவும் இருக்கவில்லை.

**4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் பொழுது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட நலிவுகள் காலத்திற்குக் காலம் சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கட்டுப்பாட்டுக் கணக்குகளை இணங்கச் செய்தல்
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) இருப்புக்கள்
(ஈ) கணக்கீடு
(உ) செயற்திட்டங்களின் அமுலாக்கல்
(ஊ) பூர்த்தி செய்யப்பட்ட நீர் வழங்கல் செயற்திட்டங்களை மூலதனமாக்குதல்
(எ) உள்ளகக் கணக்காய்வு

ஒப்பம்/எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# சுருக்க வடிவங்கள்

| | |
|---|---|
| ADB | - ஆசிய அபிவிருத்தி வங்கி |
| AGM | - உதவிப் பொது முகாமையாளர் |
| BOQ | - அளவுப் பட்டியல் |
| BOI | - முதலீட்டுச் சபை |
| CAPC | - அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவு வழங்கல் குழு |
| CBO | - சமூக மைய நிறுவனங்கள் |
| CMC | - கொழும்பு மாநகர சபை |
| CP | - கூட்டிணைந்த திட்டம் |
| cu.m. | - கன மீற்றர் |
| DANIDA | - டனிஷ் சர்வதேச அபிவிருத்தி முகவர் |
| Dev. | - அபிவிருத்தி |
| DGM | - பிரதி பொது முகாமையாளர் |
| DI | - முலாம் பூசப்பட்ட இரும்பு |
| DS | - பிரதேச செயலாளர் |
| ERD | - வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் |
| FFB | - வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்கள் |
| FIDIC | - மதியுரைப் பொறியியலாளர்கள் சர்வதேச சம்மேளனம் |
| GM | - பொது முகாமையாளர் |
| GN | - கிராம உத்தியோகத்தர் |
| GOSL | - இலங்கை அரசாங்கம் |
| GW | - நிலக்கீழ் நீர் |
| HSBC | - ஹொங்கொங் அன்ட் சாங்ஹப் பேங்க் கோபரேஷன் |
| IA | - உள்ளகக் கணக்காய்வு |
| IDP | - உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் |
| IFRC | - சர்வதேச செஞ்சிலுவைச் சம்மேளனம் |
| IT | - தகவல் தொழில்நுட்பம் |
| JBIC | - சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பான் வங்கி |
| JICA | - ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர் |
| KfW | - மீளமைப்புக்கான கடன் |
| KMC | - கண்டி மாநகரசபை |
| km | - கிலோ மீற்றர் |
| m | - மீற்றர் |
| M&E | - இயந்திரவியல் மற்றும் மின்னியல் |
| MD&T | - மதியுரைப் பொறியியலாளர்கள் சர்வதேச சம்மேளனம் |
| mg/1 | - மில்லி கிராம்/லீற்றர் |
| MGD | - ஒரு நாளைக்கு மில்லியன் கலன் |
| MIS | - முகாமைத்துவ தகவல் முறைமை |
| mm | - மில்லி மீற்றர் |
| MOU | - புரிந்துணர்வு ஒப்பந்தம் |
| MWSD | - நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சு |
| NHDA | - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை |
| NPD | - தேசிய திட்டமிடல் திணைக்களம் |
| NRW | - வருவாயற்ற நீர் |
| NWSD | - தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை |
| Q&M | - தொழிற்பாடு மற்றும் பராமரிப்பு |
| OIC | - நிலையப் பொறுப்பதிகாரி |
| P&A | - ஆளணியும் நிர்வாகமும் |
| PAC | - கருத்திட்ட மதிப்பீட்டுக் குழு |
| PD | - கருத்திட்ட பணிப்பாளர் |
| PS | - பிரதேச சபை |
| PSC | - கருத்திட்ட செயற்படுத்துகைக் குழு |
| R&D | - ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் |
| RDA | - வீதி அபிவிருத்தி அதிகார சபை |
| RSC | - பிரதேச சேவை நிலையம் |
| RWS | - கிராமிய நீர் வழங்கல் |
| S/E | - தெற்கு/கிழக்கு |
| SACOSAN | - துப்புரவேற்பாடு பற்றிய தென் ஆசிய மாநாடு |
| SCADA | - மேற்பார்வைக் கட்டுப்பாடு மற்றும் தரவு பெறுதல் |
| SIDA | - சுவீடன் சர்வதேச அபிவிருத்தி வங்கி |
| SLS | - இலங்கை தரக் கட்டளை |
| SMS | - குறுகிய செய்திச் சேவை |
| T&C | - கேள்விப் பத்திரங்கள் மற்றும் ஒப்பந்தம் |
| TA | - தொழில்நுட்ப உதவி |
| TCE | - மொத்த மதிப்பீட்டுச் செலவினம் |
| TEC | - கொழும்பு கிழக்கு நகரங்கள் |
| TNC | - கொழும்பு வடக்கு நகரங்கள் |
| TSC | - கொழும்பு தெற்கு நகரங்கள் |
| UC | - நகர சபை |
| UDA | - நகர அபிவிருத்தி அதிகார சபை |
| UFW | - கணிப்பிற்குட்படாத நீர் |
| UNICEF | - ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் கல்வி நிதியம் |
| uPVC | - uPVC குழாய்கள் |
| USA | - ஐக்கிய அமெரிக்கா |
| USAID | - சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க உதவிகள் |
| WATSAN | - நீர் மற்றும் துப்புரவேற்பாடு |
| WHO | - உலக சுகாதார நிறுவனம் |
| WS | - நீர் வழங்கல் |
| WS&S | - நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாடு |
| WSP | - நீர் வழங்கல் கருத்திட்டம் |
| WSS | - நீர் வழங்கல் திட்டம் |
| WTP | - நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதி |